காவேரி

விஜய-புரட்டாசி Sept-1953

288

288
6-5-53

வாயில் அணிவதால் உயரும் தோற்றம் (ந.17)

வாயில்த்னுசுகள் சிறந்து விளங்கும்

தி கடாவ் மகன்ஜி ஸ்பினிங் & வீவிங் கம்பனி லிமிடெட்

மில் : பைகுல்லா பம்பாய், ஆபீஸ் : லக்ஷ்மி பில்டிங், பல்லார்ட் பியர், பம்பாய்.

லோகல் ரிடேயில் ஸ்டோர் : 216, நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் ரோட், மதராஸ்-1

அஸோஸியேடட் ப்ரொட்யூஸர்ஸ்

சென்னை - 17

வலி வேதனையா?

“நோபெய்ன்”

அதை உடனே குணப்படுத்தும்

ஓர் கல்கத்தா கெமிகல் தயாரிப்பு

மதராஸ் ஆபீஸ் :– 5/149, பிராட்வே, மதராஸ்–1.

பக்ரா-நங்கல் திட்டம்

நீண்டநாள் நிலைத்து ஈடு கொடுக்கும் ஏ.சி.சி. சிமென்டினால் கட்டப்பட்டது.

பிரம்மாண்டமான பக்ரா-நங்கல் திட்டம் சட்லஜ் நதித்தண்ணீரை நீர்ப்பாசனத்திற்கும் மின்சார சக்திக்கும் பயன்படச்செய்யும். பக்ரா, நங்கல் ஆகிய இடங்களில் இரண்டு மாபெரும் அணைக்கட்டுகளும் மேலும் ஐந்து பெரிய மின்விசை நிலையங்களும் அதில் அமைந்துள்ளன. பூர்த்தியடைந்தபின் இத்திட்டம் கோடிக்கணக்கான ஏகரா நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியும் சுற்றுவட்டாரங்களுக்கு மின்சார சக்தியும் அளிக்கும். நாட்டின் சுபிட்சத்தைப் பெருக்கும் இவ்வேலையில் அதி முக்கியப் பங்கெடுப்பது ஏ. சி. சி. சிமென்ட்.

தி அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின் வியாபார மானேஜர்கள்

தி சிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.

SISTA'S CMI - 110 - TAMIL

இந்திய 'டீ'யைப் பற்றி

எவரெஸ்ட் வெற்றி வீரர்கள்

THE TIMES WORLD COPYRIGHT RESERVED
BY HIMALAYAN COMMITTEE

உங்களுக்கு திடசக்தி அளிக்கிறது

ஸென்ட்ரல் 'டீ' போர்டாரால் வெளியிடப்பட்டது

CTB-118

பொருள் அடக்கம்

விஜய மலர் 13 | புரட்டாசி இதழ் 2

ரொட்டிப் பழம் — அ. ராம்கோபால்	4
டில்லித் தபால் — கே. ஸ்ரீநிவாசன்	7
கலைச் சித்திரம் — கண்ணன்	11
பட்டணம் பார் — ஆர். பி. அய்யங்கார்	14
மனச் சரிவு — மாயாவி	17
நீரோட்டம் (தொடர்கதை) — தி. சேஷாத்திரி	25
விஞ்ஞானத் துணுக்குகள் — நா. கி. நாகராசன்	35
புத்தக விமர்சனம்	39
ஆணி வேர் — ஜி. எஸ். மணி	43
நெஞ்சில் பதிந்த நினைவு — கோமதி சுப்ரமணியம்	52
டில்லியிலும் தமிழ் முழக்கம் — தமிழன்பன்	59
வாழ்ந்தது போதும் — கிருஷ்ணன் பாலா	65
கிருபா அமெச்சூர்ஸின் கலைப்பணி	71
அழுந்திய எண்ணம் — ஆர். சுப்ரமணியன்	72
பண்பின் இரகசியம் — D. ராஜன்	77
அனுபவம் — உபேந்திரநாத் - தி. சேஷாத்திரி	82

குறிப்பு:

'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளி அல்ல.

199342
சென்னை-600 008

காவேரி

விஜய வரு
மலர் 13

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார்

புரட்டாசி
இதழ் 2

ரொட்டிப் பழம்

அ. ராம்கோபால்

நாம் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, சாமை, தினை, வரகு, குதிரைவாலி போன்ற ஏதாவதொரு தானியத்தை உமி நீக்கிச் சமைத்துச் சாப்பிடுகிறோம். வட நாட்டில் கோதுமையே பிரதான ஆகாரம். அவர்கள் அங்கே அதை ஆட்டா என்னும் கோதுமை மாவாக்கி, சப்பாத்தி என்னும் ஒருவகை ரொட்டி சுட்டுச் சாப்பிடுகிறார்கள். மேல் நாடுகளிலும் வடநாட்டைப்போல் கோதுமைதான் பிரதான ஆகாரம். அங்கே அவர்கள் அதை ரொட்டி சுட்டு வெண்ணெயோடு சேர்த்துச் சாப்பிடுகிறார்கள். இதேபோல் ஏதாவது ஒரு தானியத்தைப் பிரதானமான ஆகாரமாக உட்கொண்டு வாழும் மக்கள் உலகில் மற்றப் பாகங்களிலும் மிகுதியாக இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் தானியம் சாப்பிடுகிறவர்கள் (Cereal-eaters) என ஒரு தனிப்பிரிவாகப் பிரித்து விடலாம்.

தானியத்தைப் பிரதான ஆகாரமாகச் சாப்பிடாத மக்களும் உலகில் ஏராளமாக இருக்கிறார்கள். இவர்களைத் தானியம் சாப்பிடாதவர்கள் (non cereal-eaters) என மற்றொரு தனிப் பிரிவாகப் பிரிக்கலாம். தானியம் சாப்பிடாதவர்கள் என்றால் தானியத்தைப் பிரதான ஆகாரமாக உட்கொள்ளாதவர்கள் என்றே பொருள் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட மக்கள், ஆப்ரிக்கா, தென் அமெரிக்கா, இந்தியாவின் மலைப் பிராந்தியம். அரேபியா, ஈராக், மலேயா, இந்தோனிஷியா, பசபிக் தீவுகள், துருவப் பிரதேசம் முதலிய இடங்களில் மிகுதியாக வசிக்கிறார்கள். மாமிசம், மீன், பழங்கள், கிழங்குகள், கொட்டைகள், தேன் போன்ற ஏதாவதொன்று இவர்களுக்குப் பிரதான ஆகாரமாக இருந்துவருகிறது.

நியூகினியிலிருந்து நியூஸிலண்டு வரை ஆஸ்ட்ரேலியாவுக்குக் கிழக்கே உள்ள தீவு மலனீஷியா (Malanesia) எனப் பெயர். ஹவாய் தீவுகளுக்குத் தெற்கே உள்ள பசபிக் தீவுகளுக்குப் பாலினீஷியா (Polynesia) எனப் பெயர். இத்தீவுக் கூட்டங்கள் கடந்த நூற்றாண்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஹாலண்டு, போர்ச்சுசுல், ஜெர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளின் ஆட்சிக்குட்பட்டன. அப்பொழுது அங்குச் சென்ற ஐரோப்பியர்கள், அப்பிரதேசத்து மக்கள் ஒருவகைப் பலாப்பழத்தை ரொட்டியாகத் தயாரித்துச் சாப்பிடுவதையும், அவ் ரொட்டிகள் குணம், மணம், ருசி எல்லாவற்றிலும் சாதாரண ரொட்டிகளை விடச் சிறந்து விளங்குவதையும் கண்டு, ஆச்சரியத்தில் மூழ்கினர். அம்மக்கள் இப் பலாப்பழ ரொட்டியையே பிரதானமாக உட்கொண்டு சுகஜீவிகளாகவும் திடகாத்திரர்களாகவும் இருப்பதைப் பார்த்து யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்? இதனால் வெள்ளையர்கள் தங்கள் பாஷையில் இதற்கு ரொட்டிப்பழம் (Bread fruit) எனவே பெயரும் இட்டுவிட்டனர். தாவர சாஸ்திரிகள் இதற்கு "ஆர்டோகார்பஸ்" (Artocarpus) எனப் பெயரிட்டனர். இதற்கும் ரொட்டிப் பழம் என்பதே பொருள். Artos என்றால் ரொட்டி, carpus என்றால் பழம் என்பதே இவ்வார்த்தைகளுக்குச் சாதாரண அருத்தம்.

இப்பழங்களைப் பழுக்கத் தொடங்கும் சமயம் பிடுங்குவதே சிறந்தது. ஏனென்றால்

அப்பொழுதுதான் எப்பொழுதையும்விட மாவுச்சத்து (Starch) அதில் அதிகமாக அடங்கி இருக்கும். பசபிக் தீவுகளின் சுதேசிகள் அவைகளை அச்சமயம் பார்த்துப் பறித்து முழுப் பழத்தையும் அப்படியே நெருப்பில் போட்டுச் சுட்டு வாட்டுவார்கள். பிறகு அதை வெளியில் எடுத்து அமுக்கினால் இரண்டாகப் பிளந்து கொள்ளும். உள்ளே மாவுபோன்ற ஒருவகை சதைப் பொருள் மிகுதியாக இருக்கும். அதையெல்லாம் கத்தியின் உதவியால் சுரண்டி எடுத்து வெயிலில் காயவைப்பார்கள். நன்றாகக் காய்ந்ததும் மாவாக அரைத்துப் பத்திரப் படுத்தி வைத்துக் கொள்வார்கள். வெகு நாட்களுக்கு இம்மாவு கெட்டுப்போவதில்லை. வேண்டியபோது மாவோடு தண்ணீர் சேர்த்துப் பிசைந்து ரொட்டிகளாகச் சுட்டுச் சாப்பிடுவார்கள்.

மலனீஷியா, பாலினீஷியா மக்கள் மற்றொரு விதமாகவும் இப்பலாப் பழத்தை பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டு உபயோகிப்பதுண்டு. பழுக்க ஆரம்பிக்கும் சமயம் பார்த்துப் பிடுங்கி மேலே உள்ள முட்களைச் சீவிவிட்டு, லேசான மெல்லிய துண்டுகளாக (Slices) வெட்டி, வெயிலில் காயப் போடுவார்கள். நன்றாகக் காய்ந்ததும் எடுத்துப் பத்திரப் படுத்திக்கொள்வார்கள். இவ் வற்றல் வெகு காலத்துக்குக் கெட்டுப்போவதில்லை. வேண்டியபோது மாவாக்கி ரொட்டியாகச் சுட்டுச் சாப்பிடுவார்கள், தகடு போன்ற இவ் வற்றல்களை எண்ணெய் தடவியோ தடவாமலோ நெருப்பில் வாட்டியும் சாப்பிடலாம்; அப்பளத்தைப்போல் பொரித்தும் சாப்பிடலாம்; அடையைப் போல் நெய் அல்லது எண்ணெய் தடவிய கல்லில் சுட்டெடுத்தும் சாப்பிடலாம். இது பார்க்க வாட்டிய ரொட்டியைப் போலவே இருக்கும். மிகவும் ருசியாகவுமிருக்கும்

மலேயாவில் வசித்துவந்த வாலஸ் (A. R. Wallace) என்னும் வெள்ளையர் ஒருவர் நீண்ட நாட்களாக இப்பலாப்பழ உணவையே உட்கொண்டு சோதனைகள் நடத்திப் பார்த்தார். அவர் உடல் நலம் எவ்விதமும் கெட்டுப்போக வில்லை.

இம்மரத்தின் உள்பட்டை நார் நாராக இருக்கும், இதிலிருந்து ஒருவகைத்துணி நெய்கிறார்கள். மரத்தைக் குத்தினால் அல்லது கீறினால் ஒருவித வெள்ளைப்பால் வடியும். இப்பாலிலிருந்து ஒருவகை கோந்தும், பிளவுகள் பொத்தல்கள் முதலியவைகளை அடைக்கும் பொருளும் (Caulking material) எடுக்கப்படுகின்றன. இதன் மரம் மகாகனி மரத்தைபோல் உயர்வாகக் கருதப்படுகிறது. இதை வீடு கட்டுதல், சக்கரங்கள், படகுகள், அலமாரிகள், பீரோக்கள் செய்தல் முதலியவற்றிற்குப் பயன்படுத்தலாம்.

இம்மரங்கள் இவ்விதம் பலவகைகளில் பயன்படுவதால் மற்ற உலக நாடுகளிலும் இதை இப்பொழுது பயிரிடத் தொடங்கி இருக்கிறார்கள், அமெரிக்கா, ஆப்ரிக்கா, ஆசியா முதலிய கண்டங்களில் உள்ள உஷ்ணப் பிரதேசங்கள் முழுவதும் தற்சமயம் இதைக் காணலாம். வட அமெரிக்காவைச் சேர்ந்த தென்ப்ளரிடாவில்கூட இப்பொழுது இதைப் பயிரிடத் தொடங்கி இருக்கிறார்கள். இலங்கையில் கடலை அடுத்த பிரதேசங்களிலும் கண்டியை அடுத்த மலை நாடுகளிலும் இம் மரங்களை வெகுவாகக் காணலாம், மலேயாவிலும் இம்மரங்களை மிகுதியாகக் காணலாம்.

நம்பக்கங்களில் இம் மரங்கள் அதிகமாக இல்லை. ஏதோ சில இடங்களில் இங்கும் அங்குமாகக் காணலாம். நம்மவர்கள் இதைக் கண்டிப் பலா எனக் கூறுவார்கள். இதன் இலைகள் நம் சாதாரண பலா இலையைப் போல் மூன்று நான்கு மடங்கு பெரிதாக இருக்கும். அடி பெருத்து நுனி சிறுத்திருக்கும். இலையின் ஓரங்கள் பக்கத்துக்கு ஐந்தாக மொத்தம் பத்து இடங்களில் பிளவுபட்டிருக்கும். காய்கள் சாதாரண பலாக்காயைப்போல் அவ்வளவு பெரிதாக இருக்காது. சுமார் எட்டங்குலக் குறுக்களவுள்ளதாக இருக்கும். இதில் பொதுவாக விதைகளுமிருக்கா. பழுத்த பழங்கள் சாப்பிடப் பயன்படா. பூக்கள் பச்சை கலந்த வெண்மையாக இருக்கும்.

இம்மரங்களைச் சுற்றி வாழையைப்போல் பக்கக் கன்றுகள் (Suckers) வெடித்திருக்கும். அவற்றை வெட்டி எடுத்து 25 அல்லது 30 அடிக்கொன்றாக நட்டுப் பயிர்செய்யலாம். குழிகள் 3X3X3 அடி அளவு இருந்தால் போதுமானது. ஒவ்வொரு குழியிலும் மண்ணோடு 2 சேர் எலும்புத்தூள், 5 சேர் சாம்பல், ஒரு மணங்கு நன்றாக மக்கிய ஆட்டு அல்லது மாட்டெரு வீதம் கலந்து மூடி, கன்றுகளை நடவேண்டும். மற்ற செய் நேர்த்தியெல்லாம் பலா மரங்

களுக்குச் செய்வதுபோல் செய்தால் போதுமானது.

நம் பக்கங்களில் மழை அதிகமாகப் பெய்யுமிடங்கள் அல்லது பாசனவதியுள்ள நிலங்களில் இதைப் பயிரிடலாம். சமவெளிகளில் ஆறுகளை அடுத்த இடங்களும் கடலை அடுத்த இடங்களும் மிகவும் வாய்ப்பானவை. மலை நாடுகளில் சமுத்திர மட்டத்திலிருந்து 4000 அடி உயரம்வரை உள்ள இடங்களிலும் இதைப் பயிரிடலாம். குளிர் கால வெப்ப நிலை 60°–70°**F**ம் வெயில் கால வெப்ப நிலை 70°–85°**F**ம் உள்ள இடங்கள் மிகவும் சிறந்தவை. பாசனவசதி உள்ள இடங்களை விட மழை அதிகமாகப் பெய்யுமிடங்கள் சிறந்தவை. சுருக்கமாகச் சொன்னால் நம் பலா மரங்கள் நன்கு வளர்ந்து பலன்தர என்ன என்ன தேவையோ அவையே இவற்றிற்கும் தேவை. பலாமரங்கள் நன்கு பயிராகுமிடங்களில் இவையும் நன்கு பயிராகும். இதன் பயிர் முறையும் மற்ற செய்நேர்த்திகளும் பெரும்பாலும் பலா மரத்தை ஒத்தவையே.

இம் மரத்தில் இரண்டு ஜாதிகள் உண்டு. ஒன்று கறியாகச் சமைத்துச் சாப்பிட மட்டும்தான் பயன்படும். இதைத் தாவர சாஸ்திரிகள் **Artocarpus Communis** எனக் கூறுவார்கள். மாவுக்கும் ரொட்டிக்கும் பயன்படும் ஜாதிக்கு **Artocarpus-incisa** எனப்பெயர் வழங்குகிறது. நம் பக்கங்களில் காணப்படும் கண்டிப் பலா முந்திய இனத்தைச் சேர்ந்ததே. பிந்திய இனத்தைச் சேர்ந்ததல்ல. முந்திய இனத்தைவிடப் பிந்திய இனமே சிறந்தது. உபயோககரமானதும்கூட. ஆகையால் இவ் இனத்தை அதிகமாகப் பயிரிடுவதிலேயே நாம் அதிகமாக நாட்டம் செலுத்தவேண்டும்.

நம் நாட்டில் கிடைக்கும் சாதாரண பலாப் பழத்தைப்போல் இவை இரண்டு மடங்குக்குமேல் சத்தும் மிகுந்தவை. கீழேவரும் புள்ளி விவரத்தைக் கவனித்தால் இது தெளிவாகும்.

	சாதாரணப்பலா (ஒரு அவுன்சில்)		கண்டிப்பலா (ரொட்டிப்பழம்) (ஒரு அவுன்சில்)	
புரோடீன்	0·54	கிராம்	0·18	கிராம்
கொழுப்பு	0.03	,,	0·13	,,
கார்போஹைட்ரேட்	5·10	,,	10·80	,,
கால்சியம்	6· 6	மில்லி கிராம்	14· 0	மில்லி கிராம்
பாஸ்பரஸ்	8· 4	,,	36· 4	,,
இரும்பு	0·13	,,	0·04	,,
காலரிசத்து	23· 7	காலரி	51· 6	காலரி

தானியங்களோ அல்லது வேறு உணவுப் பொருள்களோ பயிர் செய்யாமல் காடாகப் புதர் மண்டிக் கிடக்கும் எவ்வளவோ இடங்கள் நம் நாட்டில் உண்டு. அங்கெல்லாம் இம் மரத்தை நாம் பயிர் செய்தால் அது நம் உணவுப் பஞ்சத்தை விரட்டியடிக்க வெகுவாக உதவுவதோடு நம் உடல் நலத்தைப் பேணப் பெரிதும் பயனும் படுமல்லவா?

டில்லித் தபால்

கே. ஸ்ரீநிவாஸன்

சென்ற ஆறு வருஷங்களாக யாவருக்கும் தலைவலியாக இருந்து வரும் காஷ்மீரம் மறுபடியும் தினசரி செய்தியில் அடிபடுகிறது. சென்ற சில வருஷங்களில் காஷ்மீரப் பிரதமராக இருந்த ஷேக் அப்துல்லாவுக்கு இந்தியாவில் எதேஷ்டமாக நன்மதிப்பும் ஆதரவும் வளர்ந்து வந்திருப்பதால் ஒரு நாள் திடீரென்று ஷேக் அப்துல்லா "டிஸ்மிஸ்" செய்யப்பட்டார் என்றதும் ஜனங்களுக்கு, அதிலும் குறிப்பாக நம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு, மிகவும் ஆச்சர்யமும் பிரமிப்பும் உண்டாயிருக்கின்றன.

ஷேக் அப்துல்லா அந்நாளில் எதேச்சாதிகாரத்தை எதிர்த்தவர். காஷ்மீர மக்களின் ஏழ்மை நிலைமையை மனத்தில்கொண்டு தம்மால் ஆனவரை காஷ்மீரத்தின் நிலைமையை உயர்த்தப் பாடுபட்டவர். சமஸ்தான குடிகள் மகாநாட்டில்காரியதரிசியாக உழைத்துத் தொண்டாற்றியவர். ஆகவே பண்டித நேருவின் நன்மதிப்புக்குப் பாத்திரமானவர். நேருவுடனேயே சிறைவாசம் புரிந்திருக்கிறார்.

ஆகவே, பாகிஸ்தான் பிடாரிகள் காஷ்மீரத்தை 1947–ல் தாக்கியபொழுது அவர் ஒருவரால்தான் மக்களின் உழைப்பையும் உதவியையும் பெறமுடியும் என்ற நிலைமை உண்டாயிற்று. அவர் பிரதமராகி, காஷ்மீர மன்னர் இந்தியாவுடன் இணங்கி இந்திய உதவியையும் நாடினார். அந்நாளில் காஷ்மீரத்தைப் பொறுத்தவரை அதனுடைய இணக்கம் பூர்ணம் என்ற போதிலும் இந்தியா சம்பந்தப்பட்டவரை பிரதமர் நேரு மிகவும் ஜனநாயக முறையில் காஷ்மீர ஜனங்களே இறுதி உறவை நிர்ணயிக்கமுடியும் என்றார். அவர் அப்படிச் சொல்லாமல் தடலடி அடித்திருந்தால் குட்டை குழப்பங்கள் வந்திருக்க மாட்டா.

இந்தப் பழங்கதைகள் எல்லாம் நமக்குத் தெரியும், உலகத்தாருக்கும் தெரியும், ஏன், ஷேக் அப்துல்லாவுக்குக் கூடத் தெரியும். ஆனால் கைதாவதற்குச் சில தினங்களுக்குமுன் ஷேக் அப்துல்லா என்ன சொன்னார்? அந்த நாளில் இந்தியாவுடன் காஷ்மீரம் கட்டாய நிர்ப்பந்தத்தால் இணங்கியது என்றார். திடீரென்று ஏன் அப்துல்லா மாறினார்?

1951 வரைகூட அப்துல்லா இந்தியாவின் நண்பராக இருந்ததுடன் இந்தியாவுடன் தொடர்பு நிரந்தரமாக இருக்கவேண்டும் என்று எண்ணினார். ஆனால் இந்தியாவுடன் விசேஷ அந்தஸ்து பெற்ற மாகாணமாக இருந்தால் தானும் கேவலம் ஒரு முக்கிய மந்திரி மாதிரிதானே இருக்க முடியும். காஷ்மீரத்தின் விதி உலக அரங்கில் தொங்கிக்கொண்டிருக்கும்பொழுது காஷ்மீரம் ஏன் இந்தியாவின் கீழ் தொங்கவேண்டும்? இந்த எண்ணத்தை அப்துல்லாவுக்குப் புகுத்தியவர்கள் இந்தியாவின் விரோதிகளும் பாகிஸ்தான் அநுதாபிகளும் ஆன ஐ. நா. பிரதிநிதிகள்.

காஷ்மீரத்தில் பாகிஸ்தான் உரிமை கொண்டாடுகிறது. இந்தியாவோ 'பாகிஸ்தானுக்குக் காஷ்மீரத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. அது அடாத முறையில் அந்தத் தேசத்தில் ஆக்கிரமித்துக் கொடுமைபடுத்தியது. ஆகவே பாகிஸ்தான் அந்த நாட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறுவிதமான முடிவு இல்லை' என்றது. விஷயம் என்னவோ தெளிவுதான். உண்மையை அடிப்படையாகக் கொண்ட முடிவு ஏதும் ஏற்படாமல் இதுவரை பார்த்துக்கொண்டு ஐ. நா. வை ஒரு கோழிச் சண்டை அரங்காகச் செய்த புண்ணியம் ஆங்கில அமெரிக்கர்களைச் சேர்ந்தது. ஆனால் எவ்வளவு நாள்தான் முட்டுக்கட்டை முறைகள் பயனளிக்கும்? இதை உத்தேசித்துத்தான் ஐ. நா. வின் பிரதிநிதிகள் மும்முரமாக வேலை செய்யத் தொடங்கினார்கள்.

அப்துல்லா மந்திரி சபையில் ரெவின்யூ மந்திரியாக இருந்த மிர்ஜா அப்ஸல்பேக் ஒரு காற்றாடி என்று யாவருக்கும் தெரிந்தது. பாகிஸ்தான் அனுதாபிகள் சிலர் ஸ்ரீ நகரில் சிலகாலமாக இருந்து வந்தார்கள். இவர்கள் தொகை ஐ. நா, பிரதிநிதிகள் மூலம்

சண்டை நிறுத்தலயனைத் தாண்டிக்கொண்டு வரப்பட்டு அதிகரித்தது. காஷ்மீரத்துக்கு உல்லாசப் பிரயாணிகள், யாத்திரிகர்கள் என்றமுறையில் பல ஆங்கில அமெரிக்கர்கள் வந்துபோய், காஷ்மீரம் தனி சுயேச்சை ராஜ்யம் ஆகலாம் என்ற எண்ணத்தை வளர்க்கத் தொடங்கினார்கள்.

இவர்கள் திட்டம் மிகவும் விஷமமானது. காஷ்மீரத்தைக் குறித்த சண்டையில் பாகிஸ்தான் வசம் கில்கிட்—பூஞ்ச்இருக்கிறதா? சரி அதை, அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும், ஜம்மு மாகாணம் இந்தியாவுடன் சேரவிரும்புகிறதா? சரி, அதைச் சேர்த்து விடுங்கள். மிகுதியான, நீர், நிலவளம் பொருந்திய காஷ்மீரப் பள்ளத்தாக்கு, சுயேச்சையாக ஸ்விட்ஸர்லாந்தைப் போல் இருக்கும் என்பது அமெரிக்கர் சூழ்ச்சி. எப்படியும் தன் கக்ஷி நொண்டிக் கக்ஷி என்று தெரிந்த பாகிஸ்தான் இந்த ஏற்பாட்டை ஆமோதித்தது. அப்துல்லா இதை ஏற்கவேதான் சென்ற சிலமாதங்களாக ஐ. நா. பிரதிநிதிகள் முயன்று வந்திருக்கின்றனர்.

ஷேக்அப்துல்லா பெரிய தியாகி, தேசபக்தர் என்பது வாஸ்தவம், ஆனால் பதவி மோகம் யாரைவிட்டது? ஆதலால் காஷ்மீரப் பள்ளத்தாக்கு, சுயேச்சையானால்தான் இஷ்டப்பட்டவரை அதைக்கட்டி ஆளலாம், அதைமுன்னேற்ற அமெரிக்கப்பணம் அளவில்லாமல் கிடைக்கும் என்று கனாக் கண்டார், இதை எப்படிச் சாதிப்பது? கொஞ்சம் கொஞ்சமாக இந்தியாவைக் குறைகூறினால்தான் கதி என்று ரண்பீர் சிங்புரா என்ற இடத்தில் இந்தியா மேல் தாக்குதலை ஆரம்பித்தார். 'நேரு சம்பந்தப்பட்டவரை அவர் ஜனநாயக வாதி. ஆனால் இந்தியாவில் மதவெறி இன்னும் அடங்கவில்லை. நேருவுக்குப் பின் முஸ்லிம்களின் கதி என்ன?' என்ற ரீதியில் பேசினார். இதைக் கண்டனம் செய்வதில் அப்துல்லாவின் தேசிய மகாநாட்டாரே சேர்ந்ததும் அப்துல்லா தாம் மேற்கூறியவாறு சொல்லவில்லை. அதைச் செய்தி ஆக்கிய தென்னிந்தியர் தவறாக மொழிபெயர்த்துவிட்டார் என்று ஏழை ரிப்போர்ட்டர் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டார்.

ஆனால் புழுவைக்கொட்டிக் குளவியாக்கும் பணியை மேற்கொண்ட மிர்ஜா பேக் அப்துல்லாவை விடவில்லை. **நாளுக்கு நாள் பாகிஸ்தான் அனுதாபத்தை அதிகரித்ததுடன் அவருடைய ஆப்த நண்பரான பண்டித நேருவிடம் கூட சௌஜன்யமாகப் பழகுவதைத் தடுத்தார். இது காரணமாகவே, அப்துல்லா சமீபத்தில் நடந்த ஆக்ரா அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கூட்டத்திற்குவரவில்லை. அவர் வீழ்ச்சிக்குச் சில மாதங்களுக்கு முன்னராக நேருவுக்கும் அப்துல்லாவுக்கும் நேரடி பேச்சு வார்த்தை இல்லை. பக்ஷி குலாம்மகம்மதுதான் இவர்களிடையேதொடர்பாக இருந்துவந்தார்.**

பக்ஷி சம்பந்தப்பட்டவரை அவர் உறுதியான இந்தியத் தோழர். அப்துல்லாவின் மனம் எப்படி மாறியிருக்கிறது என்பதை அறிந்தவர். சரியான சமயத்தில் விஷமத்தை நசுக்கிவிடுவது, என்று காத்திருந்தார். 'காஷ்மீரம் சம்பந்தப்பட்டவரை இந்தியாவும் பாகிஸ்தானும் நல்லுறவுகொள்ளவேண்டும். ஆகையால் காஷ்மீரம் சம்பந்தப்பட்டவரை அது எந்தத் தேசத்துடனும் இணங்க விரும்பவில்லை. சுயேச்சையையே நாடுகிறது.' என்ற வெடிகுண்டை அப்துல்லா தூக்கி எறிந்ததும் பக்ஷியும் அவர் சகாக்களும் விழித்தெழுந்தார்கள். காஷ்மீர் தேசிய மகாநாடு நம் காங்கிரஸை ஒத்தது. இது தன்னையே ஆதரிக்கும் என்ற நம்பிக்கையில் காரியக் கமிட்டிக்குத் தேர்தல் நடத்த ஆரம்பித்தார் அப்துல்லா. இந்தியக் காஷ்மீர் ஒப்பந்தத்தை அப்துல்லா அமுல் செய்யவில்லை என்ற குறை உள்ள மகாநாடு மெம்பர்கள் பெரும்பான்மையாகப் பக்ஷியை ஆதரிப்பதுடன் அவர் சகாக்களையே தேர்ந்தெடுத்தார்கள். இதைக் கண்டு திகில் கொண்ட அப்துல்லா தேர்தல்களைத் திடீரென்று நிறுத்தினார்.

அப்துல்லாவுக்கு மிர்ஜாபேக் வகுத்துக் கொடுத்த திட்டம் இது. முதலில் அவர் தம்முடன் இணங்காத மந்திரி, ஹிந்துவான ஷாமலால் சாப்பை ராஜீநாமா செய்யச் சொல்லவேண்டும். பிறகு பாகிஸ்தான் அநுதாபிகளைக்கொண்டு மந்திரி சபையை மாற்றியமைத்து முஸ்லீம்களின் பண்டிகையான 'ஈத்' தினத்தன்று காஷ்மீர் சுயேச்சையாகிவிட்டது என்று பிரகடனம் செய்ய வேண்டும். இதைத் தொடர்ந்து காஷ்மீரத்தைச் சுயேச்சை நாடு என்று நிர்ணயம் செய்து அதை ஐ. நா. மெம்பராக்க அமெரிக்கா உதவும்.

இந்த விதமாக நிலைமை மாறும் என்று எதிர்பார்த்தவர் பக்ஷி. ஆகவே ஷாம்லாலை ராஜீநாமா செய்யுமாறு சொன்னதும்

‘முடியாது’ என்று அவரை சொல்லச் செய்ததுடன் அப்துல்லா சென்ற சில மாதங்களில் பண்ணிய அதிக்கிரமங்களையெல்லாம் ஒரு மகஜரில் அடக்கி, அப்துல்லாவைக் குற்றம் சாட்டினார் பக்ஷி. மந்திரி சபையைக் கலைக்க யுவராஜாவை அப்துல்லா தூண்டிவிட்டு, தாம் கிழித்த கோட்டை அந்தச் சிறு கரன்சிங் தாண்ட மாட்டார் என்றும் எதிர்பார்த்தார். ஆனால் அப்துல்லாவின் கைப்பிள்ளையாக நடிக்க மறுத்து ஸ்ரீ கரன்சிங் பொருளாதார நிலைமை சீர்கெட்ட தேசத்தைத் தூக்கி நிறுத்தவேண்டி அப்துல்லாவை டிஸ்மிஸ் செய்தார். பின்னர் பக்ஷி பிரதமரான பிறகு வெளியாயிற்று எவ்வளவு உயரம் அப்துல்லா மனக்கோட்டை கட்டினார் என்பது. அப்துல்லா தம் உபயோகத்திற்கு ஒரு கார் வைத்துக் கொள்ளவில்லை, ஏழு வைத்துக் கொண்டிருந்தார். அதில் விலை உயர்ந்தது ரூ. 82,000 செலவில் வாங்கப்பட்ட “காடிலாக்”. அப்துல்லா காஷ்மீர சர்க்காரைத் தம் சொந்தப் பண்ணையைப்போல் கருதி நடத்தினார் என்பது இப்பொழுது வெளியாகிறது.

* * *

இவ்வளவு தூரம் அப்துல்லா மாறியது இந்திய சர்க்காருக்குத் தெரியாதா என்ற கேள்வி எழுகிறது. அப்துல்லாவும் அவர் சகா மிர்ஜாவும் எவ்வளவு தூரம் பாகிஸ்தானுடன் இழைந்தார்கள் என்பது இவர்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் அவர் போக்கில் உள்ள மாறுதலையும் மற்ற விஷயங்களையும் இந்திய சர்க்கார் கவனித்துக் கொண்டிருந்தார்கள் என்பது உண்மை. அப்துல்லாவைத் தூக்கி ரேழியில் போடவேண்டும் என்று பக்ஷி சொன்னால் நேரு திகைத்துத்தான் போய் இருப்பார். ஏனென்றால் அவர்கள் அவ்வளவு ஆப்தர்கள். அப்துல்லா நம்பிக்கைத் துரோகம் செய்வார் என்று நேரு கனவில்கூட நினைத்திருக்க மாட்டார்.

அப்துல்லாவின் போக்கு எவ்வளவு படுகுழிப் போக்கு என்பதை உணர்த்த மத்திய மந்திரி ஸ்ரீ ரபி கித்வாய் ஸ்ரீநகருக்குச் சென்றார் என்றது இதுவரை வெளியாகாத தகவல். அப்துல்லா நேருவைச் சந்தித்துப் பேசவேண்டும் என்ற கித்வாயின் யோசனையை அப்துல்லா ஒரே அடியாக மறுதலித்ததும் கித்வாய் தம் தூதுக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டுத் திரும்பினார்.

தென்னை மரத்தில் தேள்கொட்ட, பனை மரத்தில் நெறி ஏறிய கதையைப்போல் அப்

SANKAR IC BRAND

சங்கர் பிராண்ட்

போர்ட்லண்ட் ஸிமெண்ட்

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது

உறுதியும், அழகும் அமைந்த கட்டிட திட்டங்களுக்கு இன்றியமையாதது.

தயாரிப்பவர்:

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:-
11/12, ஸெகண்ட் லைன்பீச்,
மதராஸ்.

தொழிற்சாலை:-
சங்கர் நகர்,
திருநெல்வேலி ஜில்லா.

நாடெங்கும் IC ஸ்டாகிஸ்டுகள் மூலம் வினியோகிக்கப்படுகிறது.

துல்லா வீழ்ந்ததும் பாகிஸ்தானில் வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டார்கள். நேற்றுவரை இந்தியாவின் கைக்கூலியாக இருந்த அப்துல்லா எப்படிப் பாகிஸ்தானின் வீரராக மாறினார் என்பதிலிருந்து எவ்வளவு தூரம் சுயேச்சைக் காஷ்மீர் கனா பாகிஸ்தானில் வேரூன்றியிருந்தது என்பது வெளியாகிறது.

பாகிஸ்தான் இந்தியாவைப் போன்று பகுத்தறிவுள்ள நாடல்ல. அதன் பிரதமர் மகமத் அலிக்கும் பண்டித நேருவைப்போல ஜனங்களின் ஆதரவு கிடையாது, ஆகவே, அப்துல்லா வீழ்ச்சியைத் தொடர்ந்து பாகிஸ்தானிகள் துருப்பிடித்த கத்திகளைச் சுழற்றித் தங்களைத் தாமே மிரட்டிக்கொண்டதும் மகமத் அலி பயந்து, தம் பதவி போய்விடுமோ என்று பயந்தே நேருவுக்கு அபயக் குரல் கொடுத்தார். நினைத்திருந்தால் நேரு காஷ்மீர மாறுதலில் இந்தியாவுக்குச் சம்பந்தமில்லை என்று தட்டிக் கழித்திருக்கலாம். ஆனால் மகம்மத் அலியை விட்டுக்கொடுக்காமல் அவரை டில்லிக்கு அழைத்து அவருடன் பேச்சு வார்த்தைகளும் நடத்தினார்.

1954-ல் வாக்கெடுப்பு அமல் நடத்துவதற்கு அமலாளரைப் பொறுப்பேற்க நேரு ஒப்புக்கொண்டுவிட்டாரே, இது தவறல்லவா என்று சிலர் அலறுகிறார்கள். மடியில் கனம் இருந்தால் அல்லவா வழியில் பயம்? வாக்கெடுப்பாளர் வந்த பிறகு ஜனசங்கியை எடுக்கப்படும், பிறகு அது 1957-க்கு முன்னுள்ள கணக்குடன் ஒத்துப் பார்க்கப்படும். 1957-க்குப் பின் வந்து உட்கார்ந்துகொண்டவர்களுக்கு வாக்குக் கிடைக்காது. இடையே யோக்கியமாக ஜனங்களுக்குச் சௌகரியம் செய்யும் பக்ஷி சர்க்கார் ஒழுங்காகத் தன் வேலையைக் கவனித்தால் 1947-ல் வாக்கெடுப்பில் இந்தியாவுடன் காஷ்மீர் அமோக வோட்டுக்களால் நிரந்தரமாக இணங்கும் என்று ராஜீய வட்டாரங்களில் கருதுகிறார்கள்.

* * * *

கா஁ஷ்மீரப் பிரச்னைக்குப்பிறகு டில்லியில் மிகவும் அதிகமாக அடிபடுவது ஆந்திர மாகாண உருவாக்கம். ஊர் கூடி, செக்குத் தள்ளுவதைப்போல் பல தலைவர்கள் ஒத்துழைப்புடன் ஆந்திர மசோதா கீழ் சபையில் பாஸாகிவிட்டது. அடேயப்பா! எவ்வளவு எதிர்ப்பு? எவ்வளவு சந்தேகம்? ஆந்திரர்களுக்குத் தங்களுக்குள்ளேயே நம்பிக்கை கிடையாது. சென்னைச் சர்க்கார் கொடுத்த சொத்து விவரம் பொய் என்றார்கள். பிறகு பிரிவினை விஷயமாய், கமிஷன் ஏற்படுத்தவேண்டும் என்றார்கள். எப்படியோ "அப்பா அய்யா" என்று ஜன சபையில் மசோதா பாஸ் ஆகிவிட்டது.

இப்பொழுது மற்றொரு பெரிய கவலை ஆந்திரர்களைப் பிடித்துக்கொண்டு விட்டது. யார் சர்க்கார் அமைப்பது? காங்கிரஸால் தனியாகச் சர்க்கார் அமைக்கமுடியாது. இதற்குப் பிரஜா ஸோஷலிஸ்ட் கக்ஷி ஒத்துழைப்பு வேண்டும். அப்படிச் செய்யும் பக்ஷத்தில் யார் முக்கிய மந்திரியாவது? காங்கிரஸ் கக்ஷி சர்க்காரை அமைக்க உதவும் ஸ்ரீ பிரகாசம், காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ சஞ்சீவி ரெட்டியை முக்கிய மந்திரியாக விடுவாரா? ஸ்ரீ சஞ்சீவி ரெட்டி என்ன சொல்கிறார் என்றால் காங்கிரஸ்தானே பெரும்பான்மைக் கக்ஷி, ஆகவே முக்கிய மந்திரி காங்கிரஸ்காரராக இருக்கவேண்டும்.

இடையே ஸ்ரீ ரங்கா வேறு குறுக்குச் சால் ஓட்டுகிறார். தம்முடைய கிருஷிகர் லோக் கக்ஷிக்கு முக்கிய ஸ்தானம் கேட்கிறார். ஸ்ரீ பிரகாசம்காரு தாம் முக்கிய மந்திரி ஆக வேண்டும் என்று துடிக்கிறார். இது சாத்தியமாக அவர் காங்கிரஸில் சேர்வாரா அல்லது பிரஜா ஸோஷலிஸ்ட்களுக்குக் காங்கிரஸின் விசேஷ காங்கிரஸ் மெம்பர் பதவி அளிக்கப்படுமா? ஸ்ரீ பிரகாசம்காருவின் பூர்வோத்தரத்தை ஆராய்ந்தால் அவர் காங்கிரஸிலே சேர்ந்தால் கூட ஆச்சர்யம் இல்லை என்று கருதப்படுகிறது.

ஒரு வலுவுள்ள சர்க்கார் அமைப்பது சாத்தியமாக இருந்தால் ஒழிய ஆந்திரத்தில் ஜனாதிபதி அமல் நடக்கும் என்று அறிகிறேன். புது மாகாணத்தைச் சிருஷ்டி செய்த இந்திய சர்க்கார் அதைக் கம்யூனிஸ்ட் கையில் கொடுக்க இஷ்டப்படவில்லை.



சினிமாப் பகுதி

கலைச் சித்திரம்

எஸ். கண்ணன்

வடநாட்டுப் படங்களைத் தராதரமின்றிப் புகழுவதும், தென் நாட்டுப்படங்களை இகழுவதும் நம் நாட்டில் இருந்து வரும் ஒரு வெகு நாளைப் பழக்கம். தென்னிந்தியப் படங்களின் தரம் உயர உயர இம்மனப்பான்மை ஒருவாறு குறைந்திருக்கிறது என்றாலும் முற்றிலும் அகன்றுவிட்டதாகச் சொல்வதற்கில்லை.

இதற்கு உதாரணமாக, சமீபத்தில் வெளியாகி இருக்கும் "தோ பிகா ஜமீன்" (இரண்டு காணி நிலம்) என்னும் படத்தைப்பற்றிய விமர்சனங்களைச் சொல்லலாம். இது ஒரு நன்றாக எடுக்கப்பட்டிருக்கும் படமென்று யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடியதே. ஆனால் பட உலகிலேயே இது ஒரு புரட்சி என்றும் இம்மாதிரி படம் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் சில பத்திரிகைகளும் ரஸிகர்களும் கூறுவதை ஒப்புக்கொள்ள முடியாது.

தென்னிந்தியப் படமோ வடஇந்தியப் படமோ சரிசமானமாகச் சீர் தூக்கிப் பார்த்து, புகழுக்குரியவற்றைப் புகழுவதில் யாதொரு குற்றமும் இல்லை. அவ்வாறு வாயாரப் புகழ வேண்டிய படங்களில் ஒன்று பிரபல வங்காளி டைரக்டர் தேவகி போஸின் "ரத்ன தீபம்" என்பது. ஹிந்தியில் முதலில் எடுக்கப்பட்டிருந்த ஒரு படத்தை இப்பொழுது தமிழில் வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தியா முழுவதும் மாதக் கணக்கில் காட்டப்பட்ட "சண்டிதாஸ்" என்னும் படத்தை டைரக்ட் செய்தவர் தேவகிபோஸ். அவர் தம்முடைய 25வருடக் கலைத்தொண்டில் ரத்ன தீபத்தையே சிறந்த அர்ப்பணமாகக் கருதுகிறாரென்றால் படத்தின் தரத்தை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

ரத்ன தீபத்தின் கதை மனத்தை உருக்கும் ஒரு உணர்ச்சி மிகுந்த கதை. இது பாரத நாட்டுப் பெண்களின் கற்பின் மேன்மையைச் சித்திரிப்பது.

கோபால் என்னும் வாலிபன் ஒரு சிறிய ஊரில் ஸ்டேஷன் மாஸ்டர். சமீபத்தில் தான் மணந்த மனைவி ஒரு ஜமீந்தார் மகனுடன் ஓடிப்போனதினால் மனக்கசப்புற்று, தன் வேலையைச் சரிவரச் செய்யமுடியாததினால் உத்தியோகத்தை விட்டு நீக்கப்படுகிறான். இந்த நிலையில் இவன் கடைசிநாள் இரவுவேலை செய்யும்பொழுது ரயிலில் இறந்த ஒரு இளம் சந்நியாசியின் பிணத்தை அவனுடைய ஸ்டேஷனில் இறக்கிவிடுகிறார்கள். இறந்தவனுக்கும் தனக்கும் தோற்றத்தில் அதிசயிக்கத்தக்க ஒற்றுமை இருப்பதைக் காண்கிறான். இறந்தவனுடைய உடைமைகளைச் சோதித்ததில் அவன் எழுதிய சுயசரிதம் ஒன்றையும் வேறொரு லெட்டரையும் கண்டெடுக்கிறான். அவைகளிலிருந்து அவன் பாசுலீபுரம் ஜமீந்தார் மகன் என்றும், கல்யாணமான தினத்தில் வாழ்க்கையில் வெறுப்புக்கொண்டு வீட்டை விட்டு வெளியேறி, பதினான்கு வருடகாலம் சந்நியாசியாகக் கழித்து விட்டு இப்பொழுது இல்லற வாழ்க்கையில் விருப்பங்கொண்டு, இறந்து போன தன் தகப்பனாரின் சொத்தையும் தன் மனைவியையும் அடைய, தன் சொந்தஊர் திரும்புவதாக அறிகிறான். உடனே ஜமீந்தாரின் மகனாகத் தான் மாறி, ஏன் ஜமீனை அடையக்கூடாது என்ற எண்ணம் கோபாலின் மனதில் உதிக்கிறது. இறந்தவன் விஸ்தாரமாக வாழ்க்கைக் குறிப்புகளை எழுதி வைத்திருந்ததால் தன் சூழ்ச்சி எளிதில் வெற்றி அடையக்கூடும் என்று தெரிந்து கொண்டு, பாசுலீபுரம் சேருகிறான். 14 வருடகாலத்திற்கு மேல் கணவன் திரும்பிவராத காரணத்தினால் விதவைக் கோலம் பூண்ட இளம் மனைவி ''சின்ன ராணி''க்கும், மகனைக் குறித்துச் சதா கண்ணீர்விட்டுப் பார்வை மங்கிய தாயார் ''பெரிய ராணி''க்கும், நெறிதவறாது எஸ்டேட் விஷயங்களைக் கவனித்து வந்த திவானுக்கும், இளைய ஜமீந்தாரின் வருகை குதூகலத்தை விளைவிக்கிறது. கல்யாணதினத்தன்று ஒரு முறையே கணவனைப் பார்த்த சின்னராணி கோபாலைத் தன் சொந்தக்கணவன் என்றே மதித்து, தன் தூய அன்பை அவன்மீது பொழிகிறாள். கேவலம் பணத்திற்கு ஆசைப்பட்டு வந்த கோபாலுக்குச் சின்னராணியைத் தொடுவதற்கும் மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லை. தான் ஒரு விரதம் பூண்டு இருப்பதாகவும் அதனால் மூன்று மாத காலம் தன் மனைவியை அணுகுவதற்கில்லை என்றும் சொல்லிவிடுகிறான். கணவன் என நம்பி உள்ளம் கரைந்த சின்னராணி எவ்வளவோ மன்றாடியும் கோபாலின் மன உறுதியை அசைக்கமுடியவில்லை. விரதகாலமான மூன்று மாதத்திற்குள் அகப்பட்டபணத்தைச் சுருட்டிக்கொண்டு கோபால் ஓடநினைக்கிறான். ஆனால் சின்னராணி அவனை மறித்து, தன்னைவிட்டுப் பிரியாமல் இருப்பதற்குக் குலத்தின் வழக்கப்படி ரத்தின தீபம் என்னும் அடுக்கு விளக்கால் அவனுக்கு ஹாரத்தி எடுக்க முயற்சிக்கிறாள். அவளுடைய குன்றாத தூய அன்பைக்கண்டு மனது மாறிவிட்ட கோபால் அச்சமயம் அவளிடம் ஒருகடிதம் மூலமாக உண்மையைத் தெரிவித்து விடுகிறான். உண்மையில் தான் விதவையே என்று அறிந்த சின்னராணி மனமொடிந்து உயிரைத் துறக்கிறாள். பொய்யனாக இருந்தும் தன் மருமகளை அருகிற்கூட அணுகவிடாமல் அவள் கற்பைக் கெடுக்காத கோபாலை மெச்சி, பெரியராணி அவனைத் தன் மகனாகவே ஏற்றுக்கொள்கிறாள். இதுதான் கதை.

பிணத்தை ஸ்டேஷனில் இறக்குவதுடன் விறுவிறுப்பாக ஆரம்பிக்கும் படம் உணர்ச்சிகள் கொந்தளிக்கும் கடலாக நடுவில் மாறி, இறுதியில் யாவரும் கண்ணீர் உகுக்கும்வண்ணம் சோகத்தின் சிகரத்தையே எட்டிவிடுகிறது. போலிக் கணவனைச் சொந்தக் கணவன் என நம்பி, தன் கள்ளம் கபடற்ற உள்ளத்தை அர்ப்பணம் செய்யும் சின்ன ராணியாக அனுபா குப்தா நடிப்பது கதையில் வரும் கோபாலை மாத்திரம் அல்லாது படத்தைப் பார்ப்போரின் உள்ளத்தையே கரையவைத்துப் பரிசுத்த மாக்கிவிடும். அநேகமாக மௌனமாக நடிக்கும் இவர் தூய அகத்தைப் பளிங்கு போல் முகபாவத்திலும் மென்மையான காதலை அடக்கமான நடிப்பினாலும் சித்திரித்து இருக்கிறார்கள். இவருடைய அபாரமான நடிப்பைப் பார்த்த பிறகு இம்மாதிரி நடிகை தமிழ் நாட்டில் இன்னும் உதிக்கவில்லையே என்ற ஏக்கம் உண்மை ரஸிகர்களுக்கு உண்டாகிறது.

போலிக்கணவனாக வரும் அபிபட்டாசார்ஜியின் நடிப்பு சில இடங்களில் உயர்தரமாக இருந்தும் மொத்தத்தில் சற்று சுமாராகவே இருக்கிறது. கல்லும் கரைந்து உருகும் வண்ணம் இறைஞ்சிய முகத்துடன் சின்ன ராணியின் முன் அதற்கும் அசையாக்கல்லாகச் சமைந்து நிற்பதும், மனச்சாட்சியுடன் சதா போராடுவதும் நன்கு சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஆரம்பமுதல் கடைசிவரை இவருடைய முகபாவம் கிட்டத்தட்ட ஒரே தோரணையில் காணப்படுகிறது. வெளி உலகத்திற்குச் சன்னியாசியாக விளங்கும் இடங்களில் இந்தத் தோரணை பொருந்தியிருக்கிறது என்றாலும் தனிமையில் காட்டப்படும் இடங்களில் மாறுபாடுகளுடன் இருந்திருந்தால் நன்றாய் இருந்திருக்கும்.

திவானாக வரும் S. R. K. ராவ் மிக அழகாக நடித்து இருக்கிறார். அவருடைய கெடுபிடி அதிகாரத்தையும் ஜமீன் குடும்பத்திற்கு உண்மையாக உழைக்கும் பண்பாட்டையும் மெச்சாமலிருக்கமுடியாது.

சின்ன ராணியின் மனதைக் கலைத்து அவளை ஒரு போக்கிலிக்குக் கல்யாணம் செய்துவைக்கும் நோக்கத்துடன் கனகம் என்னும்வேசி அந்தரங்கத் தோழியாக வேலைக்கு அமருகிறாள். இப்பாகத்தில் மஞ்சுடே என்னும் பிரபல வங்காளி நடிகை அழகாக நடித்து இருக்கிறார். அவருடைய தீர்ந்த சாக

ஸம் சோகத்தையே ஆதாரமாகக்கொண்ட இக் கதைக்கு ஆங்கு ஆங்கு அவசியமான விறு விறுப்பை அளிக்கிறது. ஜமீனில் அந்தரங்க வேலைக்காரன் ராமனாகப் பஹாரிசன்யால் நடிக்கிறார். இவருடைய திக்குவாய்ப்பேச்சு மிக ரசமாக இருக்கிறதுஎன்றாலும் குஞ்சம்மாளுடன் காண்பிக்கப்படும் ஹாஸ்யக்காட்சிகள் அவ்வளவு ரசிக்கத் தகுந்த முறையில் இல்லை. ரத்தின தீபத்தின் வெற்றிக்குத் தேவகி போஸின் அரிய டைரக்ஷனே முதன்மையான காரணம். முக்கியமாக, சின்னராணியின் பாகத்துக்குப் பேச்சை வெகுவாகக் குறைத்து முகபாவத்தையே பிரதானமாகக்கொண்டு நடிக்கச் செய்திருப்பது போற்றத்தக்க முறையில் இருக்கிறது. அடுக்கு மொழிகளும் அடைமொழிகளும் கொண்ட சொற்பொழிவுகளை எல்லாப்பாத்திரங்களுக்கும் சிக்கனமின்றிப் பகிர்ந்து பகிர்ந்து கொடுத்து, கதையின் வெற்றிக்கு இதையே நம்பிவரும் நம் படப் பிடிப்பாளருக்கு இது ஒருபடிப்பினை யாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இப்படத்தில் சில அனாவசியமான காட்சிகளை வெட்டியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். உதாரணமாக, பிச்சைக்காரன் பிச்சைக்காரி பாடும் காட்சிகளைஎடுத்திருக்கலாம். விதவைகள் வேஷம்போட்டு அந்தரங்கத்தோழி வேலைக்கு மனுப்போடும் காட்சிகளையும் எடுக்கலாம். அதற்குப்பதிலாக அவ்விருவர்களும் முன்னதாகவே அரண்மனையில் வேலையில் இருப்பதாகக் காண்பிக்கலாம். அடிக்குஒரு பாராக்காரர் நிற்கும் ஜமீந்தார் மாளிகைகளைப் பார்ப்பது அரிதே. இக் காட்சிகளை விட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இதைத்தவிர டைரக்ஷனில் சில சில்லறைக் குறைபாடுகள் இருக்கின்றன. புயல் காற்றும், மழையும் வீசும் வராந்தாவில் சின்னராணி கோபாலின் கடிதத்தைப் படித்துப் பார்க்கிறாள். சாதாரணமாக ஒரே நொடியில் உருக்குலைந்து போக வேண்டிய அக்கடிதத்தைச் சின்னராணி சிறுகச் சிறுகப் படிப்பதும் தெளிவான எழுத்துக்களுடன் திரையில் காண்பிப்பதும் அசம்பாவிதமாக இருக்கின்றன. மாட்டு வண்டியில் கரடுமுரடான பாதையில் வேசி கனகம் பங்களாவிற்கு வந்து சேருவதாகக் காண்பிக்கப் பட்டு இருக்கிறது. ஆனால் கல்கத்தாவிலிருந்து ஜமீந்தாருடைய கார் பங்களாவிற்கு வந்து சேரும்போது ஒரு தார் ரோடு காண்பிக் கப்படுகிறது. ஆனால் இச் சிறு விஷயங்கள் டைரக்ஷனின் பெருமைக்கு ஒரு பெரிய இழுக்காகக் கூறுவதற்கில்லை.

மூலத்தில் ஈசுவர சந்திர சாஸ்திரி எழுதிய வசனத்திற்குக் கண்ணதாசனும் T. N. சுப்ரமணியமும் அழகாக வசனம் எழுதியிருக்கின்றனர். படத்தின் முக்கிய நடிகர்களைத் தவிர மற்றப் பாகங்களுக்குத் தமிழ் நடிகர்களைக்கொண்டுபடம் புதிதாக எடுக்கப்பட்டிருக்கிறது. தமிழில் டப் செய்யப்பட்ட இடங்களில் இம்மாதிரி செய் திருப்பது தெரியாவண்ணம் நன்கு எடுக்கப்பட் டிருக்கிறது. பாபநாசம் சிவன் முதலியோர் பாடிய பாட்டுகளில் ஆயிலூர் கிருஷ்ணன் T V. ரத்தனம் முதலியோர் சுமாராகப் பாடியிருக்கின்றனர். ரத்தினதீபம் அவசியம் குடும்பத்துடன் பன்முறை பார்த்து உள்ளம் பூரிக்க வேண்டிய கலைச் சித்திரம்.

1953 - 54-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1953—54க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறியவிரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும் முழு விலாசமும் அனுப்பிவையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுதுகிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக் கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினாலும் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1-4-0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக்காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shree Swami YOGIRAJ JYOTISH ASHRAM (C. K.)
PHAGWARA (Kapurthala State)

பட்டணம் பார்!

ஆர். பி. அய்யங்கார்

சாதாரணமாகச் சினிமாவுக்குச் சாயும் கும்பலை அரசியல் பொதுக்கூட்டத்தில் காணமுடியாது. அப்பொதுக்கூட்டத்தில் உள்ள தொகை கதா காலட்சேபங்களில் கிடையாது. மிக அதிகமாகவும் இல்லாமல், மிகக் குறைவாகவும் இல்லாமல் சுமாராக, அவ்வப்போது பொழுது போக்குக்காகப் பட்டணத்தில் ஜனங்கள் சேரக்கூடிய சில இடங்களுக்குள் நாடகக் கொட்டகை, சங்கீதக் கச்சேரி, நடன அரங்குகளை முக்கியமாகக் குறிப்பிடலாம். நாடகம், சங்கீதம், நடனம் ஆகிய இம்முக்கலைகளையும் வளர்க்கப் புதுச் சபாக்கள் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் சபாக்களை வளர்க்கத்தான் பணம் தாராளமாகப் பாய்வகில்லை!

கன்னையா கம்பெனி 'கிருஷ்ண லீலா' ட்ராமாவைப் பார்க்கவேண்டி, கட்டுமூட்டைச் சோறுடன் திரண்டு வந்த பட்டிக்காட்டு மக்கள் எத்தனை, எத்தனையோ. திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற எட்டிய ஊர்களிலிருந்துகூட ரயில் பிரயாணமாக வந்து பார்த்துத் திரும்பிய பணக்காரர்கள் கணக்கிலடங்கா, அது ஒரு காலம்! இன்று நிலைமை அடியோடு மாறிவிட்டது. திரைப்படம் தலையெடுத்ததிலிருந்து ட்ராமாக்களின் மவுசு மங்கத் துவங்கியது. சில நாடகக் கம்பனிகள் போட்டியில் மல்லுக்கு நிற்கமுடியாமல் படுத்து, பிராணனையும் விட்டன!

பட்டணத்தில் ட்ராமா பார்ப்பதைக் கர்னாடகமாகக் கருதுகிறார்கள் அநேகர். சினிமா செல்வதோ 'பாஷன்'. பிரத்யக்ஷமாக மேடையேறி ஒருவர் நடித்தால் லக்ஷியம் செய்பவர்கள் குறைவு. அதே நடிகர் சினிமாவில் பிரவேசித்தாலோ, விரைவில் மின்னும் நக்ஷத்திரமாகி, 'விசிறி'களின் அன்பையும், ஆதரவையும் அமோகமாகப் பெற்றுத் திகழ்கிறார். என்னே காலத்தின் கோலம்!

திரைப்படம் ஜனங்களை எவ்வளவோ சுண்டி இழுத்தாலும் இன்னமும் நாடக மேடைக்குள் ஆகர்ஷண சக்தி அறவே அற்றுப்போய்விடவில்லை. குறிப்பாக, ஓரிரு கம்பெனிகள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, நஷ்டத்துக்கு மேல் நஷ்டமேற்பட்டாலும், சளைக்காமல் சில சீரிய லக்ஷியங்களுக்காக நாடகங்கள் நடத்தி வருகின்றன. சினிமா தியேட்டர்கள் மண்டிக்கிடக்கும் இந்தக் காலப் பட்டணத்தில்கூட நாள்தோறும், வாரம் முழுக்க ஆட்டம் போட்டு, மாதக்கணக்கில் 'டேரா' தூக்காமல் ஒரே இடத்தில் ஊன்றி நிற்கக் கூடிய தெம்பும், திறமையும், திடநெஞ்சும் படைத்த நவாப் ராஜமாணிக்கத்தை வாயார புகழ்ந்து, மனமார வாழ்த்தவேண்டியது, ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். அவருடைய ட்ராமாக்களுக்குக் கூட்டம் கூடுகிறது. ஆனால் நிரம்பி வழியவில்லை. பிரக்யாதி பெற்றிருக்கும் அவரது நாடக சபைக்கே இந்தக் கதியென்றால் மற்ற நாடகச் சபைகளைக் குறித்து ஏதும் சொல்லாமலிருப்பதே மேல்!

உதவி நிதிக்காகவோ, சங்க சந்தா மெம்பர்களுக்காகவோ வாராந்தர அமெச்சூர் நாடகங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. முன் வசூல் ஆகிவிடுவதால் கொட்டகை வாசலில் டிக்கட் விற்பனை இத்தகைய நாடகங்களுக்கு அற்ப சொற்பமே. திருவிழாக் காலங்களில் கிராமாந்தரங்களில் கூத்து நடக்குமே அதை இவை சிற்சில சமயம் நினைப்பூட்டும். எனினும் மொத்தத்தில் சீர்தூக்கிப் பார்த்தால் இவற்றுக்கு 'சபாஷ்' சொல்லவே தோன்றும். ஆகவே கலைக்கு ஆதாரமான அமெச்சூர் நடிகர்கள் மேன்மேலும் பெருகி, அதற்குத் திரும்ப நல்வாழ்வு ஏற்பட, சங்கல்ப சித்தத்தோடு பிரயத்தனம் செய்யவேண்டியது அவசியமாகும்.

சனி, ஞாயிற்றுக்கிழமைகள் வந்து விட்டால் சபாக்களில்ஏதேனும் சங்கீதக் கச்சேரி நடக்காமலிராது. முதல் தர வித்வான்களென்றால் முன் ஸீட்டுகளெல்லாம் பூர்த்தியாகிவிடும். அரை குறை 'கத்துக்குட்டிகள்' மேடையேறினாலோ அவை அநேகமாகக் காலிதான்!

சந்தாதார்களில் பலர், அதுவும் பணத்தில் மிதப்பவர்கள் கச்சேரிகளுக்கு வருவது வெறும் வெளிப்பகட்டுக்காகவே. இதை யாரும் உன்னிப்பாகக் கவனித்தால் வெகு சீக்கிரத்தில் புரிந்து கொள்ளலாம். சபாவைச் சாக்கிட்டு அரட்டையடிக்கக் கூடும் பெண்மணிகள் வேறு. அவர்கள் விதவிதமான கலர் புடவைகளை உடுத்தி வந்து சபாவுக்கு அழகேற்றுகிறார்களென்பது வாஸ்தவமே. ஆனால் அவர்களது வெட்டிப்பேச்சும், கச்சேரி நடுவே எழுப்பும் சிரிப்பொலியும் அவர்களுக்குரிய கண்யத்தையும், அந்தஸ்தையும் குழி தோண்டிப் புதைக்கின்றன. சபையில் ஓயாது சம்பாஷிப்பது மகா கெட்ட குணம்; பிறருக்கு அருவருப்பூட்டக்கூடியது. புடவை, ஜாக்கெட்களைப் புது மோஸ்தரில் அணிந்துகொண்டு விடுவது மட்டும் நாகரிகமன்று. அடக்கம் என்ற அணி பெண்மைக்கே பிரதானமானது. அதை விடுத்து அரட்டைக் கச்சேரிகளை ஆங்காங்கு நடத்துவது சபையையே அவமதிப்பதாகும். இதைத்தவிர்க்கலாம், அறவே தடுக்கவும் முடியும். எல்லாம் சபையின் கட்டுப்பாட்டைப் பொறுத்திருக்கிறது. கட்டுப்பாடுகொணர்ந்ததும் கூட்டம் குறைந்தால் சபாவே மங்களம் பாடும்படி நேரிடலாம்! வீண் வம்பை விலைக்கு வாங்குவானேன்?

மிகப் பழமையான, புகழ் வாய்ந்த சில சபாக்களில் புது மெம்பர்களாக நுழையக் கஜகர்ணம் போட்டாலும் முடியாது. இத்தகைய சபாக்களுக்குப் போட்டியாகப் புதுச் சபாக்கள் அநேகம் ஆரம்பிக்கப்படுகின்றன. அங்கத்தினர்கள் சேர்க்கும் வேலை மும்முரமாக நடந்தாலும் ஆதரவு அப்படியொன்றும் கணிசமாகப் பெருகுவதில்லை. ஆகவே முளைத்து மூன்று இலைவிடுவதற்குள் ஏதேனும் ஒரு பெயரில் விழாவென அறிவித்து, கச்சேரித் தொடருக்கு ஏற்பாடு செய்து, பொதுமக்களிடமிருந்து காசைப் பறிப்பது சகஜமாகிவிட்டது. சில தனிப்பட்ட நபர்கள் இதனால் பிழைக்கலாம். சபா பிழைப்பது சந்தேகமே!

சங்கீத ஞானம் இல்லாவிட்டாலும் 'சபாவுக்குப் போகிறேன்' என்று சொல்லிக்கொள்வதில் சிலருக்கு அலாதி ஆசை. சில பாட்டுகளின் அடி, நுனியைத் தெரிந்துவைத்துக்கொண்டு, ஒவ்வொரு பாட்டுக்கும் ராகத்தைக் கண்டுபிடிக்க மனதுக்குள்ளேயே இத்தகைய பேர்வழிகள் தாயக் கட்டை உருட்டுவார்கள்! அப்படியும் இப்படியுமாகத் தலையை ஆட்டி, கச்சேரியின் நாலு கட்டத்தில் 'பேஷ்' கூறி, கூட்டத்தோடு கோவிந்தா போடும் இவர்கள் நாளடைவில் 'ரஸிக சிகாமணி'களாகிவிடுகிறார்கள்!

குறைகளைக் கண்டுபிடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் 'எல்லாம் தெரிந்த' பரம மேதாவிகளோ பரமபதம் அடைந்த பழையகால வித்வான்களை ஒப்பிட்டு உயர்த்திப்பேசி, தற்கால பாடகர்களை எவரானாலும் சரி-துச்சமாகத் தூக்கியெறிவார்கள். இவர்கள்பக்கத்தில் உட்காருபவர்கள் பாடு ரொம்ப திண்டாட்டம். கொள்ளி எறும்பு சட்டைக்குள் புகுந்தபின் தேகத்தின் மீது ஊர்ந்து உபத்திரவப்படுத்துவதைப்போலிருக்கும் இவர்களது தொணதொணப்பு. இவர்கள் சர்வக்ஞர்களானதால் எப்பாட்டையும் முழுக்கக் கேட்கமாட்டார்கள். அருகே வீற்றிருப்பவர்களையும் கேட்க விடமாட்டார்கள். இப்போதுள்ள பாடகர்களை, 'அவன், இவன்' என்று ஏக வசனத்தில் இறக்கிப் பேசும் இவர்கள் மறைந்துபோன வித்வான்களைக் குறிப்பிடும்போதோ 'அவாள் பாடிக் கேட்க கொடுத்து வைக்கணும், ஸார்' என்பார்கள். இப்பேர்ப்பட்ட பிரகிருதிகள் எதற்காகக் கச்சேரிகளுக்கு வருகிறார்களோ' தெரியவில்லை.!

பிரசித்தமான பாடகர்கள் புகுந்து புறப்படாத சபாக்களே கிடையாது. இளம் வித்வான்களோ எங்கே, எப்போது 'சான்ஸ்' கிடைக்குமென ஏங்கித் தவிக்கிறார்கள். இத்தகைய நிலை மாறவேண்டும். எதிர்காலம் இளைஞர்களுடையது. ஆகவே அவர்களுக்குப் பழமையான சபாக்கள்தான் இன்னும் அதிக ஆதரவளிக்கத் துணிச்சலாக முன்வந்து, இதர சபாக்களுக்கும் வழி காட்டவேண்டும்.

சதிர் ஆடினால் கோவில் தாசியோ என்று சந்தேகித்த காலம் மறைந்துவிட்டது. ஆடத்தெரியாதபெண்களைக் காண்பதுதான் இப்போது அபூர்வம். நாட்டியக் கலை புத்துயிர் பெற்று, பட்டணப் பிரவேசமானதிலிருந்து ஜனங்களுக்கு அதன் மீதுள்ள மோகம் அபாரமாகப் பெருகிக்கொண்டே வருகிறது. தலைதெறிக்க இக்கலை வளர்ந்தோங்குவதைப் பார்த்தால் சமூகம் தாங்க முடியுமெனத் தோன்றவில்லை.

பேபியிலிருந்து குமாரியாகி, பிறகு பிராட்டியானாலும் மேடையதிர, மூச்சுக் கட்டிக்கொண்டு, வியர்வையை ஆறாகப்

அஜந்தா
சித்திரங்கள்

அஜந்தா ஓவியங்களில் காணப்படும் வனிதாமணிகளின் வனப்பும் தேக அமைப்பும் இன்றைய ஸ்த்ரீகள் பலரிடத்தில் காண்பதரிதாயிருக்கிறது; வீறு பெற்ற தாய்மைக்கு லாயக்கற்றவர்களாயுள்ளனர் பலர்.

அருணையை அனுதினமும் உபயோகித்தால் ஸ்த்ரீகளின் கர்ப்பாசய கோளாறுகளனைத்தும் தீர்ந்துிடகாத்திரமும் தூய்மையான தாய்மையும் ஸித்திக்கும்.

அருணை

கர்பாசய ரோக நிவாரணீ

கர்பாசய ரோகங்களை நிவர்த்தித்து, பெண்மைக்குப் பெருமை — யளிக்கும் ஔடதம். —

ஆயுர்வேதாச்ரமம் லிமிடெட்.
சென்னை 17.

பெருகவிட்ட வண்ணம் காலைத் தூக்கி நின்ருடுவது வாஸ்தவமாக, 'கண் கொள்ளாத' ஓர் காட்சியே! சாஸ்திரீய பரதக் கலையைச் சரிவரப் பயின்று அதற்காகவே உயிர் வாழும் உன்னத லக்ஷ்யம் கொண்ட சில பெரியவர்கள் மேடையில் தோன்றுவதை நான் குறை கூறவில்லை. அவர்கள் வழி காட்டிகளானதால் நீடூழி வாழட்டும். அப்படியில்லாமல் குடும்பப் பெண்கள் வயது ஏறினுலும் பொதுமேடை ஏறுவதை நிறுத்தாமல் இருப்பது கலி முற்றுவதைக் குறிக்கிறது போலும்! வாதத்துக்கு மருந்து உண்டு, பிடிவாதத்துக்கு ஏது?

இளம் சிறுமிகள், நடுத்தரப் பெண்கள் மிகப்பிரயாசையோடு கற்றறிந்ததும், நடன அரங்கேற்றங்கள் நடத்துவது வழக்கமாகி விட்டது. மந்திரிகளோ, பொதுத்துறைப் பிரமுகர்களோ இவற்றுக்கெல்லாம் தலைமை வகிப்பதென்பதும் வழக்கமாகி விட்டது. நான்கைந்து பத்திரிகைகளில் இவற்றைக் குறித்து விமர்சனங்கள் வருவதும் சகஜமாகிவிட்டது. விட்டில் பூச்சி, வெட்டுக்கிளிகள் போல் கை, கால்களை விசிறியடித்து விழுந்து குதித்தாலும்கூட ஓர் குறிப்பிட்ட வயதுவரை இத்தகைய 'குமாரி'களை ஆதரித்து உற்சாக மூட்டுவதில் தப்பொன்றுமில்லை. ஆனுல் குதிராக வளர்ந்த பின், 'திம்தகா, திம்தகா' என்று கூத்தாடுவது ஆபாசமாகும். வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியதே.

சினிமா வானில் புகழுடம்போடு ஜ்வலிக்கும் சில நடன நக்ஷத்திரங்கள் பிரத்யக்ஷமாகப் பொது மேடைகளில் தோன்றிவிட்டால் ரஸிக மகா ஜனங்கள் பிரமாதமாகக் கூடுகிருர்கள். மாதக் கடைசியாக இருந்தாலும் தயங்குவதில்லை; டிக்கட் வாங்க மணிபர்ஸைத் துருவித் தடவித் துடைத்துவிடுகிருர்கள்! அப் 'பெண் திலகங்களோ' உடல் குலுங்க ஆட்டம் போட்டு ஊரை மயக்குகிருர்கள். கண்களைப் பறிக்கும் கலர் பட்டாடைகளை உடுத்திக்கொள்வதோடு சரி. கருத்தைக் கவர முகபாவமோ, நடன நயமோ இராது. பரதக் கலை அவர்கள் கையில்சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறது. இந்நிலைமை சீர்பட, பொதுமக்களின் சித்தம் தெளிந்து சுவாதீனத்துக்கு வரவேண்டும். பட்டணத்துச் சூழ்நிலையில் சாத்தியமா? இதற்கு எவரும் எளிதில் பதில் கூறத்தான் முடியுமா?



மனச் சரிவு

மாயாவி

'பெண் என்பவள் பெரும் புதிர்' என்பதைத்தான் அன்றைச் சம்பவம் எனக்கு நினைவுறுத்திற்று. பார்க்கப்போனால் என்வரையில் சம்பந்தமில்லாத விஷயந்தான். இருந்தாலும், ஏனோ மனது, 'தீபாவின் தீர்மானம் சரியா?' என்ற கேள்வியை மீண்டும், மீண்டும் கேட்டுக் கொண்டிருந்தது.

தீபா ஓர் பஞ்சாபிப் பெண். பிரிவினை அமளியின்போது முஸ்லீம் முரடர்களால் கடத்திச் செல்லப்பட்டவள். ஒரு வருஷத்துக்குப் பின்னர் இந்திய அரசாங்கத்தாரால் மீட்டு வரப்பட்டாள். கணவன் அவளை ஏற்றுக்கொள்ளவில்லை. பெற்றோரோ, வேறு சுற்றத்தாரோ இல்லாததால் பிழைப்புத் தேடிப் பம்பாய்க்கு வந்தாள். நான் வேலை செய்து வந்த காரியாலயத்தில் டைப்பிஸ்டாக அமர்ந்திருந்தாள்.

மானம் பறிபோய், கட்டியவனால் புறக்கணிக்கப்பட்டிருந்தாலும், இளமையும், உடற்கட்டும் குலையாதிருந்த அவளை, எங்கள் காரியாலயத்திலே வேலை பார்த்துவந்த யஸ்வந்த் என்ற மராத்திய வாலிபன் ஒருவன் மணந்துகொள்ள முன்வந்தான். ஆனால், தீபா மீண்டும் இல்வாழ்வில் ஈடுபட விருப்பமில்லையென்று அவனுடைய கோரிக்கையை நிராகரித்து விட்டாள்.

எனினும், யௌவனப் பிராயமும், மங்காத வனப்பும், நாதியற்ற பெண் ஒருத்தியின் உடைமையாயிருக்கையில், அவளை ஆபத்து எங்கேயென்று கவ்விக்கொள்ளக் காத்திருக்குமே! தீபாவும் அப்படித்தான், ஒருநாள் காரியாலயத்திலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், காமுகன் ஒருவனால் பின் தொடரப்பட்டு, ஏறக்குறைய இன்னொரு தடவை மானமிழக்கும் நிலையை எட்டினாள். நல்ல வேளையாக, அவள் எழுப்பிய கூக்குரல் வழியோடு சென்ற சிலரை உதவிக்கு ஓடிவரச் செய்து, அச்சமயம் அவளைக் காப்பாற்றிற்று.

தீபாவின் அவல நிலைக்கு அநுதாபங் கொண்ட சிலருள் நானும் ஒருவன். ஆகவே, அவளைச் சூழ்ந்த இந்த ஆபத்தைக் கேட்டதும், சிறிது அதிகமாகவே உரிமை எடுத்துக்கொண்டு, 'நீங்கள் கடந்ததை மறந்து, வலிய வந்துள்ள புது வாழ்வை ஏற்றுக் கொள்ளவேண்டும், தீபா; இல்லாவிட்டால் இத்தகைய ஆபத்துக்கள் இனியும் உங்களைத் தொடர்ந்துகொண்டேயிருக்கும்' என்று சொன்னேன்.

'நான் மாசுபட்டவள், மிஸ்டர் ரகு; ஆகவே, இல்வாழ்வில் எனக்கு இடமில்லை' என்றாள் அவள்.

'அப்படிச் சொல்லாதீர்கள், தீபா; உங்களுக்கு ஏற்பட்ட களங்கம் உங்களுடைய மனச்சரிவினால் ஏற்பட்டதல்ல. எவரும் தலையிட்டுத் தவிர்க்கமுடியாத தவறு அது. அதை உணர்ந்து, உங்களை மனமுவந்து ஏற்றுக்கொள்ளுபவர் இருக்கும்போது, அதிலும் நேற்றைச் சம்பவத்தைப் போன்ற துன்பங்கள் மேலும் உங்களைச் சூழலாம் என்ற நிலையிலிருக்கிறபோது, உற்ற துணைவர் ஒருவரைத் தேடிக்கொள்ள நீங்கள் தயங்கக் கூடாது.'

'மிஸ்டர் ரகு, உங்கள் அனுதாபம் கலந்த புத்திமதிக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும், நீங்கள் கூறுகிற புது வாழ்வில் நிம்மதியாக வாழமுடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.'

'நீங்கள் சொல்வது விளங்கவில்லையே!'

'ஆம், மிஸ்டர் ரகு; 'ஆசை அறுபதுநாள்; மோகம் முப்பதுநாள்' என்று நீங்கள் கேள்

விப்பட்டதில்லையா? இப்பொழுது என் களங்கத்தைப் பொருட்படுத்தாது, மணக்க முன் வருபவர் என் அழகை முன்னிட்டே அவ்வாறு துணிகிறார். ஆதலால் அந்த அழகு மயக்கம் அடங்கிய பின்னர், பழைய தூய்மையின்மையைக் காட்டி, என்னை நிராகரித்துவிடமாட்டார் என்பது என்ன நிச்சயம்?'

'துயரில் அடிபட்டுப் பட்டு, நீங்கள் வருங்கால வாழ்விலும் அதன் சாயலையே கற்பனை செய்து கலங்குகிறீர்கள், தீபா. என் அனுபவத்தில், எனது நெருங்கிய நண்பன் ஒருவன், உங்களைப்போலவே கரைபட்டுக் கணவனால் புறக்கணிக்கப்பட்ட அகதிப் பெண் ஒருத்தியை மணந்துகொண்டிருக்கிறான். அவர்கள் திருமணம் பதிவாகிக் கிட்டத்தட்ட நான்கு வருஷங்களாகிவிட்டன. இருந்தாலும், அவர்களுடைய தாம்பத்ய வாழ்வில் எவ்விதப் பிணக்கும் ஏற்பட்டதாக, இதுவரை எனக்குச் செய்தி வரவில்லை.'

'ஏதோ ஆயிரத்தில் ஒருவர் நல்லவராக இருக்கலாம், அதற்காக எல்லோரையும் அவ்வாறே நிறைகட்டிவிட முடியுமா? தவிர, நான் கண்டும் கேட்டும் இருப்பது உங்கள் முடிவுக்கு நேர்மாறான அநுபவம். ஒருவருக்கு மனைவியாகி, 'எந்த நிமிஷத்தில் தாம்பத்தியம் முறியுமோ!' என்று பயந்துகொண்டிருப்பதைவிட, அதை ஏற்காமலே இருப்பது நல்லதல்லவா?'

'ஆனால், நேற்று நிகழவிருந்தது போன்ற தீங்குகள்?'

'எங்கள் தலைவிதி, அவற்றை எதிர்கொள்ளத்தான் வேண்டும். அதற்காக, ஒரு ஆபத்துக்குப் பயந்து இன்னொரு ஆபத்தில் மாட்டிக்கொள்ளுவது விவேகமாகாதே!'

தீபாவிடம் நான் எவ்வளவோ சொன்னேன். ஆனால், அவள் தன்னைக் கட்டிக்கொள்ள முன்வருபவர், பின்னால் தன் குறையைச் சுட்டிக்காட்டி நிராகரிக்கமாட்டார் என்பதில் தனக்குத் துளியும் நம்பிக்கையில்லையென்று தீர்மானமாகக் கூறிவிட்டாள்.

எனக்குச் சற்றும் சம்பந்தமற்ற இந்த விஷயத்துக்காக மனது அல்லற்பட்டது இங்கேதான். 'தீபாவின் பிடிவாதத்துக்கு அடிப்படை என்ன? முன் கணவனிடம் ஏற்பட்டுள்ள மகத்தான பக்தி காரணமாக மறு விவாகத்தை நிராகரிக்கிறாளா? அப்படியானால், நேற்று நடைபெற விருந்ததைப் போன்ற துன்பம் நடந்தால், அதுவும் அவள் தூய்மையைப் பாதிப்பதாகத்தானே ஆகும்? அவள் சொன்னாளே: 'என்னை ஏற்றுக்கொள்ளும் புதுக் கணவனை நம்ப முடியாது' என்று; அது யஸ்வந்தின் விஷயத்தில் பொருந்துமா? யார் யாரோ, இப்படி மறுமணம் செய்துகொள்ளப்பட்ட கணவனால் புறக்கணிக்கப்பட்டார்கள் என்று கூறினாளே; அது உண்மையாக இருக்குமா? அல்லது, என் வாயை அடைக்கக் கூறிய வாதமா?' என்று பலவாறு எண்ணிக்கொண்டு, மாலையில் காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வந்தேன்.

2

சில சமயங்களில் நாம் நினைத்த காரியங்களைவிட நினையாத காரியங்கள் எதிர்பாராதபடி நடந்துவிடுகின்றன. தீபாவின் தீர்மானத்தைக் குலைக்கவே முடியாது என்று தளர்ந்து திரும்பிய எனக்குப் புது ஊக்கம் அளிக்கும் செய்தி ஒன்றைத் தாங்கிய கடிதம் வீட்டில் காத்திருந்தது. ஆம்! எவன் தீபாவைப்போன்ற நிலையிலிருந்த ஓர் அகதிப் பெண்ணை மணந்து அவளைப் பூவாகப்பேணி வைத்திருக்கிறான் என்று கூறினேனோ, அந்தச் சீனுவே டெல்லியிலிருந்து அக் கடிதத்தை எழுதியிருந்தான்; புரட்சிகரமான அக்கலியாணத்தின் பயனாக, பெற்றோர், உற்றார், நண்பர்கள் எல்லோரையும் விரோதித்துக்கொண்ட அவனிடமிருந்து கடந்த நாலு வருஷங்களாக எனக்குக் கடிதமே வரவில்லை. அதனால்தான் இன்று தீபாவிடம் அடித்துப் பேசக்கூட எனக்குத் தயக்கமாக இருந்தது. ஆனால், இப்பொழுது அவனே பம்பாய்க்கு மாற்றலாகி வருகிறானாம். தகுந்த

ஜாகை கிடைக்கும் வரையில் என்னுடனே தங்கப் போகிறாும். ஆஹா! எத்தகைய அரிய சந்தர்ப்பம் இது! நிச்சயமாகச் சீனு, தன் மனைவி சுஜாவையும் அழைத்துக் கொண்டுதான் வருவான். அவ்விருவரையும் தீபாவின் முன் நிறுத்தி, 'இதோ பாருங்கள்; உங்கள் முடிவு தவறு என்பதற்கு ஆதர்ச மான தம்பதிகள்!' என்று காட்டும்போது அவளுடைய மனது கரையாமலா இருக்கப் போகிறது!

ஆனால் இங்கே நான் நினைத்தது நடக்க வில்லை. ஞாயிற்றுக்கிழமை காலையில் பம்பாய் 'பிராண்டியர் மெயிலி'லிருந்து தனித்து இறங்கிய சீனுவைக் கண்டதும், 'உன் மனைவி எங்கேடா?' என்று என்னால் கேட்காதிருக்க முடியவில்லை.

'மனைவியா?'

'ஆமாம்; சுஜாவை அழைத்துவர வில்லையா?'

'சரி; வீட்டுக்கு வா; பேசிக்கொள்ளலாம்' என்ற அவன் பதில் என் ஊக்கத்தின் அஸ்திவாரத்தில் துளையிட்டது.

வீட்டுக்கு வந்து ஸ்நானபானதிகளை முடித்துக்கொண்டதும், 'சுஜாவைப்பற்றிச் சொல்; அவள் சௌக்கியமா? ஏன் அவளைக் கூட்டி வரவில்லை?' என்று கேள்விகளை அடுக்கினேன்.

'வேறு எதாவது கேளேன், ரகு' என்றான் அவன், சுவையற்றவனாய்.

'அட பாவி! என்னடா நடந்தது? 'லட்சிய புருஷன்; நம் சமுதாயத்தில் உதாரணங் காட்டக்கூடிய தீரன்; என்று உன்னை உயிர்வாக எண்ணியிருந்தேனே! என் எண்ணத்தில் மண்ணடிக்க நீயும், கோணலாக நடந்து கொண்டுவிட்டாயா?'

'உனக்குக் கதையை அடியிலிருந்து சொல்லவேண்டும்; இல்லாவிட்டால் என்னைத்தான் குற்றவாளியாக்குவாய்' என்று ஆரம்பித்துத் தொடர்ந்தான், சீனு.

3

மாமாவின் 'ஆடிட் பீரோ'வில் புதிதாக ஓர் அகதி வேலைக்கு வந்து சேர்ந்தான் சுராஜ் என்பது அவன் பெயர். முஸ்லீம் வெறியர்களின் ரத்தப் பசிக்குப் பெற்றோரையும், அவர்களுடைய காமப் பசிக்குத் தாரத்தையும் தாரை வார்த்து விட்டு வந்த அபாக்கியவான். ஆனால். டெல்லிக்கு வந்த பிறகு, பறிபோன மனைவி என்ன ஆனாள் என்கிற கவலையே யின்றித் தன் சுற்றத்தில் வேறொரு பெண்ணை மணந்து கொள்ளத் திட்டமிட்டான்.

இச் சமயத்தில் அகதிகள் இலாகாவிலிருந்து ஒருநாள் அவனுக்கு ஓர் அறிவிப்பு வந்தது. கடத்திச் செல்லப்பட்ட பெண்களின் பரிவர்த்தனையில் அவனுடைய மனைவி சுஜா ஒருத்தியாக அவர்களிடம் வந்து தங்கியிருப்பதாகவும், உடனே உரிய அத்தாட்சியுடன் வந்து அவளை அழைத்துப்போக வேண்டுமென்றும் அந்த அறிவிப்பில் கண்டிருந்தது.

அதை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்து, 'உங்களுடைய ஆலோசனை என்ன, மிஸ்டர் ஸ்ரீனிவாஸ்?' என்று அவன் கேட்டான்.

'ஏன்? போய், 'இவள் என் மனைவியல்ல' என்று சொல்லிவிடேன்' என்றேன் கோபத்தோடு.

'அப்படித்தான் சொல்ல வேண்டும்; பின், ஒரு வருஷகாலம் அரக்கர்களிடம் அடிபட்டு வந்தவளை மனைவியாக ஏற்றுக்கொள்ள முடியுமா?'

'ஏய் சுராஜ்!' என்று தாங்கமாட்டாது கத்தினேன். 'நீ ஓர் பெண்ணாக இதே நிலையில் நிற்க நேர்ந்தால், உன் மனம் என்ன பாடுபடும் என்பதை ஆலோசித்துப் பார்த்தாயா?'

அவன் கேலியாக நகைத்தான். 'நானாக இருந்தால், அந்தப் பாவ உடலைச் சமயம் கிடைத்தபோது அழித்திருப்பேனேயன்றிப் பிறகுக்கு இழிவு ஏற்படும்படி சுமந்து திரியமாட்டேன்' என்றான்.

'பாவ உடல்! அட பாவி, தன் மனச் சரிவாலா உன் மனைவியின் உடல் பாழாயிற்று?'

'யாருடைய மனச் சரிவானால் என்ன? அழுகிய பழத்தை நல்ல பழத்துடன் கலந்தால் அதுவும் கெட்டுவிடுமே!'

'சுராஜ்' என்று குறுக்கிட்டேன். 'இது அநீதி. பெண்மைக்கு இழைக்கப்படும்

கொடுமைகளில் தலையாயது. ஆண் பிள்ளையாகிய நீ மாத்திரம் முறையாகவும், முறையற்றும் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணந்து சுகிக்கலாம்; பெண், உன் போன்றவர்களின் தைரியமின்மையால், மானத்தை இழக்க நேர்ந்ததென்றால், மனைவி உரிமையை இழந்தவளாகி விடுவாளா? இது என்ன அறியாத் தீர்ப்படா, சுராஜ்!'

'நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள், மிஸ்டர் ஸ்ரீனிவாஸன்; புதுமலரை மோந்த வண்டு, கசங்கிய மலரின் மீது நாட்டங் கொள்ளாது; அதிலும் பிறன் கைபட்டுக் கசங்கியதைத் திரும்பிக்கூடப் பாராது.'

'சுராஜ், உன் சொந்த விஷயத்தில் தலையிட்டு, இத்தனை கண்டிப்பாகப் பேசுவதற்கு மன்னித்துக்கொள். உன் மனைவியை நான் பார்த்தவனில்லை; அமளிக்கு முன்பு உங்கள் தாம்பத்திய வாழ்வு எப்படியிருந்தது என்பதும் எனக்குத் தெரியாது. இருந்தாலும், பெண் என்ற முறையில் அந்தப் பேதைமேல் ஏற்பட்டுள்ள பச்சாத்தாபத்தால்சொல்லுகிறேன்: அவளுடன்தாம்பத்திய வாழ்வு கொள்ள உன் மனது இசையாதென்றால், சகோதரியாகவேனும் ஏற்று அழைத்து வந்து காப்பாற்று.' என்று பலவாறு அவனுக்கு எடுத்துச் சொல்லி, சுஜாவை அழைத்து வரச் செய்தேன்.

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒருநாள் பகல் நேரத்தில், சுராஜ் சுஜாவை எப்படி நடத்தி வருகிறான் என்பதைத் துப்பறியவேண்டி அவன் காரியாலயத்தில் இருந்த சமயம் வீட்டுக்குச் சென்றேன். நான் யார் என்பதை சுஜாவுக்கு அறிமுகப் படுத்திக்கொண்டு வந்த காரியத்தை விசாரித்தேன்.

'மானமிழந்தவர்கள் உயிர்வாழத் தகுதியற்றவர்கள் என்பதை அறிந்திருந்தும் வாழப் பிரியங்கொண்ட எனக்கு இங்கே சரியான தண்டனை கிடைத்துக்கொண்டிருக்கிறது, மிஸ்டர் ஸ்ரீநிவாஸ். அவர் திட்டமிட்ட சந்தோஷமான இல்வாழ்வைக் குலைத்துவிட்டேனும். 'இத்தனைக்கும் பின்னர் உயிராசை கொண்டுள்ள நீயும் ஓர் பெண்ணா?' என்று நிமிஷத்துக்கொருதரம் என் நெஞ்சத்தில் அம்பு பாய்ச்சிக்கொண்டிருக்கிறார். ஆனால், என் உள்ளம் தற்கொலையை ஏற்க மறுக்கிறது. 'தவறு உன் மீது இல்லாதபோது, நீ எதற்காக உயிரிழக்க வேண்டும்?' என்று அது கேட்கிறது. 'உன்னைக் கயவர்கள் கவர்ந்து சென்றபோது, முன்னின்று போர் செய்து மீட்காத பேடி, பிழையை உன்மீது பொருத்தித் தான் இனிது வாழ ஆசைகொள்ளும்போது, நீ சாவை நாடுவதைப்போலக் கோழைத்தனம் வேறு கிடையாது' என்று அது எனக்கு அச்சுறுத்துகிறது. ஆகவே மிஸ்டர் ஸ்ரீநிவாஸ், நான் ஓர் துணிகரமான முடிவுக்கு வந்துவிட்டேன். உலகம் என்னைப் பழித்தாலும் பழிக்கட்டும்; பாழ்பட்டது என்று இவர் உதறும் இந்த உடலை இன்னும் இவர் கண்முன்பே, பாழ்படுத்த நிச்சயித்து விட்டேன். 'ஸ்ரீ சுராஜ் அவர்களின் தர்ம பத்தினி, அவருடைய ஆண்மையின்மையால் களங்கப்படுத்தப்பட்டு, அவராலும் புறக்கணிக்கப் பட்டமையால், வயிறு வளர்க்கும் பொருட்டு நடத்தும் விபசார விடுதி' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதிய போர்டு ஒன்றைத் தொங்கவிட்டுக்கொண்டு தொழில் நடத்தி இவரைப் பழிவாங்கப் போகிறேன்.........'

அவள் வேடிக்கையாகச் சொன்னாளோ, உண்மையாகத்தான் சொன்னாளோ, சுஜாவின் முடிவு என்னைத் திடுக்கிடச் செய்தது. 'அம்மணி, அவசரப்பட்டு அவ்வித அபத்தமான காரியங்கள் எதிலும் இறங்கிவிடாதீர்கள். நான் இப்பொழுதே சுராஜைக் கண்டு பேசி, உங்களை ஒழுங்கான முறையில் மனைவியாக நடத்திவரச் செய்கிறேன். அது முடியாவிட்டால், வேறு கௌரவமான மனிதர் ஒருவர் சட்டபூர்வமாக உங்களை மணந்து கொள்ளவாவது ஏற்பாடு செய்கிறேன்.' என்று சமாதானப்படுத்திவிட்டு, உடனே காரியாலயத்துக்கு வந்து சுராஜைக் கண்டு பேசினேன்.

சுஜா எடுக்க இருக்கும் தீவிர நடவடிக்கையை விவரித்தபோது, அவன் சிறிதும் அதிர்ச்சியடையாது, 'செய்தால் செய்யட்டுமே; எப்படியாவது அவள் என்னை விட்டு ஒழிந்தால் சரி!' என்றான்.

'இதனால் உனக்கு வெளியே தலைநீட்ட முடியாத அவமானம் நேரிடும் என்பதை நினைவு படுத்துகிறேன்' என்றேன்.

'எனக்கு அவமானம் ஒன்றும் ஏற்படாது, மிஸ்டர் ஸ்ரீனிவாஸ். களங்கப்பட்டவளை ஏற்க மறுத்தால், அவள் மீண்டும் களங்கத்திலே மூழ்கினாள் என்பது என்னை எப்படிப் பாதிக்க முடியும்? ஸ்ரீனிவாஸ், உதிர்ந்த

மலரைச் செடியில் ஒட்டவைத்துவிட முடியாது. அதிகமாகப்போனால், அதை ஓர் மாலையில் வேண்டுமானால் கட்டி அழகு பார்க்கலாம்.'

'கடைசியில் உன் முடிவுதான், என்ன?' என்று வருத்தத்தோடு கேட்டேன்.



'அதுதான் சொன்னேனே; உங்கள் வார்த்தையைத் தட்டமாட்டாது அவளை ஏற்று அழைத்துவந்து விட்டு, இப்பொழுது தவிக்கிறேன்.'

'நீ தவிக்க வேண்டியதில்லை. நான் அவளுக்கு ஏற்ற கணவனை விரைவில் தேடி ரிஜிஸ்தர் திருமணம் செய்து வைக்கிறேன். அதுவரை அவள் உடைந்த உள்ளத்தைத் துவாரமிட்டுத் துளைக்கும் உன் சொல்லம்புப் பிரயோகங்களைத் தயவு செய்து நிறுத்தி வை.'

4

சுஜாவின் அழகுக்கும் குணத்துக்கும், அவளை 'நீ—நான்' என்று அடிபிடி போட்டுக் கொத்திக் கொண்டுபோக வாலிபர்கள் முன் வருவார்கள் என்று நான் திடமாக நம்பினேன். ஆனால், இந்தப் பைத்தியக்கார உலகம், அழகை நேர்மையுடன் ஏற்க முன்வராத கோழையாக இருந்தது.

'அவளை நான் மனைவியாகக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். கண்ணைக் கசக்காமல் காப்பாற்றவும் உறுதி கூறுகிறேன். ஆனால் சட்டபூர்வமாகவோ, அக்கினி சாட்சியாகவோ, கைபிடிப்பதென்பது இயலாத காரியம்' என்று பேசிய வாலிபர்களின் முகத்தில் காறி உமிழ்ந்துவிட்டு, 'மேலே என்ன செய்வது?' என்ற சிந்தனையில் லயித்திருந்த போது, சுஜா, 'என்ன ஆயிற்று உங்கள் வாக்குறுதி, மிஸ்டர் ஸ்ரீநிவாஸ்?' என்று கேட்டுக்கொண்டு என்னைத் தேடி வந்து விட்டாள்.

'உனக்கேற்ற கணவனைத் தேடிப்பிடித்து விட்டேன்' என்றேன்.

'யார், அவர்?'

'இதோ!'

'நீங்களா? அத்தனை பாக்கியசாலியா நான்!' அவள் முகத்தில் ஆச்சர்யமும் மகிழ்ச்சியும் கலந்து விளையாடின.

பிறகு என்ன?

மாமா முதல், நண்பர்கள் வரையில், எவர் பேச்சையும் லட்சியம் செய்யாமல் ரிஜிஸ்தார் முன்னிலையில் எங்கள் திருமணம் பதிவாயிற்று.

சமூகத்தில் புயலைக் கிளப்பியவன் என்ற பெருமையுடன், நான் தலைநிமிர்ந்து நடக்க முயற்சித்தபோது, முதல் 'போடு' என் மாமாவிடமிருந்து வந்தது. அவர் தலை குனியும்படியான காரியத்தைச் செய்து விட்டேனாம்; ஆகவே அவருடைய 'ஆடிட் பீரோ'வில் எனக்கு வேலை இல்லையாம்!

'ரொம்ப வந்தனம்' என்று கூறிவிட்டு வீறாப்புடன் வெளியேறினேன்.

வேறு வேலைக்கு முயற்சித்துக்கொண்டிருந்தபோது அடுத்த அடி வீட்டுக்காரரிடமிருந்து விழுந்தது. 'நாறியவளைச் சேர்த்துக்கொண்டு வாழ்வதால், நீங்கள் வசித்துவரும் வீட்டிலுள்ள இதரக் குடித்தனக்காரர்கள் வீட்டைக் காலி செய்துவிடுவதாகப் பயமுறுத்துகிறார்கள். ஒன்று முழு வீட்டையும் நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்; இல்லாவிட்டால் வீட்டைக் காலிசெய்துவிடுங்கள்' என்று எச்சரித்தார் அவர்.

'அட பழிகார உலகமே!' என்று சபித்துக்கொண்டு, என் சக்தியை மீறிய செயலாக முழு வீட்டையும் வாடகைக்கு எடுத்துக்கொண்டேன்.

பிரசித்தி பெற்ற 'ஆடிட் பீரோ'வில் வேலை செய்து அநுபவம் பெற்றிருந்தும் என் துரதிர்ஷ்டம் வேறு வேலை எளிதில் கிடைக்கவில்லை. கையிலிருந்த பணமும் கனவேகமாகக் கரைந்து வந்தது. இரண்டுங்கெட்டான் நிலையை அடைந்தபோது, என் மனதிலே எழுந்த கசப்பு எத்தனை தடுத்தும் கேளாது சுஜாவின் மீதுதான் பாயத் துடித்தது. அவளை மணந்து கொண்டிரா விட்டால் இந்தச் சங்கட நிலையை எட்டியிருக்கமாட்டேன் அல்லவா?

ஆனால் மறந்துங்கூட மனசிலே தோன்றிய கசப்பை அவள் முன்னிலையில் காட்டவில்லை. ஏன்? நான் வேலையிழந்து தரித்திரத்தில் உழன்று, கடன் வாங்கிக் காலங்கழித்து வருகிறேன் என்பதைக்கூட அவள் அறியாதவாறுதான் நடந்துகொண்டேன்.

இருந்தாலும் எத்தனை நாட்கள் கடன் வாங்கியே காலத்தை ஓட்டமுடியும்? கொடுத்தவர்கள் நெருக்கியபோது, நான் தலைமறைய வேண்டியதாயிற்று. அபதான் எண்ணெய்க் கம்பெனியில் வேலை செய்வதற்காக, இங்கிருந்து குமாஸ்தாக்களைத் தேர்ந்தெடுத்து மூன்று வருஷ ஒப்பந்தத்தில் அனுப்பிக் கொண்டிருந்தனர். சொல்லாமல், கொள்ளாமல், ஒரு நாள் அக்கம்பெனியில் சேர்ந்து கப்பலேறிவிட்டேன்.

அபதான் போய்ச் சேர்ந்ததும், என் உண்மை நிலையை விளக்கி, சுஜாவுக்குக் கடிதம் எழுதினேன். அவள் மீது லவலேசமும் வெறுப்பில்லை யென்றும், கடனைத் தீர்க்கவே கடல் கடந்து வந்ததாகவும் விளக்கி, மாதந்தோறும் அவள் செலவுக்குப் பணம் அனுப்புவதோடு, மூன்று வருஷ ஒப்பந்தம் முடிந்ததும், கடன்களை அடைத்து வசதியாக வாழத்தக்க தொகையுடன் வருவதாகத் தேறுதல்கூறி, அதுவரை டெல்லியிலே இருக்கும்படி அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தக் கடிதமும், முதல் மாதம் சம்பளம் வாங்கியதும் சுஜாவுக்கு அனுப்பிய பணமும், 'விலாசதார் இல்லை' என எனக்கே திரும்பி வந்துவிட்டன. பாவம்! சுஜா அவளை வெறுத்து ஓடிப்போய்விட்டேன் என்று எண்ணி உயிரை மாய்த்துக்கொண்டாளோ, என்னவோ?

இந்தியா திரும்பியபோது, அதே அபதான் எண்ணெய்க் கம்பெனியின் டெல்லி கிளைக்கு உதவி மானேஜராகப் பெரும் பதவியுடன் வந்தேன். இப்பொழுதும் அதே பதவியோடுதான் பம்பாய்க்கு மாற்றலாகி வந்திருக்கிறேன். ஆனால், எந்தப்பதவி இருந்தால் என்ன? அதைக் கண்டு பெருமைகொள்வதற்கு என் என் சுஜா இல்லையே! என்று வருத்தத்துடன் கூறிமுடித்தான், சீனு.

5

சீனு கூறிய கதையைக் கேட்டதும், என் மனம் மிகவும் தளர்ந்து போயிற்று. ஆம், அவன்சுஜாவிடம் சொல்லிக்கொள்ளாமல்ஓட நேர்ந்ததன் காரணம் முற்றிலும் மாறுபட்டதாயினும், ஊரார் புறக்கணிப்புக்கு அஞ்சித் தன்னை நிராகரிக்க ஓடியதாகத்தானே அவள் நினைத்திருப்பாள்! மேலும், இவன் கடனுக்காகத்தான் ஓடிப்போனுன் என்பதை எப்படி நம்புவது? தீபா கூறியதுபோல, மனச் சரிவே காரணமாக இருந்து, அதை என்னிடம் மறைப்பதற்காக இப்படிக் கதையளக்கிருனே, என்னவோ?

இந்த நினைவு தோன்றியதும், அதை ஊர்ஜிதம் செய்துகொள்ள வேண்டும் என்ற அபிப்பிராயமும் என்னைத் தொடர்ந்தது.

ஆகவே, 'ஆமாம்; நீ கூறுவது உண்மை என்பதற்கு என்ன அத்தாட்சி?' என்று சீனு விடம் திறந்தே கேட்டுவிட்டேன்.

'அத்தாட்சியா? இரு' என்று கூறிவிட்டு, அவன் பெட்டியைத் திறந்து, அதிலிருந்து சுஜாவுக்கு எழுதித் திரும்பி வந்த கடிதத் தைத் தபால் முத்திரைகள் தாங்கிய உறை யோடு எடுத்துவந்து காட்டினன்.

என் மனம் சமாதானம் அடைந்து விட்டது. இருந்தாலும், என்ன பிரயோ ஜனம்? சுஜாவும் இவனுடன் இருந்து, 'இதோ, எத்தனை சந்தோஷமாகத் தாம்பத் தியம் நடத்துகிருர்கள், பாருங்கள்' என்று தீபாவுக்குக் காட்டினல் அல்லவா, ஒருகால் அவள் மனம் தெளிந்து, யஸ்வந்தை மணக்க இசையலாம். இப்போதைக்கு வெற்றி என்னவோ அவள் பங்கில்தானே இருக் கிறது!

6

திங்களன்று காரியாலயம் சென்றதும் தீபா என்னிடம் வந்தாள். 'மிஸ்டர் ரகு, அன்று உங்களிடம் ரொம்பவும் கண்டிப்பாகப் பேசிவிட்டேன். என் அபலைத் தன்மையைப் போக்கவேண்டு மென்ற ஒரே ஆத்மார்த்தமான நோக்கத் தோடு நீங்கள் கூறிய புத்திமதிகளை மூர்க்கத் தனமாக நிராகரித்ததற்கு வருந்துகிறேன். பின்னல் உங்கள் ஆலோசனையைப்பற்றிச் சிந் தித்தபோது, அது இன்றைய என் நிலைக்கு உகந்தது என்பது தெளிவாயிற்று. ஆகவே, தயவுசெய்து என்னை மன்னித்து, யஸ்வந்தை மணக்கச் சித்தமாக இருக்கிறேன் என்பதை நீங்களே அவரிடம் தெரிவித்துவிட வேண்டு கிறேன்' என்ருள்.

முதலிலே அவள் இப்படிப் பேசியிருந் தால், 'சுபஸ்ய சீக்கிரம்' என்றவாறு, இதற் குள் யஸ்வந்தையும் அவளையும் சட்டபூர்வ மான தம்பதிகளாக்கி விட்டிருப்பேன். ஆனல், இப்பொழுது என் மனது சரிந்து விட்டது. 'ஆளானப்பட்ட சீனுவே இப்படி ஓர் திருமணத்தில் சிக்கி, அவஸ்தைப்பட்டு, தலைமறைய நேர்ந்ததை அறிந்தபோது, நாளைக்கு யஸ்வந்தின் கதியும் அதேபோலாகி விட்டால்...?' என்ற சந்தேகம் என்னுள் கொதிக்க ஆரம்பித்தது. எனவே சொன் னேன்; 'இல்லை தீபா, அன்று உங்களிடம் கூறிய வார்த்தைகளை 'வாபஸ்' வாங்கிக் கொள்ளுகிறேன். இந்தத் திருமணம் உங் களுக்கு நிம்மதி அளிக்கும் என்ற திடம் இப்பொழுது என்னிடமிருந்து கரைந்து விட்டது.'

'இது என்ன, மிஸ்டர் ரகு, என்னைச் சோதனை செய்கிறீர்களா?'

'சோதனை ஒன்றுமில்லை தீபா; அன்று யாரை உதாரணமாகக் காட்டி, உங்கள் முடிவு தவறு என்று வாதாடினேனே, அவனுடைய போக்குத்தான் இந்த என் மனச் சரிவுக்குக் காரணம்.'

'ஏன்? உங்கள் நண்பர் தம் மனைவியை, பழைய களங்கத்துக்காகத் துறந்து விட் டாரா?'

'அதற்காக இல்லை; இருந்தாலும் அதனல் எழுந்த சங்கடங்களே அவனை விரட்டி விட்டன.'

'அப்படியென்ருல்?'

'அந்த என் நண்பன் ஸ்ரீனிவாசனுக்கு...'

'யார்? ஸ்ரீனிவாஸ் என்பதா உங்கள் நண்பரின் பெயர்!' என்று ஆச்சரியத்தோடு கேட்டாள், தீபா.

'ஆமாம்; ஏன் அவனை உங்களுக்குத் தெரியுமா?'

'தெரியும்; என் சிநேகிதி சுஜா என்பவள் டெல்லியில் இருந்தாள். அவளை மணந்து கொண்டவரின் பெயர் ஸ்ரீனிவாஸ் என்பது தான் அவர்தாம் உங்கள் நண்பரோ? அப்படியானல், அவர் அவளுடைய களங் கத்தை எண்ணி ஓடி மறைந்துவிட்டதாக வல்லவோ சுஜா என்னிடம் சொன்னுள்!'

'இல்லை தீபா; நடந்தது இதுதான்' என்றுகூறி, முன்னுள் சீனு எனக்கு அறி வித்த கதை முழுவதையும் அவளிடம் விவரித்தேன்.

தீபா அதைக் கேட்டுச் சிரித்தாள். 'உங்கள் நண்பர் கூறியதை நீங்கள் நம்பு கிறீர்களா?' என்று கேட்டாள், பிறகு.

'உங்களைப் போலவே நானும் அவன் கூறியதை முதலில் நம்ப மறுத்தேன். ஆனல், அவன், சுஜாவுக்கு எழுதித் திரும்பி வந்த கடிதத்தைத் தபால் முத்திரை தாங்கிய உறையோடு என்னிடம் காட்டியபோது, என்னல் நம்பாதிருக்க முடியவில்லை. இருந்

தாலும் என்ன? அந்தப் பேதைப் பெண், இரண்டாங் கணவனும் தன்னைப் புறக் கணித்து விட்டதாக உயிரையே விட்டிருந் தாலும் இருக்கலாமல்லவா?'

'இல்லை, மிஸ்டர் ரகு; சுஜா உயிரோடு தான் இருக்கிறாள்.'

'என்ன? சுஜா உயிரோடிருக்கிறாளா! எங்கே?'

'இந்த ஊரிலேதான் இருக்கிறாள், மிஸ்டர் ரகு. கவலைப்படாதீர்கள்; உங்கள் நண்ப ரிடம், அவருடைய மனைவியை மாலையில் நானே அழைத்து வருவதாகக் கூறுங்கள்.'

'மாலை வரையில் ஏன் காத்திருக்க வேண் டும்? இதோ, இப்பொழுதே கிளம்புங்கள், தீபா. சீனு இன்று காரியாலயம் போகவில்லை; என் வீட்டில்தான் இருக்கிறான். வாருங்கள், நாமிருவரும் சென்று, சுஜாவை அழைத்துக் கொண்டு அவள் கணவனிடம் ஒப்படைத்து விடலாம்.'

'நீங்கள் அலைய வேண்டியதில்லை, மிஸ்டர் ரகு. நானே அவளை அழைத்து வருகிறேன். நீங்கள் வேண்டுமானால், முன்னால் வீட்டுக் குச் சென்று, உங்கள் நண்பரை, மனைவியை வரவேற்கச் சித்தப்படுத்திவையுங்கள்' என்று கூறிவிட்டு உற்சாகத்தோடு கிளம்பிச் சென் றாள், தீபா.

7

ஆனால், ஒரு மணி நேரத்துக்குப் பிறகு சீனுவைவிட அதிக ஆவ லோடு அவன் மனைவியை எதிர்நோக்கிக் காத்திருந்த நான், தீபா மாத்திரம் என் வீட்டுக்குள் நுழைவதைக் கண்டதும் ஏமாற்றம் அடைந்தேன்.



'சுஜா எங்கே, தீபா?' என்று நான் கலக்கத் தோடு கேட்பதற்கும், 'என் சுஜா!' என்று சீனு தீபாவிடம் பாய்வதற்கும் சரியாக இருந்தது.

'என்ன இது? தீபா தானா சுஜா!'

'ஆமாம் மிஸ்டர் ரகு; என் பழைய சரிதங்கள் பம்பாயிலும் கிளம்பி தொந்தரவு அளிக்காதிருப் பதற்காக, இங்கேவந்த தும் முன்எச்சரிக்கையாகப் பெயரை மாற்றிவைத்துக் கொண்டேன்' என்றாள் தீபா, சீனுவின் அணைப்பி லிருந்து தன்னை விடுவித் துக்கொண்டு.

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள்: 'பெண் என்பவள் புதிரா' இல்லை யா என்பதை!



4. உடலின் தேவையும் மனிதன் குணமும்

ஊழியப் பிரமம் என்று அழைக்கப்படும் அவருக்கு அந்தப் பெயர் கிடைத்தது விசித்திரம். பரோபகார ஸ்வாமிகளிடம் பழகி வந்த அவர் நல்ல இளமையையும் கட்டு மஸ்தான தேகத்தையும் வசீகரமான அழகையும் பெற்றிருந்தார். எங்கெங்கோ திரிந்துவிட்டு ஒருநாள் களைப்பாக அவர் பரோபகார ஸ்வாமியினுடைய பரோபகார சிகித்ஸாலயத்தின் வாசலில் வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்தவுடனேயே ஸ்வாமிகள் தாம் எதிர்பார்த்திருந்த ஒரு நண்பனை ஏற்றுக்கொள்வதுபோல் ஓடிவந்து அழைத்துச் சென்றார் உள்ளே.

களைப்படைந்திருந்த அவருக்கு ஒரு மூலிகையின் வாசனையை ஊட்ட அவர் களைப்பு எல்லாம் நீங்கி, சுறுசுறுப்பும் மூளைத் தெளிவும் உள்ளவராக ஆனார். இருவருக்கும் நடந்த சம்பாஷணையில் வந்தவர், தாம் உலகத்தை வெறுப்பதாயும் ஆத்மா முன்னேறக் காட்டுக்குச் சென்று தவம் செய்ய எண்ணுவதாயும் தெரிவிக்கவே பரோபகார ஸ்வாமிகள் சிரித்துவிட்டு 'நீ ஸமஸ்கிருதத்தில் ஏதாவது புஸ்தகம் வாசித்திருக்கிறாயா?' என்று கேட்டார்.

'கீதையை நான் வாசித்திருக்கிறேன்.'

'கீதையை வாசித்த நீயா உலகுக்கு ஒன்றும் செய்யாமல் ஓடப் பார்க்கிறாய்?'

'ஆம் எனக்குக் கீதையில் ஞானமும் யோகமும்தான் அதிகம் மனதுக்கு உகந்தது'

'அது சரி, நான் அதைத் தடுக்கவில்லை. ஆனால் கர்மத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மகத்துவம் வீணா?'

'அதனாலும் நாம் விரும்பியது கிடைக்குமானால்...'

'விரும்பியது என்ன என்று உன்னால் முடிவாகச் சொல்லமுடியுமா? சொல் பார்க்கலாம்!'

வந்தவர் விழித்தார். என்ன விரும்புகிறோம் நாம்? பணம், மனைவி, பெண், மக்கள், சுகம், மனசிம்மதி? எதை? அவர் விழித்துக்கொண்டேயிருந்தார்.

சுவாமிகள் சொன்னார்:

'ஆத்ம விடுதலை வேண்டுகிறாய். உனக்கு அதைச் சொல்லத் தெரியவில்லை. ஆத்மவிடுதலை தேகக்கட்டுப் பாட்டினால் சித்திக்காது என்று எண்ணுகிறாய், அது உண்மைதான், ஓரளவுக்கு. ஆனால் தேகம் பெற்ற மனிதன் அதன் கடமையை நிறைவேற்றாமல் ஆத்ம விடுதலை அடைதல் கஷ்டம்.'

'அதற்குச் சாக்ஷி!'

'நம்முடைய ரிஷிகளும் யோகிகளுமேதான், காட்டுக்குச் செல்வதற்கு முன்னே பின்னே அவர்கள் மக்களிடையே பழகி, அவர்கள் நன்மைக்கெனவே பலகாரியங்களைச் செய்து போயிருக்கின்றனர். இன்று நம் நாட்டினர் தாங்கிப் போற்றும் கருத்துக்சள், வாழ்க்கை நெறி, பண்பாடு எல்லாமே அந்தத் துறவிகள் தந்து போனவை. துறவு என்பது வெளி உலகைத் துறப்பது அல்ல, மக்களைத் துறப்ப தல்ல தேகத்தைத் துறப்பது மல்ல. தேகத்தால் மக்களுக்கு உழைக்க உழைக்கத்தான் மனதால் ஆத்மத்தை அறிய முடியும்....

வந்தவர் சற்று நேரம் யோசித்தார். இவை எல்லாம் ஒரெ சமயத்தில் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் இயலாத காரியம்......

'ஆம், நீ இங்கே தங்கி விடு. இங்கு நடக்கும் காரியத்தைச் செவ்வனே கற்றுக் கொள். அதிலும் நாம் செய்தோம் என்பதைவிட, காரியம் நடக்கிறது, நடக்கும் என்ற எண்ணத்துடன் கடவுள் விருப்பம் என்பதை அறிந்து பழகிவா. வர வர எல்லாம் தெளிவாகும்.!' என்றார் ஸ்வாமிகள்.

இப்படிப்பட்ட புதுத் துறவியைக் கண்ட வந்தவர் தேடியலைந்து காணமல் தவித்த ஒன்றைக் கண்டு பிடித்தவர்போல் அங்கேயே தங்கி விட்டார். தம்மை எப்பொழுதும் ஊழியன் என்று சொல்லிக் கொண்ட படியால் அவருடைய ஆத்ம அறிவின் விசாலத்தைப் பற்றி அறிந்த சுவாமிகள் ஊழியப்பிரமம் என்று அழைக்க ஆரம்பித்தார். மக்களும் சில சமயம் சின்ன சுவாமிகள் என்றும் மறு சமயம் ஊழியப்பிரமமகாராஜ் என்றும் அழைத்தனர். கடைசியில் ஒரு நாள் பெரிய சுவாமிகள் மறைந்துவிடவே ஊழியப்பிரமமகாராஜ் மக்களுக்குப் பிடித்தவர் ஆய்விட்டார்.

அவர் இந்தச் சிகித்ஸாலாயத்தை ஸ்தாபித்தவுடன் அநேக ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுத் தீராத வியாதியை எல்லாம் தீர்க்க ஆரம்பித்து விட்டார். மக்கள் அவரைப் பெரியசுவாமி கடவுளைவிடச் சக்தி வாய்ந்தவராகக் கருதினர். ஆனால் அவர் மட்டும் பெரிய சுவாமிகளின் தீர்க்க தரிசனம், யோக சக்தி, தெளிந்த ஆத்ம ஞானம் இவற்றை அடைய இன்னும் பல காலம் போக வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். மக்கள் அடக்கம் என்று அதற்கு அடைமொழி தந்தனர். தெரிந்தவர்களுக்கு அது உண்மை என்று தெரியும்.

ஊழியப் பிரமம் ஒரு நாள் வாயிற் பக்கத்தில் தம் புலித் தோலாசனத்தில் அமர்ந்து ஒரு முக்கியமான வியாதியஸ்தனின் வியாதிக்குச் சில பச்சிலைச் சாறுகளைச் சேர்த்துக் கொண்டிருந்தார். அதே சமயம் ஆசிரமத்தில் வைத்தியம் பழகி வரும் சிலர் வெளியிலிருந்து அவசரமாக ஓடி வந்தனர்.

அவர்களில் ஒருவன் 'சுவாமி! சுவாமி', என்று கதறினான். ஸ்வாமி தம் கையிலிருந்த வேலையைத் தம் முக்கிய சிஷ்யனிடம் தந்துவிட்டு, தலையைச் சாவதானமாகத் திருப்பி 'என்ன ஆனந்தா?' என்றார்.

ஒரு குழியில் சாகுந்தறுவாயில் இருக்கும் ஒரு பெண் கிடைத்தாள்... !'

'பெண்ணா? எங்கே அவள்?'

"கேட்டுக்கு வெளியே இருக்கிறாள்... வண்டியில் கிடத்தியிருக்கிறோம்...!"

"ஏன் உள்ளே கொண்டு வரவில்லை?"

"இது வரையில் ஆசிரமத்துக்குள்..."

'பரவாயில்லை, வண்டியை உள்ளே ஓட்டிவரச் சொல்.'

'வடக்குக் கோடியில் உள்ள குடிலைச் செம்மைப்படுத்த ஏற்பாடு செய். நீ போ!' என்று சொல்லிவிட்டு, சுவாமிகள் நேரே வண்டியை எதிர் நோக்கிச் சென்றார்.

வண்டி அதற்குள் ஆசிரமத்தின் வாசலிலேயே வந்துவிடவே சுவாமிகள் அருகில் சென்று பார்த்தார். மற்ற ஜனங்களும் தங்கள் தங்கள் வேலையை மறந்தனர்.

அங்கு வந்திருந்த இரண்டு மூன்று பெண்களின் உதவியால் பெண்ணின் உடல்கீழே இறக்கப்பட்டு மேடையில் வைக்கப்பட்டது. சுவாமிகள், ரத்தம் சொட்டும் அந்தப் புடவையின் மத்தியில் இருக்கும் பெண்ணின் அருகில் சென்றார். ஆனால் ஏனோ அவர் சற்றுத் தயங்கினார். மக்கள் பெண்ணாயிற்றே என்று சுவாமிகள் தயங்கினார் என்று எண்ணினார்கள். ஆனால் புருவம் சுளிக்க, கண்கள் சுழல, உடல் நடுங்க, அவர் நின்றதைக் கண்ட மக்கள் ஆழமான ஒரு காரணமும் இருக்க வேண்டும் என்று நம்பினார்கள். நமக்குப் பழகாதவர் என்ற ஒரு காரணத்தால் அவர் உள்ளத்தை ஆடவைக்கும் சுதந்திரமும் பழக்கமுமுடைய பலர் உலகில் இருக்க முடியாது என்று எப்படி நினைப்பது? நாம் புதிதாய்ப் பார்ப்பவர்கள் எல்லோரும் ஆகாயத்திலிருந்தா குதிக்கிறார்கள்? அல்லது காட்டில் மிருகத்திடையேயோ, மரங்களின் கிளைகளின் மேலேயோ, இருந்து பிறந்து வருகிறார்களா?

சுவாமிகளுக்கு விழித்துக் கொண்டு நிற்க நேரமில்லை. உடனே அருகே சென்று அவர் அந்தப் பெண்ணின் கையைப் பிரித்து உள்ளங்கையில்

கையை வைத்துப் பார்த்தார். பிறகு நாடிகளைப் பார்த்தார். முகத்தை அசக்கிப் பார்த்தார். மூக்கில் விரல் வைத்துப் பார்த்தார். சுமார் நூறு பேர், ஆணும் பெண்ணும், அந்த அழகிய உடலை நன்கு பார்த்தனர். மார்பிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நெஞ்சில் குத்து; தலை கொஞ்சம் திருகி வைக்கப்பட்டிருந்தது. மக்கள் அப்படியே வெலவெலத்து விட்டனர். இவ்வளவு அழகிய இளம் பெண்ணை எந்தப் பாதகன் குத்தியிருப்பான்?

அவள் உடலில் நகையைக் காணோம். நகைக்காகக் குத்தியிருப்பானோ?...என்னவோ?

சுவாமிகள் அவசரமாகச் சில பச்சிலைகளின் ஸம்ஸ்கிருதப் பெயர்களைச் சொல்லி, சீக்கிரம் கொண்டு வா என்று சொன்னார். சில சூர்ணங்கள் வந்தன. பச்சிலைச் சாறுகளைக் கலந்து ரத்தம் வரும் இடங்களில் பிழிந்தார் சுவாமிகள். ரத்தம் கசிவது நின்று விட்டது. பிறகு சூர்ணங்களை அந்தப் புண்களின் மேல் உதறி விட்டு ஒரு தைலத்தைக் கழுத்தைச் சுற்றித் தடவினார். தடவின சில நிமிஷங்களுக்கெல்லாம் சுற்றித் திருகி இருந்த கழுத்து தானாகவே தன் நிலைக்கு வந்தது. முகத்தில் இருந்த வேதனைக் குறிகள் தாமாகவே விலகின. மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

கவலைக் குறிகள் நீங்கிய முகத்தினராய் ஸ்வாமிகள் திரும்பி, அருகே நின்ற ஒருவனைப் பார்த்து: இவளுக்கருகே வேறு ஏதாவது குழியில் கிடந்ததா? என்றார். ஒரு ரிஸ்ட் வாட்ச் இருந்தது என்று கொண்டுவந்து கொடுத்தான். அதை வாங்கிப் பார்த்துவிட்டு உள்ளே வைக்கச் சொல்லி உத்தரவு கொடுத்தார். பிறகு மற்றொருவரிடம் திரும்பி, 'பரிபூர்ணம்! இவள் காலை 4-15 ரயிலில் இறங்கி வந்திருக்க வேண்டும். இவள் மதராஸிலிருந்து வருகிறாள். தொடர்ந்து வந்த யாரோ ஒருவன் இவளைச் சித்திரவதை செய்திருக்கிறான். காரணம் என்னவோ.... .. போகட்டும். இனி இவள் தப்பி விடுவாள். கொண்டுபோய் இவளை அந்தக் குடிசையில் வைத்துவிடு. இவளுடன் இருக்க ஒருபெண் வேண்டுமே...' என்று சொல்லி விட்டுக் கூட்டத்தைப் பார்த்தார். அதிலிருந்து இரண்டு பெண்கள் வெளியே முன்னேறி வந்து, சுவாமிகள் அனுமதி தந்தால் நாங்கள் தங்கி விடுகிறோம்! என்றனர். அவர்களுடன் வந்திருந்த அவர்கள் கணவன்மார்களும், 'இருக்கட்டும் சுவாமிகளே. நாங்களும் இங்கேயே தங்கி விடுகிறோம்!' என்றனர்.

சுவாமிகள் யோசித்துவிட்டு, 'சரி நாளை ஞாயிற்றுக்கிழமை தானே! நீங்கள் இப்பொழுது முதல் இங்கே தங்க வேண்டாம். கம்பெனிக்குப் போய் வேலை செய்துவிட்டு மாலையில் வாருங்கள் பிறகு இரவு இருந்துவிட்டு நாளைக் காலையில் போகலாம். எதற்காக ஒரு நாள் கூலி வீணாக வேண்டும். என்று சொல்லவே அவர்களும் கிளம்பி விட்டனர்!

சுவாமிகள் பெண்களிடம் திரும்பி, 'நீங்கள் அந்தக் குடிசையில் இருங்கள். அவளுக்குப் பிரக்ஞை வர இன்னம் பன்னிரண்டு மணி நேரமாகும். நீங்கள் மூன்று வேலை செய்ய வேண்டும். புழுங்கலரிசிக் கஞ்சி தயார் செய்து வைத்துக் கொண்டு அதில் ஆனந்தர் தரும் பச்சிலைச்சாற்றைச் சேர்த்து வைத்துக்கொள்ளுங்கள். அவள் முனகி வாயைத் திறக்கும் போதெல்லாம் இரண்டு ஸ்பூன் கஞ்சி கொடுங்கள். இரண்டாவது அவள் யார் பேரையாவது சொன்னால் அதை ஞாபகமாகக் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள். மூன்றாவதாக, அவள் விழித்தவுடன் சத்தம் செய்யாமல் என்னிடம் ஒரு ஸ்திரீ வந்து சொல்லுங்கள்!' என்றார்.

அவர்களும் அப்படியே ஜாக்கிரதையாக அவளைக் கவனித்துக் கொள்ளச் சென்று விட்டனர்.

சுவாமிகளும் தம் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டார்.

5. பிதற்றலும் பெண்களும்

அன்று இரவு எட்டு மணிக்கு அந்தப் பெண் கண் விழித்தாள். அங்குமிங்கும் மிரள மிரள விழித்துப் பார்த்தாள். உடல் எல்லாம் ஒரே வலியாக இருந்தது. புரண்டு படுக்க முயன்றாள். உடல் பலமிழந்து இருந்தது. கை கால்கள் அசைக்க முடியவில்லை. 'அம்மா, அடபாவி, கொன்றே விட்டானே!' என்று சத்தமிட்டாள். அதைக் கேட்டு அடுத்த அறையில் இருந்த இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி ஓடி வந்தாள்.

அவள் படுக்கை அருகில் வந்து அந்தப் பெண்ணின் முகத்தருகே குனிந்து, 'அம்மா, பயப்படாதே, நீ சுவாமிகளின் ஆசிரமத்தில் இருக்கிறாய். சுவாமிகளிடம் நீ விழித்துக் கொண்டதைச் சொல்ல என்னுடன் கூட இருந்தவள் போயிருக்கிறாள். இதோ அவரும் வந்துவிடுவார்... அவர் மூலிகைகளின் பெயரைக் கேட்டாலே யமன் ஓடிவிடுவான், என்றாள் அவள்.

அந்தப் பெண் புன்முறுவல் செய்து 'அந்த சுவாமிகள் யார், என்று கேட்டாள். பேசலாமோ பேசக்கூடாதோ என்று பயந்த அந்த ஸ்திரீ, அவள் ஆக்கிரஹத்தால் இழுக்கப்பட்டு, அவளுக்கு, சுவாமிகளிடம் இருந்த அன்புப் பெருக்கினால் ஏற்பட்ட அவர் புகழையும் பெருமையையும் தன் வாயால் சொல்ல வேண்டும் என்ற பேராவலால் உந்தப்பட்டு, வார்த்தைகள் தாமாகவே வெளி வருவதைக்கண்டு தான் சும்மா இருந்து விட்டாள். அவள் உள்ளம் சுவாமிகளின் செயல்களையும் அவர் மூலிகைகளின் வலிமையையும் தவத்தின் பெருமையையும் சொல்லித் தீர்த்த பிறகு தான் நிம்மதி அடைந்தது.

'நானே அவரைப் பார்க்கத்தான் மதராஸிலிருந்து வந்து கொண்டிருந்தேன்...' என்றாள் அந்தப் பெண்.

'அப்படியா அம்மா, பின் ஏன் அம்மா இப்படி நேர்ந்தது?'

'எதைச் சொல்லுகிறது யாரோ ஒருவன் என்னிடம் இருந்த பணத்துக்கு ஆசைப்பட்டுக் குத்திக்கொன்று விட்டான்.'

'வண்டியில் தானே வந்தீர்கள்?'

'அது தான் இல்லை......, பெண் மேலே பதில் சொல்லவில்லை. கேள்வி எக்கச் சக்கமான இடத்தில் வந்து நின்றுவிட்டது. சம்பாஷணையே ராமராவண யுத்தம் தான்... கேள்விகள் ராவணன் தலைகள் போல்; பதில் ராமன் அம்பு போல்தான்

அம்பு சென்று ஒரு முறை தலையை அறுத்தால் மீண்டும் தலைகள் கிளம்பிவிடும். ஆகவே அவள் கண்ணை மூடிக்கொண்டு ஒரு பிரமாஸ்திரமே போட்டாள். அது அவளுடைய கருணை உள்ளத்தால் தூண்டப்பட்டு, சூரியனால் அனுப்பப்பட்டு அகஸ்தியர் வந்து ராமனுக்கு உபதேசம் தந்தது போலச் சமயோசித புத்தி தந்த அஸ்திரமாகும். அவள் 'என்னவோ ஒன்றுமே ஞாபகம் இல்லை!' என்றாள்.

நவீன ராவணன்தலை. அப்பொழுது தாற்காலீகமாக அறுந்த சம்பாஷணைத் தொடர் மீண்டும் கிளம்பிற்று. 'உங்களைக் குத்தினவர் பெயர் நடராஜனா அம்மா!' என்றாள்,

அந்தப் பெண் திடுக்கிட்டாள். உடல் வியர்த்தது. முகம் வெளுத்தது. நடுங்க ஆரம்பித்ததைக் கண்ட அந்தக் கிராம மங்கை தான் செய்த பிசகை நினைத்தாள். மீண்டும் அந்தப் பெண் மனதில் பயம் எற்படுத்திவிட்டோமே என்று அஞ்சி, 'அம்மாயாரும் இங்கே வரமுடியாது. அம்மா பயப்படவேண்டாம், போனவாரம் கூட இங்கே இன்ஸ்பெக்டர் ஜெனரல் தம் மனைவியுடன் வந்திருந்தார். போலிஸ் மந்திரி மூந்தாநாள் வந்திருந்தாராம். உங்களுக்குச் சரியாகட்டும். சுவாமிகளிடம் சொல்லுங்கள். அந்தப் பயலைக் கண்டுபிடித்துப் பலிவைத்து விடலாம்.... ஏன் அம்மா அவன் உங்கள் பணத்துக்கு ஆசைப்பட்டா அம்மா இந்தமாதிரி செய்தான்?'

'எவன்... நீ ஏன் இப்படிக் கேட்கிறாய்?'

'இல்லை நீங்கள் நன்றாய்ச் சொன்னீர்களே, அடே நடராஜா, பணம்தான் வேண்டும்என்றால் எடுத்துச்செல். டிக்கட்டுக்கு மட்டும் கொடு போதும். என்னை நீ கெடுத்தது போதும். நான் நிம்மதியாக வாழும் சமயத்தில் வந்து ஏன் வதைக்கிறாய்? என்று கேட்டீர்களே!'

பெண் முதலில் பயந்தவள் ஏதோ ஒரு நிச்சயம் செய்துகொண்டு, பயத்தை மறைத்துச் சிரித்தவாறே 'அப்படியா சொன்னேன்! எனக்கு நடராஜன் என்று யாரையும் தெரியாதே. அது போகட்டும். இன்னம் ஏதாவது சென்னேனா?'

'என்னென்னமோ சொன்னீர்கள். அம்மா வைக்கூப்பிட்டு அலறினீர்கள்... ரெங்கநாதா நீர் என்னைத் தொடாதீர். அன்று நான் நல்லவள். அன்று மறுத்தீர். இன்று மாசு உள்ளவள்! என்றெல்லாம். சொன்னீர்கள்...'

தங்கம் சிரித்தாள். சரிதான் நீ இதையெல்லாம் சுவாமிகளிடம் சொன்னாயல்லவா?

'சொன்னேன்'

'அவர் என்ன சொன்னார்?'

'அவர் இதெல்லாம் உளறல் நீ மறந்துவிடு' என்றார்.

அந்தப் பெண் கொஞ்சம் கண்ணை மூடியே இருந்தாள். பிறகு அந்த ஸ்திரீயைப் பார்த்து,

'இங்கே பகல் நேரத்தில் போலீஸ்காரர்கள் வந்து இருந்தார்களோ?' என்றாள்.

'இந்த ஊர் டிபுடி சூபரின்டெண்டெண்டு வந்திதார். அவரிடம் நம்முடைய சுவாமிகள் நாளைக் காலையில்வரச் சொல்லியிருக்கிறார்'

'அவர்கள் வேறே ஒன்றும் கேட்கவில்லையா?'

''என்னைக் கேட்டார்கள். ஏதாவது சொல்கிறாளா? என்று.'

'நீ என்ன சொன்னாய்? சொல்லிவிட்டயா?'

'ஏன் அம்மா பயப்படுகிறாய்? சுவாமிகள் இஷ்டம் தெரியாமல் நான் போலீஸ்காரப் பசங்களிடம் உண்மையைச் சொல்வேனா? என்னமோ உளறுது. உருவே புரியவில்லை. என்று சொல்லிவிட்டேன்'

'சுவாமிகள் என்ன சொன்னார்கள்?'

'நீ செய்தது சரி, என்றார்கள்.' அந்தப் பெண் தன்னையறியாமல் சுவாமிகளிடம் ஒரு மரியாதை கொள்ள ஆரம்பித்தாள்.

பிறகு பேச்சை மாற்றி அவள் ஸ்திரீயைப் பற்றி விசாரித்தாள்.

அவர்கள் எல்லாம் டவுனிலிருந்து ஆறு மைலுக்கு அப்பாலுள்ள சர்க்கரைக் கம்பெனியில் வேலை செய்கிறவர்கள். சர்க்கரைக் கம்பெனி ஆறு வருஷமாக அங்கே நடந்து வருகிறது. 'சந்திரா சர்க்கரை மில்' என்று பெயர் உள்ள அந்தக் கம்பெனியில் சுமார் மூந்நூறு ஆட்கள் வேலை செய்து வந்தனர். சுவாமிகளின் புத்தி மதியால் அங்கே ஏற்பட்ட தொழிலாளர் சங்கத்துக்கு அவள் கணவன் தலைவன். மற்றொருத்தி சுவாமிகளை அழைக்கச் சென்றிருக்கிறாளே அவள் கணவன் காரியதரிசி. யாருக்கும் உடலுக்கோ மனதுக்கோ வியாதி வந்தால் இங்கே தான் வருகிற வழக்கம். சுவாமிகள் புத்திமதி சீராக இருக்கும். பெரிய உத்தியோகஸ்தர்களும் இவரிடத்திலே பத்தி உள்ளவர்கள் ஆதலால் எல்லோருக்கும் சௌகரியமாக இருக்கிறது. சண்டை சச்சரவு இல்லாமல் எல்லாம் நடக்கின்றன.........

'அது சரி. ஏன் இன்னம் சுவாமிகள் வர வில்லை.'

'தெரியவில்லை. அவரை இன்னும் பார்த்திருக்க மாட்டாள் அவள். அவரைப் பார்ப்பது என்ன சுலபமா?... அதோ அவளே வந்து விட்டாளே.'

'அப்படியா சுவாமிகளும் வருவார்கள். அவரைப் பார்க்கலாம்!' என்று சொல்லியவாறே பெண் எழுந்திருக்க முயன்றாள். அவளை 'எழுந்திருக்க வேண்டாம், என்று சொல்லியவாறே அந்தப் பெண் வந்து சேர்ந்தாள்.

'ஏன் அம்மா சுவாமிகள் வரவில்லையா?' என்று கேட்டார்கள் இருவரும்.

'இல்லை. அவர்கள் நாளைக் காலையில் தான், வருவார்கள் நம்மையே பார்த்துக் கொள்ளச் சொன்னார்.' என்று சொல்லிவிட்டு 'அம்மா உனக்கு உடம்பு எப்படி இருக்கிறது?' என்றாள்.

'பரவாயில்லை. களைப்பும் குறைவாயிருக் கிறது. உடல் மட்டும் வலி போகவில்லை.

'அப்படித்தான் இருக்கும் என்றார் சுவாமிகள். பசித்தால் எது வேண்டுமானாலும் சாப்பிடச் சொன்னார்கள். என்ன வேண்டும் உங்களுக்கு'

'நீங்கள் எதோ கொடுத்திர்களே அது ரொம்ப ருசியாக இருந்ததே.'

'அதைக் கொடுக்கவேண்டாம் என்று சொல்லி விட்டார். ரொட்டி, பால், சாதம்... ஏதாவது சாப்பிட்டு விட்டு இந்த இலையைக் கடித்துச் சாப்பிடச் சொன்னார்.'

அந்தப் பெண் ரொட்டியையும் பாலையும் சாப்பிட்டு விட்டு, இலையை வாங்கிக் கடித்து மெல்ல ஆரம்பித்தாள். அதைச் சுவைத்துக் கொண்டே, 'ஏன் அம்மா, உனக்கு இந்தத் தழையின் பெயர் தெரியுமா' என்று கேட்டாள்.

'தெரியாதம்மா! என்றாள் அவள்.

அந்தத் தழையை மென்று தின்றவுடன் உடலில் ஒரு புத்துணர்ச்சி பாய்ந்து எழுவதை அவள் அனுபவித்தாள். அத்துடன் தூக்கம் கண்ணை அசத்துவது தெரியவே கண்களை மூடினாள். தழை கொண்டுவந்த பெண், 'வா, சுவாமிகள் அவளுக்குத் தூக்கம் வந்து விடும். தூங்கட்டும்! என்று சொன்னார்கள்' என்று அழைக்க, மற்றவளும். லைட்டை அணைத்து 'மூன்லைட்' என்ற 'விடிமின்' விளக்கை ஏற்றி விட்டு அடுத்த அறைக்குச் சென்று துணியை உதறிப் போட்டுப் படுத்தனர்.

6. பெண்களும் ரகசியமும்

இரவு பத்து மணி இருக்கும் ராக்காயிக்குத் தூக்கம் வரவில்லை. மூக்காயி! என்று கூப்பிட்டாள்.

அவளும் புரண்டாள். ஏன் அக்கா தூக்கம் வரவில்லையா என்றாள். மூக்காயி! என்று கூப்பிட்டாள்.

அவளும் புரண்டாள். 'ஏன் அக்கா தூக்கம் வரவில்லையா' என்றாள் மூக்காயி.

'ஆமாம் அக்கா!, என்றாள் ராக்காயி' அவள் தான் சுவாமிகளிடம் அந்தப் பெண் கண் விழித்த தைச் சொல்லச் சென்று வந்தவள். அவள் ஏதோ சொல்ல வைத்திருக்கிறாள் என்று அறிந்து கொண்ட மூக்காயி 'என்ன அக்கா சொல்லேன்?'

'சொல்ல என்ன இருக்கிறது!' என்று மறைந் தாள் அவள்.

மூக்காயி: 'சும்மாச் சொல்லுங்கறேன். நாம் எல்லோர் கிட்டேயும் சொல்லிக் கிட்டா திரியப் போறோம்' என்றாள்.

ராக்காயி: அது இல்லை; சுவாமிகள் இந்தப் பெண் வந்ததிலிருந்து இன்று முழுவதும் கட்டுக் கொள்ளாமல் பொரி தட்டினாற்போல் இருக்கிறார்.

மூக்காயி: ஏன் ஏதாவது சம்பந்தம் இருக்கும் என்று நினைக்கிறாயோ?

ராக்: 'என்ன சம்பந்தம் என்று சொல்ல முடி யும்? ஆனால் சுவாமிகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியிருக்கிறது'

மூக்காயி: ஆமாம், இந்தப் பெண் மத்தியானம் ரெங்கநாதா என்று சொல்லி என்னமோ உளறிச்சே, அதைச் சொன்னாயல்லவா?

ராக்: ஆம், அது போலீஸ்காரரு வந்து போன பிறகுதானே நடந்தது. சொன்னேன்.

மூக்: அதற்கு சுவாமிகள் என்ன சொன்னார்?

ராக் சுவாமிகள் என்ன அப்படி எல்லாம் ஏதாவது சொல்லி விடுகிறாரா? ஆனால் இன்று இரவு நடந்தது தான் எனக்கு மிகவும் ஆச்சரியமாய்ப் போய் விட்டது.

மூக்: என்ன நடந்தது?

ராக்: அது கிடக்கு விடு; நமக்கு என்ன? ஒரு கால் அந்தப் பெண்ணும் விழித்துக் கொள் கிறதோ என்னவோ?'

மூக்: என்ன மூக்காயி, புருடா விடறயே; நீ தானே சொன்னே ஒருமணி வரையில் அந்தப் பெண் விழிக்காது என்று. பின் என்ன நான் வெளியே சொல்லி விடுவேன் என்ற பயமா?

நம்ம புருஷன் இந்தத் தலைவர்களான பிறகு நாம்ப எவ்வளவு ரகசியங்களை ஒளித்து வைத்திருக்கிறோம்.

ராக்: அதற்குச் சொல்லலை!

மூக்: பின் என்னபயம்? சும்மாச் சொல்லேன்.

ராக்: சொல்றேன்; நான் இந்தப் பெண் முழித்ததும் அங்கே போனேனா! நித்யானந்தம் தான் மருந்து கொடுத்துக் கொண்டிருந்தார். அவரிடம் நான் ஸ்வாமிகள் எங்கே என்று கேட்டேன். அவர் சுவாமிகளுடைய ஏகாந்த அறையைக் காட்டினார். நான் அவருடைய அனுமதியின் மேல் அங்கே சென்றேன்.

மூக்: கதவு திறந்தா இருந்தது?

ராக்: இல்லை, கதவு சாத்தியிருந்தது. போனவுடன் தட்டிப் பார்த்தேன். கதவு திறந்து கொண்டது. அதனால் மெதுவாகத் திறந்தேன். சுவாமிகள் குத்து விளக்குப்பக்கம் பார்த்துக் கொண்டு சமாதியில் அமர்ந்திருந்தார்.

மூக்: எப்படி எழுப்பினாய்?

ராக்: நான் சற்றுநேரம் நின்று கவனித்தேன். சுவாமிகள் ஏதோ முணு முணுத்துக்கொண்டிருந்தார்கள்...

மூக்: ஏதோ யோகத் தியானம் என்றெல்லாம் சொல்லுகிறாங்களே... அது ஏதாவதோ என்னமோ? நீ ஏன் அங்கே போனாய்?

ராக்: அதுவும் இல்லை, எதிரே சுவாமிகளின் படம் ஒன்றையும் காணோம். அவரும் ஏதோ கேள்வி கேட்பதுபோல முணு முணுத்துக் கொண்டிருந்தார்...

மூக்: பிறகு?

ராக்: நான் நன்றாகச் சுற்றும் முற்றும் கவனித்தேன். அந்த அறையில் வேறு ஒன்றுமில்லை. சுத்தமாக இருந்தது. ஒரு குத்து விளக்கு. அதன் எதிரேயுள்ள புரையில் ஒரு செம்பில் விளக்குக்கு ஊற்றும் நல்லெண்ணெய். அதன் மேலே இருந்த ஒரு பலகைத் தட்டில் பலசுவடிகள் இவைதாம் இருந்தன.

மூக்: சுவாமிகள் சமாதியில் எந்த நிலையில் இருந்தார்கள்?

ராக்: சமாதி நிலையிலில்லை அக்கா. அவர் வருத்தமடைந்த நிலையில், இருந்தார்.

மூக்: என்ன வருத்தம்?

ராக்: கேளேன். அவர் எதிரே தங்கத் கைக் கடிகாரம் பிரித்து வைக்கப் பட்டிருந்தது.

மூக்: யார்? அந்தப் பெண்ணுடைய தங்கக் கைக் கடிகாரமா?

ராக். ஆமாம்.

மூக்: அப்படியானால் நாம் நினைத்தது சரியாகி விட்டது போல இருக்கிறதே.

ராக்: நினைக்கிறது என்ன? சுவாமிகளே சொல்லி விட்டார்.

மூக்: சொன்னாரா?

ராக்: சொன்னார், ஆனால் நீ நினைக்கிறபடியல்ல. கேள், வரிசையாக நடந்ததைச் சொல்கிறேன்...

மூக்: சொல், சீக்கிரம் சொல் அக்கா!

ராக்: நான் சற்று நேரம் நின்று விட்டு, 'சுவாமி' என்று கூப்பிட்டேன். அவர் திரும்பினார்.

மூக்: கோவித்துக் கொண்டாரா?

ராக்: இல்லை, அவர் கண்களில் நீர் வழிந்து கொண்டிருந்தது. திரும்பிய அவர் கண்கள் சிவந்திருந்தன,

மூக்: ஏன்? என்ன கேட்டார் அவர்?

ராக்: அவர் 'வந்தது என்ன சமாசாரம்?' என்று கேட்டார். நான் நடந்ததைச் சொன்னேன். முழுவதும் கேட்டுக் கொண்டு சரி இன்று இரவு நான் வர மாட்டேன் அவளைப் பார்க்க. நீயே சென்று வித்யானந்தத்திடம் கேட்டு ஒரு மருந்து வாங்கிப்போ என்று எல்லாவற்றையும் சொன்னார். நான் கேட்டுக் கொண்டு திரும்பினேன்...

மூக்: ஊம்.

ராக்: திரும்பினவுடன் ராக்கக்கா என்றார் சுவாமிகள். நான் திரும்பினேன் இங்கே இரு என்றார்......நான் சற்றுப் பயந்தேன்.

மூக்: என்ன அக்கா பயம்?...அவள் சிரித்தாள்.

ராக்: அந்தப்பயம் ஒன்றும் இல்லே. ஏன் இங்கே வந்தே என்று கேட்டு வைத்தால் என்ன செய்கிறது?

மூக்: சரி என்ன கேட்டார்?

ராக்: அந்தப் பெண் தெரிந்தவள்தான். என்று சொல்லி நிறுத்திவிட்டு, அவள் சொல்லிக் கொண்டிருந்ததை எல்லாம் அவள் உத்தரவு இல்லாமல் யாரிடமும் சொல்ல வேண்டாம்! என்றார்.

மூக்: 'அதற்கு மேல் ஒன்றும் சொல்ல வில்லையா'

ராக். நான் தயங்கி நின்றேன். அவர் 'மேலே, ஒன்றும் சொல்வதற்கில்லே. அவள் இஷ்டப் பட்டால் எல்லாம் தானே வெளியாகும்' என்றார்.

மூக்: அப்படியானல் நீ என்னவோ ஒன்றும் சந்தேகம் இல்லே என்கிருயே!

ராக்: அக்கா, இவ்வளவு நாள் சுவாமியுடன் பழகியும் அவர் குணம் தெரியவில்லையே. அவர் என்ருவது உண்மையை மறைத்தது உண்டா?

மூக்: பின் ஏன் முழு உண்மையையும் சொல்ல வில்லே, உன்னிடம்?

ராக்: உன் வீட்டுக்காரன் உன்னிடம் எல்லா உண்மையையும் சொன்னதுண்டா?'

மூக்: ஆம்பிள்ளேங்க எல்லா விஷயத்தையும் பொம்பிள்ளேங்ககிட்ட சொல்லுவாங்களா?,

ராக்: கட்டின புருஷன் சொல்லமாட்டான். சுவாமிகள் கண்டதை உங்கிட்ட சொல்ல வேண்டுமாக்கும்...!'

மூக்: அட, எதுக்கு கோவிச்சுக்கிறேங்கறேன்.

ராக்: கோவம் இல்லே. நமக்கு சின்னப் புத்தியும் உதவாதல்ல:— எல்லாம் சமயம் வந்தால் தானே தெரிகிறது...

மூக்: சரி தூங்கலாம் போ...

ராக்: ஆமாம் தூங்கவேண்டியதுதான். ஆனல் இந்தப் பெண்ணை அந்தக் குத்து குத்தினனே ஒரு மனுஷன். அவன் என்ன அப்படி ராக்ஷசன் மவனு!

மூக்: ஆமாம் அக்கா. பெண்ணையும் பார்த்தால் உயர்ந்த வீட்டுப் பெண் போல இருக்கிறது. நல்லாப் படிச்சும் இருக்கும்போல இருக்கிறது.

ராக் அது சரி போ. பார்த்துக்கிடலாம். நாளைக்கே அந்தப் பெண் எழுந்துவிடும் விஷயம் தெரிந்துவிடும்.—

ஆசிரம மணி அடிப்பவன் பன்னிரண்டு அடிகள் சேமக்கலத்தில் அடித்தான். ராக்காயியும் மூக்காயியும் தூங்கிவிட்டனர். அந்த ஆசிரமத்தில் எல்லோர் உள்ளத்தினும் அமைதியை நிலை நாட்டும் புருஷனுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை,

புதுடில்லியில் காவேரி புதிய ஏஜண்ட்

M/s. மதராஸ் ஸ்டோர்ஸ்

96, Baird Road,

NEW DELHI.


வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
ஸன்லைட்
சோப்பினால் தான்
துணிகளை
அடித்துத் துவைக்காமலே
வெண்மையாகவும்
பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!
SUNLIGHT SOAP
SUNLIGHT SOAP

S, 207-50 TM

டால்டா வனஸ்பதி எல்லா சமையல்களுக்கும் மிகச்சிறந்தது

"நான் இப்பொழுது டால்டா
உபயோகித்துச் சமைப்பதால் என் குடும்பத்தினர்
ஒருபொழுதும் அவ்வுணவைச் சாப்பிடத் தவறுவதில்லை."



சிறந்த தின்பண்டமான சேம்பு இலை வடை

தயாரிக்க டால்டா செய்முறைக் குறிப்பை தவறவிடாதீர்கள்!

½ கப் கடலைமாவு, சிட்டிக்கை பேகிங் பௌடர், மஞ்சள் பொடி, ருசிக்குத்தேவையான உப்பு இவை களைக்கலந்து கெட்டியான தோசைமாவுப்பருவத்திற்கு தயாரித்துக்கொள்ளவும். சேம்பு இலையில் மாவைப்பரத்தி துருவிய தேங்காயைத் தூவவும். இலையின் ஓரத்தை மடக்கி சுருட்டவும். பிரிந்து விடாமலிருக்க கிராம்பைக் குத்தவும். ½ மணி நேரம் ஆவியில் வேகவும். பரிமாறுவதற்கு முன் துண்டுகளாக குறுக்கே வெட்டி குழிவு குறைந்த வாணலியில் சிறிது டால்டாவில் பொரிக்கவும்.

முக்கிய அறிவிப்பு: டால்டா சமையல் புத்தகம் – தமிழ், வங்காளி, ஹிந்தி, ஆங்கிலம் என்ற நான்கு பாஷைகளில் இப்பொழுது கிடைக்கிறது – 300 செய்முறைக் குறிப்புகள் – ரூ. 1/– தபால் செலவு அணா 10 தனி. இன்றே எழுதுங்கள்:
தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ், தபால்பெட்டி நெ. 353, பம்பாய் 1

டால்டா

எல்லாச் சமையல்களுக்கும் உகந்த ஆதர்ச
சமையல்- வஸ்து

10, 5, 2, 1, பவுண்டு டின்களில் கிடைக்கிறது

WVM-201-X52 TM

விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகரராசன்

கரும்பிலிருந்து பட்டு

ரேயான் என்ற செயற்கைப்பட்டு மரம், வைக்கோல், மூங்கில், கழிவுப்பருத்தி முதலிய பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. செல்லுலோஸ் என்ற ரசாயனக் கூட்டைக் கொண்ட தாவரப் பொருள்கள் செயற்கைப் பட்டுத் தயாரிப்பதற்கு மூலப் பொருள்களாகும். கரும்பிலிருந்து சாற்றைப் பிழிந்தெடுத்தபின் எஞ்சும் சக்கையையும் இவ்வகையில் பயன்படுத்தலாம். கருப்பஞ் சக்கையிலிருந்து செயற்கைப் பட்டைத் தயாரிக்கும் தொழிற்சாலையொன்று பிலிப்பீன் தீவுகளுள் ஒன்றில் நிறுவப்பட்டு வருகிறது. இது தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிதாக இருக்கும். கரும்புப் பயிர் சாகுபடி முக்கியமான இந்தப் பிரதேசத்தில் இத் தொழிற்சாலை விவசாயிகளின் பொருளாதாரத் தரம் உயரப் பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாகரிக நோய்!

பல்லில் சொத்தை விழுவது போன்ற கோளாறுகள் தற்கால நாகரிகத்தினுல் நாம் பெற்றிருக்கும் நேரடியான வரப்பிரசாதங்களுள் ஒன்று என அண்மையில் நடைபெற்ற மருத்துவ ஆராய்ச்சிகள் தெளிவாக்கியுள்ளன! நாகரிகம் முதிர்ந்த டென்மார்க் தேசத்தில் மக்களில் 99% பற்சிதைவு முதலிய கோளாறுகளால் வருந்துகின்றனர். நாகரிகத் ‘தொற்றுப்’ பரவாத கிரீன்லாந்து தேசத்திலோ 2–5% மட்டுமே பல்நோய் உடையவர்! நம் நாடு இன்னும் பூரணமாக நாகரிகம் அடையவில்லை அல்லவா? அதனுல் சுமார் 70%மக்களே நோயுற்ற பற்களை உடையவர்! பற்கள் கெடப் பல காரணம் உள்ளன. அவற்றுள் முக்கியமானது உணவிலுள்ள சர்க்கரைச் சத்து பல்லிடுக்குகளில் தங்கி நொதித்து லாக்டிக அமிலம் என்ற நஞ்சாக மாறுவது. இவ்வமிலம் பல்லின் மேற்பூச்சை அரித்துவிடுகிறது. சர்க்கரையை அதிகமாக உட்கொள்ளும் இனங்களிலேயே பல்நோய் மிகுதியாகக் காணப்பட இதுவே காரணம். பல்லிடுக்கை அடையும் சர்க்கரை சுமார் கால் மணி நேரத்திற்குள் அகற்றப்படாவிட்டால் தனது நாசவேலையைத் தொடங்கிவிடுகிறது. எதை உட்கொண்டாலும் உடனே வாயைக் கொப்புளிக்கும் கர்நாடகப் பழக்கத்தின் அருமை இதிலிருந்தாவது நமக்குத் தெரியுமா?

எந்திர துபாஷ்

நம் நாட்டு மொழிகளை அறியாத ஆங்கிலேயர் இங்கு வந்தபோது துபாஷ் என்னும் மொழிபெயர்ப்பாளரின் உதவி அவர்களுக்குத் தேவையாக இருந்தது. இப்போதும் பல மொழிகள் வழங்கும் நம்நாட்டில் சட்டசபைகளிலும், மற்றப் பொது ஸ்தாபனங்களிலும் மொழிபெயர்ப்புக்களின் உதவி வேண்டப்படுகிறது. இதை விரைவாகச் செய்யும் எந்திரத்தை அமைக்க வழி கண்டுபிடித்திருக்கிறுர்கள். பேச்சையும், எழுத்தையும் இது அவ்வப்போது மொழி பெயர்த்து விடும். புத்தகத்தை மொழி பெயர்க்கும் எந்திரத்தில் ஒரு மின்சாரக் ‘கண்’ இருக்கும். அது ஒவ்வொரு சொல்லையும் ‘கண்டு’ அதற்கேற்ற மின்துடிப்புக்களை ரேடியோக் குழல்களைக் கொண்ட ஒரு பகுதிக்கு அனுப்பும். இப்பகுதி வேற்று மொழிச் சொற்களுக்கேற்ற ஆங்கிலச் சொற்களைக் கண்டுபிடித்து அவற்றை மீண்டும் மின்துடிப்புக்களாக மாற்றி ஒரு டைப்ரைட்டருக்கு அனுப்பும். அது அச் சொற்களைக் காகிதத்தில் ‘டைப்’ செய்துவிடும். அமெரிக்காவில் மாஸசூஸிட்ஸ் தொழிற் கழகத்தில் இந்த எந்திரத்தின் எளிய வடிவம் ஒன்று அண்மையில் இயக்கிக் காட்டப்பட்டது. இது தங்கு தடையின்றி ரஷ்ய மொழிச் சொற்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் காட்டியது. இலக்கண வேறுபாடுகள் இந்த எந்திரத்திற்குத் தடையாக இருக்குமென நம்புகிறுர்கள். ஆனுல் பொருள் விளங்கினுல் இலக்கணம் எதற்கு?

தாவரங்களுக்குப் பெனிசிலின்

பெனிசிலின் என்ற நவீன மருந்தை மனிதனுக்குக் காணும் நோய்கள் அனைத்திற்கும் பயன்படுத்திப் பார்க்கும் கால மிது. கல்லூரியின் வாயிலில் கூட

நுழையாத கிராம 'மருத்துவர்' கூட இதைச் சர்வரோக சஞ்சீவியாகப் பயன்படுத்துகிறார். விலங்குகளின் நோய்களுக்கும் இது மருந்தாகிறது. விலங்குகளின் நோய்களுக்கும் இதை உட்செலுத்தினால் அவற்றின் வளர்ச்சி பெரிதும் துரித மடைகிறது எனக் கண்டு பிடித்திருக்கிறார்கள். கோழிகளின் தீவனத்தில் ஒரு டன்னுக்கு ஒரு கரண்டி பெனிசிலின் அல்லது அதையொத்த வேறு சில மருந்துகளைக் கலந்தால் சுமார் மூன்று மாதத்தில் முழு வளர்ச்சியடையும் குஞ்சு சுமார் ஒன்பது வாரத்தில் வளர்ச்சி பெறுகிறது. பன்றிகள், கால் நடைகள் போன்றவையின் வளர்ச்சியையும் இது இதே வகையில் பாதிக்கிறது. இம்முறையைக் கையாள்வதால் மட்டும் கோழிப் பண்ணை வைத்திருப்போரும், கால் நடை வளர்ப்போரும் அமெரிக்காவில் ஆண்டிற்கு 50 கோடி டாலர் மிச்சம் பிடிக்கமுடியும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

விலங்குகளுக்கு ஊட்டந்தரும் பெனிசிலின் மருந்துகள் தாவரங்களின் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் என டாக்டர் நிக்கல் என்பாரது சோதனைகள் தெளிவாக்கியுள்ளன. இம்மருந்துகளை ஊட்டுவதால் விதைகள் முளைப்பது அதிகமாகிறது. சோளம் போன்ற தானியப் பயிர்களுக்கும், முள்ளங்கியை யொத்த காய்கறிவகைகளுக்கும் பெனிசிலின் நலந்தருகிறது எனக்கண்டார். பெனிசிலின் மருந்துகளை ஊட்டுவது விவசாய முறைகளிலேயே பெரு மாறுதல்களை விளைவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாக்களின் உணவு மக்களுக்கு

வெள்ளாட்டின் உணவான தழைகளையும், பசுவின் உணவான புல்லையும் மனிதனுக்கு ஊட்டந்தர ஏற்ற உணவுப் பொருள்களாக மாற்றும் ரசாயன மந்திரம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. மனிதனுக்குத் தேவையான உணவு வகைகளில் புரதம் (Protein) என்பதும் ஒன்று. சில உணவு வகைகளில் இச்சத்து உடல் ஏற்கத் தக்க வடிவில் உள்ளது. தளிர் இலைகளிலும், வளரும் இலைகளிலும் இச்சத்து 30—40% உள்ளது. ஆனால் இலைகளை உட்கொண்டு இச்சத்தினை நேரடியாகப் பெறமுடிவதில்லை. கால்நடைகள் இவற்றை உட்கொண்டு பாலிலும், இறைச்சியிலும் நமக்குத் தருகின்றன. தழைகளிலுள்ள புரதங்களைப் பிரித்தெடுத்து நேரடியாக உண்ண ஏற்றவாறு செய்ய இங்கிலாந்தின் புகழ்பெற்ற விவசாய ஆராய்ச்சி நிலையமான ராதேம்ஸ்டெட் ஆராய்ச்சிச்சாலையில் சோதனைகள் செய்யப்பெற்றன. தழைகளை ஓர் எந்திரத்தில் கூழ்போல் அரைத்து அதிலுள்ள சாற்றைப் பிழிந்தெடுத்து அச்சாற்றை இரு பகுதிகளாகப் பகுக்கலாம். அவற்றுள் முதலாவது திரவ நிலையிலிருக்கும். இதில் இலையிலுள்ள சர்க்கரைச் சத்தும், அமினோ அமிலங்கள் என்ற பொருள்களும், உப்புக்களும் இருக்கும். இரண்டாவது திட நிலையிலிருக்கும். இதில் புரதங்களும், கொழுப்புக்களும், மாச்சத்தும் (Starch) இருக்கும். இப்பகுதியை நேரடியாகப் பன்றிகளுக்கும், கோழிக்குஞ்சுகளுக்கும் தீவனமாக அளிக்கலாம். சிறிதே தூய்மையாக்கி இதை மனிதருக்கு ஏற்ற உணவாகவும் மாற்றலாம் என எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஒன்று. நாம் தழைகளைப் பறித்துத் தின்னும் காலம் வரலாம்! அப்போதும் புல் மேயும் காலம் வராது என்று தோன்றுகிறது! ஏனெனில் புல் இவ்வாறு பயன்பட ஏற்றதன்று எனத் தெளிவாகியுள்ளது.

களைகளுக்கு மின்சாரச் சாவு

மரண தண்டனை விதிக்கப்படுபவர்களை அமெரிக்காவில் தூக்கிலிடுவதில்லை. குற்றவாளியை ஒரு நாற்காலியில் இருத்தி, அவன் வழியே மின்சாரத்தைப் பாய்ச்சிக் கொல்கிறார்கள். சமூகத்தின் பகைவர்கள் என்று தீர்மானிக்கப்படும் மனிதரைக் கொல்லும் முறை பயிர்களுக்குப் பகையான களைகளைக் கொல்லவும் பயன் படுகிறது. ஒரு சிறு கைத்தடிபோன்ற அமைப்பு வயலின் ஓரிடத்திலுள்ள மின்சார முனையுடன் இணைக்கப்பட்டிருக்கும். இன்னொரு முனை தரையுடன் இணைக்கப்படும். கைத்தடியின் கூரிய முனை மட்டும் உலோகத்தால் ஆனது. ஆகையால் அதைக் கொண்டு தரையைத் தொட்டால் மின்சாரச் சுற்று முடிந்து அதன் வழியே மின்சாரம் பாயும். களைகளைக் கொல்ல ஒருவன் அக் கைத்தடியைப் பிடித்துக்கொண்டு வயலில் சுற்றி வந்து அதைக்கொண்டு களையைத் தொட்டால், அதன் வழியே மின்சாரம் பாய்ந்து, களையானது வேரோடு சாம்பலாகி விடுகிறது. களைக்கொல்லி மருந்துகளால் இவை வேரோடு அழிவதில்லை. ஆகையால் இக்கருவியை இன்னும் சீர்திருத்தி அமைத்துக் களைகளைக் கொல்லும் பணியில் மின்சாரத்தை மிகத் திறமையுடன் பயன்படுத்தலாம்.

மரக் கழிவிலிருந்து மாயப்பொருள்

பிளாஸ்டிக்குகள் எனப்படும் தற்காலப் பொருள்கள் நமது அன்றாட வாழ்க்கையைக்கூட மாற்றிவிடும் அளவிற்கு வழக்கத்தில் உள்ளன. இத்தொழில் நம் நாட்டிலும் தோன்றி வளர்ந்து வருகிறது. ஆனால் இத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்கள் நம் நாட்டில் போதிய அளவு இல்லை. அவற்றுள் பீனல் என்பதும் ஒன்று. தொழிற்சாலைகளில் மரத்தை எரிப்பதால் தோன்றும் கழிவிலிருந்து இதை மலிவாகத் தயாரிக்கும் முறையொன்று வழக்கத்திற்கு வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. திருவிதாங்கூர் கொச்சியில் ஆல்வாயில் உரங்கள், ரசாயனப் பொருள்கள் தொழிற்சாலை (Fertilisers & Chemicals Travancore) உள்ளது. அங்குப் பயனாகும் மரத்திலிருந்து கிடைக்கும் கழிவை நீராவியுடன் வாலை வடித்து, பீனலைப் பெறுகிறார்கள். வேறுபல தொழிற்சாலைகளிலும் இதே முறையில் முக்கியமான இந்த மூலப் பொருளைத் தயாரிக்கலாம்.

கடலடியில் டெலிவிஷன்

ஓரிடத்தில் தோற்றுவிக்கப்படும் ஒலியை ரேடியோ உலகெங்கும் கேட்குமாறு செய்கிறது. அதைப்போலவே ஓரிடத்தில் நிகழும் காட்சியைத் தொலைவிலுள்ள பல இடங்களில் காண உதவும் சாதனம் டெலிவிஷன். நம் நாட்டினர் இன்னும் அறியாத இப்புதுமை மேனாடுகளில் இப்போதே சிறந்த பொழுதுபோக்காக உள்ளது. ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் கொட்டகையில் மருத்துவர் செய்யும் ஆபரேஷனைப் பலரும் கண்டு பயனடைய டெலிவிஷன் இப்போதே பயன்படுகிறது. வேறொரு வகையிலும் இது இன்றியமையாத சாதனமாகப் பயன்படலாம் என்பது அண்மையில் தெளிவாகியது. 1951 ஜூனில் ஆங்கிலக் கப்பற்படை நீர் மூழ்கியான 'அப்ரே' (Affray) என்பது இங்கிலீஷ் கால்வாயின் அடியில் 200 அடி ஆழத்தில் மூழ்கிவிட்டது. அதிலிருந்தோரையும், அதிலிருந்த பொருள்களையும் மீட்க நீருக்குள் இயங்கும் டெலிவிஷன் கருவியொன்று அமைக்கப்பட்டது. நிவாரண வேலைக்கு இக்கருவி இல்லாமல் இருந்திருந்திருந்தால் மிகவும் தொல்லையாக இருந்திருக்கும். கடலடியில் மறைந்துள்ளவற்றை நேரில் காண்பதுபோல் கண்டறிந்து நிவாரண வேலையைச் செய்ய முடிந்தது. இக்கருவி வேறு பல வகைகளிலும் பயன்படலாம். கடலுக்குள் மறைந்துவிடும் கப்பல்களையும், துறைமுகத்தின் சுவர்களையும், கப்பல்களின் அடிப்பாகத்தையும் ஆராய இம்முறை பெரிதும் பயனுள்ளது. கடலடியில் உள்ள மேடு பள்ளங்களை ஆராய்ந்து அளவீடுகள்செய்ய இது உதவும். மீன்பிடிக்கும் தொழிலில், ஆழத்தில் கூட்டமாகச் சில இடங்களில் உள்ள மீன்களைக் கண்டறிய இது ஏற்றது.

சந்திரனை அடைவோம்!

ஏ. சி. கிளார்க் (A. C. Clarke) என்பவர் அமெரிக்காவிலுள்ள கிரக மண்டலப் பிரயாண சங்கத்தின் உபதலைவர். இவர் அண்மையில் புவியை விட்டு வேறு கிரகங்களுக்குப் பிரயாணம் செய்வதைப் பற்றிச் சில ரசமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். 1970-ஆம் ஆண்டு வாக்கில் புவியிலிருந்து புறப்படும் 'விசும்புக்கலம்' (Space Ship) சந்திரனை அடைந்து திரும்ப முடியலாம். இந்நூற்றாண்டின் முடிவிற்குள் சந்திர மண்டலப் பிரயாணம் மிகப்பொதுவாகிவிடும். வேறு கிரகங்களிலிருந்து நடத்தப்பெறும் ஆராய்ச்சிகளால் வானவியல் விளைவுகளை மிகத் திருத்தமாக நெடுநாட்களுக்கு முன்னரே அறிய இயலும். வானவியலிலும்,பௌதிகத்திலும், ரசாயனத்திலும் புரட்சிகரமான முன்னேற்றம் நிகழும். இடைக்கால ஐரோப்பாவில் ஆசிய நாடுகளுக்குப் பிரயாணம் செய்யும் முறை தோன்றியபின் அங்கு மானிடன் சிந்தனைத் திறன் பெரிதும் இயங்கி உயரிய இலக்கிய மறுமலர்ச்சி நடைபெற்றது. இத்தகைய மறுமலர்ச்சியை மீண்டும் எதிர்பார்க்கலாம்.

ஆனால் அந்த விஞ்ஞானிக்கு மானிடனின் எதிர்காலத்தில் பூரண நம்பிக்கை இல்லை! அவர் கூறும் பொற்காலம் வருமுன்னரே அணு ஆயுதங்களால் நாகரிகமே அழிந்து மானிட இனமே நிலையான மாறுதலடைந்து விகாரமானதாக மாறிவிடலாம் என்ற அச்சமும் அவருக்கு உள்ளது. ஆகையால் அவர் தாம் எதிர்பார்ப்பதற்கு மாறாக "நமது பேரர்கள் விகாரமாக உருமாறி, காட்டுமிராண்டிகளாக, பெரும்பாலும் வாழ்க்கைக்குத் தகுதியற்ற உலகின் சிறு பகுதிகளில் உயிர்வாழ முயற்சிக்கும் நிலையில் இருக்கக்கூடும்" என்கிறார்! ஹைடிரஜன் குண்டுப் போட்டியின் போக்கை நோக்கும் யார்தான் அவரது கூற்று மெய்யாகாது எனத் திடமாகக் கூறமுடியும்?

தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள
கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக்
காப்பாற்றிக்கொள்ளுங்கள்...
LIFEBUOY SOAP
LIFEBUOY
SOAP
லைப்பாயின்
பாதுகாக்கும்
நுரையினுல்!
நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவருமல் ஸ்னுநம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது, உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.
லைப்பாய் சோப்
தினசரித்தொல்லையான கிருமிகளிலிருந்து தினமும் உங்களைக்காப்பாற்றுகிறது
L. 229-50 TM

புத்தக விமர்சனம்

சமைத்துப் பார்

எஸ். மீனாட்சி அம்மாள் எழுதியது. முதற் புத்தகம் விலை ரூ. 3-8-0. இரண்டாம் புத்தகம் விலை ரூ. 4-0-0. எஸ். மீனாட்சி அம்மாள் 2, வீரப்பெருமாள் கோவில் தெரு, மயிலாப்பூர்- சென்னை-4.

முதற் புத்தகம் 260 பக்கங்கள், இரண்டாம் புத்தகம் 320 பக்கங்கள். அடுப்புப் பற்றவைக்கும் முறை முதல் ஊறுகாய் வற்றல் தயாரிக்கும் வகை வரை விவரிக்கும் இந்நூல்கள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் உற்ற துணையாகும். சிக்கனமாகச் செய்யவும், 'நாஸு'க்காகச் செய்யவும், அரிசியைப்போல் மற்ற தான்யங்களைக்கொண்டும் செய்யவும் புது மோஸ்தரில் செய்யவும் விரும்பும் எவரும் இப்புத்தகங்களைப் படித்துப் பயன் பெறலாம்.

சமையல் ஒரு அருங்கலை என்பதை நம் நாட்டில் யாவரும் அறிவர்; எனினும் அனுபவத்தில் அதன் ரஹஸ்யங்களைத் தாராளமாகக் கையாள்வதில்லை. மேல் நாடுகளில் சிக்கலான ராஜீயப் பிரச்னைகள், தீராத பூசல்கள், அறிய முடியாத ரஹஸ்யங்கள் எல்லாம் சமயலாளியின் சாமர்த்தியத்தால் சமாளிக்கப்பட்டதாக நாம் படிக்கிறோம். 'எதையோ சாப்பிட்டு வயிற்றை நிரப்பினோம்' என்பது போய் 'நன்றாகச் சாப்பிட்டோம், நலனறிந்து சாப்பிட்டோம்' என்று சொல்லிக் கொள்ளும் இக்காலத்தில், விவாஹ ரத்தும் குடும்பப் பிரிவினையும் தோன்றத் தொடங்கிய இச்சூழ் நிலையில் மக்கள் வழிபடவேண்டிய தெய்வங்கள் வீமனும் நளனுமே.

ஸ்ரீ ப்ரும்மானந்தரின் அகில இந்திய யாத்திரைப் பிரசங்கங்கள்

ஸ்ரீ மு. சினிவாசன் B. Sc. (Hons) தொகுத்து யோக வேதாந்த ஆரண்ய விச்வ வித்யாலயம் வெளியிட்டது. விலை 1-0-0; பக்கம் 204; கிடைக்குமிடம் யோகவேதாந்த ஆரண்ய விச்வ வித்யாலயம், சிவானந்தநகர், ஆனந்த குடீரம் போஸ்டு, ரிஷிகேசம், ஹிமாலயம்.

இன்ஸ்பெக்டர் நடேசய்யர் துறவறம் பூண்டு ஸ்ரீ பிரும்மாநந்தரானது, ஸ்ரீ சிவானந்தரின் அருளால். துறவறம் ஏற்கும் மனநிலை அவருக்கு முன்பே இருந்திருக்கவேண்டும். 1921ஆம் ஆண்டு கும்பகோணம் மகாமக விழா சம்பந்தமான போலீஸ் வேலைகளைக் கவனித்த இவர் ஒரு அதிசயத்தை நடப்பித்துக் காட்டினார்; பொது ஜனமோ யாத்ரீகரோ பொது இடத்தில் உட்கார்ந்து அசுத்தம் செய்தபின் அவரை, 'சார்ஜ்' செய்வதல்ல முறை; அதற்கு முன்பே போலீஸார் அவரை இட்டுச் சென்று கக்கூஸுக்கு வழி காட்டவேண்டும் என்று உத்தரவிட்டு அப்படியே செய்தும் காட்டினாராம். அவர் உலகியலை நன்ருயறிந்தவராதலின் துறவறம் பூண்டு செய்த பிரசங்கங்கள் யாவும் குடும்பிகளுக்கு மனதில் நன்ருகப் பட்டுப் பயனைக் கொடுக்க கூடியவையாகவே அமைந்திருக்கின்றன. அவர்களுடன் யாத்ரை செய்த ஸ்ரீ ராம ப்ரேம் ஜீ அவர்கள் யோகாஸனங்களைப் போட்டுக் காண்பிப்பதிலும் நாமஸங்கீர்த்தனையிலும் தேர்ச்சி பெற்றவர். இருவர் யாத்ரை வரலாறும் இந்நூலில்கிடைக்கும்.

கிராமப் பொருளாதாரம்
(Rural Economics)

K. சீனிவாசன் M. A. எழுதியது. விலை ரூ. 2—0—0; கிடைக்குமிடம், ஸ்ரீ K. சீனிவாசன், லெக்சரர், தி ஹைஸ்கோ ஆபரேடிவ் இன்ஸ்டிட்யூட், தஞ்சை.

பாட புத்தகமாகப் பள்ளிக்கூடங்களில் வைக்கத்தக்க முறையில் ஒவ்வொரு அத்யாயத்தின் இறுதியால் வினுக்களும், திருக்குறளிலிருந்து கிராமப் பொருளாதாரத்தைச் சார்ந்த குறட்பாக்களையும் சேர்த்து எழுதப்பட்ட இப்புத்தகத்தில் பண்டைக் காலக் கிராமங்களின் நிலை, பிரிட்டிஷ் ஆட்சியில் சீரழிவு, காங்கிரஸ் வகுத்த சீரமைப்புத் திட்டம், அதற்குக் கிராம சேவைப் பயிற்சி முதலியவைகள் நன்ருக எடுத்துக்கூறப்பட்டிருப்பதுடன் ஓய்வு நேரக் கிராமக் கைத்தொழில்கள், விசைச் சாதனங்களின் அவச்யம், கட்டுபடியாகும் பண்ணை எது, வாரக் குத்தகை முறைகளின் நன்மை தீமை, உற்பத்தியில் ஆதாய நோக்கம் அவச்யமா, நியாயமா, முதலான தத்துவப் பிரச்னைகளும் விசாரிக்கப்பட்டிருக்கின்றன.

கைத்தொழில் நுட்பங்கள்

ஆசிரியர் P. V. வேலு வைத்தியர். விலை ரூ. 1—0—0. கேரள மெடிகல் ஸ்டோர்ஸ், யச்வந்த்பூர், பங்களூர்-3

ரூ. 2 முதல் 25 வரை மூலதனம் வைத்துக் கொண்டு ஒழிந்த நேரங்களில் இதில் கண்ட ஒரு தொழிலைச் செய்து ஏராளமாகச் சம்பதிக்கலாம் என்றும் ஒவ்வொன்றும் தம் நீண்டகால அனுபவத்தில் கையாளப்பட்டதென்றும் ஆசிரியர் கூறுகிருர். ஓம, ஜீரக, நன்னாரி, சுக்கு எஸ்ஸென்ஸ் செய்யும் முறை, பன்னீர்கள், தைலங்கள், சாக்லெட், ஸெண்ட். க்ரீம், பல் பொடி, ஸோப், ஜ்வரம் ஜலதோஷம் தடுக்கும் அக்யூமிக்ஸ்சர் முதலியன செய்யும் முறைகள் 24 பக்கங்களுக்குள் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

Prevention is better than Cure. True immunity by Diet and Fasting. By RM. Somasundaram 21/286 Govt. Colony Khav Bombay 21

விலை இல்லை. இனமாக வழங்கப்படும் இந் நூலில் வியாதிகள் வராமல் தடுப்பதுதான் முக்யம் என்றும், அழுக்குச் சேர்வதால் தான் கிருமிகள் உற்பத்தியாகின்றன என்றும் மித மான சுத்தமான ஆஹாரமும், விதிப்படி உபவாஸங்களும் தாம் நமக்குத் தேவையே யொழிய மருந்துப் பெட்டிகளும் Anti Bioticsம் அல்ல என்றும் எடுத்துக்காட்டப் பட்டிருக் கின்றன.

1. Theses Programme and Regulations.

2. The China Debate-whom shall we believe 0-4-0

3 Mind Murder in Mao-Land0-4-0

ருஷ்யா, உலகத்தைவென்று தன் கொள் கையைக் கட்டாயப்படுத்தப் புறப்பட்டிருக்கிற தென்றும், அதைத் தடுத்து நிறுத்த உண்மையை உணர்வது தான் உபாயம் என்றும் அதற்காக 'Society for Defence of Freedom in Asia' என்று ஒரு சங்கம் கல்கத்தாவில் ஏற்பட்டு, புத்தகங்கள் பிரசுரம் செய்து வருகிறது. இப் புத்தகங்களில் சைனுவுக்குச் சென்று கண்ணுரக் கண்ட பிரமுகர்கள் அபிப்பிராயங்கள் கூறியிருக் கிருர்கள். சைனுவில் மக்கள் ஆட்சி முறை பெயரளவில் தான் என்றும் மக்கள் மனதே விஷமிடப்பட்டுச் சுய உணர்வு அற்று, ஆட்சி பீடத்தின் கட்டியக்காரர்களாகி விட்டனரே ஒழிய, உண்மையில் வறுமை ஒழிக்கப்படவில்லை யென்றும் மக்கள் சுகமாக வாழ முடிவ தில்லை என்றும் அத்தகைய 'கம்னியூஸ்ட்' கொள்கை ஆசியாவின் மற்ற பாகங்களுக்குப் பரவலாகாதென்றும், ஒவ்வொரு நாடும் தனித் தனியே தன் தன் கலாசாரத்துக்கும் சூழ் நிலைக் கும் தக்கபடி தன் தன் வாழ் முறையை வகுத்துக் கொள்வதே சிறந்ததாகும் என்று விளக்கப்படுகிறது.

திருமயிலைப் பிரபந்தங்கள்

விலை 3-4-0

சென்னைச் சர்க்கார் கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதிநூல் நிலையப் பிரசுரம். இதனுள் 1. திருமயிலைப் பிள்ளைத்தமிழ் 2. திருமயிலைக் கோவை 3. திருமயிலை உவமைவெண்பா 4. திருமயிலை வெண்பா. என 4. பிரபந்தங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன.

முதல் நூல் சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ் எனவும்படும். இது 18 ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த தாண்டவராயர் என்னும் புலவரால் பாடப்பெற்றது. குமரக் கடவுளைப் பாட்டுடைத் தலைவனகக் கொண்டு, பத்துப் பருவங்களையும் அழகாகப் பாடியிருக்கிருர். இதைப் படிக்கும் போது ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் இயற்றிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ஞாபகத் துக்கு வரும்.

இரண்டாவதான திருமயிலைக் கோவையில் சிங்காரவேலரைப்பற்றிய சிறப்புக்கள் தலைவன் தலைவி கூடல் ஊடல் முறையில் சொல் நயமும் பொருட் செறிவும் சிறக்க அமைக்கப் பட்டுள்ளன. இந்நூலை இயற்றியவர் தருமபுர மடத்து ஆதீன வித்வானுயிருந்த அம்பல வாணக் கவிராயர் எனத் தெரிகிறது.

மூன்ருவது நூல் திருநெல்வேலி நடலிங்க கவிராயரால் பாடப்பட்டது. நடை சாதாரணம் தான் என்ருலும் உவமைநயம் பாராட்டற் பாலது.

நான்காவதான திருமயிலை வெண்பா சிவபிரானை நூறு பாடல்களில் துதிக்கிறது. சிலேடை அதிகம். மயிலாப்பூரின் தல புராணமெனவும் தகும். இந் நூலின் மூலம் நாம் "மயிலாப்பு" என்றழைக்கப்பட்ட இத்தலத்தில் சிவநேசச் செல்வர் எனும் சிவனடியாரின் இறந்த மகள் பூம்பாவையின் எலும்புகளைத் திருஞான சம்பந்த மூர்த்திகள் பதிகம்பாடி உயிர்ப்பித்தது, வாலி தீர்த்தம், இராம தீர்த்தம், கபாலி தீர்த்தம், சக்ர தீர்த்தம், வேத தீர்த்தம் எனும் புண்ய தீர்த்தங்கள் இருப்பதும் திருவள்ளுவரும் அவருக்குமுன் பல பெரியோர்களும் வாழ்ந்து வழிபட்டமையும் அறியப்படுகின்றன.

ஞானமதியுள்ளான்

முத்தாநந்த சுவாமிகள் இயற்றியது. சென்னைச் சர்க்கார் கீழ்த்திசைக் கையெழுத்துப் பிரதி நூல் நிலையத்துப் பிரசுரம். விலை 1—4—0.

கோந்தி நாட்டை ஆண்ட மன்னன் இல்லறம் துறந்து கனவில் அன்னையைக் கண்டு, அறிவும் அருளும் வேண்டிப் பெற்று, உலகில் பித்தனுய், திரிந்து ஞான நிலை அடைந்து, மதியுள்ளான் ஆனமையை விவரிக்கும் இந்நூலை அரசாங்கத் தார் ஆய்ந்து பிரசுரித்துள்ளார். 400 பாட்டுக் களால் ஆன இந்நூல் எளிய நடையில் வெண்பா, கொச்சகம், விருத்தம், கலிப்பா, சிந்து, தரு, முதலியவையால் மாறி மாறியமைக்கப்பட்டு, Opera வகைபோல் பாடி நடிக்கத் தக்கதாயிருக் கிறது.

மெய்ஞ்ஞான வெண்பா

சு. நரசிம்மேச்வர சர்மா (Retired Staff Officer, Impriel Bank of India) இயற்றியது விலை 0—8—0. ராமபவன், 25 ஸர் மஹமத் உஸ்மான் ரோட், மதராஸ் 17.

சத்தத் தமிழ்பாச் சதகம் இது; தமிழ் நாட்டின் பாராட்டுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. மக்கள் இடும்பைகளை மாய்த்திடலே மாதவம், பூவகமே பொன்னுலகு, பக்திப்பணி முறையும் பண்டைக் கிரியைகளும் பித்தாத் தலைக்கேறி, முத்தியென் றும் சித்தி யென்றும் மோனமென்றும் ஞான மென்றும் தத்தைமொழி சாற்றுநரைச் சாராதீர் என்றும் வஞ்சகக் கடவுள்களை வழிபட வேண் டாம் என்றும் இயற்கையே தெய்வம், இவ் வாழ்வே வாழ்வு என்றும் அறுதியிடும் இந்நூலைச் சுயமரியாதை இயக்கத்தார் பெரிதும் போற்ற லாம்.

சாகுந்தலம், மேகதூதன்.

தமிழாக்கியவர்: க. சந்தானம்.

சுதந்திரப் பிரசுராலயம், 193, மவுண்ட்ரோடு
விலை ரூ 5–0–0. சென்னை-2.

காளிதாஸரது இலக்கியங்கள் உலகத்தில் உன்னத ஸ்தானம் வகிப்பவை. ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு மொழியிலும் அவர் காவ்யங்கள் மொழி பெயர்க்கப்பட்டு, பண்டிதர்களும் பாமரர்களும் ஆனந்தமடைந்து கொண்டிருக்கின்றனர். தமிழிலும் சாகுந்தலம் திறம்பட மொழிபெயர்க்கப் பட்டிருக்கிறது. நாகை வேதாசலம் பிள்ளை 1907-ல் மொழி பெயர்த்திருக்கிறார். ராகவய்யங்கார் அவர்கள் அத்புதமாக இயற்றியிருக்கிறார். சுவாமி வேதாசலம் அவர்கள் சுவை குன்றாது மொழிபெயர்த்து ஓர் சிறந்த ஆராய்ச்சி நூலும் இயற்றியுள்ளார். அப்படியே மேகஸந்தேசமும் தமிழ் உள்பட, பல மொழிகளிலும், மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. காளிதாஸர் எழுதிய நூலை ஒட்டி அனேக ஸந்தேச காவ்யங்கள் வடமொழியிலேயே ஏற்பட்டிருப்பதே அதன் மேன்மைக்குச் சான்றாகும்.

ஷெ இரு நூல்களையும் லெப்டினண்ட் கவர்னர் ஸ்ரீ ஸந்தானம் அவர்கள் மொழி பெயர்த்து நமக்குத் தந்திருக்கிறார்; இப்பொழுது. வடநூல் காவ்ய நாடகங்களுக்கும் நல்ல காகிதத்தில் உயர்ந்த முறையில் அழகிய பதிப்புப் புத்தகம் கிடைக்குமா என்று ரஸிகர்கள் ஏங்கும் காலை அவைகளின் மொழி பெயர்ப்புக்கு இப்படிப்பட்ட நேர்த்தியான பதிப்பு கிடைத்தது ஒரு வாய்ப்பே. மேல் அட்டை வர்ணப் படமே கண்ணையும் கருத்தையும் கவருகிறது. சாகுந்தலத்தின் கதையின் ஸாரமும் நடுநாயகமுமான துர்வாஸ முனிவர் சாபமிடுவதும் அதனால் கணையாழி இழக்கப்பட்டமையுமே 'அபிஞான சாகுந்தல' மல்லவா? அதை அப்படியே சித்திரித்திருக்கிறார் சைத்ரிகர். ரவீந்திரநாத டாகூர் கூறியது போல் மண்ணையும் விண்ணையும் சாகுந்தலம் ஒன்று படுத்துவது என்பது முதல் மூன்று காட்சிகளில் சகுந்தலை உணர்ச்சிக்கு வசப்பட்டு தன்னலந் தேடித் திரஸ்கரிக்கப்படுவதும், கடைசி காட்சிகளில் அதேசகுந்தலை துறவிபோல் தூய்மையையும் மேலான அன்பையும் வாரி வழங்கிக்கொண்டு நம் கண்முன் வந்து நிற்பதிலிருந்தும் விளங்கும். அத்தகைய உயர்ந்த கருத்தையும் ஒப்பற்ற சொல் அமைப்பையும் கொண்ட ஒரு நூலை வாசகர்கள் படித்து இன்புறும் வகையில் ஸ்ரீ ஸந்தானம் அவர்கள் தமிழில் செய்ய முன் வந்துள்ளார் என்பதே அவருடைய தேர்ச்சிக்கும் ஆர்வத்துக்கும் தக்க சான்றாகும். பதவுரையால் மட்டில் காளிதாஸரது கருத்தை நம் கண்முன் கொணர்ந்து நிறுத்த முடியாதென்பதை உணர்ந்த ஸ்ரீ ஸந்தானம் அவர்கள் மேகதூதனுக்குப் பதவுரையுடன் சித்திர விளக்கமும் ஒவ்வொரு சுலோகத்துக்கும் தந்துள்ளார். ஆசிரியர் அவர்களது உத்தரராம சரித மொழி பெயர்ப்புக்குப் போலவே இந்நூலுக்கும் அமோகமான வரவேற்பு தமிழ் நாடு அளிக்கத் தவறாது. ●

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு			மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

"இது மெய்...

...நீங்களும் லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகைப் பெறலாம்" என்று கூறுகிறார் கிருஷ்ண குமாரி

கிருஷ்ணகுமாரி கூறுவதாவது:—"என் சருமத்திற்கு அற்புத மாறுதலை அளித்திருக்கிறது லக்ஸ் டாய்லட் சோப்பின் மிருதுவான நுரை. ஒவ்வொரு நாளும் உபயோகிப்பதால் இந்த பரிமளமுள்ள சுத்தமான, வெண்மையான டாய்லட் சோப் என் சருமத்தை பட்டுபோல் வழவழப்பாய் நேர்த்தியாய் இருக்கச் செய்கிறது."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 381-X30 TM



ஆணி வேர்

ஜி. எஸ். மணி

'பணமே பிரதானம் — பணமில்லாவிடில் பிணத்துக்குச் சமானம்' என்று சினிமாப் பாட்டு ஒன்று ஒலிக்கத்தொடங்கியது.

ஏதோ ஒரு வீட்டிற்குள் அந்த இசைத் தட்டை வைத்துக் கேட்டு ரஸித்துக்கொண்டிருந்தார்கள்.

மிகுந்த ஒய்ச்சலுடன் தெருவோடு நடந்து வந்துகொண்டிருந்த வேம்புவின் செவிகளிலும் அந்தப் பாட்டு ஒலித்தது.

அதை ரசிக்கும் மன நிலையில் அவன் இல்லை.

எல்லாமே அவனுக்கு வேப்பங்காயாகக் கசக்கத்தான் செய்தது.

'பணமே பிரதானம் — பணமில்லாவிடில் பிணத்துக்குச் சமானம்—'

அதைப்பற்றி யோசித்துப் பார்க்கும் போது லேசாகச் சிரிப்பும் வந்தது.

உலகமே அந்தப் பணத்தின் அடிப்படையில் தான் மிதக்கிறதென்னவோ அனைவரும் அறிந்த உண்மை—

ஆனால் பணக்காரனைக் கேட்டாலோ— 'எவனும் பணம் என்னதான் செய்யக்கிடக்கிறது? வீண் கவலையும், பொறுப்பும்தான் மிஞ்சும்—ஏழையின் கண்களுக்குத்தான் பணம் பெரிதாகப்படுகிறது' என்று வெகு அலட்சியமாகப் பேசுவான்.

'பணத்தை வைத்துக்கொண்டு எதுதான் செய்யமுடியாது?' என்று ஒரு ஏழை பெருமூச்செறிவான்.

விஞ்ஞானி— ''ஸயன்ஸ்' இல்லாவிட்டால் மனித சமூகமே இல்லை' என்று பெருமையுடன் பறைசாற்றுவான்.

'பணம், விஞ்ஞானம், உலகம்—எல்லாமே வெறும் மாயம்; உள்ளொளியே உண்மை' என்று சொல்லி வேதாந்தி அடங்கிவிடுவான்.

'எதிலும் பற்றற்று, தனித்து நின்று, திருப்தி அடைவதே சிறந்தது' என்று துறவி சிரித்துவிட்டுப் போய்விடுவான்.

இளம் காதலர்களைக் கேட்டால்.........

வேம்புவே 'காதல் இன்றி வாழ்வே இல்லை'— என்ற முடிவுக்கு வந்தவன் தான்.

அவனுடைய உள்ளத்தைக் கவர்ந்து விட்ட சாந்தியும் கூட அவ்விதமே எண்ணினுள். அவள் தன் மனதை அவனிடம் பறிகொடுத்து விட்டதோடு மட்டும் நின்று விடவில்லை. அவனுடன் கூடவே எங்கு வேண்டுமாயினும் புறப்பட்டு வரவும் தயாராகி விட்டாள்.

'காதல்' என்று குறிக்கப்படும் உணர்வு நிஜமோ— பொய்யோ என்பது யாருக்குமே தெரியாத ஒரு மர்மம்; அது காதலர்களுக்கே புரியாத புதிர். ஆனல் அந்தக் காதல் போகும் பாதை மட்டும் மிக மிகக் கோணல்—என்பது மட்டும் எல்லோருக்கும் தெரியும். காதலர்களுக்கும் தெரியும்; காதலர் அல்லாத சாமான்யப் பேர்வழிகளுக்கும் கூட அது மட்டும் தெரியும்.

காதல் கதைகளைச் சித்திரிக்கும் சிறந்த கதாசிரியர்கள் கூடக் காதலைக் கோணல் வழியிலேதான் கொண்டுபோய் விடுகிருர்கள்; அந்தப் புயலில் சிக்கிய ஒரு ஆணையும், பெண்ணையும் வைத்துக்கொண்டு, அவர்களைப் படாத பாடுகள் எல்லாம் படுத்தி வைத்து, எத்தனையோ கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாக்கி—கடைசியில்—அந்தக் காதலர்களுக்கு வெற்றி மாலையுடன், மண மாலையையும் சூட்டிக் கதையை 'ஜாம் ஜாம்' என்று ஆனந்த மயமாக முடித்து விடுகிருர்கள்.

பிரச்னைகள் யாவும் அத்துடன் தீர்ந்து விடுகின்றனவா?

அப்புறம் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் எதுவுமே நடப்பதில்லையா?

கல்யாணம் செய்து கொண்டுவிட்ட பின்னர் காதலரின் வாழ்க்கை எப்படி நடக்கிறது? ஒரே குதூகலமும், கொம்மாளமும் தானு? வாழ்க்கையின் பலதரப்பட்ட பிரச்னைகள் அப்புறம் அவர்கள் வாழ்வில் தலை காட்டுவதேயில்லையா?

ஏன் இல்லை? காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டவர்களுக்குத்தான் சங்கடங்களும்—தொல்லைகளும் இன்னும் அதிகம்.

காதல் வாழ்க்கை, கடைசி வரையில், குழம்பித் தேங்கும் தொந்தரவுமிக்க வாழ்வே. உள்ளத்தெளிவு அதில் கிடையாது; சீரிய ஓட்டமும் அதில் இல்லை.

கால் போன வழியெல்லாம் வேம்பு நடந்து போய்க்கொண்டே இருந்தான். நான்கு தெருக்களைக் கடந்துவிட்டான்.

பம்பாய் நகரத்தின் பெருமைக்குக் கேட்பானேன்?

எங்கே பார்த்தாலும் ஜன சமுத்திரம்; அலைமோதும் கடலுடன் போட்டியிடும் ஜன சமுத்திரம்; இரண்டு அடுக்குள்ள 'மாடி பஸ்'கள்; டாக்ஸி! சைக்கிள் சவாரி; வியாபாரம்; பேரம்; பொழுதுபோக்கு; தமாஷ்;—இவை அனைத்தும் பொங்கி வழியும் பம்பாய் நகரம்.

அது மட்டுமா? பல பாஷைகள் பேசும் பலதரப்பட்ட ஜனங்களையும் அங்கே பார்த்தான் வேம்பு. குஜராத்தி, மராத்தி, பார்ஸி, வங்காளி—மதராஸியும் இல்லாமலா!

பாயஸம் இல்லாத கல்யாணம் உண்டோ?

பாரெங்கும் தமிழ் முழக்கம்—பாரெங்கும் தமிழ் முழக்கம்!—

வேம்புவுக்கு ஏனே சிரிப்பு வந்தது!

அத்தனை பேர்களுக்கும் பம்பாயில் என்ன காரியமோ?

அவனுக்கு அங்கே என்ன வேலை?

தன் லட்சியமான காதல் வாழ்க்கையைப் பூர்த்தி செய்துகொள்ளத் தகுந்த இடமாகப் பம்பாயைத்தான் அவன் தேடிப்பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தான்.

காதலர்களுக்கு இன்ப மயமான புகலிட மாய் விளங்கும் பூஞ்சோலையா பம்பாய்?

முதலில் அப்படித்தான் தோன்றியது— அப்புறம்?—

வேம்பு பெருமூச்செறிந்தான். சோர்வு மேலிட்டது.

எதிரே விரிந்து கிடந்த பரந்த பசும் புல் தரையிலே அப்படியே போய் உட்கார்ந்து விட்டான்.

விரிந்து கிடந்த பசும் புல் தரையுடன் போட்டியிடுவது போல அவன் சிந்தனையும் விரியத் தொடங்கியது.

காதல் அவனுடைய ஒரே லட்சியமாக அமைந்து கிடந்தபோது அந்த லட்சிய சித்திக்காக வேம்பு, சாந்தியையும் அழைத்துக்கொண்டு பம்பாயை நாடி வந்தான்.

யாவும் முன் கூட்டியே போட்டு வைத்திருந்த திட்டப்படியே நடந்தது. ஓரளவு வரை அணுவும் பிசகவில்லை.

லட்சிய சித்தியிலே வெற்றிபெற்றுவிட்ட பெருமிதம் அவர்களுக்கே பிடிபடவில்லை. 'அம்மா! ஒரு வழியாக நம்மைச் சேர்ந்த மனிதப் பிசாசுகளின் கண்காணுமல் வந்து சேர்ந்துவிட்டோம்!, என்று சொல்லிச் சிரித்தாள் சாந்தி.

'மலையைக் கெல்லி எலியைப் பிடித்து விட்டோம்!' என்ருன் வேம்பு.

'என்ன இத்தனை அலட்சியமாகச்சொல்லி விட்டீர்களே? நம் வாழ்வில் மகத்தான வெற்றியல்லவா பெற்றுவிட்டோம்! பெரிய சாதனை இல்லையா இது? இனி நம்மைப் பிரித்து வைக்க யாரால் முடியும்?' என்ருள் சாந்தி.

'சொர்க்க பூமியை எட்டிப் பிடித்தே விட்டோம்—என்றே தைர்யமாகச் சொல்லிக்கொள்ளலாம், சாந்தி' என்று வேம்பு சொன்னதும் இருவரும் சேர்ந்து சிரித்துக் கொண்டார்கள்.

லட்சிய சித்தி பெற்ருகிவிட்டது. அப்புறம்?

'இனி நம் வாழ்க்கையைச் சீராக்கிக் கொள்ள ஒரு வழி வகுத்தாக வேண்டும்.' வேம்பு.

அதற்கு என்ன செய்யவேண்டும்?'

'தற்போதைக்கு ஏதேனும் ஒரு ஹோட்டலில் வாடகைக்கு அறை எடுத்துக்கொண்டு தங்குவோம். அதற்குள் நான் சம்பாத்தியத்துக்கு ஏதாவது ஒரு உத்யோகத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்.'

'நானும் வேலை தேடிக்கொள்கிறேனே—எனக்குத் தகுந்தமாதிரி?—நாம் இரண்டு பேரும் சம்பாதிக்கத் தொடங்கிஞல்—வருவாயும் அதிகம்தானே?' என்ருள் சாந்தி.

'முதலில் நான் முயற்சிக்கிறேன்; அப்புறம் உன்னைப்பற்றி யோசிக்கலாம்.'

'உங்கள் படிப்பிற்கும், அறிவிற்கும் வேலை கிடைப்பதுதானு கஷ்டம்? தயாராய் கையில் வைத்துக்கொண்டு உங்களை எதிர் கொண்டழைப்பான் பாருங்கள்!' என்று உற்சாகப்படுத்திஞள் சாந்தி.

'நானும் அப்படித்தான் நம்புகிறேன்; இவ்வளவு பெரிய நகரத்தில் என் ஒருவனுக்கு ஒரு குமாஸ்தா உத்யோகத்துக்குக் கூடவா பஞ்சமாகிவிடும்?'

"குமாஸ்தா உத்தியோகமா! பெரிய அதிகாரியாகவே ஆகிவிடுவீர்கள் பாருங்கள்!"

"நான் அதிகாரியாகி விட்டால்— 'நீ வேலைக்குப் போகவேண்டாம்' - என்று தான் முதல்உத்தரவு பிறப்பிப்பேன்."

இருவரும் மீண்டும் சேர்ந்து சந்தோஷமாகச் சிரித்தார்கள்.

முதலில் தொடங்கிய ஹோட்டல் வாசம் ஆனந்தமயமாகத்தான் இருந்தது. சில நாட்கள் வரை கவலையே இல்லாமல் இங்குமங்கும் போய் வேடிக்கைகள் பார்த்துக் கொண்டு உற்சாகமாகத் திரிந்தார்கள். கடற்கரைக்குப் போய்க் காற்றுவாங்கிஞர்கள்; பொங்கி வரும் கடலைப்பார்க்கப் பார்க்க அவ்விருவருக்கும் குதூகலம் பொங்கி வந்து கரை புரண்டோடியது. சினிமாவுக்குப் போனுர்கள்; வெள்ளித் திரையில் காதலர்கள் ஒன்று சேர்ந்து காதல்

கீதம் பாடும்போது அவர்கள் பூரண திருப்தியுடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு களிப்பெய்தினர்கள். பல கடைகளில் ஏறியும், இறங்கியும், பேரம் பேசிச் சாமான்கள் வாங்கிக்கொண்டு சுற்றி வந்தார்கள்,

'இன்னும் இரண்டு புடவைகள் உனக்கு வாங்கிக்கொள்; வரும்போது கொஞ்சமாகத் தானே எடுத்து வந்திருக்கிருய்? அது உனக்குப் போதுமா?' என்ருன் வேம்பு.

'நீங்கள் உங்களுக்கு இன்னும் இரண்டு 'பாண்டு'களும், புஷ்கோட்டு'ம் தைத்துக் கொண்டால்தான் எனக்குத் திருப்தியாக இருக்கும்; நீங்கள் மட்டுமென்ன? அள்ளிக் கட்டிக்கொண்டா புறப்பட்டு வந்திருக்கிறீர்கள்?' என்ருள் சாந்தி,

அப்படியும் இப்படியுமாகச் சாமான்களை வாங்கிக்கொண்டு மறுபடியும் ஹோட்டலுக்கு வந்து கணக்குப்பார்க்கும்போது முந்நூற்று ஐம்பது ரூபாய்களுக்குச் சாமான் பில்கள் கணக்குக் காட்டின.

'அடேயப்பா!' என்று மலைத்து விட்டான் வேம்பு.

'அடியம்மாடீ! ஒரே அடியாக கணக்கு ஏறி விட்டதே?' என்று சாந்தியும் திகைத்துப் போனுள்.

'வாழ்க்கைச் செலவுகள் தான் ஒரே அடியாக ஏறி நிற்கிறதே? அப்படியென்ன நாம் பணத்தை வீண் விரயமாக்கினேமா? மிகவும் அத்தியாவசியப் பொருள்களைத்தானே எண்ணிப் பார்த்து வாங்கினேம்?'

'ஆமாம் ;ஆமாம்; நான்கு புடவைகளையும் நான்கு வேஷ்டிகளையும் மட்டும் வைத்துக் கொண்டு பம்பாயில் எத்தனை காலம் ஓட்டிவிட முடியும்? – எனக்குப் புடவை எத்தனை முக்கியமோ– அத்தனைக்கு உங்களுக்குப் 'பாண்டும்'–' ஸூட்டும் அவசியந்தானே? வேறு என்ன பிரமாதமாகச் செலவு செய்துவிட்டோம்? இரண்டு சோப்புக்கட்டிகள்; பௌடர்; ஹேர்ஆயில்– இதெல்லாம்கூட அவசியமில்லையா?'

'ஆமாம் – ஆமாம்; தவிர– இப்போது தானே புதுவாழ்வு தொடங்குகிறோம்! ஆரம்பச் செலவுகள் சற்று அதிகமாகத் தான் இருக்கும்,'

'சகஜம்தானே?'– என்ற மாதிரிப் பேச்சுக்களின் மூலம் அவர்கள் ஆறுதல் அடைய முற்பட்டார்கள்.

'போகப் போக எல்லாம் சரியாகி விடும்' என்ருன் வேம்பு.

அடுத்த மாதம் முதல் தேதியன்று ஹோட்டல்காரன் முந்திய மாதத்திய பில்லைக் கொண்டுவந்து கொடுத்தான்.

அந்தப் 'பில்'லைப்பார்த்ததும் அவ்விருவருக்கும் மீண்டும் தூக்கி வாரிப்போட்டது.

பில் படி அவர்கள் கொடுக்க வேண்டியது ஏறக்குறைய நூற்றைம்பது ரூபாய்!

'பம்பாய்க்கு வந்து ஒருமாதம் கூட முழுதாக ஆகவில்லை! அதற்குள் செலவு ஐந்நூறு ரூபாய்களா!' என்று சாந்தி மனமிடிந்து போய் விட்டாள்.

'ரொம்ப அதிகம்தான்!' என்று வேம்புவும் அபிப்பிராயப்பட்டான்.

'இங்கு வந்து சேர்ந்தவுடனே நீங்கள் ஏதாவதுஉத்தியோகம் தேடிக்கொண்டிருக்கவேண்டும்! இத்தனை நாட்களும் ஊர் சுற்றியதில் செலவிட்ட நேரத்தை வேலை தேடுவதில் ஈடுபடுத்தி யிருந்தால் – –?' என்ருள் சாந்தி.

'அதுவும் சரியல்ல; இங்கு நாம் வந்து சேருவதற்கு முன்பாகவே – நமக்கு ஒரு உத்யோகத்தைச் சம்பாதித்து வைத்துக் கொண்டு வந்திருக்கவேண்டும்!' என்ருன் வேம்பு.

'என்னைக் கேலி பண்ணுகிறீர்களா?' என்று கேட்டு விம்மினுள் சாந்தி.

'உன்னை யில்லை என்னை நானே கேலி பண்ணிக் கொள்கிறேன்–'

'எதற்காக?'

'ஆழம் தெரியாமல் காலை விட்டு–மாட்டிக் கொண்டுவிட்டேனே –என்றுதான்!'

இருவருக்குமே சங்கை பிறந்துவிட்டது.

போகும்போதும் வரும்போதும்-ஹோட்டல் முதலாளியும், அங்கு வேலை செய்து வந்தவர்களும்கூட, வேம்புவையும், சாந்தியையும் மாற்றி மாற்றி விறைத்து விழித்துப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அதுவேறு அவ்விருவருக்கும் பரம சங்கடமாகத் தோன்றியது.

'இங்குள்ள அத்தனை பேர்களும் நம்மை எதற்காக இப்படி விறைத்து விறைத்துப் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள்?' என்று பொறுக்க முடியாமல் சொன்னாள் சாந்தி.

'முன் பின் தெரியாமல் பம்பாய்க்கு வந்திருக்கும் புது ஜோடி என்பது இவர்களுக்கும் தெரிந்திருக்கும்' என்று பதிலளித்தான் வேம்பு.

இந்தச் சந்தர்ப்பதில் நீங்கள் இப்படிக் குத்திக் குத்திப்பேசுவது எனக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவேயில்லை' என்று பொருமினாள் சாந்தி.

என்ன பேசி என்ன? காலம் ஓட வேண்டுமே?

காதல்பசி அடங்கிவிட்டது; வயிற்றுப் பசி ஓங்கி நின்றது.

காதல் பிரச்னை தீர்ந்துவிட்டது; வாழ்க்கையின் மற்றப் பிரச்னைகள் தலை தூக்கி நின்றன. அவற்றைச் சமாளிக்கும் வழி வகைகள் புரியாமல் இரண்டு பேருமே கலங்கி நின்றனர்.

ஆரம்பத்தில் அவர்கள் எதிர்பார்த்தபடி, குமாஸ்தா உத்யோகம் கூட, எளிதில் வேம்புவுக்குக் கிடைப்பதாயில்லை. அலைந்து அலைந்து சோர்ந்ததுதான் மிச்சம்.

ஹோட்டல் வாசம் செலவுக்குக் கட்டி வரவில்லை. ஆகவே அதை விட்டுத் தொலைத்து விட்டு, மிகுந்த பிரயாசையின் பேரில், எங்கோ ஒரு மூலையில் சொற்ப வாடகைக்குக் கிடைத்த ஒரு குச்சிற்குக் குடி பெயர்ந்தார்கள். சொற்ப வாடகை என்று பெயர்தானே தவிர—அவர்களுடைய



அப்போதைய நிலைக்கு அதுவும் மிக அதிகமாகவே பட்டது.

'அக்கம் பக்கத்தில் யாரிடமாவது விசாரித்து, ஏதாவது தைத்துக்கொடுக்கும் வேலை — பாட்டுச் சொல்லிக்கொடுக்கும் வேலை — இப்படி எது கிடைத்தாலும் பார்க்கலாமா என்று யோசிக்கிறேன்' என்று சொன்னாள் சாந்தி.

'தையல் வேலை வேண்டுமென்றால் அதற்குத் தையல் மிஷின் வேண்டுமே? அதற்கு முதல் இருக்கிறதா உன்னிடம்?' என்று கேட்டான் வேம்பு.

'உங்களிடம் அதற்கு ஒரு இருநூறு ரூபாய்கூட இல்லையா?' என்று அவள் பதிலுக்கு வினவினாள்.

வேம்பு கையை விரித்தான்; 'ரொக்கமாக இரண்டாயிரம் எடுத்துக்கொண்டு வந்திருந்தேன். இப்போது வெற்றிலை பாக்குப் போட்டுக்கொள்ளக்கூட கையில் காலணா கிடையாது.' என்றான்.

'நாம் வந்து நான்குமாதங்கள் தானே ஆகிறது? அதற்குள் அவ்வளவும் எப்படிச் செலவாயிற்று?' என்று ஆச்சரியப் பட்டாள் சாந்தி.

'கணக்கு எழுதி வைத்துக் கொள்ளவில்லை; இறக்கை முளைத்துத்தான். அத்தனை பணமும் பறந்து போயிருக்குமென்று ஊகிக்கிறேன்.'

'இந்த இடக்குப் பேச்சை விட்டுத் தொலைக்கமாட்டீர்களா?'

'பிராணனை விடும்போதுதான் அதையும் விட்டுத் தொலைக்க எண்ணி இருக்கிறேன்.'

'கையிலிருந்த பணமெல்லாம் கரைந்து விட்டது; வயிற்றுப் பிழைப்புக்கு வழியில்லை; இவ்வளவு பெரிய பட்டணத்தில் இனி எப்படி நாம் காலத்தைக் கழிப்பது!' என்று கவலைப்பட்டாள் சாந்தி.

'கண்களை இறுக மூடிக்கொண்டு, வயிற்றை இறுக்கி, மனதையும் அடக்கி வைத்து—ஒரே நிலையில்—'காதல்—காதல்' என்று பிடிவாதமாக ஜபித்துக்கொண்டேயிருந்தால்—நிச்சயமாக நம்மை மறந்துவிடுவோம்.'

Books By
Sir John Woodroffe (Arthur Avalon)

KAMAKALAVILASA

Sanskrit Text and Commentary with English Translation and Notes with a coloured plate of Sri Chakra.

The Kamakalavilasa is an important work in S'ri-vidya and the Kamakala isthe first display of activity in the Brahman substance after Pralaya when the Devi holds absorbed in Herself all the Thirty-six Tattvas of which the Universe in all its variety is Composed. The Kamakalavilasa is of great value in S'ri-vidya because of its clear and succinct account of the great S'riyantra.

2nd Edition (1953) Price Rs. 6

KARPURADI STOTRA

HYMN TO KALI

Sanskrit Text and Commentary with English Translation and Notes.

The celebrated Tantrik *stotra* containing the *mantroddhara* of Daksina Kalika is attributed to Mahakala Himself and is also known as the Karpuradi Hymn and gives bliss to devotees; the Annotation gives a simple interpretation and the Commentary gives pure joy to the readers and enlightenment to Sadhakas.

2nd Edition (1953) Price Rs. 6

HYMNS TO THE GODDESS

From Tantras and Stotras of Sankaracharya

Translated from the Sanskrit, with Commentary and Introduction by Arthur and Ellen Avalon.

" More things are wrought by prayer Than this world dreams of "

2nd Edition (1952) Price Rs. 6

IS'OPANISAD

Sanskrit Text and Commentary with English Translation.

A Tantrik interpretation of the great Upanisad on the basis of "The World As Consciousness", as contrasted with the Vedantic approach of Sri Sankaracharya, and at the same time showing the identity of the Advaitic conclusion arrived at by the two apparently differing paths.

2nd Edition (1952) Price Rs 3

Publishers:

GANESH & Co., (MADRAS) Ltd.,

MADRAS—17

'ஹும்; உங்களை நொந்துகொள்வதில் என்ன பயன்? என் புத்தியைத்தான் செருப்பால் அடித்துக்கொள்ளவேண்டும்.' என்று தானே குறைபட்டுக்கொண்டாள் சாந்தி—எதற்கோ?—

முன்பின் யோசிக்காமல் அவனுடன் அவ்வளவு தூரம் ஓடிவந்துவிட்டதற்காகவா?

காதல் வலையில் அவர்கள் போய்ச் சிக்கிக்கொள்ள—மீண்டும் அதிலிருந்து மீள வழியின்றி அவ்வலை அவ்விருவரையும் இறுகப் பிடித்துத் தன்னகத்தே ஆழ்த்திக்கொண்டுவிட்டது—சிலந்தி வலையில் சிக்குண்டு தவிக்கும் ஈயைப்போல—

உதாரணம் பொருத்தம் தானே?

'பெண்களுக்குத்தான் ஆண்களைவிட முன் ஜாக்ரதை அதிகம் என்று நினைத்தேன்; உன்னிடம் அதுவும் இல்லை போலிருக்கிறது?' என்று அமைதியாக அவளுக்குப் பதில் சொன்னான் வேம்பு.



'ஏன் இல்லை?' என்று எதிர்வீச்சுப் போட்டாள் சாந்தி.

'என்ன இருக்கிறது?'

'மூவாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நகைகள் என்னிடம் இருக்கின்றன.' என்று சாந்தி சொன்னாள்.

'சரி; இப்போது அதற்கு ஒருவழி சொல்லட்டுமா?'

'என்ன வழி?'

'செலவழி!'

'எந்த வழியில்?'

'உனக்கு ஒரு தையல் மிஷின் வாங்கிக்கொள்; ஒரு ஆயிரம் என்னிடம் கொடு; அதை வைத்துக்கொண்டு சின்ன அளவில் ஏதாவது 'பிஸினஸ்' பண்ணிப் பார்க்கிறேன்.'

'என்ன 'பிஸினஸ்' பண்ணுவீர்கள்?'

'ஏதாவது கடை வைக்கலாமென்று பார்க்கிறேன்.'

'என்ன கடை?'

'கள்ளுக்கடை வைக்க முடியுமென்றாலும் வைத்து வியாபாரம் பண்ண நான் தயார்!' என்றான் வேம்பு.

சாந்தி தன்னையும் அறியாமல் சிரித்தாள்.

வேம்புவும் அவளுடன் சேர்ந்து சிரித்தான்.

கடைசியில் — அவன் ஆரம்பித்து நடத்திய அந்தக் கடை வியாபாரத்திலும் தோல்வியே எதிர்பட்டு அதையும் விழுங்கிவிட்டது.

தெரு மூலையிலே சின்னஞ்சிறு மளிகைக் கடையொன்று வைத்தான். அவன் வைத்த கடையில் சாமான் வாங்கிய அனைவருமே

அவனைக்காட்டிலும் ஏழ்மை நிலையில் இருந்தவர்கள். கடனுக்ச் சாமான்கள் வாங்கிக்கொண்டு சென்றனர். கடையில் சாமான்கள்தான் குறைந்து கொண்டே வந்ததைக் கண்டானே தவிர, போட்ட முதலில் செல்லாத காசுகூடக் கண்ணால் பார்க்கவில்லை அவன்.

அதில் போட்ட முதலும் காலி; சாமான் களும் காலி; கடையும் காலி;

'பிஸின'ஸும் தீர்ந்தது.

'காதலில் வெற்றி கண்டவர்கள் வாழ்க்கையில் தோல்விதான் முழு அளவில் வெளிப்படுமா? காதல் கொண்டு கஷ்டப் பட்டுத் திண்டாடித் தவிக்கத்தான் வேண் டுமா? ஒன்றில் வெற்றி கண்டால்-அடுத்து வருவது நிச்சயமாகத் தோல்விதானா?

ஏனிந்த முரண்பாடு?

வேம்பு பெருமூச்செறிந்தான்.

நன்ருக இருட்டி விட்டது. வானம்வேறு மப்பும்-மந்தாரமுமாகக் காணப்பட்டது.

வானம் தண்ணீர் மழை பொழியலாம்; ஆனல் அவன் வாழ்க்கையில் பணமழை பொழியுமோ?

மனிதர்களின் நெஞ்சிலே காதல் மழை பொழியலாம்; அதன் மூலம் வாழ்வு முழு துமே வெற்றி மழை பொழியுமோ?

மெதுவாக எழுந்து நடக்கத் தொடங் கினன் வேம்பு.

வீட்டிலே சாந்தி அவனுக்காகக் காத்தி ருப்பாள். என்ன செய்யக் காத்திருப்பாள். வேலை கிடைத்ததா?' என்று கேட்கத் தான் காத்திருப்பாள்; 'நாளைக்குப் பொழுது விடிந்தால் என்ன செய்வது?' என்று கேட்கக் காத்திருப்பாள்.

அவன் அப்போது வீட்டிற்குப் போய்த் தான் என்ன செய்யக் கிடக்கிறது?

அன்று காலையில் ஒருவாய் தண்ணீர் அருந்திவிட்டு உத்யோக வேட்டைக்காகப் புறப்பட்டவன் வேம்பு; கால் கடுக்கப் பகல் பூராவும் தெருத் தெருவாகச் சுற்றி அலைந்ததுதான் கண்டபலன். இருட்டி ஒரு ஜாமம் கழித்துச் சோர்வுடன் வீடுதிரும் பினல், சாந்தியின் வாடியமுகத்தை ஒரு முறை நோக்கிவிட்டுப் பேசாமல் படுக்க வேண்டியதுதான்.

வாழ்க்கையின் ஆணிவேர் எது?

ஆனந்த வாழ்வின் ஆணிவேர் எங்கே இருக்கிறது?

அது காதலா? பணமா? நம்பிக்கையா? ஏமாற்றமா? வஞ்சகமா? எது ஆணிவேர்?

யாருக்காவது தெரியுமா?-அவனுக்குத் தான் தெரியவில்லை.

வேம்பு வீட்டினுள் நுழைந்தான்.

'இன்று ஏன் இத்தனை நேரம்?' என்று சாந்தி கேட்டாள்.

வாயே திறவாமல் கயிற்றுக் கட்டிலை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந் தான் வேம்பு.

சாந்தி வந்து அவனருகில் அமர்ந்து, அவன் மோவாயைப் பிடித்துத் தன் பக்கமாகத் திருப்பிக்கொண்டு கவலையுடன் பார்த்தாள்.

'பாவம்—டீ கூட சாப்பிடாமல் இங் கிருந்து போனீர்கள்—வாருங்கள் ஒரு வாய் சாப்பிட்டுவிட்டுக் களைப்புத் தீர அமைதி யாகப் படுத்துக்கொள்ளுங்கள்' என்று அன் பொழுக அழைத்தாள்.

'சாந்தி!—உனக்குக் காதல் வேம்பாகத் தானே கசக்கிறது-சாந்தி? நிஜத்தைச் சொல்லிவிடவேண்டும்!' என்று அவளை நோக்கி அமைதியாகக் கேட்டான் வேம்பு.

'இல்லை என் ராஜா! வேம்பும் வெல்ல மும் கலந்ததுதான் காதல் என் ராஜா!' என்று சிரித்துக்கொண்டே சாந்தி சொன் ஞள்.

'நல்லவேளையாக நம் காதலில் ஓரளவுக் குக் கருணை கூட இருக்கிறது சாந்தி— இல்லையா?'என்று வினவினன் வேம்பு.

'எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?' என்று அவள் கேட்டாள்.

'நம் காதல் - நமக்கு, இந்த நிலையில், ஒரு குழந்தையையும் சேர்த்துக் கொடுக்காமல் இருக்கிறதே! அதுவே பெருங் கருணை தானே!'

வேதனையுடன் கூடிய சிரிப்பொலியுடன் சாந்தி வேம்புவை அணைத்துக்கொண்டாள்.

'நீங்கள்தான் எனக்கொரு குழந்தையாக வும் இருக்கிறீர்களே – இது போதாதா!' என்று அவன் காதோடு கொஞ்சினள்.

அப்போது அவ்விருவருக்கும் தோன்றிய மன எழுச்சியிலே வேதனை மறைந்தது: வறுமை மறைந்தது; துன்பம் மறைந்தது; கவலை மறைந்தது; சூழ்நிலை மறைந்தது: அவர்களே மறைந்துவிட்டார்கள்.

எஞ்சி நின்றது என்ன?

அதுவே ஆணிவேர்.



நாளுக்கு நாள் அதிக
தெளிவான,
எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனுவிலுள்ள **கேடில்** இந்த
அற்புத வேலையைச் செய்யட்டும்

தினமும் ரெக்ஸோனு சோப் உபயோகியுங்கள். இதன் கேடில் கலந்த நுரை உங்கள் சருமத்தை நாளுக்கு நாள் அதிக மிருதுவாகவும், தெளிவாகவும் இருக்கச் செய்யும்.

ரெக்ஸோனு

கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

R.P. 109-50 TM

ரெக்ஸோனு ப்ரோப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.



நெஞ்சில் பதிந்த நினைவு

கோமதி சுப்ரமணியம்

தன்னைத்தானே புகழ்ந்துகொள்வது தற்பெருமை யாகும். அப்படித்தான் என்னைப்பற்றி நானே சொல்லிக்கொண்டால். ஆனால் என் அழகைப்பற்றி இரண்டு வரியாவது எழுதித்தானாகவேண்டும், ரம்பை, ஊர்வசி என்றெல்லாம் சொல்லிக்கொள்கிறார்களே, அவர்களெல்லாம் எப்படி இருப்பார்களோ எனக்குத் தெரியாது, ஆனால் என்னைப்பற்றி, என் அழகைப்பற்றி பேசும்போது இந்த உவமையை அடிக்கடி சொல்லி ஊர் பெண்கள் பேசிக்கொள்வது வழக்கம். உடம்பில் குன்றிமணி தங்கமில்லாவிட்டாலும் அவள் முகத்தில் இலங்கும் அழகைப்பார், என்று பலர் பேசுவதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்வாள் என் தாய். பழுக்கப் பழுத்த எலுமிச்சம் பழ நிறம்—எடுப்பான நாசி—கருத்தடர்ந்த கூந்தல்... தளதளவென்று பூசிவிட்ட மேனி... என்ற வர்ணனைக்களடங்கியது என் எழிலுருவம். இத்தனை அழகையும் ஒருங்கே படைத்த தெய்வம் அதிர்ஷ்டம் என்னும் ஒன்றைச் சேர்த்துக் கொடுக்க ஏனோ மறந்துவிட்டது,

பள்ளிக்கூடத்தில் நடந்த அழகுப் போட்டியில் முதல் பரிசு வாங்கியிருந்ததோடு எங்கள் பள்ளியில் நடக்கும் எந்த நாடகத்திலும் என்னையே கதாநாயகியாகத் தேர்ந்தெடுப்பதே என் அழகுக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுத்தது போலில்லையா?

இதனாலெல்லாம்இறுமாந்திருந்த என் தாய் கல்யாணப் போட்டியிலும் சுலபமாய்த் தேறிவிடுவேன் என்று நம்பியிருந்தாள். வாய்ப் பேச்சில் அழகைப் புகழ்ந்தார்களே ஒழிய வாழ்க்கைக்குப் பணத்தைத்தான் எதிர் பார்த்தார்கள்,

அதன் பலன் வயசு பதினெட்டாகியும் மணப் பெண்ணாகவே நின்றேன்.

அன்று வீட்டில் ஏகப் பரபரப்பு. சென்னை நகரில் வசித்த சற்று உயர்வான உத்தியோகம் வகிக்கும் ஒருவர் என்னைப் பார்க்க வரப் போவதுதான் அந்தப் பரபரப்புக்குக் காரணம் என்பதை என்னை அலங்கரித்துக் கொள்ளச் சொன்னபோதுதான் அறிய முடிந்தது. நாடகமேடையில் நடிக்கச் செல்லும் நடிகையைப் போன்று அவரை நமஸ்கரித்தெழுந்தேன். என்னையுமறியாமல் என் கண்கள் எதிரே அமர்ந்திருந்த அவரை—ஏறிட்டு நோக்கின...

கார்மேக வண்ணனின் கருநிறத் தோற்றத்தில் உருவம் அமைந்திருந்தாலும் கண்ணாடிக் கடியிலே ஒளி வீசி வட்டமிட்ட அந்தக் கரு

வண்டுக் கண்கள் எனக்கு அபயமளிப்பதை என்மனம் எப்படியோ அறிந்து உரைத்து விட்டது. இவராவது என் மணாளனாக வாய்த்தால்.....! என்கிற எண்ணத்துடன் வந்தவர்களை வழியனுப்பினோம்.

வயசு முப்பத்து ஐந்து ஆகிறது. இரண்டாம் தாரம் ஆனாலும் மூத்தவளின் நினைவுச் சின்னமாக உறுத்திக்கொண்டிருக்கக் குழந்தை குட்டி என்ற பிக்கல் பிடுங்கல்கள் இல்லை. ரம்பா சம்மதித்தால் முடித்து விடலாமென்று அப்பா கூறி முடிக்கவில்லை... நானே போய் நின்றேன் அப்பாவின் முன்.

அவர் சம்மதித்தால் முடித்துவிடுங்கள் அப்பா... என்றேன்.

'அடேயப்பா அதற்குள் அவர்' சம்மதம் வேண்டுமாமே என்று பரிகாசமாகவும் குத்தலாகவும் கூறினாள் அக்கா.

அவளுக்கென்ன முதல் பெண். அப்பாவின் கையில் இருந்ததைச் சுருட்டிக்கொண்டு கூடியவரை நல்ல இடமாகப் பார்த்து வாழ்க்கைப்பட்டுப் போய்விடுவாள். அவளுக்கெங்கே தெரியப்போகிறது என் மன நிலை. 'அவர் மட்டும் என்னை உதறித் தள்ளமாட்டார் என்பது என்ன உறுதி அக்கா' என்றேன்.

'அந்த அழகு மன்மதனுக்கு உன்னை மணந்து கொள்ளக் கசக்கிறதாக்கும்' ஏனோ இந்தச்சொல் என் நெஞ்சில் சுடு சரமாய்ப் பாய்ந்தது. உலகத்தில் எல்லோருமே அழகின் அவதாரமாகப் பிறக்க முடியுமா அக்கா என்று கூறியது அவள் அழகில்லாததைத் தாக்கிப் பேசுவதாக நினைத்துக்கொண்டாளோ என்னவோ முகத்தை ஒரு மாதிரியாகத் தூக்கிக்கொண்டு உள்ளே போய் விட்டாள்.

விவாகம் நிச்சயமான சந்தோஷம் தெரிவித்துக்கொள்ள வந்த என் உறவினர்கள் என் மீது அனுதாபம் காட்டிப் பேசியபோது ஏனோ என் மனதில் வேதனை புரையோடியது. அவர்கள் அனுதாபம் தெரிவித்துக் கொண்டதைப்போல் அழகற்ற மணவாளன் வரப்போவதற்காக அல்ல...அவர்கள் அனுதாபம் தெரிவித்துக் கொண்டதற்காகத்தான் என் மனம் புழுங்கியது. அவர்கள் எதைக் குறைவாக நினைக்கிறார்களோ அதை நான் நிறைவாகக் கருதுகிறேன். என் நிலைக்காக நான் கலங்காத போது பிறர் எதற்காக இரங்கவேண்டும் என்பது தான் எனக்குப் புரியவில்லை.

மண விழாவின் போது ஓம குண்டத்தில் எழுப்பிய புகையினால் என் கண் கலங்கியது. மணவறையை நெருங்கியடித்து நின்ற ஜனக் கும்பலின் நெருக்கத்தினால் வியர்வை வெள்ளமாகப் பெருகி வழிந்தது. கையில் பிடித்திருந்த கைக்குட்டையினால் முகத்தைத் துடைத்துக் கொண்டதை நான் அழுததாக நினைத்துப் பெரியவர்கள் என்னைச் சமாதானம் செய்ய வந்த போது எனக்கு உண்மையிலேயே அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. இந்த விஷயம் அவர் காதுக்கும் எட்டியிருக்கவேண்டுமென்பதை அவரைச் சந்தித்த முதல் சந்திப்பன்று கேட்ட கேள்வியிலிருந்து ஊகிக்க வேண்டியிருந்தது.

'ரம்பா உனக்கு என்னைப் பிடிக்கவில்லையா?' அவர் என்னைப் பேச்சுக்கிழுக்கப் பலவித முயற்சி செய்த போது நாணத்தினால் தலை கவிழ்ந்து நின்ற நான் இந்த வார்த்தையைக் கேட்கவும் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தேன். 'இது என்ன கேள்வி அவசியமில்லாதபடி' என்று எப்படியோ கூறி நின்றேன். வாஸ்தவம் உண்மையே அதுவாக இருக்கும் போது கேள்விக்கு அவசியமென்ன என்கிறாயோ என்றார் விடாமல தொடர்ந்து. ஆரம்பத்திலேயே அஸ்து பேசும் அவரிடம் எப்படி என் மனதைத் திறந்து காண்பிக்க முடியும். 'என் மனதைப் புண் படுத்த வேண்டுமென்பதே உங்கள் எண்ணமா? அல்லது என்னைச் சோதனை செய்யும் சூழ்ச்சியா' என்றேன். இதற்கு நேரடியான பதிலளிக்க முடியாத அவர் 'அப்பா இப்பொழுதாவது பேச மனம் வந்ததே' என்றார். 'பிடித்தமில்லாத பெண் மணவிழாவிற்குச் சம்மதிப்பாளோ என்பதையாவது யூகித்துப் பார்த்ததோ உங்கள் உள்ளம்' என்றேன்.

'கட்டாயக் கல்யாணமாக இருக்கலாமல்லவா?'

'தன் விருப்பத்திற்கு எதிராக ரம்பா எந்தக் காரியத்திலும் துணிய மாட்மாள் என்பதைப் போகப் போகத் தெரிந்து கொள்வீர்கள்' என்று கூறியதும் ஓரளவு சமாதானம் அடைந்ததை விளக்கியது அவர் வதனம். ஆனாலும் அந்தத் திருப்தி நிரந்தரமாய் நிலைத்து நிற்குமா என்பது சந்தேகம் தான்.

நான் அவரை அடைந்ததினால் அதிருப்தி அடைந்திருக்கிறேன் என்கிற எண்ணத்தை அவர் நினைக்கிறாரோ இல்லையோ அவர் என்னைப்பற்றித் தவறாகக் கருதுகிறார் என்கிற எண்ணம் மட்டும் என் நெஞ்சில் விதை யூன்றிவிட்டது. ஆரம்பத்திலேயே தொடங்கிய சந்தேக விருக்ஷம் படர்ந்து வந்ததை அவரோ நானோ அறிந்திருக்கவில்லை. போகப் போக, காலமும் செயலும் அதை அறிவுறுத்தலாயின.

அழகிய சென்னை மா நகரிலே சற்று நாகரிகமான வீதியிலே சிறியதோர் பங்களாவிலே தொடங்கியது எங்கள் தனிக் குடித்தனம். அவரே என் தெய்வமென நான் கருதுவதை அவர் உணரவேண்டுமென்கிற ஒரே எண்ணமே என் உணர்வனைத்தையும் நிறைத்திருந்தது. அதன் பிரதிபலிப்பேபோலிருக்கும் என் சொல்லும் செயலும்.

அழகின் அவதாரமான ரம்பா தன்னை மணந்த குறையை மறக்கப் பணத்தாலும் அளவு மீறிய பரிவாலும் மாற்ற முயலுவதைப் போலிருக்கும் அவரது ஒவ்வொரு செய்கையும்.

எங்கள் குடித்தனம் தொடங்கி முதல் மாதச் சம்பளம் வாங்கி வந்த அன்று மாலை எனக்காகச் சிறிய பரிசு கொண்டு வந்தார். 'இதோ ரம்பா என் காணிக்கை' என்று கூறி வேடிக்கையாக என் கையில் கொடுத்ததைப் பிரித்துப் பார்த்தேன். அழகிய பச்சைக்கல் மோதிரம் பளிச்சிட்டு மின்னியது. 'இப்போ எதற்காகஇது என்றேன்.'என் அன்பின் முதல் காணிக்கை' என்றபோது அவர் முகத்தில் பெருமிதம் பளிச்சிட்டது. 'களங்கமற்ற தங்களது அன்பே என்றும் காணிக்கையாகக் கிடைத்தால் போதும் வேறொன்றும் அவசியமில்லை, இந்த ரம்பாவுக்கு' என்றேன். என் சொல்லில் என்னைப்பற்றித் தவறாகக் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளுங்கள். அதுவே போதும்' என்ற அர்த்தம் தொனித்ததை உள்ளம் உணராமலில்லை,

அடுத்த மாதமும் அதேபோல் நீல ஜார்ஜெட்புடவை பார்சல்செய்த பொட்டலத்தை என்னிடம் நீட்டினார். 'உன் நிறத்திற்கேற்ற கலர் தேர்ந்தெடுத்திருக்கிறேன்; ரம்பா, பிடிக்கிறதோ பார்' என்றார்.

'பிடிக்கவில்லை' என்று சட்டெனக் கூறியதும் சுருங்கியது அவர் முகம். 'ஏன்' என்றார்,

'என்னையும் தங்களுடன் அழைத்துப் போய் எடுத்துக் கொடுக்கக்கூடாதென்றிருக்கும் உங்கள் செய்கையைத்தான் சொன்னேன்' என்று விளக்கியபோது எதுவுமே பேசவில்லை.

ஒரு பொருள் கிடைக்காதென்கிற போது தான் அதை அடையவேண்டுமென்கிற ஆர்வம் பெரிதும் ஏற்படுகிறது. அவர் என்னோடு எங்கும் வர விரும்புவதில்லை—நான் வர விரும்பமாட்டேனோ என்பதுதான்அவர்எண்ணம்—நானாக விரும்பி அழைத்தாலும் அவர் மனதை உறுத்தும் சந்தேகத்தால் வர மறுத்துவிடுவார்.

வெகு நாள் எடுத்துக்கொண்ட பிரயாசையின் பேரில் ஒருநாள் ஒரே ஒரு நாள் என்னோடு சினிமாவிற்கு வர ஒப்புக்கொண்டார். அன்று என் உள்ளம் அடைந்த மகிழ்ச்சியை எல்லையிட்டுக் கூறமுடியாது, பல நாள் கண்ட கனவை நனவாக்கிய பெருமிதத்தில் அன்று முழுவதும் ஆனந்தக் கடலில் மூழ்கி மூழ்கித் தவித்தேன்.

மாலையில் அவர் வரு முன்பாகவே எனது அலங்காரத்தை முடித்துக்கொண்டு தயாராக இருந்தேன். தலைப் பின்னலிலிருந்து நெற்றியில் பொட்டிட்டுக்கொள்வது வரை பார்த்துப் பார்த்து நேரத்தை விரயமாக்கி அழகுப்படுத்திக் கொண்டிருந்தேன். அவர் வாங்கிக் கொடுத்த நீல நிற ஜார்ஜெட்டை அணிந்து கொண்டு, வெள்ளை மஸ்லின் ரவிக்கையை அதற்கு ஜோடியாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டேன். கசாமுசாவென ஐந்தாறு சங்கிலிகள் தொங்கவிட்டுக் கொள்ளாமல் பரந்த கழுத்துக் கிசைந்தவாறு நட்சத்திர மாலை மட்டும் அணிந்திருந்தது என் அழகைப் பன்மடங்காக்கியது. பின்னு மொரு முறை என் எழிலைக்கண்டு மகிழக் கண்ணாடியின் முன் நின்ற போது வாசற்படியில் அவர் வருவது கண்ணாடியில் தெரிந்தது. வரவர நிழலுருவம் என்னை நெருங்கி வருவதை அறிந்து கண்ணாடியை விட்டு அசையாமல் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருந்தேன்.

அழகுப்பிழம்பான என் உருவத்தையும் காரியாலயத்தில் உழைத்து, களைப்புத் தட்டவாடித் துவண்டு நின்ற அவர் உருவத்தையும் ஒப்பிட்டு வேடிக்கை பார்க்க ஏனோ என் மனம் விரும்பியது. எனக்கு விளையாட்டாகத் தோன்றும் அதே காட்சி

அவர் மனதிற்கு வேம்பாய்க் கசந்திருக்க வேண்டும். சட்டென்று வாடிச் சுருங்கிய முகம் உள்ளக் கருத்தைப் படம் பிடித்துக் காட்டிற்று.

'போகலாமா' என்று திரும்பினேன். 'போகத்தான் வேண்டுமா?' என்ற கேள்வி எனக்குத் தோல்வியைத் தந்து விடும் போலிருந்தது. 'அவசியம் சீக்கிரம் டிரஸ் மாற்றிக் கொள்ளுங்கள். காபி எடுத்து வருகிறேன்...' என்று கூறவும் 'வேண்டாம் வேண்டாம் நானே எடுத்துச் சாப்பிட்டுக் கொள்வேன்' என்று கூறி, சாப்பாட்டு அறையை நோக்கி நடந்தார்.

என் அழகு குலைந்துவிடும் என்று அவர் மறுத்தாலும் என் மனம் ஒப்புமா? என் கையால் டிபனை எடுத்து வைத்து, காபியும் ஆற்றிக்கொடுத்துவிட்டு அவருக்கு வேண்டிய டிரஸை எடுத்து வைத்தேன்.

அவர் உடை மாற்றிக் கொண்டதும் இருவரும் புறப்பட்டோம். காலம் முழுவதும் கற்பனையாக்கி, அழகின் சிலையாகச் செதுக்கி வைத்திருக்கும் பதுமையினருகே—அழகென்பதையே அடியோடு வெறுத்து அதற்கெதிரான உருவம் படைக்கக் கருதிய மற்றொரு கலைஞனின் கைத்திறனில் வந்த உருவம் போன்ற அவரும் ஜோடியாகச் சென்றதைக் கண்ட வழிப் போக்கர்களின் வாய் வம்புக்கிரையாகித் தியேட்டரை அடைந்தோம்.

அங்கேயும் இதே நிலைதான், வட துருவமும் தென் துருவமுமாய் ஜோடி அமைந்திருந்த எங்களைக் கண்டு நையாண்டி செய்தவர் அநேகர். அனுதாபம் கொண்டவர் ஓரிருவர். கொடுத்து வைத்தவர் என்று அவர் அதிர்ஷ்டத்தில் பொருமை கொண்டு வாய்விட்டுச் சொல்லியவர் சிலர்.

இவைகளையெல்லாம் நான்பொருட்படுத்தவுமில்லை; பொருட்படுத்த அவகாசமும் இல்லை. அவர் வைராக்கியத்தைத் தளர்த்தி, என் பெண்மையை வெற்றி கண்டதில் பெருமிதம் கண்டு நின்றது என்



மனம். ஆனல் அவரோ அதற்கெதிராகச் சூழ் நிலையால் மனம் வெதும்பிப் புழுங்கிக் கொண்டிருந்தார் என்பதை அவருடைய வெளுத்துச் செத்த முகத்தில் கண்டேன். அவர் மனதைத் திருப்ப விரும்பி, எதை யெதையோ குழந்தை போல் கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்டு அவர் நினைவை என் பக்கம் திருப்பினேன்.

திரையில் படம் ஓடத் தொடங்கியது. மனச் சுருளை மடக்கி வைத்துவிட்டு, சலனப் படத்தை வட்டமிடத் தொடங்கின, எங்கள் கண்கள். படத்தின் ஆரம்பத்திலேயே கை கால் சுவாதீனமிழந்து ஒருவன் காட்சி அளிக்கிருன். பக்ஷவாதத்தால் கை கால்கள் சுவாதீன மிழந்திருந்தான் என்பது கதை போகப் போக விளங்குகிறது. அவனைக் கண்டு ஜனங்கள் வெறுப் படைந்து எழுந்து விடா வண்ணம் அவனருகே அழகின் ஒளிச் சிகரமான பெண்ணின் உருவம் வருகிறது. அடுத்தவர் நையாண்டிக்கு ஆளாகி நின்ற அவனை ஆதரவோடு கண்காணிக்கிருள் அந்தப் பெண். படம் முழுவதும் அவனுக்காகவே அந்தப் பெண் வெகு பாடுபடுவதும் முடிவில் அவள் முயற்சியின் பயனுய்ப் பல சிரமங்கள் பட்டு அவனை, கைகால்கள் முன்போல் சுவாதீன மடையச் செய்து விடுகிருள். அதற்காகப் பல இன்னல்கள் அனுபவித்து முடிவில் உயிர் துறக்கவும் நேரிடுகிறது. உயிர் துறக்கும் நேரத்திலும் கணவன் நல்ல ஸ்திதி அடைந்து விட்ட பூரிப்பிலேயே நிம்மதியுடன் உயிர் விடும் ஓர் உத்தமப் பெண்ணின் கதை. இந்தியப் பெண்ணின் பண்பை விளக்கிச் சித்திரிக்கும் அந்தக் கதை என் மனதிற்கு வெகுவாகப் பிடித்திருந்தது.

படம் முடிந்து வெளியே வந்த போது வியாதிக்காரனுக இருந்தும் எப்படி மனம் கோணுமல் சிச்ருஷைகள் செய்கிருள் கணவனுக்கு. எப்படியிருந்தாலும் கணவன் தான் தெய்வம் இந்தியப்பெண்ணுக்கு என்றேன் என் போக்கில்.

'அடேயப்பா...உன் மனதில் உன்னைப் பெரிய தியாகியாக நினைத்துக் கொண்டிருக்கிருயாக்கும்' என்று குத்தலாகக் கேட்டார். 'அழகற்ற உன்னைக் கணவனுக ஏற்றுக் கொண்டிருக்கிறேன்' என்று நான் கூறுவதாகச் சுட்டிக் காட்டிச் சொல்வது போலிருந்தது அவர் பேச்சு. அதோடு நிறுத்தவில்லை.

'அழகான அந்தப் பெண் தன் மனைவி என்பதில், அவனுக்குத்தான். எத்தனை பெருமை' என்று கதாநாயகனைப் கூறுவதைப் போல் தன் கருத்தை வெளியிட்டுச் சொன்னது என் இதயத்தில் தேனருவியாகப் பாய்ந்தது. அந்தச் சொல்லின்பத்திலே வீடு வந்ததைக் கூட மறந்து போயிருந்தேன். சடக்கென வண்டி நின்றதில் சட்டத்தில் தலை மோதவே வண்டியை விட்டிறங்கி வீட்டினுள் சென்றேன்.

* * *

அந்தச் சம்பவத்தின் பின் அவர் எங்குமே என்னுடன் வரச் சம்மதித்ததில்லை. வாரம் மாதமாகி மாதம் வருஷமாக உருண்டு காலம் ஓடியது.

தன்னைப்பற்றித் தாழ்வாகக் கருதும் நினைப்பை அகற்றுமலே மனதுள் விகற்பத்தை வளர்த்துக் கொண்டு வந்தார் அவர். பல வழிகளில் முயன்றும் அவர் நம்பிக்கையை அசைக்க முடியவில்லையே என்கிற எண்ணத்திலேயே என் மனமும் உழன்றது. இடையே நிகழ்ந்தது தாம் பத்யம்.

தம்பதிகள் வாழ்வு கடந்து பெற்ருேர் பதவி ஏற்கும் காலம் வந்தது. அப்போதாவது எங்கள் வேற்றுமை மறந்து ஒற்றுமை நிலவுமா என்று நப்பாசை கண்டது உள்ளம்.

எப்படியாவது அவரிடம் பேச்சுக் கொடுத்து நான் களங்கமற்றவள். இம் மூவுலகும் பெயர்ந்தாலும் என் நெஞ்சில் தங்கள் நினைவு என்றும் அழியாதது. யாராலும் அசைக்கமுடியாதது. கணவனுக்கு அழகில்லை என்ற குறையை நினைக்க இம்மியும் இடம் கொடுக்கமாட்டேன் என்று என் இதயத்தைத் திறந்துகாட்ட எத்தனை முறையோ முயன்றிருக்கிறேன். என் முயற்சிகள் அனைத்தும் வியர்த்தமாயின. அவர் நெஞ்சில் பதிந்த நினைவு நிலையாக நின்று விட்டது.

'பிறக்கும் குழந்தை யாரைப்போலிருக்குமோ' என்பார்.

'உங்களைப்போலத்தான் சந்தேகமில்லாமல். என் நினைவில் தங்கள் திருவுருவம் சதா தாண்டவமாடும் போது குழந்தைக்கு வேறு

சாயல் ஏற்பட ஏதுவேது' என்பேன். 'அப்படியானுல் உனக்கு ஓரே விசனமென்று சொல்' என்பார். 'இல்லை... சந்தோஷம் என்று பலமுறை முட்டிக்கொள்வேன். அவர் அதைப் பொருட்படுத்திஞல்தானே... என் குறை நீங்காத குறையாக நீண்டு கொண்டே சென்றது.

*　　　*　　　*

பிரசவநாள் நெருங்கியது. ஆஸ்பத்திரியில் கொண்டுவிட ஏற்பாடு செய்தார். அவரும் உடன் வந்து ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்துவரக் கேட்டுக்கொண்டேன். வர மறுத்தார். பிடிவாதமாகப் பிடிக்கச் சமயம் அதுவல்ல என்று நினைத்து வண்டியில் ஏறிச் சென்றுவிட்டேன். கொழு கொழுவென்றிருந்த குழந்தையை என்னிடம் நீட்டி, 'இது தான் உன் குழந்தை' என்று நர்ஸ் கூறிய போது உவகை ஊற்றெடுக்கக் குழந்தையை வாங்கி மார்புறத் தழுவிக்கொண்டேன், நான் பெற்றெடுத்த அழகுப் பதுமையை நான் கண்டு மகிழ்ந்ததில் மட்டும் திருப்தி அடைந்துவிடவில்லை. உடனே வீட்டுக்குச் சொல்லி அனுப்பி, அவர் வந்து பார்த்து. கண்டு களிப்பதைக் காணத் தவித்தது மனம். ஆள் மூலம் சேதி கொடுத்தேன். அடுத்த சில மணி நேரத்திலிருந்து அவர் வருவார் வருவாரென ஆவலுடன் காத்திருந்தேன். நேரம் ஓடியது. மணிக்கணக்கு நாள் கணக்கில் மாறியது. இரண்டு நாள் முடிந்து மூன்ருவது நாளும் பிறந்தது. அவர் வரவில்லை; வரவேயில்லை. இந்த நினைவு என் நெஞ்சைத் தீய்த்தது.

குழந்தையை என்னிடம் கொடுக்க வந்த நர்ஸிடம் 'ஏனம்மா அவர் வரவேயில்லையா?' என்றேன். 'யார் உன் புருஷஞ...? கன்னங் கரேலென்று கண்ணுடி அணிந்து பார்க்க விகாரமாய்... அவரா உன் புருஷன்...?'

'சொல்லுங்கள்... அவர் வந்தாரா... குழந்தையைப் பார்த்தாரா?'

'ஆம் வந்தார். அன்று மட்டுமென்ன? தினமும்தான் வந்து பார்த்துவிட்டுப் போகிருர்.

உயர்தரமான
சிகரெட்





'என்ன தினமும் வருகிறாரா. நான் நம்ப மாட்டேன். வந்திருந்தால் என்னைப் பார்க்க வரமாட்டாரா...?

'ஏனம்மா உன் புருஷன் அன்பற்றவரா...' என்றபோது,

'இல்லை பண்பற்றவர்' என்ற வார்த்தை என்னையுமீறி என் உள்ளத்தினின்றும் புறப்பட்டது.

'நான் சொல்லி முடிக்கவில்லை. எதிரே அவரே வந்தார். 'ரம்பா' நீ வீணாக ஏன் நிம்மதி இழந்து தவிக்கிறாய். என்னுடைய வருகையால் நான் விரும்பும் அழகுப் பதுமை பிறர்பழிக்கும்ஆளாகநேருமோ என்றஞ்சியே வராமலிருந்தேன். அது என் குற்றமா?' என்று மனம் விட்டுக்கேட்டார். இது வரை மனதில் வைத்து மூடிப் பேசிய அவர் தம் கருத்தைத் திறந்து திறந்து கொட்டியபோது உணர்ச்சி வசமானேன்.

ரோகியான கணவனைத் தெய்வமாகக் கருதிய நளாயினியும் தன்னை வெறுத்த கணவனை வழிபட்டு வணங்கிய கண்ணகியும், கணவனுக்காக எமனுடன் போராடி வரம் வாங்கி வந்த சாவித்திரியும் பிறந்த மண்ணில் பிறந்தவள் இந்த ரம்பா. கணவனைத் தெய்வமாகக் கருதும் பண்பாடு நிறைந்த நாட்டில் பிறந்தவள் உங்கள் மனைவி என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று உணர்ச்சியோடு கூறி முடித்தேன். புன்னகை பூத்த முகத்துடன் எனது பேச்சை ஒப்புக்கொண்டதின் சின்னமாக முறுவல் நெளிந்தது அவர் வதனத்திலே. அதன் திருப்தியிலே என்னை மறந்தேன். நானிருந்த இடத்தை மறந்தேன். எங்கோ இனம் தெரியாத இன்ப உலகில் நானும் என் கணவனும் இனிமை வாழ்வு வாழ்வதைக் கண்டு களிப்படைந்து நின்றது மனம். ●

டில்லியிலும் தமிழ் முழக்கம்

தமிழன்பன்

"உலகமெல்லாம் தமிழ் முழக்கம் கேட்க வேண்டும்" என்று கனுக்கண்டார் அமரகவி பாரதி. பாரதியார் சாமான்யமான கவியாகவிருந்தால் அவர் கனுக்கள் பலித்திருக்கமாட்டா. ஆனல் வருங்காலத்தைத் தம் விருப்பங்கள் மூலம், தம் காவ்யங்களின் மூலம் அள்ளிக்கொட்டிய பாரதிக்கு, தமிழ் எந்த ஸ்தானத்தை வகிக்கப்போகிறது என்று நன்ருகத் தெரிந்திருந்ததுபோலும்!

சென்ற ஆகஸ்ட் மாதம் 29, 30, 31 தேதிகளில் டில்லியில் நடந்த ஏழாவது தமிழ் விழாவின்போது தமிழ் முழங்கிற்று. தமிழர்களின் பெருமை வானைத் தொட்டது. தில்லியில் உள்ள "மதராஸிகள்" தரையை விட்டு இரண்டு அடி உயரத்திலேயேதான் நடந்தார்கள். தமிழின் மேன்மை, தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம் என்று நம் தாய் மொழியின் பெயரால் நம் கௌரவம் உயர்ந்தபொழுது "நான் தமிழன்" என்று தலை நிமிர்ந்து நடந்தார்கள் தில்லித் தமிழர்கள்.

தமிழ் உலகத்திலேயே தனிப்பெரும் பாஷை, எல்லாப் பாஷைகளிலும் பழமையானது என்பது நமக்குத் தெரியும். ஆனல் மற்ற மாகாணத்தார், மற்றத் தேசத்தார் எப்படி இதைத் தெரிந்துகொள்வது? தமிழ் மொழியில் கொஞ்சம் "கரகரத்த" வார்த்தைகள் இருப்பது என்பது உண்மை. தவிர, தமிழில் எந்த விஷயத்தையும் தெளிவாகச் சொல்லவோ அல்லது நமக்கிடையே சம்பாஷணை செய்வதிலோ கொஞ்சம் வேகம் ஜாஸ்திதான். இதனல்தான் மற்றப் பாஷை பேசுபவர்கள் நாம் பேசும்பொழுது நம் வாயைப் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். மற்ற மாகாணத்தவர்கள் பாஷையில் ஸம்ஸ்கிருதக் கலப்பு உள்ளதால் நாம் பேசும்பொழுது சொல்வார்கள்: "நீங்கள் இப்பொழுது சொன்னீர்களே அந்த வார்த்தை எங்கள் பாஷையில்கூட உண்டு", பஞ்சாபிகள் பாஷைக்கும் எந்த இந்திய பாஷைக்கும் ஸ்னனப்பிராப்திகூடக் கிடையாததால் தமிழைப்பற்றி இவர்கள் அபிப்பிராயம் என்ன தெரியுமா? ஜட்காவண்டி வேகமாகச் செல்லும்பொழுது சாட்டைக் குச்சியை சக்கரத்துக்கு மேல் பிடித்தால் எப்படிச் சப்தம் உண்டாகிறதோ அப்படித்தான் இருக்கிறது தமிழ்" என்பார்கள். மற்றும் சிலர் "டண்டாபானி அண்டா குடுகுடு" என்பார்கள். இந்தப் பிரகஸ்பதிகளும் கூட வியக்கும்படி தமிழ் அன்னை டில்லியில் பவனி வந்தாள்.

ஆகவே தில்லியில் விழாவை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதை நடத்தவும் ஏற்பாடு செய்த டில்லித் தமிழ்ச் சங்கத்திற்கு மாபெரும் பெருமை என்ன வென்ருல் தமிழைப்பற்றி மற்ற மாகாணத்தவர்களும் தெரிந்துகொண்டார்கள். ஸ்தானிக பிரதிநிதிகள் மூலம் உலகத்து மக்களும் அறிந்துகொண்டார்கள். கிணற்றுக்குள் உட்கார்ந்துகொண்டு இதுதான் உலகம் என்று தவளை சொல்வது எப்படி? கிணற்றைத் தாண்டிவந்து மற்றும் உலகம் எப்படி இருக்கிறது என்பது எப்படி? எவ்வளவு பெரிய பாஷையானுலும் சரி, பண்பாடானுலும் சரி, அது ஒரு கட்டுப்படுத்தப்பட்ட இடத்திற்குள் இருந்தால் அது மரக்காலால் மூடப்பட்ட விளக்கைப் போலத்தான்.

ஆகஸ்ட் 29ஆம் தேதி காலை மழை "சோ" வென்று பெய்கிறது. அட்வான்ஸ் கூடக் கொடுக்கப்பட்ட யானை ஊர்வலத்திற்கு வரவில்லை. இருந்தாலும் பரவாயில்லை என்று மாயூரம் சுப்பிரமணிய பிள்ளை நாதஸ்வரம் ஜாம் ஜாமென்று முழங்க, ஊர்லலம் புறப்பட்டது. மதராஸிகள் பள்ளிக்கூடத்திலிருந்து பூர்ண கும்பம் தாங்கிய அந்தணர்கள் வேதம் ஓத, தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் பின் தொடர, தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கூடிவர வந்த ஊர்வலம் உள்ளூர்ப்பேர்வழிகளை மலைக்கச் செய்துவிட்டது. டில்லியில் நம் ஊர்ப் பந்தாவில் ஊர்வலம் வந்ததில்லை. இங்கே சாதாரணமாக அனுபவிக்கப்படுவது செஞ்சட்டை அல்லது சோஷலிஸ்ட் தோழர்கள் ஊர்வலம். ஆகவே கற்கண்டு, பூத்தட்டுகளைப் பெண்மணிகள் தாங்க, பன்னீர் செம்பு, சந்தனக் கிண்ணங்களை ஆடவர்கள் கையிலேந்த, ஊர்வலம் பார்ப்போர் வியக்கும்படி கானுட் ஸர்க்கஸில் உள்ள ரீகல் சினிமாக் கொட்டகையை அடைந்தது.



ராஜன் பாபு அவர்கள் விழாவைத் துவக்கி வைக்கிறார்.

துவக்க வைபவத்தைக் கேவலம் சினிமாக் கொட்டகையிலா வைத்துக் கொள்வது என்று விழாவுக்குப் பலதினங்களுக்கு முன்னதாகவே விவாதம் நடந்தது. தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குக் காரியதரிசியும், பார்லிமெண்டு அங்கத்தினருமான ஸ்ரீ அவிநாசிலிங்கத்திற்குக்கூட இந்தச் சந்தேகம் உண்டு. நியூதில்லி சென்னையை ஒத்ததல்ல. இங்கே பல நூறு பேர்வழிகள் உட்கார லாயக்கான சங்கீத சபைக் கொட்டகைகளோ மண்டபமோ கிடையாது. இது தமிழர்கள் சம்பந்தப்பட்டவரை ஒரு பெரிய குறையே. தவிர, தமிழர்கள் சிதறிய பல்வேறு இடங்களில் வசிக்கும் இடங்களில் தில்லியில் துவக்கவிழாவையாவது ஒரு கேந்திர ஸ்தானத்தில் வைப்பது தேவையாயிற்று. அந்தக் கேந்திர ஸ்தானம் இந்தத் தியேட்டர்தான். மேலும், இது நம் பக்கங்களில் உள்ள தியேட்டர் மாதிரி அல்ல. சாமான்யமாகக் கிடைக்காத இந்தக் கொட்டகை அதன் சொந்தக்காரரர் ஸ்ரீ ராஜேஷ்வர் தயாலின் பெருந்தன்மை மூலம் விழா நிர்வாகிகளுக்குக் கிடைத்தது.

சரியாக எட்டரை மணிக்கு ராஜேந்திர பிரஸாத் வந்தார். வரவேற்புக் கமிட்டியின் சார்பில் உபமந்திரி ஓ. வி. அழகேசன் அவரை வரவேற்று, வேதியர்கள் மூலம் ஓர் பூர்ண கும்பம் ஜனாதிபதிக்குக் கொடுக்கப்பட்டது. பிறகு கொட்டகை உள்ள மேடைக்கு ஜனாதிபதி அழைத்துச் செல்லப்பட்டார்.

மேடையைப்பற்றி ஒரு வார்த்தை. தமிழ் நாகரிகம் பண்பாடு என்றால் மட்டும் போதுமா? அதை விளக்க மேடையை அலங்கரித்திருந்தார் ராஜி என்று பிரியமாக அழைக்கப்படும் ஸ்ரீ ராமன். மத்தியில் வீணை, அதன் இரு புறங்களிலும் அலங்கரிக்கப்பட்ட குத்து விளக்குகள், கல்யாணமான பாக்கு, வெற்றிலை, புஷ்ப, சர்க்கரைத் தட்டுகள். மேடையின் இரு கோடிகளிலும் குத்து விளக்குகள். சந்தனமும் ஊதுவத்திகளும் கமழ்ந்தன.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் கமிட்டியில் எழுந்த வாதப் பிரதி வாதங்களுக்குத் தம் சாந்த ஸ்வபாவத்தினால் ஈடு கொடுத்து மனத்தாங்கல் யாருக்கும் ஏற்படாது பார்த்துக் கொண்டவர். மிக மிகச் சுருக்கமாக வந்திருப்பவர்களை வரவேற்று டில்லித் தமிழர்கள் எவ்வளவு பெருமையடைகிறார்கள் என்று தம் பேச்சு மூலம் தெரிவித்தார்.

தமிழ் விழா என்பது எப்படி ஆரம்பமாயிற்று என்பது தமிழ் நாட்டில் உள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். தமிழ் பண்டைக் காலம் முதல் பெரும் புகழும் சீரும் பெற்றது. இடைக்காலத்தில் அதை ஆதரித்து உயர்த்தியவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும். தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம் முதலிய நூல்கள் மூலம் இவர்கள் மதத்தையும் தமிழையும் போற்றித்

தொண்டு புரிந்தார்கள். பிற்காலத்தில் வந்த பண்டித மணிகள் தமிழைக் கோட்டை கட்டி சிறைப் படுத்தினார்கள். பாமரர்களுக்கும் தமிழர்களுக்கும் வெகு தூரம் என்ற மனப் பான்மையை வளர்த்தவர்கள் இவர்கள். இந்தக் கக்ஷியைத் தகர்த்து, தமிழர்களுக்குப் புத்துயிர் தந்தவர் அமரகவி சுப்பிரமணிய பாரதியார். அவர் காட்டிய வழியைப்பின் பற்றித் தமிழை எளிய நடையில் எழுதி அதை வழிபடுபவர்கள் தற்கால எழுத்தாளர் கள்.

தமிழை வெறும் மொழி என்ற தோரணை யில் போற்றினால் போதாது. ஆங்கிலத்தைப் போல் அதையும் சாஸ்திரம், சரித்திரம், விஞ்ஞானம், தத்துவஞானம் முதலியன தழைக்கும் மொழியாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழ் வளர்ச்சிக் கழகம் சுமார் ஏழு வருஷங்களுக்கு முன் நிறுவப்பட்டது. கலைகளைப் பத்துப்பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு வருஷமும் ஐந்து கிளைகளில் எழுதப்படும் புஸ்தகங்களில் தலை சிறந்த ஐந்து நூல்களுக்கு முறையே ரூ. 500 பரிசு அளிக்கப்படுகிறது. இவைகளை விஸ்தாரமாக எடுத்துரைத்தார் தமிழ் வளர்ச்சிக் கழகக் காரியதரிசி, ஸ்ரீ அவிநாசிலிங்கம். தில்லியில் நடந்த விழா ஏழாவது விழா. தமிழின் முன்னேற்றம் அதில் ஆர்வம் உற்சாகம் இவைகளை ஏற்படுத்தவே முன் நடந்த ஆறு விழாக்கள் நடந்தன.

இதற்குப்பின் ஜனாதிபதி மிக அற்புதமான பிரசங்கம் நிகழ்த்தினார். வெறும் பேச்சிற் காக மட்டும் தமிழைப்பற்றி உயர்வாகப் பேசினாரா? இல்லை "நான் ஒரு மன்னிப்புக் கோருகிறேன். எனக்குத் தமிழ் தெரியாது. கற்றுக் கொள்ளவும் இல்லை. இந்த மன்னிப்பை வட இந்தியர்கள் சார்பில் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றார் டாக்டர் பிரஸாத்.

ஹிந்தியை வளர்ப்பதால் மற்றப் பாஷைகள் குன்றுமா? இல்லை. அது யாரு டைய நோக்கமும் இல்லை. மாகாண பாஷை கள் வளரவேண்டும். அத்துடன் ஹிந்தி மொழியும் வளரவேண்டும். "தென்னிந்தி யர்கள் அந்நாளில் இந்தியா பூராவும் பேசப் பட்ட சம்ஸ்கிருதத்தை வளர்த்தார்கள். அதேபோல் நீங்கள் ஹிந்தியையும் வளர்க்க வேண்டும். உங்கள் பாஷையில் உள்ள உயர்ந்த முத்துக்களை ஹிந்தியில் கோக்க வேண்டும். உங்கள் கலாசாரக்கோள்குறி களையும் ஹிந்தியில் சேர்க்கவேண்டும்" என் றார் பிரஸாத். இதைவிடப் பெருமை தமிழுக்கு என்னவேண்டும்?

டாக்டர் ராதாகிருஷ்ணன் பேச்சைப்பற் றிக் கேட்கவேண்டியதில்லை. அந்நாளில் சங் கரர், ராமானுஜர் போன்றவர்கள் எப்படி மதத்தை வளர்க்கும் நோக்கத்தில் அன்புப் பணி புரிந்தனர், பிற்பாடு எப்படிப் புத்த மதம் தழைத்த காலத்தில் தென்னிந்திய ஆசார்யர்கள் அம்மத வேதாந்தத்தைப் பெருக்கினார்கள் என்று விவரித்து, தற்காலத் தில், குறிப்பாகத் தெற்கே, எப்படி நம் பண் பாட்டுக்கு விரோதமான துவேஷ இயக்கங் களும் கிளர்ச்சிகளும் நடக்கின்றன என்ப தைக் குறித்து வருந்தினார்.

இவருக்குப்பின் இலங்கையின் சார்பில் இந்தியாவில் ஹைகமிஷனராக இருக்கும் ஸ்ரீ குமாரசாமியும், ஸ்ரீ ரங்கநாதனும் பேசிய பின் "வாழிய செந்தமிழுடன்" துவக்கவிழா முடிவடைந்தது.

இந்த விழாவில் ஒரு விசேஷம் என்ன வென்றால் ஒரு ஹிந்தி—ஆங்கிலக் கூட்டம் ஆரம்ப தினத்தன்று மாலை நடந்தது. இதை விழா நிர்வாகிகள் ஏன் ஏற்படுத்தினார்கள் என்றால் டில்லியில் உள்ள தமிழ் தெரியாதவர்கள் கூட இதில் கலந்து கொள்ளவேண்டும் என்று, உண்மை யில் இந்த நோக்கம் ஓரளவு நிறைவேறிற்று என்றே சொல்ல வேண்டும். இந்தக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்த டில்லி முக்கிய மந்திரி ஸ்ரீ பிரகம் பிரகாஷ் பல மாகாணங்களிலுள்ள கலாசாரங்கள் ஒரே உற்பத்தி ஸ்தானத்தில் ஏற்பட்டவை. இவைகளைப் பிரித்துக்கட்டுவது மகா தவறு, இந்திய கலாசாரத்துக்கே துரோகம் செய்வதாகும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீ டி. பி. மீனாக்ஷிசுந்தரத்திற்கு ஒரு விஷயத்தைக் குறித்து மகாகோபம். சென்னை யில் ஹிந்தியில் பேசும் கூட்டம் வைத்தால் நம் ஜனங்கள் ஆயிரக்கணக்கில் கூடு கிறார்களே, இங்கு அது மாதிரி சில நூறு வடஇந்தியர்களாவது இங்கு வந்திருக் கிறார்களா என்று கொதித்தார். ஓரளவில் இது உண்மை என்ற போதிலும் இந்தச்



ஸ்ரீ பிரகம் பிரகாஷ் டில்லிப் பிரதமர் அவர்களும் தென் இந்தியக் கலையை ரசிக்கிறார்கள்

சந்தர்ப்பத்தில் ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிடவேண்டும். வட இந்தியக்கலை பாஷை, சங்கீதம் முதலிய சம்பந்தமாகக் கூட்டங்கள் நடந்தால்கூட வடஇந்தியர்கள் அதிகம் வருவதில்லை. இதற்குக் காரணம் இடைக்காலத்தில் உண்டான முஸ்லிம் படையெடுப்பு. அதைத் தொடர்ந்து கலை சம்பந்தமாக ஆர்வமும் உற்சாகமும் குன்றி ஒழிந்தன. இந்த நிலைமை மாற வேண்டும் என்றுதான் டாக்டர் கேஸ்கர் பாடுபடுகிறார்.

துவக்கவிழாவைத் தொடர்ந்து இரண்டு தினங்களுக்குக் காலையிலும் மாலையிலும் ஆதி, இடை, நவீன கால இலக்கியங்களைக் குறித்துச் சொற்பொழிவுகள் நடந்தன. ஸ்ரீ. வரதராசன், புரொபஸர் முத்துசிவம், ஸ்ரீ. மீனாக்ஷிசுந்தரம், ஸ்ரீ. மா.பொ. சிவஞானகிராமணி, ஸ்ரீ பெரியசாமி தூரன் முதலியவர்கள் அழகாக, தெளிவாக, திருக்குறள், மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி முதல் தற்கால நூல்கள் வரை எடுத்துரைத்தார்கள். ஏன் எனக்குக்கூட கம்பராமயணம் எளிதாகப் புரிந்ததுபோல் தோன்றிற்று என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்!

மூன்று நாட்களும் மாலையில் விசேஷப் பிரதிநிதிகளுக்கும் மற்ற பொதுமக்களுக்கும் பொழுதுபோக்குக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். முதல்நாள் இரு சிறுமிகள், (லலிதா, பிரபா) பரதநாட்டியம் ஆட ஸ்ரீ கொத்தமங்கலம் சுப்பு பாரதி கதையை அவருக்கே பிரத்தியேகமாக ஏற்பட்ட பாணியில் சொன்னார். அவர் அத்துடன் நிற்கவில்லை. கரோல்பாக்கிலுள்ள தமிழர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மூன்றாம் நாள் காந்திமகான் சரித்திரத்தையும் தம் சொந்த கவனமாகிய நொண்டிச்சிந்துவுடன் தக்ஷிண பாரத சமாஜத்தில் சொன்னார். இரண்டாம் நாள் மாயூரம் சுப்பிரமணிய பிள்ளை நாதஸ்வரத்துடன் ஸ்ரீமதி கிரிஜா பரத நாட்டியம் நடைபெற்றது.

எல்லாவற்றிலும் அதிகமாக ரசிக்கப்பட்டது ஜெமினியின் "ஔவையார்". ஸ்ரீ எஸ்.எஸ். வாஸனின் தாராள குணத்தைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். தமக்கே பிரத்தியேகமாக உள்ள தாராள சிந்தையுடன் "ஔவையாரை" காலணா காசு வாங்காமல் பொது ஜனங்களுக்கு இரு இலவசக் காட்சிகள் காட்டவேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தார் இவர். திறந்த வெளியில் காட்ட முதலில் நடந்த ஏற்பாடு மழை காரணமாக நேஷனல் பிஸிகல் லாபரடாரியில் நடந்தது. ஸ்ரீ சுந்தராம்பாள் தம்முடைய கனிவு நிறைந்த பாட்டுக்களுடன் படத்தை ஒரு உயிரோவியமாக்கி யிருக்கிறார் என்பது உள்நாட்டு மந்திரி டாக்டர் கே. என். கட்ஜூவின் கருத்து.

இந்த வருஷம் பரிசுபெற்றவர்களில் ஒரு விசேஷ எழுத்தாளர் ராஜாஜி. அவருடைய

"ராமகிருஷ்ண உபநிஷதத்திற்கு" பரிசு அளிக்கப்பட்டது. மற்றப் பரிசு பெற்றவர்கள் ஸ்ரீ கோதண்டராமன் ("மண் வளம்") ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் (சிறு கதைகள்) டாக்டர் கே. வேங்கடசாமி (மருந்து, சுகாதாரம்) தமிழ்மணி வேலாயுதம் பிள்ளை (ஆராய்ச்சி). முன் கூறியது போல் ஏழாவது தமிழ் விழாவை தில்லியில் நடத்த ஏற்பாடு செய்த நிர்வாகிகளுக்குத் தமிழன்பர்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இங்கு நடத்துவதில் உள்ள பல சிரமங்களில் சில: தகுந்த இடம் இல்லாமை, பிரதிநிதிகளுக்கு ஜாகைவசதி சம்பந்தமான கஷ்டம், நிதி, போக்குவரத்து, டில்லி நம் ஊர்போல அல்ல. நம் ஊரில் பிரதிநிதிகள் எங்காவது ஒரு திண்ணையில்கூட, தூங்கலாம். இங்கு அது முடியாது. இல்வளவு இன்னல்களையும் சகித்து ஒவ்வொன்றிற்கும் ஏற்பாடு செய்து இராப்பகலாகத் தூக்கமில்லாமல் விழா இனிது நடைபெறச் செய்த பெருமை அதன் காரியதரிசிகள் ஸ்ரீ. ஓ. என். நாகரத்தினம், ஸ்ரீ கெ. நாராயணசாமியைச் சார்ந்தது. திட்டம் வகுப்பது, கொள்கை நிர்ணயம் முதலியவைகளை ஸ்ரீ அழகேசன் கவனிக்க ஸ்ரீ ராமையா எல்லாவித ஏற்பாட்டிலும் காரியதரிசிகளுக்குப் பெருந்துணை புரிந்தார். டாக்டர் கிருஷ்ணன் விழாவுக்கே ஹிருதயம் போன்று துணைபுரிந்தார்.

தமிழ்விழா இங்கு நடந்ததால் சில வட இந்தியர்களாவது நம்மைப்பற்றித் தெரிந்து கொண்டார்கள். இதை யொட்டி ஸ்ரீ நரஸிம்மன், பாலு சகோதரர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட அற்புதக் கண்காட்சி மூலம் பல நூறு வட இந்தியர்கள் தமிழ் நாட்டுச் சிற்பங்கள், ஓவியங்கள், பண்புகளைப் பற்றித் தெரிந்துகொண்டார்கள். ஸ்ரீ கிராமணி போன்றவர்களுக்கு ஒவ்வொரு வட இந்தியனும் தமிழ் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆதங்கம் உண்டு. இது முழுதும் நடக்காது என்றாலும் இங்குள்ள தமிழர்கள் மூலம் நம் நாகரிகம், கலை முதலிய பிரசாரம் செய்யப்படுகின்றன. ஏற்கனவே, விழா நிர்வாகிகளுக்குச் செலவு வரவை விட மிக அதிகமாகவே, பெரியதுண்டு விழுந்திருக்கிறது. இந்த விழா மத்திய வகுப்பாரின் வெற்றி என்றால் மிகையாகாது. பல மத்திய வகுப்பு ஸ்தாபனங்கள் (மதராஸி பள்ளிக்கூடம், தக்ஷிணபாரத் சமாஜம் உள்பட) அரும் தொண்டு புரிந்திருக்கின்றனர்.

வருங்காலத்தில் தமிழ்க்கொடி இங்கு பறக்கவேண்டும் என்றால் நம் மாகாணத்தில் உள்ள தமிழ் அபிமானிகள்தான் அதிகப் பங்கு எடுக்கவேண்டும். நாடகம், சங்கீதம், இலக்கியம் முதலிய துறையில் உள்ளவர்கள் இலவசமாக இங்குக் காட்சிகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்து அந்தந்தத் தருணத்தை நம் கலாச்சார பிரசாரத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ்ப் பண்பை உலகத்திற்குத் தெரியப்படுத்த ஏற்ற இடம் டில்லியே. வாழ்க த்மிழ், வாழ்க தமிழ் வாழ்க தமிழர்.

இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1932)

Sir. A. ராமஸ்வாமி முதலியார் K. C. S. I. D. C. L. (OXON) (சேர்மன்)

சென்னை நகரத்தில் உள்ள காரியாலயங்கள்

நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் ரோடு; பெரியமேட்; திருவல்லிக்கேணி; மயிலாப்பூர்; & தியாகராயநகர்

கிளைகள்

அம்பாஸமுத்ரம்	மதுரை	திருநெல்வேலி ஜங்ஷன்
ஆம்பூர் (N. A. Dt)	மாயவரம்	திருநெல்வேலி டவுன்
சிதம்பரம்	பாலக்காடு	திருச்சிராப்பள்ளி
கூடலூர்	புதுக்கோட்டை	வேலூர்
ஈரோடு	ராமநாதபுரம்	விஜயபுரம்
காஞ்சிபுரம்	சீர்காழி	விழுப்புரம்
காரைக்குடி	தஞ்சாவூர்	&
கும்பகோணம்	தென்காசி	விருதுநகர்

சேமிப்புகளுக்குரிய வட்டி விகிதம்

ஸேவிங்ஸ் பாங்க்: ஒரு வருஷத்திற்கு $2\frac{1}{2}\%$ வீதம் வட்டி கொடுக்கப்படும்.

மாதாந்தர சேமிப்பு & காஷ் சர்டிபிகேட்டுகள் } ஒரு வருஷத்திற்கு 4% to $4\frac{1}{4}\%$ வீதம் காலத்திற்கேற்றபடி பயனளிக்கும்.

தவணை டிபாசிட்டுகள்:

City { ஒரு வருஷ தவணைக்கு 3% p. a. வீதமும், இரண்டு வருஷத் தவணைக்கு $3\frac{1}{4}\%$ p. a. வீதமும்.

Mofussil { ஒரு வருஷத் தவணைக்கு $3\frac{1}{4}\%$ வீதமும் இரண்டு வருஷத் தவணைக்கு $3\frac{1}{2}$./· வீதமும் வட்டி கொடுக்கப்படும்.

S. கிருஷ்ணஸ்வாமி
செக்ரடரி

குழந்தைகளுக்கு

இன்றியமையாத

டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்

K. T. டோங்கரே அண்கோ., பம்பாய்-4.

வாழ்ந்தது போதும்

கிருஷ்ணன் பாலா

ஏகாந்தமான நெடிய அந்த ஒற்றையடிப் பாதையினூடே ஒரு யாத்திரீகர்களின் கோஷ்டி சென்றுகொண்டிருக்கிறது. நிர்மானுஷ்யமான அந்த மலைப்பிரதேசத்தில் இவர்களைத்தவிர வேறு ஒருவரும் இல்லை. குறுகிய அந்த வழி நீண்டு கொண்டே போவதுபோல் தோன்றுகிறது. மாலை சாய்ந்துவிட்டது. யாத்திரீகர்களின் காலடி ஓசை, அடிக்கடி உற்சாகம் இடிந்து ஒலிக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மீது உராய்ந்து செல்லும் வாடைக் காற்றின் ஓய்வென்ற ஓலம், தனியாக, நாதமற்ற வெண்கலத்தைத் தட்டினாற்போல் ஒலிக்கிறது. பரந்து கிடந்த அந்த மலைச்சரிவின் பிரதேசம் இயற்கையின் இறுமாப்புக்கு ஓர் எடுத்துக்காட்டுப்போல்இருக்கிறது. உயர்ந்து நின்ற மலைகளுக்கிடையே ஒரு சில மனிதர் தனியே செல்லுவது, அவர்களுக்குள்ளேயே ஒரு அமானுஷ்யமான உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்திருக்கவேண்டும். அமைதி செறிந்த அந்த வழியில், மாலையின் மங்கிய ஒளியில், களைப்புற்ற அந்த யாத்திரீகர்கள் சென்று கொண்டே இருக்கின்றனர். ஸதாராவின் புகழ்பெற்ற சிறு கோயிலை நோக்கி அவர்கள் வழி நடக்கின்றனர்.

அந்தக் கோஷ்டியில் பெரும்பாலோர் முதியவர்களாகத்தான் இருக்கின்றனர். இளைஞர்கள் ஒரு சிலர்தான். கடவுளைக்கண்ணால் பார்த்து, அந்தப் பார்வையின் மூலம் தமது பாவத்தை யெல்லாம் "அவன்" மீது கட்டிவிடும் நம்பிக்கையின்மேல்தான் அந்த முதியவர்கள் போகின்றனர். முதிய பெண்மணிகளுக்கும் ஏறக்குறைய இதே நோக்கந்தான். மேலும், கணவன் போகும் வழியைப் பின்பற்றுவதுதானே பெண்களின் கடமை? பாரதப் பெண்களின் பண்பாட்டைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் தமது கால் வலியைக்கூடப் பொருட்படுத்த வில்லை. இளைஞர்கள் பெரும்பாலும் வழித்துணைக்காகத்தான் போகிறார்

கள். காலையில் புறப்படும்போது எல்லாரும் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர். நேரம் ஆக ஆகக் களைப்பு அவர்கள் வாய்க்குப் பூட்டுப்போட்டு விட்டது. "சக்தி பெற்ற கடவுள்கள் ஏன் இப்படி பஸ்ஸூம் ரயிலும் போகாத இடங்களில் ஒளிந்துகொண்டிருக்கின்றனர்?" என்று இளைஞர்கள் சொல்லத் தலைப்பட்டனர். ஆயிற்று, இன்னும் ஒரு மணி நேரத்தில் ஸதாராவுக்குப் போய் விடலாம். பயங்கரமான நிசப்தத்துடன் அந்த யாத்திரீகர்களின் கோஷ்டி சென்றுகொண்டே இருக்கிறது...

காலைமுதல் ஒருவருடனும் பேசாமல் உணவு எதுவும் உட்கொள்ளாமல், தனியே ஒருவித முக 'பாவமும்' இன்றி, ஒருவன் அவர்களுடன் நடந்து கொண்டிருக்கிறான். அவன் யாரையும் கவனிக்கக்கூட இல்லை. காலையில் அந்தக் கோஷ்டியினரிடம் காணப்பட்ட உற்சாகம், இடையில் வந்த சோர்வு, இப்போது யாத்திரை முடியப்போகும் தருணத்தில் வரும் சந்தோஷம்... இவை ஒன்றுமே அவன் முகத்தில் காணப்படவில்லை. அவன் அந்த மகாராஷ்டிர தேசத்தைச் சேர்ந்தவன் அல்ல என்பதை அவன் முகம் எளிதில் சொல்லிவிடுகிறது. அவன் தோற்றத்தைக் கொண்டு அவன் வயதை நாற்பதிலிருந்து அறுபது வரை எதுவேண்டுமானாலும் மதிப்பிடலாம். ஆனால், வயதானவர்களிடம் இருக்கக் கூடிய கனிவு அவன் கண்களில் இல்லை. எத்தனையோ கொடுமைகளையும், ஏமாற்றத்தையும் அனுபவித்து அதனால் உணர்ச்சியற்றுப் போய்விட்டவன்போல் காணப்படுகிறான். அவன் முகத்திலே, கொடுமையின் நிழல் கூட இலேசாகப் படிந்திருக்கிறது. அவன் அடிக்கடி தன் சட்டையின் உள் பையைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறான். ஒவ்வொரு தரம் தொடும் போதும் வெவ்வேறு உணர்ச்சிகள், அவன் முகத்தில், ஒரு கணம்—ஒரே ஒரு கணம்—அலைபாய்ந்து மறைகின்றன. அப்புறம் நிச்சலனம் தான். ஏகாக்கிர சித்தனாய்க் கனவில் நடப்பவனைப் போல் நடந்து கொண்டிருக்கும் அவனை ஒருவருமே கவனிக்கவில்லை...யாத்ரீகர்களின் கோஷ்டி சென்றுகொண்டிருக்கிறது.

அந்த மனிதன் வாழ்வின் பல கோணங்களிலும் அடிபட்டவன். அதிர்ஷ்ட தேவதை அவன் இருக்கும் திசையில் கூடத் தன் பார்வையைத் திருப்பியதில்லை. இருந்தாலும் அவன் உள்ளத்திலும், உடலிலும் உரம் பெற்றவன். சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்பு காவிரி நதி தீரத்தில் பிறந்தான் அவன். சுற்றி நோக்கும் இடமெல்லாம் வளப்பத்துடன் இருந்தாலும், அவனுக்கு உணவு கிடைப்பது சிரமமாகத்தான் இருந்தது. ஆனால் இதனால் அவன் வருந்தவில்லை. அப்போதெல்லாம் ஆங்கிலேய அரசாட்சியின் ஆரம்ப காலம். போலீஸ் எல்லாம் அவ்வளவு ஜரூராக வேலை செய்யத் துவங்கவில்லை. சட்டத்தைப்பற்றி இவனுக்கு ஒன்றும் தெரியாவிட்டாலும், பசிக்காகக் கொஞ்சம் கொள்ளையடிப்பது அவ்வளவு தவறல்ல என்று எண்ணிக்கொண்டிருந்தான். கொள்ளைக்காரர்களைப்பற்றின ஆச்சரியமும், ஒருவிதமான "பக்தி"யும் கலந்த ரஸமான கதைகள் அவனுக்கு ஊக்க மூட்டின. ஆனாலும் கொள்ளைதான் அவன் தொழில் என்பதில்லை. வயலில் கூலிக்கு உழுவான்: மூட்டை சுமப்பான். ஆனால் கேவலமாகத் திருடமாட்டான். சட்டத்தை மீறுவதிலும் அவன் ஒரு வழி வகுத்துக் கொண்டிருந்தான். இவனது போக்கைக் கண்டித்துத் திருத்த அவனுக்குப் பெற்றோர் இல்லை. தந்தை யாரென்று அவனைப் பெற்றவளுக்கே தெரியாது. "இது ஓர் தொல்லை எதற்கு" என்று தாயும் இவனைச் சிறுவயதில் எங்கோ விட்டுவிட்டுப் போய்விட்டாள். அது முதல் இயற்கைதான் அவன் பெற்றோர்: ஊரெல்லாம் சுற்றம்தான்: இப்படியாக வளர்ந்தவன் அவன்: இன்றைக்கு, யாதொரு துணைவரும் இல்லாமல், ஏகாங்கியாக இந்த மகாராஷ்டிரத்தின் மலைப் பிரதேசத்தின் வழியே செல்கிறான்...

அந்தக் காலத்தில், அவன் இளங்காளையாகத் திரிந்து கொண்டிருந்த நாட்களில், தமிழ் நாட்டில் கட்டுக் கதைகளுக்குப் பஞ்சமே கிடையாது. ஒவ்வொரு இடத்திலும் உள்ள கோயிலைப்பற்றியும், 'மூர்த்தியைப்' பற்றியும், பக்தியும் பயமும் ததும்ப, அதிசயமான கதைகள் சொல்வார்கள். கொள்ளையடித்துத் தாம் இருக்கும் பிரதேசத்தையே நடுங்க வைக்கும் ஆட்களைப்பற்றி வீடுவீடாக, விதம் விதமாகக் கதை சொல்வார்கள். இவனுக்கு இதெல்லாம் வேடிக்கையாக இருக்கும். ஆனால், மெதுவாக, இவனை அறியாமலே, பழங்கால வீர இளைஞர்களைப் போல் ஆகவேண்டும் என்ற எண்ணம் அவன் நெஞ்சில் பதிந்தது. எந்த வகையிலாவது தன் வீரம் வெளிப்பட

வேண்டுமென்று ஆசைப்பட்டான். எத்தனை பேர் அப்படிப் புகழ் பெற்றிருக்கிறார்கள்! ஆனால், அவர்களது வீரத்தையெல்லாம் அநேகமாகக் காதலிகள் தான் தூண்டி விட்டிருக்கிறார்கள். அத்தகைய காதலி ஒருத்தி மட்டும் இருந்தால்!...

அவன் ஏக்கம் நீடித்திருக்க வில்லை. அஞ்சுகம் சீக்கிரத்தில் அவனது கைப் பாவையானாள். எத்தனையோ நாட்கள், காவிரிக்கரை யோரத்தில், தென்றல் தாலாட்ட, அவர்கள் தம்மை மறந்து இருந்திருக்கின்றனர். அஞ்சுகம் தான்



எத்தனை கவர்ச்சிகரமானவள்! அவள் கண்களின் மின்னொளியும், மயக்கும் குறுநகையும், எத்தனையோ சாம்ராஜ்யங்களை அழிக்கப் போதுமானவை. நமது இளைஞன் கவிஞன் அல்ல. ஆனாலும் அஞ்சுகத்தைப் போன்ற அழகி கற்பனையைத் தூண்டிவிட மாட்டாளா? "உன் கண்கள் ஆழமான பொய்கையைப் போல் இருக்கின்றன. அவற்றிற்குள்ளே நான் உற்றுப் பார்க்கும் போது, அவற்றின் ஆழத்துக்குள், அதீத மான ஆழத்துக்குள் அமிழ்வது போல் தோன்றுகிறது" என்பான். "எந்தக் கவிஞனால் உன்னைப் பாட முடியும்? தேவதைகளால்கூட உனக்கு ஏற்ற பரிசைக் கொண்டு வந்து தரமுடியாது" என்று சொல்வான். வைர உள்ளம் படைத்த அவன், பிரமனின் இந்த அழகுச் சிருஷ்டிக்கு முன், மாவாய்க் குழைந்து போனான். அதெல்லாம், வெகு காலத்துக்கு முன்னால்....

எத்தனையோ தினங்கள் அவன் தனது கொள்ளைப் பிரதாபங்களை அவளிடம் சொல்வதுண்டு. தனியாக இருக்கும் போதே, அவன் கொள்ளையடிப்பதை ஒரு இலட்சியமாக எண்ணி வந்தான். அவனை ஊக்குவிக்க இரு மின்வெட்டுக் கண்கள் இருக்கும் போது கேட்க வேண்டுமா? எங்கெங்கோ இருந்த நகைகள் அஞ்சுகத்தைத் தழுவின. யாரிடமோ இருந்த சேலைகள் அவள் உடலை அணைத்துக்கொண்டன. நாட்கள் செல்லச் செல்ல அஞ்சுகத்தின் மனதில் ஓர் ஆசை சுடர் விடலாயிற்று. அவள் ஓர் அனாதை: ஆனால் அழகி. அவள் காதலன் பலசாலி. அவளுக்காக எது வேண்டுமானாலும் செய்வான். இதைப் பயன் படுத்திக்கொண்டு ஏன் செல்வம்திரட்டக் கூடாது? எத்தனை கதைகளில் காதலிகள், தமதுகாதலர் மூலம் தாம் விரும்பியதைப் பெற்றிருக்கின்றனர்?........ நாட்கள் செல்லச் செல்ல அவள் கண்களில் காதல் தேய்ந்து, ஆழ்ந்த யோசனை தங்கலாயிற்று.

அன்று ஒரு நாள் அவள் காதலனுக்கு உற்சாகம் தாங்கவில்லை. வையகம் முழுதும் நிலவில் குளித்துக்கொண்டிருந்த வேளையில் அவன் மனம் ஆசைக்கடலில் மூழ்கியது. அன்றுபேச்சு வாக்கில் அவன் சொன்னான், மகாராஷ்டிர தேசத்திலே, ஸதாரா என்ற

ஊரில் ஒரு கோயில் இருக்கிறதாம். அங்கு உள்ள விக்கிரகத்தின் நெற்றியில் விலை மதிக்க முடியாத ஒரு மரகதக்கல் பதித்திருக்கிறதாம். அந்தக் கோயில் பாதுகாப்பு எதுவும் அதிகமாக இல்லாதிருந்தும், யாரும் அந்தக் "கல்"லைப் பெயர்த்தெடுக்க வில்லையாம். அதைத் திருடினால், தெய்வீக சக்தி என்ன செய்யுமோ என்று அஞ்சினார்களாம். அந்தச் சின்னஞ்சிறு விக்கிரகம், தன் "பச்சைக் கண்"ணால் எல்லாரையும் கடாக்ஷிக்கின்றதாம்...இதைச் சொல்லிவிட்டுப் "பார் அஞ்சுகம்! செல்வம் எங்கெல்லாமோ தங்கி இருக்கிறது" என்றான். அஞ்சுகம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையின் காந்தம் அவனைப் பரவசமாக்கியது. காவிரியின் புனல் ஒலியோடு அவன் குரல் இழைந்து கேட்டது:-

அஞ்சுகமே! உன்னை
அகத்தில் நினைத்தவுடன்
காத வழியும் கால் நாழி—அஞ்சு
காத வழியும் கால் நாழி......

உற்சாகம் சற்று அடங்கியதும், அவள் அவனை அணைத்தபடி, "உண்மையாகவா?" என்றாள். தலையசைத்தான் அவன். "எத்தனையோ தீரன் என்று சொல்லிக் கொள்கிறாயே, அந்த மரகதக்கல்லை எனக்குக் கொண்டுவந்து தர முடியுமா?" என்று கேட்டாள் அவள். அவன் சற்று யோசனை செய்தான். போகும்வழி அபாயம் நிறைந்ததாகத்தான் இருக்கும். இருந்தாலும் என்ன? அஞ்சுகத்தின் தந்தக் கழுத்தில் அந்தப் பச்சைக்கல் கோத்த மாலை எத்தனை அழகாக இருக்கும்! அவன் சரி என்று விட்டான். அன்று அவள் தந்த இன்பம் அவனை இன்னும் ஊக்கியது. அவன் புறப்பட்டு விட்டான். இதே பாதையின் வழியாக, இதே பள்ளத்தாக்கினூடே, அந்தச் சிறிய கோயிலை நோக்கி அன்று அவன் போய்க்கொண்டிருந்தான்......... அதெல்லாம் வெகுகாலத்திற்கு முன்னால்!...

இப்போது அவன் திரும்பிப் பார்க்கிறான். அதே பாதை, அதே மலைகள், அதே கற்பாறைகள்! எத்தனையோ வருஷங்களுக்குப் பின் அவன் இங்கு வருகிறான். இருந்தாலும், ஒவ்வொரு மலையும், ஒவ்வொரு கல்லும், அவனுக்கு நன்கு நினைவில் இருக்கின்றன. ஆனால் அவன் வந்த விதமும், அப்போது நடந்த சம்பவங்களும்மட்டும் அவனுக்கு மூடுபனி நினைவுதான்...சதாராவின் கடவுள், முப்பது வருஷங்களுக்கு முன்னர் தன் "பச்சைக் கண்"ணை இழந்து விட்டார். அவன் அஞ்சுகத்திடம் சொன்ன சொல்லை நிறைவேற்றி விட்டான். அவனது உரம்பெற்ற உள்ளம், கதைகளைக்கண்டு அஞ்சவில்லை. அதற்குப் பதிலாக, அதை எடுப்பவர்கள் அனுபவிக்கக் கூடிய தெய்வீக தண்டனைகளைப்பற்றிப் பிறர் சொல்லக் கேட்கும்போதெல்லாம், அவன் ஊக்கம் இன்னும் அதிகரித்தது. ஆனால் அவன் அந்தக் காரியத்தை எப்படிச் சாதித்தான் என்று யாரிடமும் தவறிப் போய்க்கூடச் சொல்லிவிடவில்லை. அதுமட்டும் அவன் மனதில் ஆழத்தில் புதைந்துள்ள ரகசியம்... இப்போது அவன் அடிக்கடி தன் உள்சட்டையின் பையைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறான். அந்த வைரக் கல் அங்குப் பத்திரமாக இருக்கிறது. அவனது இருதயத்துடன் அதுவும் சேர்ந்து துடிக்கிறது. அதைத் திருடிய அன்றைக்கு அவன் சட்டைப்பையில் அடைக்கலம் புகுந்த அந்தக்கல், இன்றுவரை வெளி உலகைக் காணவே இல்லை.

அன்று அவன் 'கல்லை'த் திருடிக்கொண்டு திரும்பி வந்தான். தன் வெற்றியை அஞ்சுகத்திடம் முரசு கொட்ட ஓடோடியும் வந்தான். தன்னைக் காணாமல் ஏங்கி உட்கார்ந்திருக்கும் காதலியைக் காண விழைந்தான். பழங்கதைகளில் சொல்லுவதுபோல், "நமது ஆசைக்காக அவரைக் கண்காணாத இடத்துக்கு அனுப்பிவிட்டோமே,... அவர் திரும்பி வந்தால் போதும்" என்று அவள் தன்னையே நொந்துகொண்டு உட்கார்ந்திருக்கும்போது, பின்புறமாகச் சென்று, அவள் கண்களை பொத்தி... அவன் கற்பனைகள் விரிந்தன. ஆனால், அவனுக்கு ஓர் இடி காத்திருந்தது. இவன் வருவதற்குள் அஞ்சுகம், வேறொருவனை நாடிச் சென்று விட்டாள்! காவிரியின் மடியிலே அன்று இனித்துப் பேசினவள் இனி அவனுக்குக் கிட்டாதவள்!... அவன் மனத்தை ஒரு சூனியம் சூழ்ந்துகொண்டது. அவள் இருக்கும் இடமும் தெரியவில்லை. அவளுக்கு ஒரு பெண் பிறந்ததாக மட்டும் காற்று வாக்கில் தெரிந்துகொண்டான்... இதெல்லாம் வெகுகாலத்துக்கு முன்னால்!...

காலம் யாருக்காகவும், எதற்காகவும் நிற்பதில்லை. எத்தனையோ அஞ்சுகங்களையும், மனமுடைந்த காதலர்களையும் காலம் தன் போக்கில் கண்டிருக்கிறது. முதல் உலகப்போர் ஆரம்பித்தது. மனம் நொந்த காதலன் சண்டையிட்டாவது தன் துயரை

மறக்க எண்ணினுன். மேலும் அவனுக்கு வேண்டியவர்களோ, அவனை நம்பி வேலை கொடுப்பவர்களோ இல்லை. போர்க்களத்தில் அவன் பலமுறைகள் காயம் பட்டு வீழ்ந்தான். சிலதடவைகளில் மரணத்தின் வாயிலை எட்டிப்பார்த்ததுகூட உண்டு. அவனுக்குச் சரியான கவனிப்பும் இல்லை. இருந்தாலும் அவன் இறக்க வில்லை. கொடிய ஆப்பிரிக்கப்பாலைவனத்தில், தண்ணீருக்காகத் தவித்துக்கொண்டு படுகாயத்துடன் வீழ்ந்திருந்தும், அவன் சாகவில்லை. போர் முடிந்ததும், அவன் பிறந்த நாடு திரும்பவேண்டியதாயிற்று. அவன் இதுவரை வாழ்ந்ததெல்லாம், என்றோ அவனிடம் நேசமாக இருந்த ஒரு பெண்ணின் நினைவினுல்தான். இளமையின் ஒரு ஆவேசத்துக்காக அவன் தன் வாழ்க்கையையே பணயம் வைத்துவிட்டான். அவனுக்கு வாழ்க்கையில் எந்தவிதமான பற்றுதலும் இல்லாவிட்டாலும்கூடத் தன்னிடம் பத்திரமாக வைத்திருந்த அந்த வைரக்கல்லைத் தொடும்போது, அமுதபானம் செய்தவன் போல் அவன் புத்துணர்ச்சி பெற்றுன். முதன் முதலில், அதாவது அவன் மனம் உடைந்து போன ஆரம்ப நாட்களில், அவன் அந்தக் 'கல்லைத்' தொடும் போது அதில் அஞ்சுகத்தின் இனிமையை உணர்ந்ததுண்டு; அதன் பின் அவள் நினைவால் அழுததும் உண்டு. ஆனுல், நாட்கள் செல்லச் செல்ல, அவன் அந்த வைரக் கல்லைப்பற்றித் தான் கேள்விபட்டிருந்த கதைகளைப்பற்றி அதிகம் எண்ணத் தொடங்கினுன். எத்தனையோ தடவைகள் அவன் கேட்பாரற்றுக் காயம் பட்டுக் கிடந்த போது அற்புதமாகப் பிழைத்தெழுந்தைப் பற்றி எண்ணத் தொடங்கினுன். அவன் எங்கே இருந்த போதிலும், அந்தப் பச்சை வைரத்தைத் தன் பையிலிருந்து எடுத்ததே இல்லை. எனவே அதன் சக்தியால்தான், தான் பிழைத்திருக்கிருன் என்ற எண்ணம் ஏனே அவன் மனதில் ஊன்றத் தொடங்கியது. ''அதை எடுத்ததால்தான், வாழ்வில் இப்படி ஏக்கம் பிடித்து அலைகிருேம்'' என்ற எண்ணம் அவனைப் பிடித்துக் கொண்டது. இளமையில் இருந்த உணர்ச்சியும், அலட்சிய மனப்பாங்கும், அவனிடம் திரும்பவே இல்லை. ''அந்த வைரக்கல் தன்னிடம் இருப்பதால் தான், தான் உயிர் வாழ்ந்திருக்கிருன்... அது என்று தன்னைவிட்டு நீங்குகிறதோ, அன்று, அன்றே, அன்றுதான் தன் மரணம் நிச்சயம்'' என்று பலமாக நம்பத் தொடங்கினுன். தன் எண்ணங்களின் அடிப்படையைப்பற்றியோ, அவற்றின் உண்மையைப் பற்றியோ அவன் நினைக்கவில்லை... தர்க்கத்துக்கெல்லாம் அப்பாற்பட்ட நிலையில் அவன் மனம் இருந்தது...

ஒரு நாள் அவன், தான் பிறந்து வளர்ந்த பிரதேசத்தில் சுற்றிக்கொண்டிருந்தான். ஒரு ஊரில் நாடகக்கம்பெனி ஒன்று நாடகங்கள் நடத்திக்கொண்டிருந்தது. அவனும் நாடகம் பார்க்கப் போயிருந்தான். நாடகத்தில் காட்சிகள் மாறும்போதெல்லாம், கால்மணியாவது ரஸிகர் குழாம் அளவளாவிக் கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது! அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒன்றின்போது, அவன் சுற்றிலும் பார்த்தான். ஸ்திரீகள் வரிசையில் முதலில் உட்கார்ந்த யுவதி அவன் கவனத்தைக் கவர்ந்தாள். தான் எப்போதோ கனவில் கண்டிருந்த உருவத்தின் சாயல் அவளிடம் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அடுத்த இடைவேளையின்போது உற்றுக் கவனித்தான். என்ன ஆச்சரியம்! அஞ்சுகம்-முப்பது வருஷங்களுக்கு முன்பு இருந்த அஞ்சுகம்- அப்படியே அங்கு உட்கார்ந்திருந்ததைப்போல் தோன்றியது அவனுக்கு. அவனையும் அறியாமல் அவன் கைகள் அந்த வைரத்தைத் தடவிக் கொடுத்தன.

ஒருவாறு நாடகம் முடிவடைந்தது. அவன் கண்கள் அந்தப் பெண்ணின் மீதே பதிந்திருந்தன. மக்கள் கலைந்து செல்லத் தலைப்பட்டனர். அதிர்ஷ்டவசமாக அந்த யுவதியுடன் வேறு யாரும் வந்திருக்கவில்லை. அவன் அவளைப் பின்தொடர்ந்தான். அடுத்த ஊருக்குச் செல்லும் குறுக்கு வழியில் அவள் தன்னந்தனியே வேகமாக நடந்து கொண்டிருந்தாள். அவன் விரைந்து சென்று அவளை நெருங்கி அவள் தோளைப் பற்றினுன். திடுக்கிட்டுத் திரும்பிய அவள் செயலற்றுப் போனுள். பயத்தின் மேலீட்டால், கத்தக்கூட அவள் குரல் எழவில்லை. நிர்மானுஷ்யமான அந்த இடத்தில், அவன் நிலவொளியில் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவள் கழுத்தைத் தன்கைகளில் ஏந்திக்கொண்டு, அவள் முகத்தைக் கீழ்நோக்கிச் சாய்த்து, நிலவுஒளி நன்ருக அவன் முகத்தில் விழும்படி பிடித்துக் கொண்டான். ஆம்; சந்தேகமே இல்லை, அஞ்சுகத்தின் பெண்ணுகத்தான் இவள் இருக்க வேண்டும். அவன் கைகள்

நடுங்கின. பிறகு அவனையும் அறியாமல் அவன் பிடி இறுகியது. தூரத்தில் கேட்டுக்கொண்டிருந்த காவிரி நதியின் சலசலப்பு ஒலி அவன் மனதைப் பிழிந்தெடுத்தது. அவள் அசையவில்லை. அவன் கண்களுக்குமுன் அவள் முகம் வேகமாக மாறுவதைப்போல் தோன்றியது அவனுக்கு. பத்து......இருபது......முப்பது வருஷங்கள் அவன் முக பாவத்தில் சுழன்றோடினாற் போல் இருந்தது. இப்போது அவன் கையில் இருப்பவள் அஞ்சுகமேதான்!... அவன் பேசாமல்தான் நின்றுகொண்டிருந்

தான். ஆனால் அவன் குரல்—என்றைக்கோ அவனுடையதாக இருந்த அந்தக் குரல்— அவன் காதுகளில் ஒலிப்பதுபோல் அவனுக்குப் பிரமை தட்டியது.

அஞ்சுகமே! உன்னை
அகத்தில் நினைத்து விட்டால்
காத வழியும் கால் நாழி!...

சற்றுநேரம் நிசப்தம். திடுக்கிட்டுத் தூக்கத்திலிருந்து விழிப்பதுபோல் பார்த்தான் அவன். தன்னை அறியாமல் அவள் கழுத்தைச் சுற்றி இரும்புப் பிடியாக இறுகி இருந்த தன் கைகளை விடுவித்துக் கொண்டான். பொத்தென்று அவள் உடல் கீழே சாய்ந்தது. இப்போது அவள் கிழவியாகத் தோன்றவில்லை. ஆனால் கோரமாகமாறிய முகத்துடன் பிணமாகக் கிடந்தாள்!...... அவன் கண்களில் வெகு நாட்களுக்குப்பின் நீர் ததும்பியது. அவன் கைகள் வைரத்தை மீண்டும் நெருடின. அவன் மனதில் ஓர் தீர்மானம் உருவாகியது. அந்தப் பெண்ணின் உயிரற்ற சடலத்தை அங்கேயே போட்டுவிட்டு நடந்தான்...... நடந்து கொண்டே இருந்தான்...இப்போது ஸதாராவை நோக்கி அவன் செல்லும்போது கூடச் சில நாட்களுக்கு முன்பு, தான் நாடகக் கொட்டகையில் கண்ட அந்தப் பெண்ணின் முகம்தான் அவன் கண்கள் முன் மின்னி மின்னி மறைகின்றது...... யாத்ரீகர்களின் கோஷ்டி சென்று கொண்டே இருக்கிறது.

அந்தக் கோஷ்டியினரின் ஆரவாரத்தைக் கேட்டு, அவன் தன் எண்ணச் சுழலினின்று விடுபட்டான். இதோ ஸதாரா வந்து விட்டது. உலகை இருள் நன்றாக மூடி விட்டது. அவன் தன் பையின் மீது ஒரு கையை வைத்துக்கொண்டபடியே ஓரிடத்தில் படுத்துக் கொள்கிறான். மக்கள் இன்னும் அந்த வைரக்கல் திருட்டைப் பற்றிப் பேசிக்கொள்வதை எண்ணித் தனக்குள் சிரித்துக் கொண்டான். அவன் முடிவாகத் தீர்மானித்துக் கொண்டு விட்டான். நாளை இரவு அவன் அந்த மரகதக் கல்லைத் திரும்பவும் அந்த விக்கிரகத்திலேயே பதித்து விடுவான். அப்படிச் செய்தால்! அந்தக் 'கல்' அவனை விட்டு நீங்கி விட்டால்—வெகு விரைவில் தான் இறந்து விடுவான்' என்ற அசையாத நம்பிக்கை இன்றும் அவனுக்கு இருக்கிறது. முப்பது வருஷங்களாகத் தனக்கு உயிர் தந்த சக்தி அதுதான் என்று திண்ணமாக நம்புகிறான். இருந்தாலும், அவன் தீர்மானம் முடிவானதுதான். அதை மாற்ற முடியாது. அவன் தனக்குள்ளேயே முடிவாகச் சொல்லிக் கொண்டான்:- நாளை நிச்சயமாக அவன் அந்த வைரத்தை எடுத்த இடத்தில் வைத்து விடுவான். ஸதாராவின் கடவுள் முப்பது வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் அவனைத் தனது "பச்சைக் கண்ணால்" பார்க்கும். அத்துடன் மரண தேவனும் அவனுக்கு விடுதலை கொடுத்து விடுவான்.

அவன் வாழ்ந்தது போதும். ●

கிருபா அமெச்சூர்ஸின் கலைப்பணி

சிவகாமி

சென்னை கிருபா அமெச்சூர்ஸ் என்று பிரசித்தி பெற்ற கோஷ்டியார் சென்ற மாதம் குடந்தை வாணிவிலாஸ ஸபா தியேட்டரில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலயத்தின் உதவி நிதிக்காக ஓர் நாடகம் நடித்தார்கள். கல்கி எழுதிய சிவகாமியின் சபதத்தை நாடக ரூபமாக்கி நடித்துக் காட்டினார்கள். இக் கோஷ்டியினரிடையே காணப்பட்ட கலை ஆர்வம் மிகவும் போற்றத்தக்கது. அவர்கள் உற்சாகமும் தியாக புத்தியும் எல்லோரையும் வியக்கச் செய்தன.

ஆரம்பத்தில் நாடகத்தில் கொஞ்சம் விறுவிறுப்புக் காணப்படவில்லை. மகேந்திரவர்மனாக நடித்த டாக்டர்ராகவாச்சாரியார் காம்பீர்யக் குறைவாக நடித்தார். முதலில் சிவகாமியின் நடனம் மிக்க ரம்மியமாக இருப்பினும் நெடு நேரம்ஆடுவதின் காரணமாகப்பார்ப்போரின் பொறுமையைச்சோதிப்பதோடு நாடகத்தின் டெம்போவைக் குறைக்கிறது. நாடகத்தின் முற்பகுதியில் சில பாகங்களை நன்கு "எடிட்" செய்வார்களானால் மிகவும் ரஸமாகவிருக்கும்.

டைரக்டர் V. ராமமூர்த்தி நாகநந்த பிக்ஷுவாக நடிக்கிறார். இவர் வேஷப் பொருத்தம் அபாரம். வில்லன் என்ற ஹோதாவில் மிகத்திறமையோடு நடித்திருக்கிறார். ஆனால் பௌத்த பிக்ஷு என்ற ரூபம் இருக்கிறதே ஒழிய அதற்கேற்ப நடிப்பு இவரிடம் காணப் பெறவில்லை. காம்பீர்யமாகவும் வெகுலாகவமாகவும் நடிக்கிறார். தாம் நடிக்கிறோம் என்பதைக் காட்டாது வெகு இயற்கையாக இருக்கின்றன இவரது பேச்சும் நடிப்பும்.

அடுத்தபடியாக, சிவகாமியாக நடிக்கும் வி. எஸ். ராமமூர்த்தியைக் குறிப்பிடவேண்டும். நாடகம் முற்றிலும் இவ்விருவருடைய மென்மையான நடிப்பினால் தான் பிரகாசிக்கிறது எனலாம். இவரிடம் அதிகமாகக் குற்றம் காணமுடியாது. காதல் கட்டங்களில் இவர் முறைத்துப் பார்ப்பதைவிட கொஞ்சம் நாணிக் கோணிப் பார்ப்பாரானால் பிரமாதமாக இருக்கும். பொதுவில் முகபாவத்தில் நடிப்பை நன்கு விளக்குகிறார். நடிப்பின் அடிப்படையைத் தெள்ளெனத் தெரிந்து கொண்டு நடிக்கிறார். மேக்கப்பில் இவர் முக அமைப்பை உருண்டையாகவும் கொஞ்சம் யௌவனமான மங்கையாகவும் காட்டமுடியுமானால் நாடகம் இன்னும் நன்கு சோபிக்கும்.

டாக்டர் ராகவாசாரியார் பின் பாகங்களில் வெகு இயற்கையாகவும் சுறுசுறுப்பாகவும் நடித்திருக்கிறார். மற்றப்படி ஜோடனைகள் உடை எல்லாம் கண்ணைக் கவருகின்றன. மிகவும் கடினமான கதையை நாடக ரூபத்தில் எழுதி, இவ்வளவு திறம்பட நடிப்பது மிகவும் போற்றத் தகுந்ததே. மற்ற **நடிகர்களும் அனுசரணையாக** நடித்து நாடகத்தை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்.

நாகநந்தியும் பரஞ்ஜோதியும்

அழுந்திய எண்ணம்

ஆர். சுப்பிரமணியன்

மழை கொஞ்சம் ஓய்ந்திருந்தது. வாசல் திண்ணையில் நானும் ரகுராமையரும் உட்கார்ந்துகொண்டிருந்தோம். இரவு எட்டரை மணி. சாப்பாடாகிவிட்டது. ஈரமண்ணின் மேல் தவழ்ந்து வந்த காற்றின் ஸ்பரிசத்தால் உடல் புல்லரித்தது.

தங்கம் அம்பியை எழுப்பினாள். அவனுக்கு நல்ல தூக்கம்.

'அடே! பால் சாப்பிட வாடா!' அவன் எழுந்து வாசல் திண்ணையின் பக்கம் நடந்துவந்தான். நான் அவன் தோளைப் பிடித்து உலுக்கினேன். என்னடா தூக்கக் கலக்கமா? உள்ளே கூப்பிட்டால் வாசலுக்கு நடந்துவருகிறாயே?' என்று உரக்கக் கேட்டேன். கண்ணைக் கசக்கிக்கொண்டு உள்ளே போனான் அவன்.

ரகுராமையர் சிரித்தார். 'என்ன சிரிக்கிறீர்கள்?' என்று கேட்டேன்.

'எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது.'

'என்ன அது?' என்று ஆவலுடன் கேட்டேன். ரகுராமையர் பெரிய சர்க்கார் வேலையில் இருந்தவர். பல ஊர்கள் சுற்றினவர். அவர் வாழ்க்கையில் அவர் அறிந்த அனுபவித்த நிகழ்ச்சிகள் அநேகம். அவைகளை அழகாக, கோவையாகக் கதைபோலச் சொல்லும் சாமர்த்தியம் அவருக்கு உண்டு. அதனால் அவர் அந்தப் பீடிகையுடன் சொல்ல ஆரம்பித்ததைக் கேட்கவேண்டும் என்ற ஆவல் எனக்கு உண்டானதில் வியப்பு ஒன்றுமில்லையல்லவா?

பத்து வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவம். அப்போது நான் சென்னையில் வேலையில் இருந்தேன். என்னுடைய ஆபீஸுக்கு அருகில் இருக்கவேண்டும் என்று கிண்டியில் ஒரு வீடு பார்த்துக்கொண்டேன். அங்கிருந்து ரேஸ்கோர்ஸ் அரைமைல் தூரத்திற்குள்ளாகத்தான் இருக்கும். நான் இருந்தவீடு அமைதியான இடத்தில் இருந்தது. சுற்றுப்புறத்தில் கொஞ்ச தூரத்திற்கு நல்ல காற்றோட்டமான மைதானம். மாடியில் நின்றுகொண்டு பார்த்தால் குளிர்ந்த தென்றல் காற்றின் ரம்மியத்தில் மாலைநேரத்துப் பொன்னொளி படர்ந்த கட்டிடங்கள் வரிசை யாக வரிசையாகப் பொன்நிறத்தில் மின்னுவது கண்ணுக்கு விருந்தாக இருக்கும். அந்த அருமையான வீட்டில் ஒரே ஒரு குறைமட்டும் இருந்தது. முன்பக்கத்துக் கைப்பிடி சுவர் மாடியின்

ஒரு மூலையில் அரைகுறையாக முடிந்திருந்தது. அதைத் தொடர்ந்து கீழே இருபதடிக்கு ஒரு பழைய மரப்படிக்கட்டு வைத்திருந்தார்கள். யாராவது அஜாக்கிரதையாக கைப்பிடி சுவரைப் பிடித்து நடந்து கொண்டே வந்தால் திடீரென்று அதில் தடுக்கி இருபதடிக்குக் கீழே போய் விழவேண்டியதுதான். இதற்காக நான் அந்த இடத்தில் ஒரு குட்டைக்களிமண் சுவர் எழுப்பி அந்த வழியையே மூடிவைத்திருந்தேன்.

எதையோ சொல்ல வந்தவன் என்னவெல்லாமோ சொல்லிக்கொண்டு போகிறேன். சென்னையில் நான் இருந்த போது டிசம்பர் மாதம் வந்துவிட்டால் என் வீடு திமிலோகப்படும். கச்சேரி கேட்க வருகிறவர்கள், எக்ஸிபிஷன்பார்க்க வருகிறவர்கள், கிறிஸ்துமஸ் பொழுது போக்குக்காக வருகிறவர்கள், என்று என்வீடு முழுதும் நிறைந்து விடும்.

அந்த வருஷம் கிறிஸ்துமஸ் வருவதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னால் நான் எதிர்பாரர்த ஒரு விருந்தாளி என்வீட்டுக்கு வந்து சேர்ந்தார். ராஜலிங்கம் என்னோடு சிறு வயதில் ஒன்றாய்ப்படித்தவர். அப்புறம் இரண்டு பேரும் பிரிந்து எங்கெங்கேயோ போய் விட்டோம். கலைத்துப் போடுகிற சீட்டுகள்கூடச் சில சமயம் கோவையாக வந்து சேர்ந்து விடுகிறதல்லவா? அந்த மாதிரி அகஸ்மாத்தாக அவரையும் சென்னைக்கு மாற்றினார்கள். அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். தகுந்த வீடு எதுவும் கிடைக்காததால் என் வீட்டிலேயே வந்து இறங்க வேண்டியதாயிற்று. அவர் மட்டும் என்னுடன் வந்து கொஞ்சநாள் இருந்து வீடு தேடுவதென்று ஏற்பாடாயிற்று.

எனக்கும் அவருக்கும் நட்பு எவ்வளவு நெருங்கி இருந்ததோ அவ்வளவு அபிப்பிராய பேதம் இருந்தது. சில சமயம் இருவரும் உலாவப்போனால் நேரம் போவது தெரியாமல் எந்தக் காலத்திலும் ஒன்றுசேர முடியாத இரண்டு நேரெதிரான விஷயங்களைப்பற்றித் தர்க்கம் செய்துகொண்டே போவோம். ஆனால் அவரிடம் ஒரு அலாதியான குணம் இருந்தது. விருப்போ, வெறுப்போ, கோபமோ ஆத்திரமோ எதையும் அவர் நாலுபேருக்கு நடுவே வெளியில்காட்டமாட்டார். எதையும் மனதிற்குள் அடக்கிக் கொள்வார். யாருமில்லாதபோதுதான் அதைப் பற்றிப் பேச ஆரம்பிப்பார். அத்தகைய சந்தர்ப்பம் கிடைக்காமற்போனால் அந்த எண்ணம் அவர் மனத்திலேயே சிறைப்பட்டுப் போனாலும் அதில் ஆச்சரியமில்லை,

ஒருநாள் எனக்குத்தெரிந்த கம்பெனி மானேஜர் ஒருவர் எனக்கு ஒரு பரிசு அனுப்பியிருந்தார். அது ஒரு அழகான சைனா பூக்கிண்ணம். அதன்மேல் பல வர்ணங்களில் பூ வேலை செய்திருந்தது. நல்ல வெளிச்சத்தில் அதன்மேல் இருந்த பளபளப்பில் அது அழகாக மின்னியது. அதை ஜன்னலுக்கருகில் நல்ல வெளிச்சத்தில் வைக்க வேண்டுமென்று நான் என் அறையில் ஜன்னல் ஓரமாக வைத்துப் பூக்களை அதில் நிரப்பினேன். ராஜலிங்கத்தின் அபிப்பிராயம் வேறாக இருந்தது. ''என்ன அவ்வளவு வெளிச்சத்தில் அதை வைத்து விட்டீர்களே? அந்தப் பளபளப்பில் அந்த அழகான வர்ணச் சேர்க்கையே எடுக்காமல் போய்விடுமே? அதைச் சற்று உள்ளே ரேடியோவின்மேல் மங்கலான வெளிச்சத்தில் வையுங்கள். அப்போதுதான் அதன் அழகு பூரணமாகத் தெரியும்.'' என்றார் நான் ஒத்துக் கொள்ளவில்லை. அவரும் விடவில்லை. ஆனால் அப்போது என் வீடு முழுதும் உறவினர்களும் நண்பர்களுமாக நிறைந்திருந்தார்கள். அதனால் அவரால் அதிகநேரம் வாதிக்க முடியவில்லை.

மறுநாள் காலையில் நான் எழுந்து வந்து அறையில் உட்கார்ந்தபோது எனக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. அந்தப் பூக்கிண்ணம்—ஜன்னலருகே இருந்தது ரேடியோவின்மேல் வைக்கப்பட்டிருக்கிறது. இது யார் செய்த வேலை? ராஜலிங்கம் செய்திருப்பாரென்றே எனக்குத் தோன்றியது.

காபி அருந்திவிட்டு அவர் அங்கே வந்தவர் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே 'கடைசியில் நான் சொன்னதுதான் சரியென்று உங்களுக்கே பட்டுவிட்டதல்லவா? அந்தக் கிண்ணத்தைச் சரியான இடத்தில் வைத்துவிட்டீர்களே?' என்றார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. சிறிது சம்சயத்தோடு அவர் முகத்தைப் பார்த்தேன். ஆனால் அவர் இயற்கையாகப் பேசினார். எதையும் மறைக்கவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. எப்படியோ அந்த அதிசயமான உணர்ச்சியை அடக்கிக்கொண்டேன். அதைப்பற்றி யாரிடமும் பேசவில்லை.

கிண்டிரேஸ் தொடங்கிவிட்டது. எங்கள் இரண்டு பேருக்கும் அதில் ஆர்வம் உண்டு. ஓயாமல் அதைப்பற்றி விவாதம் செய்வதும் உண்டு. 'பாருங்கள்! நாளைக்கு முடிவு தெரிந்ததும் நான் சொன்னதுதான் சரி என்று ஒப்புக்கொள்வீர்கள். 'வெண்மல்லிகை ஜெயித்தால் நான் தோற்றுப் போனேன். 'மஞ்சள் ரோஜா ஜெயித்தால் நீங்கள் தோற்றுப் போவீர்கள்.' என்று நான் சொல்வேன். அதற்குமேல் அவர் ஏதாவது சொல்வார். சொல்வதுமட்டுமல்ல, பெரும்பாலும் அவர் சொல்வதுதான் பலிக்கும். அன்று ஒருநாள் எங்கள் இருவருக்கும் சரியான வாக்குவாதம் நடந்தது. 'சரி நாளைக்குப் பேப்பர் வந்ததும் நீங்கள் ஜயித்த குதிரைகளை வரிசைப் பிரகாரம் படியுங்கள். நான் சொல்கிறேன், நான் குறிப்பிடும் வரிசைக்கும் அதற்கும் ஒரு சிறிதளவும் பிசகாது' என்று அவர் சொன்னார்.

மறுநாள் காலை. நான் எழுந்ததும் பல்லைத் தேய்த்துவிட்டு, காபிகூடச் சாப்பிடாமல் அறைக்குப் போனேன். பேப்பர் அப்போதுதான் அங்கே ஜன்னல் வழியாக எறியப்பட்டிருந்தது. ஆவலுடன் அதை எடுத்தேன். அதற்கடியில் அதே இடத்தில் ஒரு காகிதமும் பென்சிலும் இருந்தன. பதற்றத்துடன் அதை எடுத்துப் படித்தேன். அதில் ஜயிக்கப்போகும் குதிரைகளை முறைப்படி எழுதியிருந்தது. பேப்பரைப் பிரித்துப் படித்தேன். அங்கே வெளியாகி இருக்கும் முடிவுகளுக்கும் அந்தக் குறிப்பிற்கும் சிறிதளவும் வித்தியாசமில்லை. என்ன ஆச்சர்யம்? யார் இதைக் குறித்து வைத்திருப்பார்கள்?

அப்போது ராஜலிங்கம் அங்கே வந்தார். 'என்ன முடிவு? நான் சொல்லுகிறேன். சரியாக இருக்கிறதா பாருங்கள்.' என்றார்.

'சொல்வானேன். எழுதியே வைத்திருக்கிறீர்களே?' என்று நான் அந்தக் காகிதத்தைக் காட்டினேன்.

அவர் திகைப்புடன் அந்தக் காகிதத்தை வாங்கிப் பார்த்தார். 'ஆச்சர்யமாக இருக்கிறதே?' என்றார்.

'என்ன?'

'நான் இதை எழுதவில்லை.'

'அப்படியா?'

'அதைவிட ஆச்சர்யமான விஷயம் இந்த எழுத்து என்னுடையதைப்போலவே இருக்கிறதே!' என்றார். நான் அவர் விளையாடுகிறாரோ என்று எண்ணினேன். அவர் முகத்தைக் கூர்ந்து கவனித்தேன். அதிலிருந்த ஆழ்ந்த உணர்ச்சி அவர் கவலையை எடுத்துக்காட்டியது. நான் அதை அப்படியே விட்டுவிட்டேன்.

நாட்கள் ஓடின. ஆனால் அவ்வப்போது இந்த மாதிரி ஏதாவது நடந்துகொண்டேயிருந்தது. வீடு முழுவதும் ஜனங்கள் இருந்ததால் எனக்கு யார் இதைச் செய்கிறார்கள் என்று கண்டுபிடிக்கவே முடியவில்லை. தவிர அதிலிருந்த ஒருஅதிசயம் அந்தச் செய்கைகள் பெரும்பாலும் ராஜலிங்கம் என்ன விரும்புகிறாரோ அப்படியே அமைந்தன. சொல்லப் போனால் அவர் எண்ணங்களைப் பிரதிபலித்தன. ஆனால் அதற்காக அவர் சந்தோஷப்படவில்லை. இந்த மர்மம் என்னைப் போலவே அவரையும் திகைக்க வைப்பதை நான் சந்தேகமின்றி உணர முடிந்தது.

என்னிடம் அப்போது ஒரு அழகான குச்சு நாய் இருந்தது. அதன்மேல் சடைசடையாகப் படர்ந்திருக்கும் ரோமம் அதன் ஸ்பரிசத்தை விரும்பச்செய்யும். பொழுது போகாவிட்டால் நான் அதனுடன் விளையாடுவேன். அது ஆவலும் சந்தோஷமும் தாங்காமல் பல்வேறு குரல்களில் சத்தம்போடும்.



இது ராஜலிங்கத்துக்குப் பிடிக்காது. 'என்ன? உங்களுக்கு எப்படித்தான் இந்த மிருகத்தின் சக வாசம் பிடிக்கிறதோ? இது செய்யும் சத்தத்தையும் ரகளையையும் என்னால் பத்து நிமிஷம் சேர்ந்தாற்போலப் பொறுக்கமுடியவில்லையே?' என்றார்

'அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்? நான் இதை எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா?' என்று கேட்டேன்.

'எனக்கெப்படித் தெரியும்? ஆனால் என்னிடம் மட்டும் ஒரு துப்பாக்கி இருந்தால் இது என் கிட்டே வரும்போதே அதை ஒரு தடவை சுட்டுப் பரலோகத்துக்கு அனுப்பிவிடுவேன். எனக்கு அவ்வளவு அருவருப்பாக இருக்கிறது. இரவு வேளைகளில் இது ஓயாமல் குரைக்கிறதே? எப்படிப் பொறுத்துக்கொண்டு தூங்குகிறீர்கள்?'

சட்டென்று டிராயரைத்திறந்து'இந்தாருங்கள். இன்றைக்கு ரிவால்வரை நான் தலைக்கடியில் வைத்துக்கொண்டு தூங்கப்போவதில்லை. நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். வேண்டுமானால் நாயைச் சுட்டுவிடுங்கள்' என்றேன் விளையாட்டாக.

அவர் சிரித்துக்கொண்டே ரிவால்வரை மட்டும் எடுத்துப் பார்த்துக்கொண்டே நின்றார்.

மறுநாள் காலை. ஏழுமணி இருக்கும். வீட்டில் ஏதோ ஒரு மாறுதல் இருப்பதை நான் உணர்ந்தேன். ஆனால் அதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. கொஞ்சநேரத்துக்கெல்லாம் பேபி அழுதுகொண்டே அங்கே வந்தாள்.

'அப்பா! நாய் செத்துப்போயிட்டது,'

எனக்குச் சட்டென்று அந்த மாறுதலை அப்போதுதான் உணரமுடிந்தது. எழுந்து முன்னால் இருந்த தோட்டத்துக்குப் பேபியைத் தொடர்ந்து ஓடினேன்.

அங்கே புல்தரையில் நாய் படுத்துக் கிடந்தது. அதன் மண்டையிலிருந்து ரத்தம் வழிந்திருந்தது. நான் அருகே போய்ப் பார்த்தேன். அது துப்பாக்கி அடிபட்ட காயம்! என்னால் அதற்குமேல் பொறுக்கமுடியவில்லை.

நேரே உள்ளே வந்தேன். ராஜலிங்கம் அப்போதுதான் கீழே இறங்கிவந்தார்.' நாய் செத்துப்போய்விட்டது. யாரோ துப்பாக்கியால் சுட்டிருக்கிறார்கள்.' என்றேன். என் பார்வை அவர் முகத்தை ஊடுருவிப் பாய்ந்தது.

அவர் உண்மையான வருத்தத்துடன் அட பாவமே! உங்கள் அடிமை நாய் ஆயிற்றே! என்றார்.

என்னால் அவர் வார்த்தைகளை நம்ப முடியவில்லை. அவரையே பார்த்துக்கொண்டு நின்றேன். அவர் வருத்தம் தோய்ந்த குரலில், "ரகுராமன்! நீங்கள் என்மேல் சந்தேகப்படுகிறீர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. நான் அவ்வளவு மோசமானவன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

நான் என்னையே நொந்துகொண்டு "சே சே!" அப்படி ஒன்றுமில்லையே? நான் அவ்விதம் சொன்னேனா என்ன? என்று தட்டிக்கழித்தேன். ஆனால் என் மனம் அலைபாய்ந்தது. எனக்கு விளங்காத அந்த மர்ம சக்தி எனக்குப் பெரிய புதிராக இருந்தது. அதன் பிடியில் நான் அகப்பட்டுத் திண்டாடினேன்.

டிசம்பர் மாதமுடிவு. பனிக்காலம். சென்னையில் சீஸன் உச்ச நிலையில் இருந்தது. நானும் ராஜலிங்கமும் ஒரு நாள் பேசிக்கொண்டிருந்தோம். தெருவில் பெரிய கொம்மாளமாக இருந்தது. இரண்டுபேரும் வராந்தாவில் போய் நின்று பார்த்தோம். அங்கே ஒரு கழைக் கூத்தாடி-இப்போது அவர்களையெல்லாம் பார்ப்பதே அரிதாகப் போய்விட்டது—ஜால வித்தைகள் செய்துகாட்டிக் கொண்டிருந்தான்.

"எல்லாம் ஏமாற்று வித்தை. எனக்கு இதில் நம்பிக்கை இல்லை." என்று சொன்னேன்.

"அப்படிச் சொல்லிவிட முடியாது. அதற்கும் ஒரு சாமர்த்தியம் வேண்டாமா?" என்றார் அவர்.

அந்தச் சமயத்தில் அவன் இரண்டு கம்பங்களை நட்டு, கயிற்றைக்கட்டி அதன்மேல், சுமார் ஒரு தென்னைமரத்து உயரத்தில் நடக்கத் தொடங்கினான். நான் அவனையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தேன்.

"இதற்கு என்ன சொல்கிறீர்கள்?" என்றார் ராஜலிங்கம். "இது சாதாரணமாகச் செய்யக் கூடியதல்ல. ஏன் எனக்குக்கூட இதைப்போல் செய்ய வேண்டுமென்ற ஆவல் இருக்கிறது. ஆனால் செய்வதற்குச் சந்தர்ப்பமோ 'சாமார்த்தியமோதான் கிடையாது''

"ஏன் மாடிக் கைப்பிடி சுவர்மேல் வேண்டுமானால் நடந்து பழகுங்களேன்" என்றேன் சிரித்துக்கொண்டே.

மறுநாள் காலையில் நான் எழுந்து வந்தபோது வீடு ரகளைப்பட்டது. என் பெண் என்னிடம் வந்து "அப்பா வாசலில் போய்ப்பாரு" என்று பரபரப்புடன் சொன்னாள். நான் அங்கே ஓடினேன். வீட்டின் கிழக்குப்புறம் ஒரே கூட்டமாக இருந்தது. அவர்களை விலக்கிப் பார்த்தபோது நான் கண்ட காட்சி என்னைப் பிரமிக்க வைத்தது. ராஜலிங்கம் அங்கே விழுந்து கிடந்தார். அவர் மண்டை உடைந்து உடல் இரத்த வெள்ளத்தில் மிதந்தது. அவர் உயிர் பிரிந்து நெடுநேரம் ஆகி இருந்தது. என் வருத்தம் கரை மீறியது.

இவர் எப்படி இங்கே விழுந்தார். தற்கொலை செய்து கொண்டிருப்பாரோ? அப்படி அவருக்கு என்ன குறை? பளீரென்று மனதில் ஒரு சந்தேகம் தோன்றியது. அண்ணாந்து பார்த்தேன். ஆரம்பத்தில் நான் சொன்னேனல்லவா? கைப்

பிடி சுவரின் குறையான முடிவில் களிமண் சுவர் வைத்து அடைத்திருந்தேன் என்று? அது இடிந்து சரிந்து விழுந்திருந்தது. ராஜலிங்கம் அதன்மேல் நடந்திருக்க வேண்டும். அதிலிருந்து சரிந்து கீழே விழுந்திருப்பார்.

அவர் உடலைப் பரிசோதனை செய்த டாக்டர் என்னிடம் விவரமாகக் கூறினார். அது என் மனதில் அத்தனை நாட்களாகப் படர்ந்திருந்த ஒரு வியாகூலத்தை அகற்றியது.

'உங்கள் நண்பர் ராஜலிங்கம் ஒரு உணர்ச்சி வசப்பட்ட மனிதர். அவர் நினைப்பதோ பேசுவதோ உணர்வதோ அவர் மனதில் பூரணமாகப் பிரதிபலிக்கக்கூடியது. அதை அவர் வெளியே பேசி முடித்துவிட்டால் பெரும்பாலான அந்த எண்ணம் வெளியாகிவிடுகிறது. அவர் அதிகம் அதைப்பற்றிப் பேசமுடியாத சூழ்நிலை இருந்தால், அந்த எண்ணம் மனதிலேயே அழுந்திவிடுகிறது. அப்படி அழுந்திய எண்ணம் தூக்கத்திலும் அவரை விடுவதில்லை.

அவருக்குத் தூக்க வியாதி உண்டு. அதை ஏன் அவரே அறியவில்லை என்று நீங்கள் கேட்கலாம். அவருக்கு அது தெரியாது. தூக்கவியாதி உள்ளவர்கள் இரவில் எழுந்து நடமாடுவார்கள். செய்ய வேண்டுமென்று விரும்பியவைகளைச் செய்வார்கள். ஆனால் அதைச் செய்த ஞாபகமே இருக்காது. அந்தச் செய்கை அவர்களையே அறியாமல் அவர்கள் செய்வது.

நீங்கள் என்னிடம் சொன்னதுபோல உங்கள் வீட்டிலேயே இது நிகழ்ந்திருக்கிறது. ஒன்றன்பின் ஒன்றாக உங்களைத் திகைக்க வைத்த சில நிகழ்ச்சிகள் ராஜலிங்கம் இந்த வியாதியின் பயனாகச் செய்தவைதான். பகலில் அவர் உங்களிடம் பேசும்போது என்ன செய்யவேண்டுமென்று சொன்னாரோ அல்லது விரும்பினாரோ. அதை அவரே இரவில் சுயஞாபகம் இல்லாமல், அவருக்கே தெரியாமல் செய்திருக்கிறார். இந்த விசித்திரமான வியாதி கடைசியில் விபரீதமாக முடிந்தது. அவர் இறந்து போவதற்கு முதல்நாள் கழைக்கூத்தாடியின் வேடிக்கையைப் பார்த்ததாகச் சொன்னீர்கள். அவர் அப்போது அதேபோல் செய்ய விரும்பி இருக்கவேண்டும். இரவில் அதன் நிழலாக அவர் தம் நினைவே இல்லாமல் கைப்பிடி சுவரின்மேல் நடந்திருக்கவேண்டும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர் பாதுகாப்புக்காகக் கட்டியிருந்த களிமண் சுவரில் காலை வைத்திருக்கிறார். அதுவே அவர் முடிவுக்குக் காரணமாயிற்று.

என்ன விசித்திரமான வியாதி? அவர் இத்தகைய வியாதியஸ்தர் என்பதை நான் அறியாமலே இருந்துவிட்டது அவர் தலைவிதி என்றுதான் சொல்லவேண்டும்.

அப்புறம் பத்து வருஷங்களுக்கு மேலாகி விட்டது. ஆனால் இன்னும் யாராவது தூக்கத்தில் எழுந்து பிதற்றினால்கூட எனக்கு ராஜலிங்கத்தின் ஞாபகம்தான் வருகிறது."

குளிர்ந்த காற்று வீசியது. "மணி பத்தாகி விட்டது. வருகிறேன்" என்று அவர் எழுந்து போனார். 'குட்நைட்' என்றுசொல்லிக்கொண்டு நான் எழுந்து உள்ளே போனேன். ●

பண்பின் இரகசியம்

ஹிந்தி மூல ஆசிரியர் **பிரேம்சந்த்** :: தமிழாக்கம் **D. ரஜன்**

உலகத்தில் 1001 விஷயங்கள் என்பார்களே - அவையாவும் எனக்கும் புரியவில்லை. பொழுது புலர்ந்ததோ யில்லையோ எல்லோரும் க்ஷவரம் செய்து கொள்ளத் தொடங்கி விடுகின்றனர். ஆண்களிடமும் கூடவா இத்தனை நாகரிகம் வந்துவிட்டது? படித்தவர்களுடைய கண்கள் ஏன் பலஹீன மடைகின்றன? மூளை சோர்வதின் காரணம் யாது? நரை மயிர் கறுப்பாக்கும் பூச்சுக்களை ஏன் மக்கள் நாடுகின்றனர்? இவையாவும் புரியவில்லை. தெரிந்து கொள்ள ஆவலுமில்லை, பதிலும் கிடைப்பதில்லை. பண்புடையோர் என்பவர் யாவர்? பண்பிலார் யார்? அவற்றின் அடையாளம் யாது? என்பதுதான் கேள்வி. இலேசாகப் பார்த்தால் கேள்வி எளிதாகத்தான் தோன்றும். நன்கு கவனித்தால் அவ்வளவு எளிதல்ல, என்பது ஒவ்வொரு குழந்தைக்கும் தெரியும்.

ஹேட்--கோட்--பூட்--ஸூட் அணிவதும், டை கட்டிக்கொள்வதும் மேஜைகளின் மேல் சாப்பிடுவதும் தினம் 13 தடவைகள் கோகோவோ டீயோ அருந்துவதும், ஸிகரெட் பிடித்துக்கொண்டு நடப்பதுந்தான் பண்பு—நாகரிகமென்றால்-மாலைவேளைகளில் சில சமயங்கள் மது வெறியில் கண்கள் சிவந்தும் தள்ளாடி நடந்துகொண்டு சாலையில் செல்பவர்களை வலுச்சண்டைக்கு இழுக்கிறார்களே அந்த வெள்ளையர்களையும் துரைமகன்களையுந்தான் பண்புடையோர், நாகரிகமிக்கோர் என்று கூறி விடலாமே! இல்லையென்றால் 'பண்பு' என்பது உள்ளத்துடன் தொடர்புள்ளது. உடலுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்பது 'ருஜு'வாகி விடுகிறது.

2

என் வெகு சில நண்பர்களிலே ராய் ஸாஹிப் ரத்ன கிஷோர் என்பவரும் ஒருவர். தக்க கல்வியும், தாராளமனப்பாங்கும் உள்ள ஒரு உயர்ந்த உத்தியோஸ்தர். அவருக்கு நல்ல சம்பளம்; ஆனாலும் அவருடைய செலவுக்குக் கட்டுப்படியாவதில்லை. நான்கிலொரு பங்கு பங்களாவுக்குச் செலவாகிறது. பாவம்! அதனால் அவருக்கு எப்பவும், ஒரே கவலை. 'லஞ்சம் வாங்குகிறாரா இல்லையா?' என்பதெல்லாம் எனக்கென்னவோ தெரியாது. 'படிச்செலவு' வாங்க எப்பொழுதும் சுற்றுப்பிரயாணம் செய்கிறாரென்பது எனக்குத் தெரியும். இதனால் பிரதி வருஷமும் 'பட்ஜெட், சரியாக வேறு இலாகாவிலிருந்து பணமெடுக்க நேரிடும். ஏனிப்படி 'முகாம்' செய்கிறீர்? என்று உயர்தர அதிகாரி கேட்டால் - அந்த மாவட்டமே (ஜில்லா) அப்படி; சுற்றிப்பார்க்காவிட்டால் மக்கள் அமைதியுடனிருக்கமாட்டார்கள், என்பார். உண்மை எதுவென்றால் அவர் 'நாட்குறிப்பு' எழுதுமளவிற்கு எங்கும் 'முகாம்' செய்வதில்லை. நகரிலிருந்து 50 மைல்களுக்கப்பால்தான் 'டேரா' போடப்பட்டிருக்கும். கச்சேரி யாட்கள்தான் அங்கு விழுந்து கிடப்பார்கள், ராய்ஸாஹிப் வீட்டில் அரட்டைக் கச்சேரி நடத்திக்கொண்டிருப்பார். ஆயினும் அவருடைய நேர்மையைப்பற்றி யாருக்காவது சந்தேகப்படத் துணிவு உண்டா! அவர் பண்பட்ட சீலரென்பதில் யாருக்கும் ஐயமேற்படாது.

அவரைக்காணச் சென்றேன். அப்பொழுது அவர் வேலைக்காரன் தமடியை அதட்டிக்கொண்டிருந்தார். அவன் முழுநேர வேலையாள். சாப்பாட்டிற்குமாத்திரம் வீட்டுக்குப்போவான். பக்கத்தூர்தான், என்னவோ நேற்றிரவு அவன் வரவில்லை. பாட்டு விழுந்து கொண்டிருந்தது.

'முழுநேர ஆளாயிருந்தும் நீ நேற்று வரவில்லை. நேற்றுச்சம்பளம் பிடிக்கப்படும்.'

'எஜமான்! ஒரு விருந்தாளி வந்தார், அதனால் வரவில்லை,'

'சரிதான்! நேற்றுச் சம்பளத்தை அவரிடமே வாங்கு!'

'ஐயாவே! இனிமே இப்படிப் பெசகு பண்ணமாட்டேன்'

'வீணாக உளறாதே!'

'எஜமான்......!'

'ரெண்டுரூபா அபராதம்!'

தமடி, அழுதுகொண்டே போனான். பாவம்! அபராதம் வந்ததுதான் மிச்சம். அவன் தன் குற்றத்தை மன்னிக்கும்படி கேட்டான் அதுதான் காரணம்.

ஒரு இரவு ஆஜராகவில்லையென்பதற்கு இந்தத் தண்டனை! பாவம்! நாள் முழுவதும் உழைக்கிறான். நேற்று இங்குவந்து தூங்க வில்லை. இதற்கு இந்தத் தண்டனையா! வீட்டிலிருந்தபடி படிச்செலவுப் பணத்தை வாரி வீசுகிறவர்களைப்பற்றி யாரும் கேட்ப தில்லை. அப்படிப்பட்டவருக்கு வாழ்நாள் முழுவதற்கும் நினைவிருக்கும்படியாக வன்றோதண்டனை விதிக்கவேண்டும்! ஆனால் அவர்கள் அகப்படுவது அபூர்வம்! தமடி, புத்திசாலியாக இருந்தால் இரவோடிரவாக வந்து தூங்கியிருக்கலாம். இரவு எங்கிருந்தா னென்று யாருக்குத் தெரியப்போகிறது? ஆனால் ஏழை சாமர்த்தியமற்றவன்.

3

தமடியிடம் கொஞ்சம் நிலமிருந்தது. அவன் மனைவியும் இரண்டு பிள்ளை களும் இரண்டு பெண்களும் விவசாயத்திலீடு பட்டிருந்தனர். இருந்துங்கூட செலவுக்குக் கட்டவில்லை. அரை வயிறு சாப்பாட்டுக் குப்போதும். நிலமோ வெகு குறைவு. அதில் தங்கமா விளையும்! குடும்பத்துடன் அவர் கள் வெளியே வேலைக்குப்போனால் சுகமாக இருக்கலாம். ஆனால் பரம்பரைக் குடியான வன் இதைப் பெருத்த அவமானமாகத்தான் கருதுவான். இந்த அவமானத்திலிருந்து தப்ப வீட்டு வாசலில் இரண்டு காளைமாடு கள் கட்டியிருந்தன. அவனுடைய சம்ப ளத்தில் பெரும்பாகம் மாடுகளுக்குத் தீனி போடுவதில்தான் செலவழிந்தது. அவன் எந்தக் கஷ்டத்தையும் சகிப்பான். விவ சாயத்தை விட்டுக் கூலியாளாக மாத்திரம் போகமாட்டான். சொந்தமாக விவசாயம் செய்பவனுக்கிருக்கும் மரியாதை கூலிக்கார னுக்கேது? ஆனால் சொந்த விவசாயத்துடன் வெளியே, வேலை செய்தால் அவ்வளவு அவ மானமில்லை. மானத்தைக் காப்பற்றத்தான் இருமாடுகள் வாசலில் கட்டப்பட்டிருக்கின் றனவே; மாடுகளை விற்றுவிட்டு யார் முகத் தில் விழிப்பது?

ஒருநாள் அவன் குளிரில் நடுங்கினான். ராய் ஸாஹிப்' ஏண்டா; சட்டைதைத்துப் போட் டுக்கொள்வதற்கென்னகேடு?' என்று கேட் டார்.

,எஜமான்! வயிறு நிறையச் சோறே கிடைக் கலியே; சட்டை எப்படி தைக்கிறது?'

''மாடுகளை விற்கிறதிற்கென்ன?'' நூறு தடவைகள் சொல்லிவிட்டேன். உன் மூளைக் குப் புலப்பட்டால் தானே!''

''எஜமான்! சொந்தக்காரங்களுக்கு, மூஞ் சியைக் காட்ட முடியாது. பொண்ணுக்குக் கலியாணம் நடக்காது. சாதியை விட்டுத் தள்ளிடுவானுங்க''

''சரி; சரி, இந்தமாதிரி முட்டாள் தனத் தினலேதான் உங்கள் நிலைமை, இப்படி யிருக்கிறது. இப்படிப்பட்டவனுகளுக்கு இரங்கினாலே, ஆறு மாதத்துப்பாவம்! (என்னை நோக்கி) ஏன் முன்ஷீஜீ! இந்தப் பைத்தியத்திற்கு மருந்துண்டா? குளிர்லே விறைக்கிறானுக. வாசல்படியிலே மாடுகள் கட்டியிருக்கணுமாம்!''

''அதெல்லாம் அவரவர் அனுபவம்'' என்றேன். ''இந்தமாதிரி சுபாவத்திற்கு ராம் ராம் ஸலாம்! எங்கள் குடும்பத்திலே, பல தலை முறைகளாக 'ஜென்மாஷ்டமி' கொண்டாடுவதுண்டு. ஆயிரக்கணக்கில் பணம் தண்ணீர் மாதிரி செலவழியும். கச் சேரிகள், விருந்துகள், சுற்றத்தாருக்கு வெகுமதிகள் ஏழைகளுக்குத் துணிமணிகள் இப்படிச் செலவழியும். என் தகப்பனார் செத்துப்போன மறுவருஷமே நான் பண்டிகையை நிறுத்தி விட்டேன். இதிலே லாபம்? பணத்துக்குப் பிடித்த தலைவலி தான் மிச்சம். ஊரிலே சொந்தக்காரப் பயலுகள் வம்பளந்தானுக. நன்றாக முட்டிக் கொள்ளட்டுமே! ஒருத்தன் நாஸ்திகன் என்றான். ஒருத்தன் 'கிறிஸ்துவன்! என்றான். நான் லட்சியம் செய்தால்தானே! கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஒரு வழியாக வம்பு ஓய்ந்தது. பெரிய வேடிக்கை! யாருவீட்டிலே யாவது கலியாணமென்றால், இந்த ஐயாவிடந் தான் விறகு வாங்கணுமாம்! பல தலைமுறைக ளாக இந்தப் பழக்கம். தகப்பனார் வேறே இடத்திலே விறகை விலைக்கு வாங்கி இந்தப் பழக்கத்தை நிறைவேற்றுவார். இதெல்லாம் முட்டாள்தனமாயில்லையா? நான், அதையும் நிறுத்தினேன். மற்றவர்களுடைய முட்டல்-மோதல், அழுகையைக் கவனிக்கிறதா என் லாபத்தைக் கவனிக்கிறதா? விறகைத் தானம் செய்வதை நிறுத்தினதிலே மாத்திரம் வருஷத்திலே குறைந்தது ஐந்நூறு ரூபாயா வது மிஞ்சும்! இப்ப எவனாவது மறந்து

போய்க்கூட என்னிடம் வந்து கேட்க முடியுமா?''

மறுபடியும் உள்ளத்தில் யார் பண்பட்டவரென்ற கேள்வி எழுந்தது. ''குலப்பெருமைக்காகப் பிராணனை விடும் எழுத்து வாசனையற்ற தமடி பண்புடையவனா! பண ஆசையில் குல மரியாதையைப் பலியிடும் ராய் ரத்னகிஷோவா?''

4

ராய் ஸாஹிப்பின் நீதிமன்றத்திலே வெகு முக்கியமான வழக்கு தீர்ப்பிற்கு வந்தது. நகரிலே ஒரு பெரிய புள்ளி கொலைக்குற்றத்தில் சிக்கிவிட்டது. ஜாமீனில் விடுதலைபெற இல்லாத முகஸ்துதிகளும் கூழைக் கும்பிடுகளும் வேண்டியிருந்தன. இதுவோ ''கவுரவப் பிரச்னை,'' இதனாலே.. என் பணத்தை முழுவதையுமே, விற்றாலுஞ்சரி இதிலிருந்து குற்றமில்லை யென்று தப்பிவிடவேண்டும்'' என்று கூறினான் பெரும் புள்ளி. காணிக்கைகளும், சிபார்சுகளும் சென்றன. ஆனால் ராய்ஸாஹிப் சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. பெரும்புள்ளியினுட்களுக்கோ, நேரடியாக லஞ்சத்தைப் பற்றிப் பேசத் துணிவில்லை. ஒன்றும் பலிக்காமல் போகவே பெரும்புள்ளியின் மனைவி ராய்ஸாஹிப்பின் மனைவியுடன் உறவாடி விஷயத்தை முடிவுக்குக் கொண்டுவர முயன்றாள்.

இரவு மணி 10, இரண்டு ஸ்திரீகளும் பேசிக்கொண்டிருந்தனர். இருபதாயிரத்தைப்பற்றித்தான் பேச்சு! இதைக்கேட்டதும் ராய்ஸாஹிப்பின் மனைவி ஓடோடியும் வந்து கணவனிடம் கூறினாள்-'நீங்கள் வாங்கிக்கொள்ளாவிட்டால் நான் வாங்கிக் கொள்வேன்.'

'' பதட்டப்படாதே ! உன்னைப்பற்றி அவள் என்ன எண்ணுவாள்? சுயகவுரவத்தைக் கவனித்தாயா! பெரும்புள்ளிதான்! தொகையும் பெரியது. வருங்காலத்திட்டம் போட்டிருக்கிறாயே; அதிலிருந்து நான் பிழைத்துக்கொள்ளலாம்! இருந்தாலும், ஒரு ஸிவிலியனின் கவுரவமும் இலேசில்லை. நீ முதலிலே சொல்லியிருக்கவேண்டும் - அனாவசியப் பேச்சு வேண்டாம்! போய்விடு! இதெல்லாம் காதாலே கேட்கவே பிடிக்கவில்லை! என்று.

''சொல்லாமலா! திட்டினேன். இது கூடவா தெரியாது? பாவம்! என் கால்களைப் பிடிச்சிண்டு அழுதா. ''

''இது அவர் காதில் பட்டால் என்னைப் பச்சையாகச் சாப்பிட்டு விடுவாரே! '' என்று சொன்னியா?

தழுதழுத்த குரலில் கூறி, ராய்ஸாஹிப் மனைவியை அணைத்துக்கொண்டார்.

''எத்தனையோ தட்டிக்கழித்தாய்விட்டது. ஒழியற வழியைக் காணோம். அழுதழுது பிராணனை விடுகிறாள். ''

''சரி. வாக்குக் கொடுக்கலியே!''

''வாக்கா? ரூபாயை வாங்கி இரும்புப் பெட்டிலே வெச்சுட்டேனே! எத்தனை நோட்டுகள்! ''

''அடி முட்டாளே! ஈசுவரன் உனக்குப் புத்தியை என்னிக்கித்தான் தரப்போகிறானோ தெரியவில்லை.''

''இனிமே எங்கே கொடுக்கப்போறான்?''

''என்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. இரும்புப் பெட்டிக்குள்ளே வெச்சுட்டாளாம்! பார் வெளியிலே தெரிஞ்சுதோ தலைகாட்ட முடியாது.''

''யோசிச்சுப் பாருங்கள் ! ஏதாவது இடைஞ்சல் வருமின்னால், பணத்தைத் திருப்பிக் கொடுத்துடுறேன்.''

''மறுபடியும் முட்டாள்தனம்! சரி, நடந்தது நடந்து விட்டது; கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு ஜாமீனை ஏற்கலாம். உன் முட்டாள்தனத்திற்கு வேறு ஜோடியே கிடையாது! இந்தக் காரியம் பாம்புவாயிலே விரலை வைத்துப் பார்க்கிறது மாதிரி! எனக்குப் பிடித்தால்தானே? உனக்குப் பொறுமை கிடையாது. உன் பேராசைக்கோ என் விரதம் பலியாக வேண்டியிருக்கிறது. இதில் தலையிடக்கூடாதென்று உறுதியுடனிருந்தேன். உன்னால் சிந்திக்கும் சக்தியையும் இழந்துவிட்டேன்.''

''சரி! திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்.''

''நானும் விஷத்தைக்குடித்துச்சாகணும்!'' இங்கு, தம்பதிகளினிடையே நடிப்பும் அபிநயமும்! அங்கு, தமடி கிராமத்தலைவனின் வயலில் சோளத்தையறுத்துக் கொண்டிருந்தான். அன்றிரவு விடுமுறை பெற்றான். வீட்டிலே, மாடுகளுக்கு ஒரு தானியத் துரும்புகூடக் கிடையாது. சம்பளம் வாங்க எவ்வளவோ நாட்கள் நெடுஞ்சுவராய்

நின்றன! புல் வாங்கப் பணமில்லை குடியானவனிடம். வீட்டில் மாடுகளுக்குக் கொஞ்சம் புல்லறுத்துப் போட்டார்கள். அது மாடுகளுக்குப் போதுமா!'' யானைப்பசிக்குச் சோளப்பொரி'' மாதிரிதான்.

தமடி, மாடுகள் பசியால் வாடுவதைக் கண்டு துடித்தான். அவனைக்கண்ட மாடுகள் வாலை நிமிர்த்திக் கத்தின. அவன் அவற்றினருகிலே சென்றான். மாடுகள் அவனுடைய கைகளை நக்கத் தொடங்கின. பதைபதைத்தது மனம்! சரி, இப்ப ஒன்னும் முடியாது. பொழுது விடியட்டும், யாரிடமாவது கடனாவது வாங்கித் தீனி கொண்டுவருவேன்'' என்றான்.

இரவு மணி 11. கண்களைத் திறந்தான். மாடுகள் அப்பொழுதுங்கூட தீனித் தொட்டியினருகில்தான் நின்று கொண்டிருந்தன. இரண்டு மாடுகளும் அவனிடம் கெஞ்சி, பிச்சை கேட்பது போலத் தோன்றின. அந்த வாயில்லாப் பிராணிகளின் "பசியை"—வேதனையை—துடிப்பைக் கண்ட துக்கத்தில் அவனுடைய கண்கள் கண்ணீர் குளங்களாயின! குடியானவனுக்கு மாடுகள் தங்கள் குழந்தைகளைவிடப் பிரியமானவை. அவனுடைய உழைப்பில் மாடுகளுக்குப் பங்குண்டு. மாடுகள் விவசாயப் பாட்டாளியின் சம பங்காளிகள்! மாடுகள் நிலத்தொழிலாளியின் நம்பிக்கை வாய்ந்த தோழர்கள்! பட்டினியால் வாடும் பிராணிகளைப் பார்த்தான் பாட்டாளிமகன்! உறக்கம் ஓடி ஒளிந்தது. அவன் எதோ யோசித்தான். கையில் அரிவாளை யெடுத்துக்கொண்டு வெளியே போனான். கிராமத்தின் வெளியே ஆற்றுப் படுகையிலே கம்பும், சோளமும் விளையும் வயல்கள். கதிர்கள் செழிப்புடன் வளர்ந்து வானை நோக்கியவாறு அசைந்தாடின காற்றில். குடியானவனின், கைகள் நடுங்கின. ஆனால் மாடுகளின் நினைவு வந்ததும், எதோ உணர்ச்சி அவனைத் தூண்டிவிட்டது. விரும்பியிருந்தால் எத்தனையோ சுமைகள் அறுத்திருக்கலாம். திருடுகிறான் அவன்; ஆனால் திருடனல்ல. இரவு முழுவதும் மாடுகளுக்குப் போதுமான அளவுதான், அறுத்தான். யாராவது பார்த்தால்கூடச் சரிதான். மாடுகள் வாடுகின்றன பசியால்! அதனால்தான் அறுத்தேன் பயிரை என்று சொல்லிவிடுகிறேனே! என்று தீர்மானித்துவிட்டான், கொஞ்சம் தீனிக்காக அவனை யாரும் பிடித்துவிட மாட்டார்களென்ற நம்பிக்கையுமிருந்தது. நான் விற்கிறதற்குப் பயிரை அறுக்கவில்லை. அப்படியிருக்க, என்னை எந்தக் கல்மனம் படைத்த பதர் பிடித்துக் கொடுக்கும்? "சண்டைக்கு வந்தால் கேட்டகாசை வீசியெறிந்து விடுகிறேன்'' என்றெல்லாம் பலமாக யோசித்தான். அவனுடைய நிலையே அவனைத் திருட்டுக்குற்றத்திலிருந்து காப்பாற்றிவிடும். திருடன்தான் சுமக்குமளவிற்குத்தானே திருடுகிறான்? அவனுக்கு மற்றவர்களின் லாப நஷ்டத்தைப்பற்றிக் கவலை! கிராம ஜனங்கள் அவன் தீனிச்சுமையை எடுத்துச்செல்லும்போது கண்டித்தது உண்மை, ஆனால் எவரும் அவனைத் திருட்டுப்பழியில் சிக்க வைக்க எண்ணியதில்லை. தற்செயலாகப் பக்கத்துச் சாவடியிலிருந்து ஒரு போலீஸ் சேவகன் அந்த வழியாக வந்தான். பக்கத்து ஊரில் ஒரு பனியா (வைசியர்) வீட்டில் சூதாட்டம் நடப்பதைக் கேள்விப்பட்டு அதில் எதாவது அகப்பட்டதைச் சுருட்டலாமென்று வந்தான். தமடியின் தலையில், சுமையைக் கண்டதும் போலீஸ் சேவகனுக்குச் சந்தேகமேற்பட்டது. இந்தக் கும்மிருட்டிலே யார் தீனியறுக்கிறது? என்னவோ இது திருட்டுத்தனமாகத்தான் நடக்கிறது என்று எண்ணி மருட்டினான்—"டேய்! யாருடா, பாதி ராத்திரிலே தீனியறுப்பது? நில்லுடா அங்கேயே!'

தமடி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். போலீஸ் சேவகன்! பாவம்! அவனுடைய கைகால்கள் மரத்துவிட்டன! நடுங்கியவாறு, "எசமான்! கொஞ்சந்தான் அறுத்தேன். பாருங்கள்''

"கொஞ்சமாவது நஞ்சமாவது? திருட்டுத்தனமே. வயல் யாருடையது?"

தமடி "பலதேவமஹத்தோவின் வயல்''

"சரி'' பறவை சிக்கியது சரியாக. இவன் கிட்டேயும் எதாவது சுரண்டாமல் விடமாட்டேன் என்று எண்ணினான் போலீஸ் சேவகன். ஆனால் அப்பொழுது குடியானவனிடம் பணமேது? அவனைப் பிடித்துக் கிராமத்துக்குள் கொண்டுவந்தான். அங்கேயும் ஒன்றும் கைக்கு ஏறுவதற்கு வழியில்லாமல் போகவே அவனைப் போலீஸ் சாவடிக்கிழுத்துச் சென்றான். வழக்குப்பதிவானது. வழக்கு ராய்ஸாஹிப் ரத்ன கிஷோரின் நீதிமன்றத்திற்கு முன் வந்தது.

இதைக்கண்ட ராய் ஸாஹிப் தமடியினிடம் பரிவு காட்டியிருக்கவேண்டும்;

அவரோ மிகக் கடுமையாக நடந்தார். "டேய்! இதனால் எனக்குக் கெட்டபேருடா! மானமற்றவனே! ஆறு மாதம் ஒரு வருஷம் ஜெயிலுக்குப் போய்விடுவாய்; என் மானந் தானேடா பறிபோகும்" ராய் ஸாஹிப்பின் ஆட்கள் போக்கிரிகள் திருடர்கள் என்று தானே ஜனங்கள் நினைப்பார்கள்? நீ என் வேலைக்காரனாக இல்லாமலிருந்தால் இலேசாகத் தண்டனை கொடுத்திருப்பேன், நீயோ என் வேலையாள். உனக்குக் கடுந் தண்டனை விதிப்பேன். ராய் ஸாஹிப் தம் வேலையாளென்பதற்குச் சலுகை காட்டினார் என்ற அவச்சொல்லை, என்னால் கேட்க முடியாது." என்று இரைந்தார்.

கடைசியில் அவர் அவனுக்கு ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையளித்தார்.

ஆறுமாதங்கள்!

அன்றுதான் பெரும் புள்ளியின் கொலை வழக்கில் அவர் ஜாமீனும் ஏற்றார். நான் இரண்டு விருத்தாந்தங்களையும் கேட்டேன். "பண்பு" என்பது கலைத்திறமையுடன் "மோசம்" செய்வதற்குப் பெயரென்ற எண்ணம் என் மனதிலே, பலமாக உருவாகியது! நீங்கள் எத்தனையோ படுமோசமான செயல்கள் செய்யலாம். உங்களால் அவற்றைத் திரையிட்டு மறைக்க முடிந்தால் நீங்கள் பண்புமிக்கவர் ஆகலாம், கனவானாகலாம், நாகரிகப் பிரஜையாக உலாவலாம்! "ஜென்டில் மேன்" என்றழைக்கப்படலாம்! படுமோசங்களைத் திரையிடத் துணிவும், கலைத்திறமையும் உங்களிடமில்லாவிட்டால், நீங்கள் பண்பில்லாதவர்களாவீர்கள். திருடர்கள்—போக்கிரிகள் என்று ஏசப்படுவீர்கள்! இதுதான் நாகரிகத்தின் நவீனம். படித்தவர்களின் பித்தலாட்டம்! பண்பின் இரகசியம்! ●

ரிஜிஸ்டர் நெ. 1904. தந்தி: "காஸ்மோபாலிடன்"

சிறந்த பரிசுகள்

நீங்கள் கட்டாயம் ஒரு பரிசு அடைவீர்கள்!

எல்லாப் பரிசுகளும் காரண்டியுள்ளவை:

சென்ற கூப்பனின் சரியான விடை

7	1	14	12
15	9	4	6
2	8	13	11
10	16	3	5

மொத்தம் 34

எல்லா சரியான விடை ஒவ்வொன்றுக்கும் ரூ. 1500/- முதல் இரண்டு வரிசை சரியான விடை ஒவ்வொன்றுக்கும் ரூ. 150/- முதல் வரிசை சரியான விடை ஒவ்வொன்றுக்கும் ரூ. 15/-

2-லிருந்து 17 வரையுள்ள எண்களை கட்டங்களில் உபயோகித்து நேராக, குறுக்காக, கீழ்மேலாக எந்தவிதமாக கூட்டினாலும் 38 தொகைவர வேண்டும். ஒரு எண்ணை ஒரு தடவைதான் உபயோகிக்கலாம்

முடிவு தேதி:-28-9-53, **விடை** 7-10-53 **பிரவேசக் கட்டணம்:**- ஒரு **கூப்பனுக்கு** ரூ. 1/-; 3 ரூபாய்க்கு 4 **கூப்பன்கள்** 10 ரூபாய்க்கு 16 **கூப்பன்கள்.**

விதிகள்:— மேல் குறிப்பிட்ட கட்டண விகிதப்படி அவரவர்களுக்கு தேவைப்பட்ட கூப்பன்கள் வெள்ளைக் காகிதத்தில் எழுதி அனுப்பலாம். மணியாடர் ரசீதோ, போஸ்டல் ஆர்டரோ அல்லது பாங்க் டிராப்டோ கூப்பன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். விடை அல்லது வரிசைகளின் சரியான கூபன் அவைகளின் சரியான வரிசைகள் சீல் செய்து மீரத்திலுள்ள பெரிய பாங்கில் வைக்கப்பட்டுள்ளது. ஆங்கில எண்கள்தான் உபயோகிக்க வேண்டும். தபால் போக்குவரத்துகளும் ஆங்கிலத்தில்தான். விரைவான பதிலுக்கு அட்ரஸ் எழுதப்பட்ட ஸ்டாம்புடன் கூடிய கவர் அனுப்பவும். மானேஜரின் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி கட்டுப்படுவதும் ஆகும். உங்கள் கூபன்களை கட்டணங்களுடன் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்புங்கள்

COSMOPOLITAN CORPORATION REGD., (K. C.) P. B. 85
Sadar MEERUT (U. P).

அனுபவம்

உபேந்திரநாத் — தி. சேஷாத்திரி

'உங்களைத்தானே நான் ஹனீபைப் பற்றி யல்லவா சொல்கிறேன்! ஏதோ புது ஏற்பாடு என்று சொல்கிறீர்களே, அதிலே அவனுக்கும் ஏதாவது வழி செய்யக்கூடாதா?'

கேப்டன் ரஷீத் கோட்டின் பொத்தானைப் போட்டுக்கொண்டே வழக்கப்படி அறையில் உலாவிக் கொண்டிருந்தார். அவர் மனதெல்லாம் பத்திரிகை எடுக்கப்போகும் புது அவதாரத்தின் கற்பனையில் ஈடுபட்டிருந்தது. அந்தக் கற்பனையின் வெளிச்சத்தில் அவர் நல்ல தகுதியும் அனுபவமும் வாய்ந்த பத்திராதிபர்களைப் பொறுக்கி எடுத்துவிட்டார். அது மட்டுமா, அச்சகத்திற்கும் தாக்கீது கொடுத்துவிட்டார், எழுத்துக்களைப் புதிதாக வார்க்கச்சொல்லி; தலைமைக் காரியாலயத்திலிருந்தும் உயர்ந்த காகிதம் அனுப்பச்சொல்லி ஏற்பாடு செய்துவிட்டார். அவர் மனக்கண்முன் மற்றும் காரியங்கள் அழகாக நிகழ்ந்தன. பத்திரிகை அழகிய எழுத்தில் சிறந்த காகிதத்தின்மேல் அச்சாகி வெளிவர ஆரம்பித்து விட்டது. இப்பொழுது அதில் சித்திரங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டன. அந்தப் பத்திரிகை எல்லாவற்றிலும் சிறந்து விளங்கி, போர் வீரர்களும் அதை மிகவும் உபயோகமாயிருக்கிறதென்று சொல்லி அதிகம் உபயோகிக்க ஆரம்பித்துவிட்டனர்! இந்த அழகிய ஆனால் புரட்சிகரமான கனவைக் கண்டுகொண்டு ஒரு இன்ப மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும் சமயத்தில்தான் ரஷீத்தின் மனைவி மேலே குறிப்பிட்ட வார்த்தைகளைச் சொல்லி வைத்தாள். அந்தச் சத்தமும் அவர் காதுகளில் நுழைந்து இன்பப் பட்டுப் படுதாவின் நடுவில் ஒரு கிழிவை ஏற்படுத்தியது. அந்தக் கிழிவின் நெளிவுகள் போல் அவர் புருவங்கள் மேலேறின. ஆச்சரியம் கவ்வின கோபத்துடன் அவர் திரும்பிப் பார்த்தார்.

கேப்டன் ரஷீதின் மனைவி ஜமக்காளத்தில் உட்கார்ந்து கொண்டபடியே சாய் தயார் செய்து கொண்டிருந்தாள். கேப்டன் ரஷீத் ஆபீசுக்கு எட்டேமுக்காலுக்கே, அதாவது சரியான நேரத்துக்குக் கால்மணி முன்பே போகவேண்டும் என்று விரும்புபவர். குமாஸ்தாக்கள் வருவதற்குக் குறைந்தது கால் மணிக்கு முன்னமேயே ஆபீசர் தம் இடத்தில் அமர்ந்திருக்கவேண்டும் என்பது அவருடைய கொள்கை. அதற்காகவே அவர் எட்டே கால் மணிக்கெல்லாம் தயாராகி விடுகிற வழக்கம். அந்த நேரத்திற்கு வீட்டை விட்டு வெளியேறுவதற்கு அவர் மனைவி சில முன்னேற்பாடுகள் செய்வாள். கடிகாரத்திற்கு அலாரம் வைத்திருப்பாள். டீயைப் படுக்கை அறைக்கே வரவழைத்து விடுவாள்.

இன்றும் அதே விதம் படுக்கையிலேயே வந்து அமர்ந்த 'டீட்ரே'யில் உள்ள தேநீரில் சர்க்கரையை உருக்கரக்கச் செய்துகொண்டே இருக்கும்போது அவள் உதடுகளில் சங்கோஜத்தால் நிறம் குன்றிய ஒரு புன் சிரிப்பு வந்து அமர்ந்தது; முகத்தில் வேண்டுகோளின் சிவப்பு நிறம் பரந்தது. கடைக்கண்களால் கணவனை ஈர்க்க முயன்று கொண்டே அவள் மீண்டும் சொன்னாள்:

'ஹனீப் இருக்கிறான் பாருங்கள்......!'

இந்தத் தடவை கேப்டன் ஸாகப் சும்மா இல்லை. மனைவிக்கு ஒரு பட்டத்தைச் சூட்டினார்—நீ ஒரு முட்டாள் என்று பட்டம்

தந்த வைபவத்தைக் கொண்டாடுபவர் போல் ஒரு தடவை புருவங்களை நெற்றி நடுவுக்கு ஏற்றி இறக்கிக்கொண்டார். உதடுகளை உருவம் மாற்றி மீண்டும் நிலையில் நிறுத்தினார். பிறகு தேநீர்க் கோப்பையை எடுத்துக் கையில் பிடித்துக்கொண்டு அறையைச் சுற்றி வர ஆரம்பித்தார்.

பேகம் ஸாஹபா பார்த்துக் கொண்டே இருந்தாள். கேப்டன் கணவனுடைய வழுக்கைத்தலை, தலையின் பருத்த பின் பாகம், மெலிந்த கழுத்து, சரிந்த தோள்கள், குதிகால்கள் இவ்வாறாக அவள் பார்வை பிரயாணம் செய்து கொண்டே கால்களில் வந்து சிரமப்பரிகாரம் செய்து கொண்டது. அவர் நடையே மாறிவிட்டது. ஆனால் இன்று அது மாறிற்று? அன்றே, அதாவது கேப்டன் ரஷீத் இந்த வேலையில் என்று அமர்த்தப்பட்டாரோ அன்றிலிருந்தே தான். கால்நடை என்ன மன நடையே மாறி விட்டதே!

முன்னெல்லாம் அவரைப் பார்த்தவர்கள் என்னடா இவன் இப்படி விழிக்கிறானே, ஏதாவது லக்ஷக்கணக்கான ரூபாய்களை ரேஸில் இழந்து விட்டானோ என்று தோன்றும். இன்று அதே பார்வை அதிகாரம் செலுத்தும் பார்வையாக ஆகியிருந்தது. பேசும் போது அவர் வார்த்தையில் தெறித்து வந்த ஏளனம்! எதிராளி அவர் எள்ளும் நகையைக்கண்டு கலங்காமல் இருக்க மாட்டான்.

பேகம்ரஷீத் பார்த்துக் கொண்டிருந்தாள் சற்று நேரம், அவர் கோப்பையை உதட்டுடன் வைத்து உறிஞ்சுவதையும், அங்கும் இங்கும் அலைவதையும். அவள் சின்னம்மா பெண்—அவளுடன் குழந்தை முதல் பழகியவள்—அவளுடைய கணவனைப் பற்றிச் சொன்னதற்காக அவள் கணவன் இந்தப் பட்டத்தைத்



தந்து விட்டார். ஆனால் அவளுக்குக் கோபம் வரவில்லை. அவளுக்குச் சிரிப்பும் ஒரு புறம் வந்தது. அவள் பெரிய மைத்துனன் அவளிடம் சொல்வது வழக்கம். 'ஆகா, இந்த நாட்களில் சேர்க்கிறார்களே சேனையில் ஆட்களை!' என்று அவர் தம் தம்பியை மனதில் வைத்துக் கொண்டு தான் சொல்லியிருக்கிறார் என்று பேகம் ரஷீத் அறிவாள். அவருக்குத் தம்பி ஒருவர் இருந்தார். அவர் ஒரு செய்யுளை இயற்றியிருந்தார்.

'சித்திரம் பார்த்தவன் சிரித்துச் சொன்னான்!'

இதைக்கேட்டு அண்ணிமார்கள் சிரிப்பு வெளியே தெரியாமல் இருக்கத் துணிகளை வாயில் அடைத்துக் கொள்வர். அந்தக் கணவன் இன்று இந்த நிலைக்கு வந்திருக்கிறான்! மனைவிக்கு முட்டாள் என்ற பட்டம் பெறுவது பெருமைக்கு உரிய விஷயமேயல்லவா? இன்று தம்பியாகட்டும் அண்ணனாகட்டும் கேப்டன் ரஷீத்திடம் ஒரு மரியாதையுடன்தான் நடந்து கொள்கின்றனர். கேப்டன் ரஷீத் 'கான் பகதூர்' பட்டம் பெற்ற தம் தந்தையுடைய உதவியில்லாமலேயே, தன் முயற்சி, பொறுப்பு, தகுதி இவைகள் உதவியாலேயே கேப்டனானார். பிறகு இந்த வேலைக்கும் தகுதி எனக் கருதப்பட்டு அமர்த்தப்பட்டார். அன்று அவர் சொன்ன வார்த்தைகளைப் பேகம் ரஷீத் இன்னம் மறக்கவில்லை. இந்த வேலைக்கு முதன் முதலாக இப்பொழுதுதான் ஒரு இந்தியனை அமர்த்தியிருக்கின்றனர். ஐம்பது வருஷங்களாயின—இதுவரை வெள்ளையர்தான் இந்த வேலையைச் செய்து வந்தனர்.

பேகம் மீண்டும் ஒரு மதிப்பும் கனிவும் நிறைந்த பார்வையால் கணவனை முழுக்காட்டினாள். அப்பொழுதுதான் கேப்டன் அவர்கள் டீயைக் கோப்பையிலிருந்து வயிற்றுக்கு மாற்றிவிட்டு ஒரு ரொட்டித் துண்டைப் பற்களுக்கு இடுக்கில் கவ்விக்கொண்டு அங்குமிங்கும் நடைபோட்டுக் கொண்டிருந்தார். பேகம் மீண்டும் சொன்னாள்:

ஷமீம், அவள்தான் என்னுடைய சிறிய தாயார் பெண்—பாவம் நல்ல பெண். என்னிடம் அவளுக்கு உயிர்.

நிறுத்தியவள் தொடர்ந்தாள்:

நான்கு வருஷமாக ஹனீபுக்கு வேலை கிடைக்கவேயில்லை. வீட்டிலும் இரண்டு குழந்தைகள் ஏற்பட்டுவிட்டன......

சொல்லிக்கொண்டே அவள் இரண்டாம் கோப்பை டீ தயார் செய்தாள். கேப்டனோ ஊருக்குப் போகிறவர் மாதிரி நடையைத் துரிதப்படுத்திக்கொண்டேயிருந்தார். நெற்றியில் ஒரு சுளிவு ஏற்பட்டது. கோபம் நடையைப் பழி வாங்கத் தொடங்கிற்று. அவள் தொடர்ந்தாள்:

‘காலம் என்ன முன் போலவா இருக்கிறது? அறுபது ரூபாய் இருந்தால் கூட ஒரு வயிறு கழுவ முடியவில்லை. ஷமீம் என்ன செய்வாள், புருஷன், மாமனார், மாமியார், தான், இரண்டு குழந்தைகள்...’

கேப்டன் ரஷீத் பல்லைக் கடித்துக்கொண்டார். கோபம் வெளியேற வழி தேடுகிறது என்று நன்றாய்ப் புரிந்தது. ஆனால் நல்ல வேளையாகப் பேகம் அவர் முகத்தைப் பார்க்கமுடியவில்லை. அதனால்தான் அவள் மேலும் சொல்லிச் சென்றாள்:

‘ஒவ்வொருத்தன் ஆங்கிலம் எழுத்தே தெரியாதவன் எல்லாரும் இருநூறு முந்நூறு ரூபாய் சம்பாதித்து விடுகிறார்கள். ஹனீப் பீ. ஏ, ஹானர்ஸ் பாஸ் செய்திருக்கிறார். ஆனால் பாவம், காசு இருக்கிறவர்களுக்குத்தானே சிபாரிசும் கிடைக்கும்...!

இனி வெறுப்பு உள்ளே தங்குமா? ஆனாலும் கேப்டன் உதடுகளை இறுக மூடிக்கொண்டார். வார்த்தைகள் வாய்க்குள்ளேயே சிக்கிக் கொண்டன. உதடுகள் வழி விட்டிருந்தால் பேகம் காதில் பின்வரும் பேச்சு விழுந்திருக்கும்—

‘முட்டாள் பெண்ணே! எனக்கு என்ன சிபாரிசின் மேலா இந்த வேலை கிடைத்தது? உழைப்பு, தகுதி, பொறுப்பு இவைகள்தானே உண்மையான சிபாரிசுகள். தவிரவும், ஹனீபுக்கும் எனக்கும் எப்படி ஒத்து வரும்? நான் போட்டிருக்கும் திட்டத்துக்கு அனுபவமும் தகுதியும் வாய்ந்த உழைப்பாளியான பத்திராதிபர் அல்லவா வேண்டும்! ஹனீபா, சோம்பல், தூக்கம் இவைகள் வாடகை இல்லாமல் குடியேறி இருக்கும் இடமல்லவா!’ அவர் இவ்வளவையும் மறைத்து எல்லாவற்றையும் ஒரு கருணையுள்ள பார்வையாக மாற்றித் தம் ‘மூளையில்லாத’ மனைவி மேல் சாற்றினார்! மணியைப் பார்த்தார், எட்டு. ‘எனக்குக் கிளர்க் வேண்டியதில்லையே—பத்திரிகை ஆசிரியரல்லவா தேவை’ என்று சொன்னவர் மழைக்குக் காத்திருந்தவன் மழை விட்டவுடன் ஓடுவானே அந்த மாதிரி ஓடி விட்டார், டீயைக்கூடச் சாப்பிடாமல்.

பேகம், பாவம், சீனி கரைந்து மறைந்துவிட்ட போதிலும் கோப்பையில் கரண்டியை ஆட்டிக் கொண்டே இருந்தாள். அவள் பார்வை கணவன் பின்னாலேயே சென்றுகொண்டிருந்தது—அவன் சென்று மறைந்துவிட்ட போதிலும்.

பரிசு ரூ. 1000

(ஒரு நூதன கண்டுபிடிப்பு)

மாய மோதிரம்

இந்த மோதிரம் அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது. இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும் இம் மோதிரத்தை அணிந்துகொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் வெற்றிபெறுவர். அது உங்களை எல்லாவிதமான ஆபத்துகளினின்றும் வியாதிகளினின்று காப்பாற்றும். துர்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தம் காதலரை (அவரானாலும் அவளானாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவரானாலும் அவளானாலும் உங்களுக்குக் கட்டுப்பட்டு தம் செய்கைக்காக பச்சாத்தாபப்படுவர். நீங்கள் காதல், உத்தியோகத்தில் வெற்றிபெற்று ஏராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க்காப்பாளனாக உதவும். இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல் இரவே காணுங்கள்.

விலை ரூ. 1—15—0 ஸ்பெஷல் ரூ. 3-0-0
மிக சக்தி வாய்ந்தது. ரூ. 3-15-0 போஸ்டேஜ் தனி,
பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

Principal

SHINING MESMERISM HOUSE (C. K.)

KARTARPUR, (Pb.)

* * *

கேப்டன் ரஷீத் வேறு யாருமில்லை, மில்ட்டரி கண்டிராக்டர், கான்பகதூர் ஒருவரின் மூன்றாவது பையன். தம் தமையன்மார் இருவரையும் விட உடல் அளவில் சிறியவராயிருந்த போதிலும் நன்றாய்ப்படித்தார். காலேஜ் படிப்பு முடித்து 'ஜர்னலிஸம்' படித்துப் பாஸ் செய்தார். உடனே கமிஷன் கிடைத்துவிட்டது. கான்பகதூர் பெயர் எவ்வளவு தூரம் வேலை செய்தது என்று அறியாமல் எல்லாம் தம் தகுதியால் வந்தது என்று எண்ணிக்கொண்டிருந்தார், அவர்.

அவரைச் சேனைப் பத்திரிகைக்கு ஆசிரியராக அமர்த்தியிருந்தனர் மிலிட்டரிக்காரர்கள். இந்தப் பத்திரிகை மிகவும் மதிப்பு வாய்ந்த பத்திரிகை. சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன் ஆரம்பிக்கப் பட்ட அந்தப் பத்திரிகை இன்றும் நடந்துவந்தது. அதுமட்டுமல்ல, அதையே ஐந்தாறு மொழிகளிலும் நடத்திவந்தனர். ஆரம்பத்தில் பத்திரிகையின் பக்கங்கள் மொத்தமே இரண்டோ நான்கோ தான் இருந்துவந்தன. ஆனால் ஒவ்வொரு யுத்தத்திற்கும் பிறகு அந்தப் பத்திரிகாலயத்தில் வேலை செய்பவர்களின் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சம் அதிகரித்து வந்தது. அதாவது மொழி பெயர்ப்புக் குமாஸ்தாக்கள் ஓரிருவர் அமர்த்தப்பட்டனர். ஆனால் பத்திரிகை நடத்தும் முறை என்னவோ ஒரே மாதிரிதான் இருந்துவந்தது.

பத்திரிகையில் வெளியாகும் விஷயங்களில் பெரும்பான்மை விஷயம் சர்க்கார் பிரசார இலாகா தந்துவந்தது. உதவி ஆசிரியர், டைபிஸ்டு இருவரும் செய்தி சேகரித்து விடுவர். அதை டைப்செய்து ஒவ்வொரு நகல் ஒவ்வொருமொழிப் பகுதிக்கும் அனுப்பப்படும். அதையேமொழிபெயர்த்து அததில்வெளியிட்டுவிடுவார்கள். ஆங்கிலத்தில் முதலில் வெளியாகாத ஒரு விஷயமும் இந்திய மொழிகளில் பிரசுரமாதல் கூடாது என்று, காயிதா. விஷயத்தையோ தலைப்பையோ மாற்றுதல் கூடாது. அப்படியே மொழி பெயர்க்கப்பட்டிருக்கவேண்டும் அல்லது எழுத்துமட்டும் மாற்றப்பட்டாலும் சரி.

கேப்டன் ரஷீத் இந்த நிலையைப் பார்த்தார்- ரப்பிஷ் என்றது அவர் வாய். உடனே சாகும் போல் இருக்கும் அந்தப் பத்திரிகையில் ஒரு புத்துயிரை ஊட்ட எண்ணி மேல் அதிகாரிகளுக்கு எழுதினார். எழுதிய முறை மிகவும் நன்றாக இருந்தபடியால் அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். அதன் பிரகாரம், ஒவ்வொரு மொழிப்பகுதிக்கும் ஒரு உதவி ஆசிரியர் அமர்த்தப்படலாம்; ஆங்கிலப்பகுதிக்கு கேப்டன் ரஷீத் தவிர ஒரு உதவி ஆசிரியர் நியமிக்கலாம் என்றெல்லாம் நிச்சயமாகி, கடைசி உத்தரவுக்காக நிதி இலாகாவிடம் சிபாரிசு அனுப்பப்பட்டது. அவர்கள் முதலில் நான்கு மொழிப் பகுதிகளுக்கு மட்டும் உதவி ஆசிரியர் வைப்போம்; சரியாக நடந்து பத்திரிகை முன்னேற்றம் காட்டினால் மற்ற இரண்டு பகுதிகளுக்கும் அமர்த்துவதைப் பற்றி யோசிக்கப்படும் என்று சம்மதம் தெரிவித்துவிட்டனர்.

குளிர் நாள். எட்டு மணி அடித்தும் ஆகாயம் கண் திறக்கவில்லை. பூமியும் தூங்கியிருக்கும். ஆனால் மனிதர்கள் விடவில்லை. சோம்பேறிகள் தவிர, அல்லது சோம்பேறிகளாக இருக்க வசதியுள்ளவர்கள் தவிர மற்றவர்கள் விழித்துக் கொண்டுவிட்டனர்.

கேப்டன் ரஷீதுக்கோ வெளிக்கண்கள் கற்பனைக் கண்கள் எல்லாம் திறந்திருந்தன. மனதிலேயே அந்த நான்கு உதவி ஆசிரியர் பதவிக்காக வந்தவர்களைச் சந்தித்துத் தகுதியை ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

அமர்த்த வேண்டியதென்னவோ நான்கு பேர்தான். ஆனால் சண்டைக்காலமாயிருந்தபோதிலும் வந்த அப்ளிகேஷன்கள் அனந்தம். அவைகளில்பொறுக்கி இருபது பேரை வந்து பார்க்கச் சொல்லி எழுதியிருந்தார் கேப்டன் ரஷீத். ஆபீஸ் வரும் போதே இருபது பேரையும் ஒருவாறு கூப்பிட்டுப் பேசிப் பொறுக்கி விட்டார் நான்கு ஆசாமிகளை. ஆபீசுக்கு வந்ததும் சப்ராசி எழுந்து நின்றான். ஒரு சலாம் அடித்தான். ரஷீத் ஸலாமுக்குப் பதில் சலாம் செய்யவில்லை. நேரே சென்று அமர்ந்தார் தம் அரியணையில். உடனே மணியின் தலையைத் தட்டினார் அது. டண்...டண் என்று இரண்டு சத்தத்தைச் செய்து, தன் வேலையை முடித்துக் கொண்டது.

வந்து நின்றான் ஆள். 'பண்டிட்ஜியை வரச் சொல்!' என்று உத்தரவு கிடைத்ததும் அவன் நகர்ந்தான்.

ஆபீசர் முன்னமே வருவதைக்கண்டு அதற்கு முன் காரியாலயத்துக்கு வர ஆரம்பித்தவர்களுள்

பண்டிட் கிருபாராம் முதல்வர். ஐம்பத்தைந்து வயதுதான். அவர் வாழத் தெரிந்தவர். நல்ல பருமனான சரீரம்; வழுக்கைத்தலை; வாயில் பல்லும் இல்லை. வரும்போது வெறும் கிளார்க்காகத்தான் வந்தார். பிறகு கிரமமாக ஹிந்தி உருது குருமுகி பத்திரிகைகளுக்கு மொழி பெயர்ப்பாளராக மாறினார். சில காலம் அந்தப் பத்திரிகைகளை நடத்தவும் நடத்தினார். உண்மை என்ன என்றால் இந்த வேலையை மற்றத் தோழர்கள் செய்ய அவர் ஆபீஸர்களின் வீட்டு வேலையைக் கவனித்துச் செய்தார். பேர் இவருக்கு ஏற்பட, பதவியும் சம்பளமும் உயர்ந்துகொண்டே வந்தன. காக்கை பிடிக்கும் அவர் தந்திரங்களை எல்லாம் வர்ணித்து வியாபார தந்திரத்தை வெளியே விடுவானேன். ஏதோ செய்தார் முன்னேறினார்.

அவர் வந்ததும் கேப்டன் ரஷீத் 'இன்று எவ்வளவு பேர் வருகின்றார்கள்?' என்றார் ஒரு முகவுரையோ, சலாமோ இல்லாமல்.

பண்டிட்ஜீ சப்ராசி வருவதற்கு முன்னமே 'ஸாபு'க்கு சலாம் செய்ய வந்தவரானபடியால் கேள்விக்குப் பதில்சொல்லத் தயாராக வரவில்லை. உடனே 'பைலை' எடுக்கப் பாய்ந்தோடினார்.

கேப்டன் ரஷீத் புதிதாக வந்திருந்த பத்திரிகையை எடுத்தார். முதல் பக்கத்திலேயே தாங்கமுடியாத அச்சுப் பிழைகள். பார்த்ததும் கேப்டன் ரஷீதின் முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஆரம்பித்தது. உடனே வேகமாக அவர் போனில் பேசுவதற்காகப் போனை எடுக்கப் போன சமயம் அதுவே மணி அடித்தது. எடுத்துக் காதில் வைத்துக்கொண்டார். அவர் தகப்பனார் கான் பகதூர் பேசிக்கொண்டிருந்தார்:

'யார், ரஷீத்தானே. சரி. அம்மாவும் சொல்லியிருப்பாள். கொஞ்சம் ஹனீபாவை ஞாபகம் வைத்துக்கொள். நமக்கும் சொந்தக்காரப் பையன் தவிர......'

ரஷீத் தொடரவிடவில்லை. 'என்ன அப்பா இது? நீங்களே இப்படிப் பேசுகிறீர்களே. ஹனீபுக்கும் இந்த வேலைக்கும் தகுதியேயில்லையே!'

'தகுதியில்லையா? பீ. ஏ. ஆனர்ஸ் அப்பா அவன்!'

'பீ. ஏ ஆனர்ஸ் ஆனால் என்ன அப்பா? பத்திரிகாசிரியர் பதவி தனி அப்பா. எனக்கு நல்ல பழக்கமும் தகுதியும் உள்ள ஆசிரியரல்லவா தேவை. ஹனீப் என்ன செய்வான்?'

'சரிதான் அப்பா, எல்லாம் கற்றுக்கொள்கிறான் தானுகா! உழைப்பு உள்ளவன் கற்றுக்கொள்ள முடியாததொன்றுண்டா?'

அடக்கமுடியாத ஆத்திரம் வந்தது ரஷீத்துக்கு. எப்படியோ அடக்கிக்கொண்டு, அப்பா இது ஆபீஸ் அல்லவா; பள்ளிக்கூடம் அல்லவே; நான் இவனை அமர்த்தினால் மேலேயுள்ளவர்கள் என்ன சொல்வார்கள். கீழே உள்ளவர்கள், பழக்கமுள்ளவர்கள்தான் சிரிக்கமாட்டார்களா'

'எல்லாம் தெரியும் அப்பா, சர்க்கார் காரியாலயங்களில் நிரம்பியிருக்கும் முட்டாள் மூட்டைகளை......' அவருக்கு உலகானுபவம் என்ன கொஞ்சமா?

'நீங்கள், என்னை அக்ரமம் செய்யச் சொல்கிறீர்களா அப்பா?' என்று ரஷீத் போட்ட சத்தம் பக்கத்திலுள்ள அறையிலிருந்த குமாஸ்தாக்களின் உள்ளங்களை உறைய வைத்துவிட்டது.

கேப்டன் ரஷீத் போனை டக் என்று வைத்துவிட்டு, கண்கள் சிவக்கத் தலையைத் தூக்கின சமயம் பண்டிட் கிருபாராம் எதிரே நின்றார்.

'நான்...! என்று அவர் பொலபொலத்தார்.

'போகலாம்' என்று சொல்லிவிட்டு, கேப்டன் ரஷீத் எழுந்து, ட்ரவுசர் பைகளில் கைகளை விட்டுக்கொண்டார். அறையின் தளத்தை அவர் பூட்ஸ் கால்கள் பரிசோதிக்க ஆரம்பித்தன. சுவர்கள் எல்லாம் எதிரொலித்தன.

திடீர் என்று அவர் கோபம் அச்சகத்தின் முதலாளி மேல் விழுந்தது. போனை எடுக்கச் சென்றார். அவர் அதிர்ஷ்டம், அதே சமயம் மேஜர் ஸலீமுடைய கார் வர, மேஜர் ஸலீம் ஒரு இளைஞருடன் உள்ளே வந்தார்.

ஸலீமும் ரஷீதும் நண்பர்கள்தாம். ஆனாலும் மேஜர் என்றபடியால் ரஷீத் ஒரு சலாம் போட்டார்.

பிறகு இருவரும் அமர்ந்தனர்.

'இதோ பாரும் ரஷீத். இவர் பெயர் ஜோதி ஸ்வரூப் பார்கவா, பீ. ஏ. இந்தி எழுத்தாளர். இவர் உங்கள் ஹிந்தி பத்திரிகைக்கு உதவியாயிருப்பார்!' என்றாரே ஸலீம். பிறகு அவரே மணியடித்துக் கிருபாராமையும் வரவழைத்தார். அவர் மணியடிக்கும் வரை கிருபாராம் எங்கே காத்திருந்தார். ஓடோடி வந்துவிட்டார்.

'பண்டிட்ஜீ! இவர்தான் ஜோதி ஸ்வரூப் பார்கவா. இவர் ஹிந்தி பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலை பார்க்க வந்திருக்கிறார்!' என்று முத்தாய்ப்பு வைத்துவிட்டார் மேஜர்.

இருவரும் சென்ற பிறகு மேஜர் கேப்டனிடம் சொன்னார்: இவர் கர்னல் சோபடாவின் ஆள்.

எப்படியாவது எடுத்துக்கொள்ளும். அவரும் தகுதியுள்ளவர்தான். ஒன்றும் தொந்தரவு இருக்காது.'

ரஷீத்: 'இவர் எந்தப் பத்திரிகையில் வேலை பார்த்தார்?'

மேஜர்:'இவர் இப்பொழுதுதான்பர்மாவிலிருந்து ஓடிவந்திருக்கிறார். அங்கே ஒரு வியாபாரக் கம்பெனியின் ஏஜண்டாக இருந்தார். அப்பொழுதே 'பர்மா' என்று ஒரு பத்திரிகையையும் நடத்திக்கொண்டிருந்தாராம்.'

ரஷீத்: 'ஆனால் மொழி பெயர்ப்புத் துறையில்......'

மேஜர்: ஓ இரண்டு ஆங்கிலப் புத்தகங்களை ஹிந்தியில் மொழி பெயர்த்திருக்கிறார். 'பன்றி வளர்ப்பு' என்ற புத்தகம் இவர் மொழி பெயர்த்ததுதான். இப்பொழுதும் நம் கர்னல் ஹார்ட்ன் எழுதிய புத்தகத்தை வரிசையாய் ஆங்கிலத்தில் வெளியிடுங்கள். பார்கவா ஹிந்தியிலும் உருதுவிலும் தயார் செய்து விடுவார்'

பிறகு மேஜர் ஸாஹப் நாற்காலியில் தம் பளுவைச் சார்த்திக் கொண்டார். 'ஹர்டன் 'கோழிப்பண்ணை'யால் நம்முடைய சிப்பாய்களுக்கும் லாபமுண்டு. சண்டை முடிந்ததும் அவர்கள் பேசாமல் கோழி வளர்த்து வாழ வசதியாயிருக்கும்' இதை எல்லாம் கேட்க, கேப்டன் ரஷீத் மனம் பற்றி எரிந்தது. ஆனால் மேஜர் என்ன அவர் யோசனைக்கு இடம் தந்தாரா?

'ஆமாம், இவர் அந்த வேலைக்கு 'லாயக்' என்று எண்ணுகிறீர்களா?'' நம் குமாஸ்தாக்கள் கூட மொழிபெயர்த்து விடுவார்கள்' நமக்குத் தகுதியும் பழக்கமுமுள்ள ஆசிரியரல்லவா தேவை?' என்றார் கேப்டன் பல்லிடுக்கால்!

மேஜர் அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் ''நேற்று கர்னல் சோபடா உம்மைப் பற்றி மேலிடத்துக்குச் சிபாரிசு செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்!'' என்றார்.

'என்னைப் பற்றியா?'

'ஆமாம் ரஷீத். இந்தப் பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்தவர்களில் ஒருவரும் மேஜருக்குக் குறைந்து இருந்ததில்லையாம்.'

என்று சொல்லி, கேப்டனை அடக்கிவிட்டு மேஜர் எழுந்தார். பிறகு ஏதோ ஞாபகம் வந்தவர் போல,

'இன்று கூட்டம்.' என்றார் தொடர்ந்து. 'நீரும் வாரும் பிரிகேடியர் சண்டை முனையிலிருந்து வந்திருக்கிறார். நம்மையெல்லாம் சந்திக்க வேண்டும் என்றாராம். சொல்லி எதிர் பார்த்தார்.

'இன்று இண்டர்வ்யூ... வைத்திருக்கிறேன்'

'சரிதான், திரும்பி வந்து விடலாம் வாரும்.'

கேப்டன் ரஷீத் வேறு வழியின்றிக் கிளம்பினார். தம் உதவி அதிகாரியிடம் பார்க்க வருகிறவர்களை இருக்கச்சொல்லுங்கள், வந்து விடுகிறேன் என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்.

மீட்டிங்கில் மிகப் பெரிய விசேஷமான செய்தி நிகழ்ந்தது, சண்டை முனையிலிருந்து திரும்பி வந்த பிரிகேடியர் துரை சொன்னார்.

பத்திரிகைகளில் முக்கியமான வேலையைக் குறிக்கும் சொற்களும் சாஸ்திர சம்பந்தமான சொற்களும் சரியாகவே இருக்கிறதில்லை. அவைகளின் மொழிப்பெயர்ப்பும் அபத்தமாகவே இருக்கின்றன. 'குழி' என்ற பதம் பிசகு. துப்பாக்கி மேடை என்று இருக்கவேண்டும். அங் குழியே கிடையாது, நரிக்குகை என்று ஒ மொழிபெயர்ப்புப் பார்த்தேன். அது ந குகையுமில்லை, நாய்க் குகையுமில்லை. இப்ப ஸ்கோர் கணக்காகத் தப்பிதங்கள் வெளி கின்றன.

இதற்கெல்லாம் காரணம் சண்டை முனை அனுபவம் உள்ளவர் ஒருவர்கூடப் பத்திரி இல்லாதது தான் என்று சொன்ன மிகவும் கோபக்குறிகளையும் குழுவில் இருந்த அதிகாரிகளு துரை சொன்னது சரிதான் எ கள்.

கூட்டம் முடிந்த பிறகு ப கேப்டன் ரஷீதைத் தம் அறை ஒரு ஸிக் சர்தாரைக் காண்பித் முனை அனுபவமுள்ளவர். மொழியில் கிளம்பும் பத்திரி கொள்ளுங்கள். இனி குருமு அபத்தங்கள் நிகழாதிருக்கட்டு டன் ரஷீத் ஒரு மிலிடெரி சல ஸிக் ஸூபேதாருடன் வந்த அலுவலகத்திற்கு.

வரும்போது ஸூபேதா சொன்னார்.

'கேப்டன் ஸாஹப்! என தொழில் ஒன்றும் தெரியா துரை தெரிந்தவர், எனக்கு கள் என்றேன், அவர் இந்த கிறார்.........' என்றார்.

கேப்டன் ரஷீத் கோபித் அவர் மீண்டும் கேட்டார்.

'நீங்கள் எந்தமுனையில் ச றீர்கள்?'. கிடைத்த பதில்

'முனைக்கா? அங்கே பே டிருந்தால் இந்த வேலைக்கு

த கோர் பர்மாவுக்குப் போக
உத்தரவு ஆகியிருந்தது. நான்
பத்தானே இந்த வேலை செய்

ர் ரஷீத்.

சேர்ந்ததும் ரஷீத் பண்டிட்
ூப்பிட்டனுப்பினார். இந்தத்
ன அவரைப் பார்த்துச் சிரித்
கடியர் துரை சொன்னதை
, 'இந்த ஸுபேதாரை
கைக்கு ஆசிரியராக அமர்த்தி
னார். அவர் மேலே என்ன
யூகித்த பண்டிட் அவர்கள்
ம் கவலைப்பட வேண்டாம்.
டமும் இல்லாமல் பார்த்துக்
னார்.

க் கூப்பிட்டார். எல்லாம்
னார்?

எல்லாரையும் கேள்விகள்
து அனுப்பிவிட்டேன்'

ராமா?'

ரஷீத் போய்விட்டார்.

மறுநாள் அவர் காரியாலயத்துக்கு வந்தபோது அவருடன் ஹனீபும் இருந்தான்.

பண்டிட் கிருபாராமை வரவழைத்து, கேப்டன் ரஷீத் ஒரு அகன்ற சிரிப்புடன்.

'பண்டிட்ஜீ! இவர்தான் மிஸ்டர் ஹனீப், பி. ஏ. ஆனர்ஸ். இவர் உருது பத்திரிகை நடத்துவார்!' என்று சொன்னார். பண்டிட்ஜீ கண்களைக் கண்ணாடிகளின் மேல் வழியாகப் பார்க்கச் செய்வதற்காகத் தலையைக் குனிந்துகொண்டு ஒருவித அடக்கத்துடன் சிரித்தார்.

'கேப்டன் ரஷீத் மீண்டும்—' மொழிபெயர்ப்பாளரிடம் சொல்லி, இவருக்கு வேலையைக் கற்றுக்கொடுக்கச் சொல்லுங்கள்!' என்றார்.

கிருபாராம் வாய்திறந்து சொல்லாமலேயே 'நீங்கள் எதற்குக் கவலைப்படுகிறீர்கள். என்று தெரிவித்தார்—

ஹிந்திக் கதை

ublished by N. R. Ramanujam & Printed by S. Rangaswami
e Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

...யல்போ...
படியே இருக்கட்டு...
வண்ணம் படுத்துக்கொ...
உட்கார்ந்திருந்தவளைத் தன்பக...
டான். அவன் மார்பில் சாய்ந்தவ...
வளின் கன்னம் அவன் கண்களில் படவே...
மனம் துணுக்குற்றது. ஐந்து விரலு...
சிவந்து வீங்கியிருந்தது.

என்மனதில் உ...
சக்தி அம்சம் பெ...
பூஜைக்குரிய புஷ்ப...
தலையில்சூடி வாட...
கூடாது' என்றே...
றும். அந்த ஒரு மன...
மையே என் புலனு...
திற்கு உதவிற்று.
காலை அவர்கள் எ...
கேட்டபொழுதுகூ...
தவிதமான மனப்பான்...
தான் தோன்றின...
(என்று காலை நட...
விஷயத்தைச் சொல்...
முடித்து,மூர்த்தியைச்...
டிக்காட்டினதும் மன...

…போய்விட்
…ங்களுடன் பேச அவ
…ன்.'

…த்தியுடன் சேர்ந்து வேண்
…பாடு' என்று தோன்றியது.
…ன்றியது. அதுவீச, வித்வா
…ாகப் போகிறாள்' என்று எக
…ன் மூர்த்தி. பழைய குரோ
…து. அவனுடன் நின்று நீ பேசி
…முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்
…று முடிக்குமுன்,

…ம் பதம்பார்க்கப்பட்டது. கல்யாணம்
…று' என்று சிரித்தவாறு கூறியபடி
…னத்தைத் தடவும் கையைத் தன் கையா
…துக்கொண்டாள்.

…க்குள் கன்னம் சரியாகாது, என்ன
…துவாய்?'

…ப்படாதீர்கள். கையைவைத்துப் படுத்து
…ன்' என்று சொல்லிக்கொள்ளுவேன்.

…விஷயம் சிவஸ்வாமியை ஏமாற்றமுடி
…து. மிருதுவான உன் விரலெங்கே, உறுதி
…ண்ட தடித்த என் விரலெங்கே''

…தெல்லாம் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.
…லோர் முன்னிலையிலும் கன்னத்தில் என்ன?'
…று கேட்டுவிடுங்கள் போதும். இது போகட்

…அந்த லக்ஷ்ய

…நான் வேண்டுவதும் அதுவே
…விஷயம் மன்றாடிக் கேட்டுக் கொள்
…சினிமாவில் நாட்டியமாடியது அதுவே
…கடைசியாகவுமிருக்கட்டும். இனி
…வேண்டாம். அந்த ஆசாமி நேற்று உங்களிடம் அடுத்த படத்தில் ஆட வேண்டுமென்று கேட்டதாகவும் நீங்கள் பார்க்கலாம் என்று சொன்னதாகவும் மூர்த்தி சொன்னான்.'

'சொன்னது உண்மை. உனக்கு இஷ்டமில்லாவிடில் வேண்டாம். அந்த ஒரு படத்திலேயே நம்ம பங்கு லாபம் ஒன்றரை லக்ஷம் என்றால் பார்த்துக்கொள். அம்மாவிடம் அன்று கேட்ட தாபச் சொற்கள்? இன்று அவளே ஆனந்தமடைகிறாள்.

'நீங்கள் பங்கெடுப்பது பற்றி நான் தடுக்கவில்லை.'

'உன் நடனம் இல்லையேல் பங்கு எடுத்தால் அவ்வளவு தான். அம்மா கவலை உண்மையாகிவிடும் சற்று நேரம் ஊடுருவிப் பார்த்த வண்ணமிருந்தார்கள். சற்றுப் பொறுத்து, 'ஹேமா!' என்றான் அன்பு ததும்ப.

'என்ன?'

'இன்று இரவு பன்னிரண்டு மணி அடிக்கும் வரை இவ்வளவு சமீபத்தில் நமது கொள்கை மாறும்' என்று நினைக்கவில்லை.

'என் மனமும் அப்படித்தானிருந்தது. ஆனால் அம்மா இன்று மனம் நொந்து கண்ணீர் விட்டார். (நடந்த விஷயத்தைக்கூறி) பெரியவர்கள் கடுஞ்சொற்களும் ஆசியாக அமைந்துவிடுகின்றன.'

(தொடரும்)

Edited & Published by N. R. Ramanujam & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

மாற்றிவிட்டது. என்றாலும் கஷ்டப்பட்டு உண்டாக்கிக்கொண்ட தூய அன்பை அப்படியே அனுஷ்டிக்க விரும்பினேன். இயற்கை என்னை ஆட்டுவித்தது. உன் முயற்சிதான் இயற்கையை வெற்றிகொள்ளச் செய்தது. அம்மா முதலிய யாவரும் ஒரே முகமாகச் சொல்லும் பொழுது மனம் சஞ்சலம் கொண்டாலும் நீயாகக் கேட்கவேண்டுமென்று நானும், நானாகக் கேட்க வேண்டுமென்று நீயும் எதிர்பார்த்தோம். உன்னை உனக்காக, உன் குணத்திற்காக, உன் தூய அன்பிற்காக, என்மனம் சரணடைந்து எத்தனையோ வருஷங்களாகிவிட்டன. மனம் ஒன்று பட்டது என்பதை மறுக்கிறாயா?'

'எதற்காக மறுக்கவேண்டும்? ஆனால் ஒரு சந்தேகம்?'

'என்ன?'

'இவ்வளவு நாழி நீங்கள் சொன்னது உண்மையாகவா? அல்லது இன்னும் ஏதாவது பரீக்ஷையா?'

'பரீக்ஷைவைக்கும் சக்தி என்னிடமிருந்து அகன்றுவிட்டது. உண்மை நிலை என்பது இதுவரையிலுமில்லாத விதமாக இப்பொழுது நீ என் அணைப்பிற்குள்ளிருக்கிறாயே அதுவே உண்மையை உணர்த்தும். இதுமட்டுமல்ல, இந்த நிமிஷம் முதல் நீயும் நானும் கணவன் மனைவி, நாளையதினமே சென்று ஸ்ரீ நாதசர்மாவின் ஆசிபெற்று வந்து, அடுத்த வாரத்தில் நமது கல்யாணம் நடந்துவிடும். சம்மதந்தானே?' என்று...

'நீங்கள் என்னைப் பேசவிட்டால்தானே பதில் சொல்லமுடியும். இவ்வளவு விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு ஏனிப்படி நடந்தீர்கள்? என்னைப் புரிந்துகொண்ட செய்கையா? அல்லது ....

'நீ என்னைப் புரிந்துகொண்டிருப்பாயோ என்னவோ, எனக்கு முதலில் உன்னைப் புரிந்துகொள்வது கொஞ்சம் சிரமமாகத்தானிருந்தது. புரிந்து கொண்டதும் என் கொள்கையைக் கடைப்பிடிப்பதில் தவறில்லை என்று துணிந்தேன்.'

'எனக்கும் முதலில் உங்களைப்புரிந்து கொள்ள முடியாமலிருந்தபொழுது மிகவும் துன்பப்பட்டேன். புரிந்து கொண்டபிறகே உங்களிடம் மிகமிக நெருங்கிப் பழகலானேன். இப்பொழுதிருக்கும் ஆனந்த நிலைமை? அம்மா. பிரேமாவிற்குக் கொடுத்த வாக்கு நிறைவேறி விட்டது' என்று முடிக்கு முன்,

'என்ன? உன்னிடமும் வாக்குறுதி பெற்றாளா?' என்றான்.

உங்கள் குழந்தை வழக்கம்
போல் சாப்பிடாவிட்டாலும்

சுறு சுறுப்பின்றி இருந்தாலும், வயிறு பெருத்திருந்தாலும் அது ஈரல், குலைக்கட்டி வியாதியாய் இருக்கலாம். இவ்வியாதி மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளிடை சகஜம்.

ஜம்மியின்

லிவர்க்யூர்

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி
வியாதிகளை குணப்படுத்தும்—
வராமலும் தடுக்கும்

இப்பொழுது
மாத்திரைகளாக
தயாரிக்கப்படுகின்றது

ஜம்மி வெங்கடரமணய்யா அண்டு ஸன்ஸ்
"ஜம்மி பில்டிங்ஸ்," மைலாப்பூர், மதருஸ்
பிராஞ்சுகள் :
பெரிய கடைத்தெரு, தெபபக்குளம். திருச்சிராப்பள்ளி;
பெரிய தெரு, கும்பகோணம் மற்றும் இதர இடங்கள்.

'என்னை அடிக்க உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது? எந்தத்தவறுக்காக என்னைத்தொட்டு அடித்தீர்கள்? நினைவு தெரிந்த நாளமுதல் சகலமும் தாங்கள்தான் என்று அன்பு செலுத்தினேனே அது தவறா? தாங்களே தெய்வமென்று பக்தி செலுத்தினேனே அது தவறா? எனது முழு அன்பிற்கும் பாத்திரமான தங்களின் விருப்பம் எதுவோ அதுவே என் விருப்பமாக, லக்ஷ்யத்தைக் கடைப்பிடிக்க, உன் உறவு தேவையென்று தாங்கள் கேட்டதற்காக, அந்த லக்ஷ்யம் காப்பாற்றப்பட உலகத்தாரால் எவ்வளவு வசைச்சொல் கேட்டிருப்பேன், அவையொன்றையும் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் உங்கள் விருப்பம்போல் நடந்தது தவறா? என் சகோதரி, தகப்பனார் யாவரையும் மறந்து, அவர்கள் பேச்சைத் தட்டி, உங்கள் தாயார் சொல்லும் புத்திமதியைக்கூட நிராகரித்துவிட்டு உங்கள் சந்தோஷம்தான் என் வாழ்வின் லக்ஷ்யம் என்று நடந்தேனே அது தவறா? எந்த ஆண்பிள்ளையுடனும் சங்கோசமின்றி, தைரியமாகப் பேசவேண்டுமென்று தாங்கள் கட்டாயப்படுத்தினதெல்லாம் மறந்துவிட்டதா? சற்று நன்றாகச் சிந்தித்துப் பாருங்கள். மூன்று தடவை, தாங்கள் லக்ஷ்யத்தினின்றும் நழுவப்பார்த்தீர்கள். மனம் தடுமாறின சமயம் நான் முயன்றிருந்தால் உங்கள் கொள்கை ஆடிக்காற்றின் பஞ்சின் நிலைமையை அடைந்திருக்குமென்பதை மறுக்கமுடியுமா? என் உணர்ச்சிகளைக் கொன்றுகொண்டு, உங்கள் லக்ஷ்யத்தைக் காப்பாற்ற முற்படும்பொழுது, என் நிலைமை என்னவாகியிருக்கும்? அவைகளுக்கெல்லாம் இதுகைம்மாறா? முதலாக நீங்கள் மூர்த்தியை வீட்டில் அழைத்த பொழுதே எச்சரித்தேன். உங்கள் திருப்திக்காக அவனிடம் சகஜபாவமாகப்பேச எவ்வளவு நாள் கஷ்டப்பட்டு முயன்றிருக்கிறேன். 'கற்பகத்தருவை விட்டுக் காஞ்சிரங்காயை உண்ணும் மனம் படைத்தவள்' என்று நீங்கள் நினைத்தபின்பு என் உயிர் இருந்து என்னபயன்? நாக்கைப் பிடுங்கிக் கொண்டு உங்கள் காலடியிலேயே விழுந்திருப்பேன். ஆனால் அதற்கும் எனக்குச் சுதந்திரமில்லை. இறந்தவருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றியாகவேண்டும். பிரதிபா புருஷன் வீடு சென்றபின்புதான் எனக்கு விடுதலை. அதுவரை? என்னால் சிந்திக்கக்கூட முடியவில்லை. லக்ஷ்யபுருஷரே எதற்காக அடித்தீர்கள்? என்ன உரிமை இருக்கிறது?' என்று அழுதவாறு கூறி நிறுத்தினாள்.

'அவளையே பார்த்துக்கொண்டு நின்றவன் எந்த விதத்தில் உரிமை இல்லை?' என்றான் நிதானமாக.

'எப்படி?' என்றாள். அழுகை நின்றுவிட்டது.

அவளை அடிக்கும்வரை அவன் மனம் கோபத்தின் உச்ச நிலையில் இருந்தது, அடித்த கை விறுவிறுத்ததுமேதான் எவ்வளவு கீழ்த்தரமான உணர்ச்சிக்கு இடம் கொடுத்து விட்டோம் என்ற நினைப்புத் தோன்றலாயிற்று. கோபத்தின் உச்சநிலை குறைந்து விட்டது. அவள் மட மடவென்று சொல்லி வந்த விஷயங்கள் ஒவ்வொன்றும் அவன் ஹ்ருதயத்தைத் தொட்டன. அதிலே மனம் ஒன்றி உணர்ச்சிவசமாகி விட்டது, அவளை எந்த விதமாகச் சமாதானப் படுத்துவது என்ற பிரச்னை தோன்றும் பொழுது அவளது கேள்வி உதவியளிக்கவே சட்டென மனதில் 'தோன்றியதைக் கேட்டு விட்டான். அடுத்த கேளவி யெழுந்ததும் தயங்காமல் 'நீ என் மனைவி' என்றான்.

'என்ன? வாய் கூசாமல் சொல்லுகிறீர்களே? என்ன அத்தாக்ஷி இருக்கிறது'

'என்ன அத்தாக்ஷி வேண்டும்? உலகிற்கு அறிவிக்கவில்லை; செய்கையில் காட்டவில்லை. ஆனால் நமது மனம் என்றோ ஒன்றுபட்டுவிட்டது. உன்னால் மறுக்க முடியுமா' என்று கேட்டவாறு எதிர்பாராதவிதமாக அவளை அருகிலிழுத்து அணைத்துக்கொண்டான்.

அவளையறியாமலே அவள் கைகள் அவன் இடுப்பைச் சுற்றின. தோளின் மீது சாய்ந்து கொண்ட அவளது தான் அடித்த கன்னத்தின் மீது தனது கன்னத்தை வைத்துக்கொண்டான். கொதித்த இரு உள்ளங்களுக்கும் அச்செய்கை சாந்தியைக் கொடுத்தது. சற்றுமுன் நடந்தது கூட அவர்கள் நினைவில் தோன்றவில்லை. பாலைவனத்தில் நெடுநேரம் பிரயாணம் செய்தவர்களுக்குச் சுனைநீரையும் குளிர்ந்த நிழலையும் அடைந்தது போலிருந்தது. அவர்களின நிலை.

சற்றுப்பொறுத்து ஏதோ சொல்ல ஆரம்பித்த ஹேமாவின வாயை மூடி, 'ஒன்றும் சொல்லாதே. என்னால் இனி பொறுக்க முடியாது. ஆத்திரத்தில் மதியைப பறிகொடுத்து மிருகத்தனமாக நடந்து கொண்டுவிட்டேன். லக்ஷ்யம், எனது கொள்கை எல்லாம், மறந்து சாதாரணமாக மனிதனுக்குத் தோன்றும் உணர்ச்சிக்கு வசமாகி விட்டேன். ஹேமா! நீ எனது பொருள். என்னைத் தவிர உன்னிடம் நெருங்கிப் பேச யாருக்கும் உரிமையில்லை என்ற மனப்பான்மை மூர்த்தியைப் பார்த்ததும் தோன்றிவிட்டது அதுவும் நான் உன் மீது கொண்டிருக்கும் அளவற்ற காதலினால் நேர்ந்ததுதான். உண்மையை ஒளிக்காமல் சொல்லுகிறேன் ஹேமா. நீ சிறு பெண்ணாகவிருக்கும் பொழுது ஏற்பட்ட பாசம் உன் பெண்மை மலர்ந்ததும் பிரேமையாக மாறிற்று. பிரேமாவுக்குத் துரோகம் கனவிலும் நினைக்க விரும்பாத என் மனம், மிகுந்த முயற்சியின் பேரில் கைம்மாறில்லாத தூய அன்பாக மாற்றிக் கொள்ளப் பிரயத்தினப்பட்டேன், வெற்றியும் கண்டேன். நீ என்மீது வைத்திரும் அன்பை பக்தியாகக் கொண்டாலும், நீ வேறு யாரையும் விரும்பமாட்டாய்' என்று என்மனம் என்றோ அறிந்துவிட்டது. கலைக்கே உன் வாழ்வு அர்ப்பணம் 'என்ற முடிவைப் பிரேமாவின் மறைவு

தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள் ...



லைப்பாயின்

பாதுகாக்கும் நுரையினுல்!

நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவருமல் ஸ்னுநம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது, உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.



லைப்பாய் சோப்

தினசரித்தொல்லையான கிருமிகளிலிருந்து தினமும் உங்களைக்காப்பாற்றுகிறது

L. 228-50 TM

"எனக்குத் தெரியும்

லக்ஸ் டாய்லட் சோப் உங்கள் சருமத்தையும் எழிலோங்கச் செய்யுமென்று."

இவ்வாறு கூறுகிறுர்

வனஜா



வனஜா கூறுவதாவது:
"இந்த சுத்தமான, வெண்மையான சோப் என் சருமத்திற்கு அளிக்கும் நறுமணத்தை நான் மிகவும் விரும்புகிறேன். சோபைமிக்க சரும அழகைப்பெற நான் செய்வது போல் நீங்களும் செய்யுங்கள். உங்கள் சருமத்திற்கு லக்ஸ் டாய்லட் சோப்பின் 'தினசரி பாதுகாப்பை அளியுங்கள்."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 371-X30 TM

புறத்து நிலவின் சாயை ஒருவர் முகம் மற்ற வருக்கு நன்ருகத் தெரிந்தது. கோபத்தினுல் கடுமை காட்டின முகபாவம் அவளுக்குச் சற்றே பயத்தை அளித்தது.

கையில் மாத்திரையையும் காப்பியையும் வைத்துக்கொண்டு நிற்கும் ஹேமாவைப் பார்த்ததும், கொந்தளித்துக் கொண்டிருந்த அவன் மனதில் சற்று அமைதி தோன்றிற்று. 'குறிப்பறிந்து நடக்கும் இவளை ....' என்ற சிந்தனையை,

'ஆறிப்போகுமுன் இதைச் சாப்பிடுங்கள்' என்று டம்ளரை அவன் பக்கம் நீட்டினுள்.

'எனக்குத் தலைவலியென்று யார் சொன்னது?'

'ஒருவர் சொல்ல வேண்டுமா? உங்கள் முகத்தைப் பார்த்தால் தெரியாதா?'

'என் முகத்தை எப்பொழுது பார்த்தாய்?'

'இதென்ன கேள்வி? ஆறிப்போகு முன் சாப்பிடுங்கள். நீங்கள் இவ்விடம் வரும் பொழுது பார்த்தேன்' என்ருள். அப்படியும் அவன் கையை நீட்டி வாங்காதிருக்கவே அவன் வாயருகில் காப்பியைக் கொண்டு போனுள். அதற்கு மேல் அவனுல் தடுக்க முடியாமல் செய்தது. இதோ ஓர் சக்தி. சட்டென மாத்திரையையும் காப்பியையும் வாங்கி, மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டு மடமடவெனக் குடித்துவிட்டுப் பாத்திரத்தை அவள் பக்கம் நீட்டினுன்.

அதைக் கையில் வாங்கிக்கொண்டு, என்னைக் கூப்பிட்டதாக மாமி சொன்னுளே, என்ன விஷயம்? எனக்கு ரொம்ப அலுப்பாக இருக்கிறது. இன்று சீக்கிரம் அனுப்பிவிட்டால் தேவலை' என்ருள்.

'ஆமாம், இப்பொழுதெல்லாம் என்னுடன்பேச அலுப்பாகத்தான் தோன்றும். மூர்த்தியினிடம் பல்லைக்காட்டிக்கொண்டு பேச, குஷியாக இருக்கும்' என்ருன்.

இச்சொற்கள் சவுக்காலடித்ததுபோல் இருந்தது. மனதின் சோர்வு, தேகத்தின் அலுப்பு எல்லாம் மாயமாக மறைந்துவிட்டது. 'என்ன சொன்னீர்கள்?' என்று நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள்.

'அகாலவேளையில் அவனுடன் தனியாக நின்று என்னபேச்சு?'

'நீங்களா இவ்விதம் கேட்கிறீர்கள்?'

'நானேதான் கேட்கிறேன். நீ பல்லையிளித்துப் பேசுவதை யாராவது பார்த்திருந்தால் என் மானம் கப்பலேறியிருக்கும்'

'தனியாக நின்று பேசவில்லை. எல்லோரும் நடமாடுமிடத்தில் இரண்டே நிமிஷம், இன்று ஆட்டம் அதியற்புதமாக அமைந்தது. மஹா வித்வான்கள் மிக மிகக் கொண்டாடினுர்கள் என்பதைத்தான் சொன்னுன். நானும் வந்தனம் கூறினேன். இதிலென்ன தவறு? இதுவரை பேசாத பேச்சு, புதிதாக என்ன வந்துவிடப்போகிறது?'

'பாதி ராத்திரியில் என்ன பாராட்டுதல் வேண்டியிருக்கிறது? அவனுடன் அந்தமாதிரி நின்று பேச உனக்கு லஜ்ஜையில்லை?' என்று பல்லைக் கடித்தான்.

'இன்று என்ன அளவிற்கு மீறி வார்த்தையைச் செலவழிக்கிறீர்கள்? உங்கள் லக்ஷ்யத்தின்படி நான் பேசியதில் தவறு எப்படி சொல்லமுடியும்? உங்களுடன் இரவு இரண்டுமணிவரை தனியாக உட்கார்ந்து பேசவில்லையா? மனதில் களங்கமில்லாமல், பிறர் சொல்லுவதற்காக என்றில்லாமல் சுயமாக, தைரியமாக நடக்கவேண்டுமென்பது தானே உங்கள் உபதேசம், ஆண்பிள்ளைகள் என்ருல் மூர்த்தியும் அதில் அடங்கினவன் தானே? இதோ இந்தச் சமயம் கதவைத் தாழிட்டு விட்டுப் பேசுகிருேம், இது தவறில்லையா?

'என்ன சொன்னுய்? நானும் அவனும் உனக்கு ஒன்ருடி ராஸ்கல்! எதிர்த்தா பேசுகிருய்' என்று கன்னத்தில் பளீரென அறைந்துவிட்டான்.

எதிர்பாராமல் பலமாக விழுந்த அடியினுல் பொறி கலங்கியது போலிருந்தது. கையினுல் கன்னத்தை அழுத்திய வண்ணம் நின்ருள். கண்களில் நீர்வடிந்து மேலாடையை நனைத்தது. இன்று விடிந்தது முதல் நமக்கு அவச்சொல் கேட்பது தானு கிடைத்த பலன்? மத்யானம் உக்ராண அறையில் சாமான்கள் எடுக்கும்பொழுது திண்ணையில் நாலைந்துபேர் தன்னைப்பற்றி, முன் பிறந்தகம் சென்றபொழுது வீட்டிற்குள் கேவலமாகப் பேசினுர்களே, அதேவிதமாகப் பேசுவதைக் கேட்டபொழுது உள்ளம் கொதித்தது. சற்றுமுன் ராஜாவின் தாயார் தன்னையே குற்றம் சாட்டிப் பேசினுள். இப்பொழுதோ, எவனுல் தனக்கு அளவற்ற, பெயரும், புகழும் கிடைத்ததோ அவனுல் பெண்மை தாக்கப்படுகிறது. சற்றுமுன் அம்மாவினிடம் உத்ஸவம் முடிந்த பின் கேட்பதாகச் சொன்ன விஷயம் இன்றே இரண்டிலொன்று தீர்ந்துவிடும்' என்ற சிந்தனையில் தவித்தது மனம். தற்சமயம் என்ன செய்வது? என்று குழம்பினுள்.

'அதே சமயம் ராஜாவின் மனமும் தாபத்தை அடைந்தது. அடித்த கை விறுவிறுப்பு அடங்கவில்லை. கண்ணீருடன் நிற்கும் அவளை நிமிர்ந்து நோக்கினுன். மனதில் எழுந்த ஆத்திரம் சற்றுத் தணிந்தது. மடத்தனமாக அடித்துவிட்டோமே என்ற எண்ணம் தோன்றலாயிற்று. ஆனுலும் அவள் மேலே என்ன சமாதானம் சொல்கிருள் பார்க்கலாம் என்ற ஆக்ரஹமே மேலெழுந்தது. அந்தச் சமயம்,

விட்டாய்? அப்படியே மூடிவை. என்ன வேலைக்காரர்கள்? சாமான்களைக் கவனிப்பதேயில்லை, போகட்டும். நீ போய்ப் படுத்துக்கொள். எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொண்டு வருகிறேன்.'

'இருவருமாகப் பார்த்தால் சுருக்க முடியும். இருவருமே படுக்கச் சென்றுவிடலாம். உங்களைத் தனியே விட்டுவிட்டுப் போக மனம் வருமா?'

'ஆமாம். வளைய வளைய வேலை செய்ய வருகிறாய். எனக்கு எவ்வளவோ ஹிதமாக இருக்கிறாய்? எல்லாமிருக்கிறது. ஆனால் முக்யமான விஷயத்தில் துப்பில்லை' என்றாள் அலுப்பாக.

'என்னம்மா சொல்லுகிறீர்கள்?' என்றாள் இரக்கத்துடன். அது வரை அம்மாதிரியான வார்த்தைகள் கேட்டவளல்லவாதலின்.

'சொன்னேன் சுரைக்காய்க்கு உப்பில்லையென்று. வயது பத்தொன்பது ஆகப்போகிறது. ஒரு புருஷனைத் தன் வழிக்குக் கொண்டு வரச் சாமர்த்தியமில்லை. அழகிருந்தென்ன? ஆட்டமிருந்துமென்ன? ஊரார் வசைச்சொல்லைக் கேட்டுக் கேட்டுக் காது புளித்துவிட்டது இது வரை மறை முகமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இன்று முகத்திற்கு முன்னேயே கேட்டுவிட்டார்கள். இன்று வரும் நல்ல செய்தி, நாளை வரும் என்று என் மனம் ஏங்கி ஏங்கித் தவிப்பது தான் மிச்சம். இரவு நிலவானாலுமே இருட்டானாலுமே மொட்டை மாடியில் உட்கார்ந்து பேசுவது வழக்கம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அந்தச் சமயம் போதாதா உன் சக்தியைப் பிரயோகம் பண்ணுவதற்கு ஏதாகிலும் துள் அகப்பட்டால் போதும். அதை வைத்துக் கொண்டு அவனை மடக்கலாம் என்று நானும் எவ்வளவோ இரவு அவ்விடம் வந்து மறைந்து நின்று பார்த்திருக்கிறேன். அப்பா! என்ன வைராக்கியம்? வயது சென்ற கிழவர்கள் கூட இவ்வளவு நிர்ணயமாக நடந்து கொள்ளமாட்டார்கள். என்னவோ உங்களுக்குப் பேசவும் விஷயமிருந்தது. அலுத்துப் போய், கீழே இறங்குவேன். அவன் தன் ஆட்சியைச் செலுத்துவதற்கு நீ தான் காரணம். என்னால் இனிமேல் வெளியில் தலைகாட்ட முடியாது. காசியிலேயே போய் என் காலத்தைக் கழிக்கிறேன். நீயும் அவனுமாகவே எல்லாவற்றையும் கட்டிக் கொள்ளுங்கள்' என்றாள். அன்று மத்தியானம் நாலைந்து பேர் கேட்ட கேள்வியினால் மனம் புண்பட்ட நிலைமையில்.

அது வரை அதிர்ந்து பேசிக்கேட்டறியாதவளின் வாயில் கடுமை மொழிகளைக் கேட்டதும் ஹேமாவிற்குப் பூமி வெடித்துத் தன்னை விழுங்கிவிடாதா?' என்று தோன்றினது. நீ தான் காரணம் என்ற குற்றச்சாட்டை மனம் ஆமோதித்தது. தாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மடக்கப் பிரயத்தனம் செய்யப் போக விபரீதமாகப் பேச்சுக் கிளம்ப ஹேதுவாயிற்று. நாம் மீள முடியாத 'தங்க வலையில் மாட்டிக்கொண்டுவிட்டோம். 'வலை தங்கம்' என்றால் அவஸ்தை அவஸ்தை தானே' என்று எண்ணிய மனம் கண்ணீர் ததும்பச் செய்தது. நான் என்ன செய்யட்டும் அம்மா?' என்றாள்.

'இதைப் பார். உனக்கு உன் அழகை உபயோகப்படுத்தச் சக்தியில்லை. அதனால் இந்த மாதிரி வசைச்சொல் என்னைக் கொல்லாமல் கொல்லுகிறது. கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமில்லாவிட்டால் விட்டுவிடு. எங்காவது போகிறேன்' என்று கேள். துணிந்து வாதாடு. நானிருக்கிறேன் உன்னைப் பாதுகாக்க' என்றாள்.

'சரி. உத்ஸவம் முடியும் வரை ஒன்றும் பேச முடியாது. கடைசி நாளன்றே கேட்டுவிடுகிறேன்' என்றாள்.

இருவரும் வெளியே வந்தார்கள். பின்னால் வந்த ஹேமாவினிடம் பண்ணையாள் மாரிமுத்து 'ஹேமா! நம்ம குழந்தை இரண்டாம் மொட்டை மாடியில் இருக்கு. உன்னை செத்தெ வந்துட்டுப் போவச் சொல்லிச்சு' என்றான்.

இது ராஜாவின் தாயின் காதிலும் பட்டது. என்றாலும், மனதிற்குள் சிரித்தவாறே திரும்பிப் பாராமல் படுக்கச் சென்றுவிட்டாள்.

சற்று நின்று சிந்தனை செய்தாள். சமையல்காரன், 'ராஜா இன்று நேராகச் சாப்பிடவில்லை. ரசம் சாதம் மட்டும் சாப்பிட்டார்' என்று சொன்னது நினைவில் வரவே, மறுபடி உள்ளே சென்று, அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த பாலைவிட்டுச் சூடாக ஒரு டம்ளர் காப்பியை எடுத்துக் கொண்டு தன்னறைக்குள் சென்று, தலைவலி மாத்திரை ஒன்றையும் எடுத்துக் கொண்டு மாடிப்படி யேறும் ஹேமாவைக் கவனித்த ராஜாவின் தாய்க்கு, 'ஐயோ இந்தப் பெண்ணைக் கடுமையாகப் பேசிவிட்டோமே. தாய் தந்தையற்று நம்மையே கதியென்றிருக்கும் அதற்கு ஆறுதல் யார்? போய் வரட்டும், சமாதானம் சொல்லுவோம்' என்று நினைத்ததுடன், ராமச்சந்திரா இன்றாவது அப்பெண்ணிற்கு இரங்கமாட்டாயா' என்று வேண்டிக்கொண்டாள்.

இரண்டாவது மொட்டை மாடிக்குப் படியேறியதும் ஓர் அறை போலிருக்கும். ஆனால் வராண்டா பக்கம் சுவர்கிடையாது. கோடைக் காலத்தில் காற்றோட்டமாகப் படுத்துக்கொள்ள, சந்திர வெளிச்சம் மேலே படாமலிருக்கும்படி கட்டியது. அவ்விடம் ஒரு சாய்மான நாற்காலியும், மூன்று நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. ஹேமா அவ்விடம் வரும்பொழுது சாய்மான நாற்காலியில் படுத்துக்கொண்டிருந்தான் ராஜா. அவள் வந்ததும், சட்டென எழுந்து கதவைத் தாழிட்டான். ஒரு நாளுமில்லாத இச்செய்கை அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. அந்த இடத்தில் நிலவில்லையானாலும் வெளிப்

கள் சுடர்விட்டுப் பிரகாசிக்க, அரக்கும் ஜரிகையும் கலந்த ஆடையுடுத்தி, கைகூப்பியவண்ணம் நின்றாள் ஹேமா.

வழக்கப்படி நட்டுவனாரையும், ராஜாவையும் காலைத்தொட்டு வணங்கிவிட்டு, ஆட ஆரம்பித்தாள். அலாரிப்பு, ஜதிஸ்வரம், ஸ்வரஜித் முதலியவைகளை வரிசைப்பிரகாரம் ஆடிவிட்டு வர்ணமும் ஆடினாள். பிறகுதான் பஞ்சரத்னக் கீர்த்தனைகளுள் ஒன்றாகிய ஸ்ரீராகக்கீர்த்தனைக்குப் பாவம் பிடித்தாள். "எந்தரோ மஹானுபாவோ அந்தரிகி வந்தனமு" என்ற பாட்டை மூர்த்தி கீழ்ஸ்தாயியிலும், விஜயாமேல் ஸ்தாயியிலுமாகச் சேர்ந்து பாடினதும், நடனத்திற்கேற்ற உடலமைப்புக் கொண்ட அதிசௌந்தர்யவதியான ஹேமா அனுயாசமாக ஆடினதும் பாட்டின் ஒவ்வொரு பொருளும் உருப்பெற்று வந்து நிற்பதுபோலிருந்தது யாவர் மனதிலும், வந்திருந்த மஹாவித்வான்களைக் குறித்துச் சொல்லுவது போலமைந்தது அவளது ஆடல்.

அப்பாட்டு முடிந்ததும், மனநிறைவு மிகுதியால் முன் வரிசையிலிருந்த பிரமுகர்கள் கரகோஷம் ஆரம்பித்தனர். ஹேமா உள்ளே சென்றதும் பிரதிபாவின் ஆடல் நடந்தது. குழந்தை மேடை மீது தோன்றினால் கேட்பானேன். யாவர் மனதிலும் ஒரே குதூகலம். கிருஷ்ணன் வேஷம் போட்டிருந்தது மிகப்பொருத்தமாக இருந்தது. 'ஓடி விளையாடு பாப்பா' என்ற பாட்டிற்கு, எதிரில் நிற்கும் பொம்மையைப் பார்த்துக் கொண்டே அபிநயம் பிடித்தாள். கரகோஷம் மண்டபமே அதிர்ந்தது.

'அடுத்தாற்போல் 'காதலி ராதையைக் கலங்க விட்டான் மலர்க்கண்ணனே' என்ற பதத்திற்கு ஹேமமாலினியும் பேபி பிரதிபாவுமாக அபிநயம் பிடிப்பார்கள். இதைக் கற்பனை செய்தவர் ஸ்ரீமதி ஹேமமாலினி.' என்று ஒலிபெருக்கியின் மூலம் சிவஸ்வாமி சொன்னதைக் கேட்ட ராஜாவின் முகம் ஆச்சர்யத்திலமிழ்ந்தது, மறுகணம் 'நம்மையறியாமல் ஒரு ஏற்பாடா?' என்ற வருத்தம் தோன்ற நட்டுவனாரைத் திரும்பிப் பார்த்தான்.

'குறிப்பையுணர்ந்த நட்டுவனார், அவள் கற்பனை செய்தது என்பது நீங்களறிந்த விஷயமே, குழந்தையுடன் இன்று ஆட ஏற்பாடு செய்தது நான் தான். திடீரென்று இன்று தான் தோன்றினது. உங்களைப் பார்த்துப் பேச அவகாசமே இல்லாமல் போய்விட்டது' என்றார்.

அவன் மனம் சமாதானமடையவில்லை. காலைச் சம்பவம் சற்று மறந்துபோயிருந்தது. இப்பொழுது மறுபடி கலக்கம். 'மூர்த்தியின் வேலை தான். நம்மைக் கலந்து கொள்ளாதது' என்று எண்ணினான். இருந்தாலும் சமயத்தை வீணாக்கக்கூடாது. குழலூதினான். ஹேமா ராதையாகவும், பிரதிபா கண்ணனாகவும் நடித்தார்கள். கடைசியில் கிருஷ்ணன் ராதையை அணைத்துக் கொள்ள வேண்டும் என்ற சமயம் ஓர் அடி பாக்கியிருந்ததை ஆடிவிட்டு உட்கார்ந்து கொள்ளுவதற்கு முன், 'அம்மா! உக்காந்துக்கோ கட்டிக்கிறேன்' என்றாள் குழந்தை. ஒரே சந்தோஷ ஆரவாரத்தின் நடுவில், மண்டியிட்டுக்கொண்டு உட்கார்ந்த ஹேமாவை அணைத்துக் கொள்ளும் காட்சியுடன், மங்களம் பாடி நடனம் முடிந்தது.

வந்திருந்த வித்வான்கள் கற்பித்த நட்டுவனாரையும், ஹேமாவையும் புகழ்ந்து கூறியதுடன், இவைகளுக்கு முயற்சியளித்த ராஜாவைப் பெரிதும் பாராட்டினார்கள். அதில் வயது சென்றவரும் சரளமாகப் பேசக்கூடியவருமான ஒருவர் 'இக்குழந்தைக்கு' என்று கேட்டு முடிக்கு முன்,

'மிஸ்டர் ராஜாவிற்கு மனைவியாகப் போகிறாள், என்றான் மூர்த்தி.

கடுமையாகத் திரும்பிப் பார்த்தான் ராஜா.

எல்லாம் முடிந்து யாவரும் சாப்பாடாகி, அவரவர்கள் படுக்கச்செல்ல மணி பதினொன்றரையாகிவிட்டது. வேலையாட்களை அனுப்பிவிட்டு, கதவுகளைத் தாழிட்டு வந்தாள் ராஜாவின் தாய். சமையலறையில் சாமான்களைச் சரிபார்த்து மூடிக்கொண்டிருந்த ஹேமா. 'அம்மா இது ஏது நெய் திறந்தபடி இருக்கே?' என்று கேட்டாள்.

'இவ்வளவு நாழி ஆடிவிட்டு, அலுப்புத் தீரப் படுத்துக்கொள்ளாமல் வேலை செய்ய வந்து

'சரி. 'சற்றுப்படுத்துத் தூங்கிக்கொள். உடம்பு தெம்பாக இருக்கும். இன்று அதிக வேலை செய்யாதே' என்று சொல்லிவிட்டு அருகில் நின்ற குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு விட்டுச் சென்றான். மடத்தில் அவர்களின் சம்பாஷணையினால் மனம் வெதும்பி வந்தவன் ஹேமாவைப் பார்த்துவிட்டுச் செல்லும் பொழுது நிம்மதியாகவே சென்றான்.

பக்கத்து ஊர் ஜனங்களின் ஸௌகரியத்தை உத்தேசித்து உத்ஸவம்முழுவதும் கச்சேரியோ நடனமோ ஐந்தரைமணிக்கு ஆரம்பித்து இரவு ஒன்பதரைக்கு முடியும்படி ஏற்பாடு செய்திருந்தான். பத்து நாட்களுக்கும் கம்பெனியில் ஒப்பந்தம் பேசி, பஸ்விடவும் ஏற்பாடு செய்திருந்தான்.

விசாலமான பெரிய மண்டபம் (ஹால்). நடுவில் தூண்களே இல்லாமல் நூதனமாகக் கட்டியிருந்தது. கிழக்கைப் பார்த்துச் சுவரையொட்டி, சீதா லக்ஷ்மண பரத சத்ருக்கன அநுமத் சமேதராக, சர்வாலங்கார பூஷிதராக, புஷ்பம் கலர்கலரான மின்சார தீபங்களுடன் கூடிய ஒரு விதானத்தின் கீழ் அமர்ந்திருந்தார் ஸ்ரீராமச்சந்திரப் பிரபு. அடுத்தாற்போல் ஆடரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. கண்ணைக் கவரும் வர்ண ஜால விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஜகஜ்ஜோதியாகத் திகழ்ந்தது மேடை. நான்கு மணியிலிருந்தே ஜனங்கள் கூட ஆரம்பித்துவிட்டார்கள். முதல் வரிசையில் வித்வான்களும், ரசிகர்களும் உட்கார்ந்திருந்தார்கள். எப்பக்கம் திரும்பினாலும் ஒரே தலை மயமாகத் தென்பட்டது. ஜன சமுத்திரத்திலிருந்து ஒலி அலை சரியாக ஐந்தரைமணிக்குத் திரை தூக்கியதும் கம்

என ஓய்ந்துவிட்டது. ஊசி விழுந்தால்கூடக் கேட்கும்படியான அமைதி நிலவியது மேடையின் ஒரு பக்கத்தில் பின்னணி சங்கீதக்காரர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நடுநாயகமாக நட்டுவனாரும் அவர் பக்கத்தில் ராஜாவும் உட்கார்ந்திருந்தார்கள். சிவஸ்வாமி பிடில், ராஜா புல்லாங்குழல் மூர்த்தியும், விஜயாவும் பதம்பாட அமர்ந்திருந்தார்கள். திரை விலகியதும், வைர ஆபரணங்

லக்ஷிய புருஷன்

கே. சுந்தரம்மாள்

10

"காதலி ராதையைக் கலங்க விட்டான் மலர்க் கண்ணனே" என்று பாடிக் கொண்டிருந்தாள் ஹேமா. எதிரில் ஐந்து வயதுச் சிறுமி பிரதிபா அவள் செய்வது போலவே தானும் மழலை மொழியினால் பாடிக்கொண்டு ஆடினாள். எப்பொழுது வந்தாலும் அந்த அறை ஹேமாவின் உபயோகத்திலிருக்கும். வெகு முக்யமான சாமான்கள், அவ்விடமிருக்கும். ராஜா, ஹேமா, அவள் தாயார் மூவரைத் தவிர அவ்வறைக்குள் மற்றெவரும் போக மாட்டார்கள். தனக்குத் தனிமை வேண்டும் என்று நினைக்கும் பொழுது ஹேமா தன் அறைக்குச் சென்றுவிடுவாள். அன்றும் காலை வேலைகள் முடிந்து விட்டபடியினால், அன்று இரவு நடக்கும் நடனத்தின் மத்தியில் ஹேமா உடை மாற்றும் சமயம் பிரதிபா ஒரு சிறு நடனம் செய்ய ஏற்பாடு. அதைக்கூட ஒரு முறை செய்யச் சொல்லிப் பார்க்க, குழந்தையுடன் தன்னறைக்குச் சென்றாள். இவள் பாடிக் கொண்டிருக்கும் பொழுது அவ்விடம் வந்த ராஜா பீரோவைத் திறந்து ஏதோ தேடிக் கொண்டிருந்தான். வரும் பொழுது அவன் முகம் ஒரு மாதிரியாக இருப்பதைக் கவனித்த ஹேமா, பாட்டு முடிந்த பிறகே அவனருகில் சென்று

'என் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?' என்றாள்.

'ஒன்றுமில்லை.' என்றான் குரலில் ஜீவனே இல்லை.

'என்ன தேடுகிறீர்கள்? வந்தவர்களுக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டதா?

'முழு நோட்டுப் பர்ஸ் எங்கே?' என்றான்.

'அது வெறும் தட்டில்தான் வைக்கப் பட்டிருக்குமா? உள்ளறையில் இருக்கிறது!' என்று சொல்லியவாறு அவள் பக்கத்தில் நின்று எடுத்துக் கொடுத்தாள்.'

அதைக் கையில் வாங்கியவன் அவளை நிமிர்ந்து நோக்கினான். களங்கமற்ற அவளது வதனத்தைப் பார்த்ததும் அவன் மனம் கவலையை மறந்துவிட்டது. 'உன் நடனம் பார்க்க மஹா வித்வான்கள் வந்திருக்கிறார்கள். ஹேமா உன் அதிர்ஷ்டம் பற்றி யாவரும் பொறாமை கொள்ளுகிறார்கள்!' என்று நிறுத்தினான்.

'அதனாலென்ன நமக்கு நஷ்டம்? அதை விடுங்கள். பிரதிபா எப்படி பயமில்லாமல் நிதானமாக ஆடுகிறாள் பார்த்தீர்களா?'

'உன் பெண்ணல்லவா? மீன் குட்டிக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா? எந்த ராதையை எந்தக் கண்ணன் கலங்கவிட்டானென்று பாடினாய்?'

'இதென்ன கேள்வி? பாட்டுக்கு ஆள் தேடவில்லை. நான் பாட்டு உள்ளபடி பாடினேன்' என்றாள்.



நாளுக்கு நாள் அதிக மிருதுவான எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனுவிலுள்ள **கேடில்** இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்

ரெக்ஸோனுவின் கேடில் கலந்த நுரையை உங்கள் சருமத்தில் நன்ருகத்தேய்த்து, பிறகு கழுவுங்கள். உங்கள் சருமம் நாளுக்கு நாள் அதிக மழமழப்பும் தெளிவும் பெறுவதைக் காண்பீர்கள்.

ரெக்ஸோனு

கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக்கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 101-50 TM ரெக்ஸோனு ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது.